ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# SRI VAISHNAVAN.

# ஸ்ரீ வைஷ்ணவன்.



உண்மையறிவை உணர்த்தும்

## ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு"


| | | |
|---|---|---|
| தொகுதி 6. | 1107-ம் ௵<br>பிரஜோத்பத்தி௵ ஆவணி௴ | பகுதி 10. |


### நம்மாழ்வார் வணக்கம்

நாலாயிரக் தமிழ்ப்பாமறையுளோர் செய்யுள்
 நாவினாலோதவில்லையோ
நாவீறனே மகிழ்மாறனே சடகோப
 நம்பியே னென்னை யென்றோர்
காலெலாமோதலை யோவாதவோர் சொற்களைக்
 கனவிலுங் கேட்கவில்லையோ
கண்ணினாலுன் சேவை பண்ணாது வீணாக
 காலங்கழித்ததுண்டோ
பாலாளியிற்றிடும் பிழையினைப் பெரியோர்
 பரிப்பாரென்றோது மந்தப்
பழமொழியு மென்மட்டில்லையோ காக்கின்ற
 பாரமதுனக் கல்லவோ
சேவினத்துள்ளார் குயினின்றாரு பொழிலுலாம்
 செங்கமல வாவியுஞ் சூழ்
திரைபொருவு பொருநை யிருகரை மருவு குருகைவரு
 திருமருவு மகிழ்மாறனே.

ஸ்ரீ

# வீபீஷணர் சரணாகதி.

பாளையங்கோட்டை S. A. பொன்னையாதாஸ்(ஆசிரியர்)எழுதியது.

உலக மாதாவாகிய சீதாபிராட்டியை அரக்கர்தலைவனான இராவணன், அசோக வனத்தில் சிறை வைத்திருந்தது, அவனது இருந் தம்பியாகிய வீபீஷணாழ்வார் மனதை வருத்தியது. அவ்வுத்தமோத்தமர், அழுக்குட் செழும் பொன்னும், அலத்து அமுதும் இழுக்குறும் நீசனிடத்து ஏற்ற விளக்கலையும, தள்ளும் இழி குலத்தில் தக்க எழிற் கன்னிகையும்போல் அவ்வரக்கர் குலத்தில் விளங்கினின்றார். பிரகஸ்பதிக்கு ஒப்பான புத்தியையுடைய வீபீஷணர் பிரதாபலங்கேஸ்வரனைப் பார்த்து "எந்தையும், தாயும், தமையனும், வழிபடு தெய்வமும் எனக்கு நீரேயாவீர்.', அண்ணா! சீதாவைப் போன்ற விஷமுள்ள ஜானகியை எக்காரணத்திற்காக மோகிக்கின்றீர்கள்.

"கோநகர் முழுவது நினது கொற்றமும்
ஜானகியெனும் பெயர் உலகின்றம்மனை
ஆனவள் கற்பினால் வெந்ததல்லதோர்
வானரஞ் சுட்டதென்றுணர்தல் மாட்சியோ" கம்பர்,

மேலும் அச்சீதா தேவியின் கற்பின் தழலே இந்நகரத்தை எரித்த தன்றி அவ்வானரமல்ல.

சுந்தரகாண்டத்திலுள்ள ஒரு பாசுரம் ஈண்டு உதாரணமாக வரைவோம்.

"அல்லன் மாக்களிலங்கையதாகுமோ
எல்லை நீத்த உலகங்கள் யாவுமென்
சொல்லினாற் சுடுவேனது தூயவன்
வில்லினாற்றற்கு மாசென்று வீசினேன்."

மேலும் ஆதியில் உம்முடைய ஆற்றலும, தவமும்; ஓர் மானிட மடந்தையால் அழிவது என்று ஒரு சாபம் இருக்கிறது.

அதையும் நான் நினைப்பூட்டுகிறேன். அரக்கர் வேந்தே! தேவதானவர் முதலானவர்களை ஜெயிக்கும்படி வரம்பெற்றபோது மனிதரை ஜெயிக்கும்படி வரம்பெறவில்லையே. கார்த்த வீரியார்ச்சுனனுகிய மனுஷ்னுக்கு உம்முடைய வலி தோற்றுப்போனது ஒரு திருஷ்டாந்தம். நந்திகேஸ்வரர் "நீ வானரத்தாலே அழியப்படுவாய்" என்று சொன்னதும் ஞாபகம் இருககட்டும. நீர் பலாத்காரம் செய்ய எண்ணிய அவ்வேதவதி யென்னும் கற்புடைய ஸ்திரி எரியெழச்செய்து அதில் மூழ்கும்போது "நான் உன் முடிவிற்குக் காரணமாவேன்" என்று சொன்ன மங்கையே இப்பொழுது ஜானகியாக இங்கு வந்து சிறையிருக்கின்ருள் என்றுகூறினர். பின்னும் வீடணர் இரணியன் பராக்கரமத்தையும் அவன் அழிவையும் எடுத்துக்கூறி அவனுக்கு புத்தி புகட்ட முயன்ருன். இவ்வார்த்தைகளைக் கேட்ட இலங்கேஸ்வரன் "தாயாதிகள் என்பவர்கள எப்பொழுது தங்களுடைய தாயதிகளுக்குத் துன்பம் நேரிடும்பொழுது சந்தோஷப்படுகிருர்கள். சமயம் நேரிடும்பொழுது அவமானமும் செய்கிருர்கள். நீ பிறந்த இராக்ஷச நிலைமையை மாற்றிவிட்டாய். சகோதாஹத்தி என்கிறதை நினைத்து உன்னைக்கொல்லாமல் விட்டுவிட்டேன். தாமதியாமல் வெளியே போ" என்று சொன்னுன்.

வீடணன் தான் சொல்லியவைகள் எல்லாம காட்டில் எரித்த நிலாப்போலவும், விழலுக்கு இரைத்த நீரைப்போலவும், பாம்புக்கு வார்த்த பாலைப்போலவும பயனற்றுப்போயின என்று கண்டு தன்னுடன் (1) அனலன், (2) அரண், (3) அனிலன், (4) சம்பாதி என்ற நாலு மந்திரிமார்களுடன் ஆகாயமார்க்கமாய் கிளம்பி வானர சேனையுடன் கூடியிருக்கும் அனந்த கல்யாண குணம்ருத மூர்த்தியாகிய இராகவன் இருக்கும் இடம் வந்து "எந்தையே இராகவா சரணம்!" தேவரீருடைய திருவடித்தாமரைகளுக்கு அபயம்! அபயம்! அபயம்!!! என்று ஓலமிட்டுக்கொண்டு கீழ் இறங்கினர்கள்.

இப்படிக்கூவிய சப்தமானது சக்கரவர்த்தித்திருமகனுருடைய திருச்செவியில் நுழைந்தமாத்திரத்தில் தமது துணைவராகிய இலக்ஷ்மணர், சுக்ரீவா, அனுமார், சாம்பவர் மற்றுமுள்ளோர்களை கருணையுடன் முகமலர்ந்து பார்த்து "யாரோ அபயம்" என்று சொல்லுகிருர்களே அவர்கள் யாரென்று பார்த்து வந்து சொல்லுங்கள்" என்று ஆஞ்ஞாபித்தார். உடனே மயிந்தன் விபீஷணனிடம்

கனிவிளக்கிக்காட்டிய நம்மாழ்வார், இப்பாசுரத்தில் திருமாலாகிய தான், தனித்து நின்று ஏகனாயும், தொழிற்பொருட்டுத் தன்னினின்று வேறுபட்டிருப்பதாகத் தென்படும் மூவராயும், மற்றுச் சராசரப்பொருள்களாயும் தோன்றி விரியும் இயல்பினையுடைய எம்பெருமான் என்றருளிச்செய்கின்றனர். செய்தாராகவே, அடிகள் முன்னொடுபின் முரண்பட வோதினர் என்பது எந்த அறிவின்பாற்பட்டது? அடிகள், தனிப்பெரும் பொருளாகிய இறைவனைமட்டும் அல்ல; தொழிற்பிரிவுப் பொருளாகிய மூவரை யும் மட்டுமல்ல; மற்றத் தெய்வங்களையும் மட்டுமல்ல. அசேதனப் பொருள்களையும்பற்றி அவர் பாடுகின்றார். * இங்ஙன மெல்லாம் பாடுவது, இறைவனது சர்வவியாபகத்தன்மையை நோக்கியும் அடியார்களிடத்தில் அவனுக்குள்ளதாய சௌலப்ய குணத்தையும் எண்ணியும் அன்றோ! இங்ஙனம் பாடியதாலே அடிகள் கடவுட் டன்மையை வாய்ந்திலர் என்று எவர்தான் கூறத்துணிவர்? அது கிடக்க,

இனி மாணிக்கவாசகர், "ஏகன்," "அநேகன்," "இறைவன்" என்று கூறுதலின், ஏகன் என்பவன் யாவன்! அநேகன் என்பவன் யாவன்? இறைவன் என்பவன் யாவன்? ஏகன் என்பவன் ஒரு கடவுள்; அநேகன் என்பவன் மற்றொரு கடவுள்; அல்லது பல கடவுளர்கள்; இறைவன் என்பவன் வேறொரு கடவுள். ஆக முத்திறப்பட்ட கடவுளை அவர் ஓதினாரகல்வேண்டும். ஒரேவோர் அறிவுடைப்பொருளாகிய இறைமைப்பொருள், இவ்வாராய்ச்சிக் காரர் கூற்றுக்கு முரண்பட மாணிக்க வாசகரால் கண்டு இவ்வாறு ஓதப்பெற்றிருக்கு மாற்றிற்கு ஏது என்னை? மாணிக்கவாசகர் கருத்தையே தெற்றெனத்தெளிதல் இல்லாது, பிழை படக்கூறிச் செல்லும் இவர்தாமா ஆழ்வாரது கருத்தை ஆராய்ந்து தெளிய வல்லுநர்? ‡ அதுகிடக்க.

---

* திருவாய்மொழி 3ம் பத்து 4ம் திருப்பதிகம்.

‡ கண்டு திருவாசகவிரிவுரையைப்பார்க்காமலேமனஞ்சென்ற

## ஸ்ரீமத் பரமாசாரிய பஞ்சரத்னம்.

### ஸ்ரீ பராங்குசர் நீலம்.

ஞானமளி ஆரணங்கள் நான்கினையும் நற்றமிழால்
தேனொழுக நமக்களித்து சென்மத்தைப் பயன்படுத்தித்
தான்பிறக்கும் பொழுது சடவாயு வையுங் காரத்தால்
தான்சிக்கச்செய்தவ ஸ்ரீ சடகோபர் நீலமணி.

### ஸ்ரீயதிராஜர் மரகதம்.

சீர்மருவுங்கமலத்திருமகன்தம்கணவந்திருவருளாலுயரும்தேசகரிற்றலைவன்
பார்பரவுங் கருணைப் பழுதறு மகிழ்மாறன் பரிவுடனருளிய நற்பனுவல்க [ளாயிரமும்
கார்திகர் தனது பெருங்கருணையினாலவிற் கட்டுரை செய்தருளிக் கலியத [னைக்கடிவார்
ஏர்மருவும் பொழில் சூழினிய பெரும்பூதூர் எதிவரர் தாமொருவர் எழில் [மிகுபச்சைமணி

### ஸ்ரீபிள்ளை லோகாசாரியர் வச்சிரம்

அழகுடை முடும்பை தன்னில் அவதரித்துஜ் ஜீவிக்க
அழகுடை வசன பூஷணநிக்ரந்தங்கள் செய்தே
அழகுடன் மிகு வேதாந்த ஆர்ய தேசிகர் தாம் போற்ற
அழகுடன் வீற்றிருக்கும் லோக தேசிகர் வைரமாகும்

### ஸ்ரீமத் வேதாந்த தேசிகர் மாணிக்கம்.

தூப்பில் எனும் ஊர்தனில் நம் தொல்லைகளைப்போக்கிட வென்றவதரித்து
மாப்புகழோடொண் கவிகள் வன்மையுடனருளி நமை உய்யக்கொண்டு
காப்புகரில் ஸர்வதந் த்ரஸ்வதந்த்ர ரென்றிது முதலாவிருதும் பெற்று
மாப்புகழ் வேங்கடநாத தேசிகரே வளமிகுமாணிக்கமாம்.

### ஸ்ரீமந் மணவாளமாமுனிகள் வைடூர்யம்.

சீருடைக் குருகை தன்னில் சிறந்த சேஷாம்சமாகச்
சீருடனவதரித்துச் சேதனருஜ் ஜீவிக்கச்
சீர்திகழ் ரத்னமாலை சீர்திகழ் நூற்றந்தாதி
சீருடன் செப்பும் காந்தவரமுனி வைடூர்யமே.

ஸ்ரீ வைஷ்ணவதாஸர்.

---

குறிப்பு:- நமது பூர்வாசார்யர்களின் வைபவத்தைக்குறிக்கும் இப் பஞ்சரத்னப்பதிகம் நம் வைணவ அபிமானிகள் கண்டுகளிப்புறும் வண்ணம் சென்னையினின்றும் வெளி வந்துல்வும் ஓர் மாதப்பததிரிகையில் தமிழ் நாட்டு நவமணிகள் என மகுடமிட்டு திருக்குருகூர் ஸ்ரீ அ. தே. இராமாநுஜய்யங்கார்ஸ்வாமி எழுதியுள்ளபாடல்களிலிருந்து பிரிக்கப்பட்டதாகும்

இப்பாசுரத்தின் பொருண்முறையும் ஓரமின்றிச்சற்றுக்கூர்ந்துவிசாரித்துப்பொருள்கண்டுபிடித்து, எப்பொருள் விசேடம் பொருந்தியது என்று நாட்டுவரேல் அவர் யாரேனுமாகட்டும் அவர் தாம் அறிவுடைப்பெரியார் என்போம். திருவாய்மொழிப்பாக்களை அவரவர் தத்தம் உக்திவழிக்கு இணங்காது பாடலின்படியே சென்று உரையாசிரியன்மார் கருத்தையும் நிரலே ஆராய்ந்து பொருள் கூறினால் அறிவாகுமல்லது, மனம் போனவாறு சென்று வாரத்தாலேனும் காய்ச்சலாலேனும் உரை கூறி இழுக்குறல் அறிவாகுமா? பெரியாரை அவமதித்துப்பேசுதல் எல்லாம், பிறப்புக்கடோறும் வருந்துதல் வேண்டுமென்றுணர்க.

ஆழ்வார் தாம் அருளிய திருப்பாடற்கண், ஆணாய்த்தோன்றலும் பெண்ணாயொளித்தலும் அலியாய்ப்பெயர்தலும் அற்றதொரு பராபரப்பெரும்பொருள், எழிதிற் காண்டற்குரியதன்றாய், காண்பார்க்குளனாய், காணகில்லார்க்கு இலனாய், நினைந்தார்க்கு நினைந்தாங்கு தோன்றவல்ல திருவுருவினனாய், நினையாதார்க்கு அவ்வாறல்லனாய், விளங்கும் பேர் இயல்வுள்ள இறைவன் கண்டேர் என்கிறார். இதனுட்போந்த அதிசூக்கும பொருள், 'கடவுள் மனித அறிவுகோணடு கணிக்கப்படாத வகையுடைத்து.' என்பதே. பேரறிவு படைத்த ஒருசிலரே, அதனை, உயிர்வகையுள் மிகுசிரேட்டமாகிய ஆண் உருவில் வைத்து அதாவது புருஷோத்தமனைப் பாவித்து 'இறைவன்' 'முனைவன்' 'கருத்தன்' 'நாராயணன்' என்று வழிபடுவர். 'அவள்' 'அது' என்றோதாது, 'அவன்' என்றீண்டோதல் ஆண்உருவே உயிரினங்களுள் சிறந்த தன்மையாய் இருத்தலின் என்க

அற்றேல், பிரமருத்திரர்கள், பிரமன் உருத்திரன் என்று ஆண்பால் விகுதி பெற்றமை சிறப்பிலது என்றது முன்னுக்குப் பின் முரண்படுமே எனபரேல், நுண்மையறியாதோதியனாய்: ஆண்டு வியாபகத்தன்மையைக்குறித்தவாறு. என்னை வியாபகமெனின், உலகோம்பற்குச்சருவவியாபகமும் சருவசக்தியும் வேண்டுவனவாகலின், அங்ஙனம் செய்யவல்ல ஒருகருத்தா,

விடப்போகிறதில்லை. தடாகத்தின்றும் கொய்ததாமரையை எவ்வளவு எளிதில் கசக்கமுடியுமோ அவ்வளவு எளிதல் உன்னையும் அழித்துவிடுவேன். இருந்தாலும நீசிறுபிள்ளையானபடியால் உன்னை அநியாயமாய் வதைசெய்ய விருப்பமில்லை. ஆதலால் உனது தந்தைபெயரையும், தேயத்தின் பெயரையுங்கூறினல் இப்பொழுது உன்னைச்சுயமாவிட்டுவிட்டு, உனக்குத் தக்கவயது வந்த பிறகு, உன்னைப்போரில் எதிர்த்துக்கொல்வேன்" என்று புகன்றான்.

அபிமன்யு:— தேவர்கள் விரோதி! என்னைச்சிறுவனென்று எண்ணிவிடவேண்டாம். எனக்கிருக்கும் ஆற்றலும், தோள்வலிமையும், நெஞ்சத்திண்மையும், மனவுறுதியும், போர்த்தந்திரங்களும், அஸ்திரவித்தைகளும், வாள்ப்பயிர்ச்சியும், சாமர்த்தியமும் உனக்கிருப்பின் என்னுடன் போர்செய்து வெற்றிகொள்! என்னைப்போல மானிடனாகிய தாசரதியால் தசமுகன் மாண்டதை நீயறியாயோ? கடுகு சிறுத்தாலும் காரம் போகாது. பிரமாண்டமான மலையைப்பிளப்பது சிறுகல்லுளியன்றோ? பாற்கடலிற்றுயிலும் பரந்தாமனுக்கு குடைபிடிக்கும் அரசஅரவாகிய ஆதிசேடனும் ஒருசிறு மூலிகைக்கு அஞ்சுகிறானன்றோ? மேருமலைபோன்று பரிமாணமுள்ள பஞ்சுக்குவியலை ஒரு சிறு தீப்பொறி அழித்துவிடுமன்றோ? ஏ! கொடிய! எனக்கு நீ புதியபாடங்கள் கற்பித்துத்தர வேண்டாம். எனனுடன் போர்புரிய விருப்பமிருப்பின் அங்ஙனமே செய்வாய்; அன்றேல் அவசரமானகாரியத்தை நாடிச்செல்லும் எங்களை வழிமறியாதே! —என்றுகூறி சுபத்திரையைநோக்கி, " அன்னையே! விரைவாய்க்குதிரைகளைச்செலுத்துங்கள் " என்றான்.

கடோற்கஜன்:— ( கலகலவெனநகைத்துக்கொண்டு ) அம்மன்னி! உன்மனமென்ன கல்லோ? அல்லது அதனினுங்கொடிதோ? புயபலபராக்கிரமம் படைத்த புமான்களும் ரதசாரத்தியம் புரியத்துணியாமலிருக்கையில், சுதந்தரமில்லாத கோழையான பெண் பேதையாகிய நீ எவ்வாறு தேர் ஓட்டமனந்துணிந்தாய்!

அதுவுமன்றி, பத்துமாதம் சுமந்தெடுத்து, உச்சிமோந்து, கண்ணுக்கு அஞ்சனமிட்டு, பொட்டிட்டு, தாலாட்டிச்சீராட்டி வளர்த்து வரும் இளம்பாலகனைக்கொல்ல உனக்குத்திருவுளச்சம்மதந்தானோ? உனது உயிரும் உன மைந்தனுயிரும இன்னும் சிறிதுகாலம் இருக்கவேண்டுமானால், இவ்வுலக உண்மைகளை ஆனந்தமாய் அனுபவிக்க உனக்கு விருப்பமிருப்பின், கணவனுடன் கொஞ்சிக்குலாவிக்கலவி செய்ய ஆசையிருப்பின், மைந்தனைச்சாந்தப்படுத்திக் கொண்டு ஊர்நோக்கிச்செல். உங்களுடைய முகத்தோற்றங்களைப் பார்த்து இரக்கங்கொண்டதினால் இவ்வளவு தூரம் கெஞ்சிக்கெஞ்சிக் கூறுகின்றேன்.

அபிமன்யு:— துஷ்டா! என்னுடைய வீரமொழிகளுக்குத் தக்க பதிலுரையாமல் ஸ்திரீ ஜாதியினிடம் என்னவாது செய்து கொண்டிருக்கிறாய்? உனக்கு தோள்வலிமை கிடையாதா? சமர் செய்ய அறியாயா? பேடி! இதோ விடுகின்ற பாணத்திற்கு என்ன செய்யப்போகின்றாய்? தரைக்குள் ஒளிந்துகொண்டு சரணகதியை அடையப்போகின்றாயா? அல்லது வானிற்கிளம்பி மறையப்போகின்றாயோ?—என்று கூறிக்கொண்டே ஓர்கூரியபாணத்தை விண்ணென்று விட்டான்.

கடோற்கஜனுக்கும் அபிமன்யுவுக்கும் கடும்போர் மூண்டது. கடோற்கஜன் யுத்தத்தைத்துவக்கினதையறிந்த அரக்கசேனாதிபதியாகிய கொக்குமுகாசுரனென்பவன் சிறந்த நாலுபுரவிகள் பூட்டிய ரதத்துடன் கடோற்கஜனிருக்கு மிடத்தையடைந்தான். ஆகவே இரண்டுரதங்களும் மதங்கொண்ட இருயானைகள்போரிடுவதைப்போன்று சமர்செய்தன. கடோற்கஜன் ஒருஅம்பை சரியானகுறிபார்த்து, சரியானசமயம்பார்த்து, சரியானதிசைபார்த்து, சுபத்திரையுடைய இருபுரவிகளின் மீதும்விடுவான். அச்சமயம் திடீரென்று அச்சாரதியானவள் அசுவங்களைப்படுக்கச்செய்து விடுவாள். கடோற்கஜன் கணையும் சிறிது தூரத்திலிருக்கும் பச்சைமரத்தைச்சென்று துன்புறுத்தும். அபிமன்யு ஒரேசமயத்தில் இருகணைகள் தொடுத்து,இரண்டுகுறிகள்மீது மின்னல்வேகத்தில்

விழுவான். அச்சமயம் தேர்ப்பாகன் குதிரைகளைப் படுக்கச்செய்தால், ஒருகணை அவைகளுக்கு மேலாகவும், மற்றொருகணை அவைகள் மீதும் சென்றுதாக்கும்; குதிரைகளைச்சிறிது ஆகாயத்தில் எழுப்பினால் ஒருஅஸ்திரம் அவைகளுக்கு அடிவழியாகவும் மற்றொரு அஸ்திரம் அவைகள்மீதும் சென்றுவிழும். பலவிதரத்னங்களும் சிவந்தகற்களும் வைத்துப்பதிப்பிக்கப்பட்டிருந்த கடோற்கஜனது ரதமானது விவரிக்க இயலாத விதமாய்க்கதிரவனொளியிற் பிரகாசித்தது; ஆனால் பாதிப்போர் நடக்குங்காலையில் அபிமன்யுவின்பாணங்களால் கதாயுதத்தால சல்லடைக்கண்கள் போன்று துளைக்கப்பட்டிருந்த அத்தேர்த்தட்டானது பார்ப்பதற்கு விகாரமாய்த்தோன்றிற்று. அவனுடைய நூறுபரிகளும் சண்டையின் மத்தியில் இரண்டு மூன்றுக்குக் குறைந்துவிட்டன. தேர்ப்பாகன் அபிமன்யுவின் கணைகளுக்கு பலியானபடியால் தேரின்தட்டிலேயே சாய்ந்துகொண்டபாவனையாய் உயிர் நீங்கினதேகத்துடன் கிடந்தான். கடோற்கஜனுடைய கிரீடமும், அம்புறாத்தூணியும் சுக்கல் சுக்கலாகச்செய்யப்பட்டன. தேரின் நடுத்தட்டைத் தவிர மற்ற எல்லாபாகங்களையும் பொடிப்பொடியாகச்செய்துவிட்டான் அபிமன்யு. அவனுக்கு உதவியாக வந்த சில அரக்கர்களையும், சேனைத்தலைவர்களையும், போர்வீரர்களையும் கூரியகத்தியைக் கொண்டு வெள்ளரிக்காயை அரிவது போன்று துண்டம் துண்டமாக வெட்டி ஒருமலையளவு குவித்தான்.

சுபத்திரையும் அநேக கஷ்டங்களுக்கு உட்பட்டாள். அன்புமிகுந்து விதுரரால் அளிக்கப்பட்ட புரவிகளிரண்டுமே கால்களை இழந்தவைகளாகிப் போர்க்களத்தில் போர்புரிந்துகொண்டிருந்தன. தேரின்உச்சியும் முன்பாகமும் தூள் தூளாக ஆக்கப்பட்டன. மழைபோன்று பொழியும் அரக்கன் அஸ்திரங்களுக்கு இலக்காக ஓர் அருங்குலப்பெண்மணி! தைரியத்தை கைவிடாது, பெண்களின் ஆசாரங்களைத்துறந்து போர்க்களத்தில் தேரைநடத்துவதா, தந்தையை உயிருடனிழந்த உத்தம சற்புத்திரன் கொடிய அரக்கனுடன் நிராச்சயப்புரியுஞ்சம

யுத்தில் கோபத்தினால் உதிரம் போன்ற நிறத்தையடைந்த வதனத்தைப்பார்த்து மனங்கசிவதா, அன்னையையும் விட அதிகமாக நேசிக்கும் பாஞ்சாலியின் ஓர் துகிலைக்களைய எண்ணங்கொண்ட துர்யோதனனையும் அவனுடைய உற்றார் உறவினர்களையும் வஸ்திராபகரணஞ்செய்து மானபங்கப்படுத்தவும், ஏழ்மை நிலையையடைந்த தன்னை பொருட்படுத்தாது பலவித துர்க்குணங்களை உருவெடுத்துவந்த துரியோதனன் சுதனுக்குப்பெண்கொடுக்க இசைந்த மாமனுக்கு நற்புத்திபுகட்டவுமெண்ணங்கொண்டு, அதே நினைவாய், அதுவேகுறிப்பாய்ச்செல்லும் மைந்தன் தன்னை எதிர்த்து வரும் அரக்கனை மந்தகாசமுகத்துடன் எதிர்த்து விண்மாரி போன்று சாமாரிபொழிவதைக்கண்ணுற்று மகிழ்வதா வென்று பலவாறாய் எண்ணமிட்டுக்கொண்டிருந்தாள் பற்குனன் பத்னி உயிரையிழந்த புரவிகள் பூட்டப்பட்ட ரதமும் பூமாதேவியின் சரணகதியடைந்தது. ஆனால் தேரின் மத்தியில் சிங்கக்குட்டி போன்று கர்ச்சித்துக்கொண்டிருந்த அபிமன்யு கடோற்கஜனை பூக்களால் அர்ச்சிப்பதுபோன்று கணைகளைத் தொடுத்தவண்ணமாயிருந்தான்.

ஓர் சிறு பிள்ளையை எதிர்த்து நிற்க அஸ்திரசஸ்திரங்களிற்றேர்ந்த அரக்கனாலும் முடியவில்லை. “அபிமன்யு சண்டையென்றால் அமரரும் அஞ்சுவர்.” வில் வித்தைகளிற்றேர்ச்சியடைந்த துரோணர், கர்ணன், அர்ஜுனன் முதலியவர்களும், கதாயுதப் பயிற்சியில் நிகரற்ற பீமசேனன், துரியோதனன் முதலியவர்களும் ஒருங்கு சேர்ந்து எதிர்க்கத்துணிந்தாலும் அபிமன்யு சஞ்சலமடையான்; அதைரியமடையான்; அத்தனை பேர்களையும ஆண்மையுடன் எதிர்த்து வெற்றிபெறுவான். அன்றேல் ஆண்மகனாய் அமர்க்களத்திலேயே அந்தகன் அடைக்கலமாவான்! இவ்வித ஆற்றல் வாய்ந்த ஓர் அரிக்குட்டியையா அரக்கன் எதிர்க்கமுடியும்! கடோற்கஜனிடமிருந்த அஸ்திரங்கள் யாவும் முடிந்தன; பலவிறகள் முறிந்தன; வாளாயுதங்கள் கூர்மையிழந்தன; அச்சிறு பயலிடம் தோற்று ஓடினால் தன்னைப்பலரும் நகைப்பார்களேயென மனம் வருந்தப்பட்டான். என்னசெய்வதென்று தோன்

றவில்லை. தன்னுடைய சைனியத்தை வரவழைத்துப்போர்புரிய ச்செய்வது தர்மமல்லவென்றும் நினைத்தான். இவ்வாறு ஒன்றும் செய்ய இயலாத நிலைமையிலிருக்கையில் திடீரென ஓர் ஞாபகம் உண்டாயிற்று. தன்னுடைய ரதத்தின் முன்புறத் தூணை உடைத்தான். இந்திரனுடைய வச்சிராயுதத்தையும் விட மேலான சக்திவாய்ந்ததும், ஆதிசேடன் சிரசில் அணியப்பட்டிருக் கும் ரத்தினத்தையும் விட அதிக காந்தியையுடையதுமான வேலா யுதமொன்று காணப்பட்டது. திமிர்பிடித்த, அகங்காரங்கொண் ட, அக்கிரமங்கள்புரிந்த, அநியாயங்கள் அமோகமாய் நடத்திய பத்மாசுரனையும், அவனது இணையற்றசகாக்களையும் வேருடன் அறுத்த ஆறுமுகனுடைய வேலாயுதம் போன்றிருந்தது கடோற் கஜன் எடுத்த வேலாயுதம். அதன் காந்தியையும் கூர்மையையும் கண்டு மனமகிழ்ந்த கடோற்கஜன், ஏ வேலாயுதமே! பரமசிவனை க்குறித்து அநேகவருடங்களாக கொடியதபஞ்செய்ததின் பலனுக் கிட்டிய நீ எனக்காக ஓர் சிறுகாரியஞ்செய்யவேண்டும். உன்னை வேலைசெய்ய ஏவுமுன் செய்யவேண்டிய கிரியைகளையெல்லாம் குறைவற நடத்திவைக்கின்றேன். அதற்காக நீ கவலையுறுதல் வேண்டாம், எனது கரத்தினின்றும் விடுபெற்றமாத்திரத்திலே, யே நீ வேகமாய்ச்சென்று, என்னைமதியாது, என்னைவணங்காது என்னைப்பூசனைபுரியாது, என்னைத்தெய்வமென நினைத்து வழிபடாது என்னுடன்சமர்புரிந்துகொண்டிருக்கும் மானிடச்சிறுவனின்சிரத் தைக்கொய்து பத்துமாதம் சுமந்துபெற்ற அவனது அன்னையின் மடியில் வைத்துவிட்டு உனதுபதாஸ்தானமாகிய கைலாயத்தை அடைந்துவிடுவாய்" என்றுகூறி, அபிமன்யுவைநோக்கி, தாயின் முந்தானையைக் கடித்துக்கொண்டிருக்கும் பருவத்தைக்கடவாத பயலே! உனதுடைய இந்திரஜாலத்தையும் மாயவித்தையையும் கபடவழிகளையும் வஞ்சகப்பிரதிமைகளையும் பஞ்சு பஞ்சாகப்பறக்கடி க்கின்றேன். வலிமைபொருந்திய எனது பல ஆயுதங்களுக்கும் நீ தப்பினை. ஆனால் இப்பொழுது வேகத்துடன் எறியப்போகும் வேலாயுதத்தைத் தடுக்க நீ கற்றவித்தை யெல்லாங்காணாது. இவ் வாயுதமானது யாருடையதென்றால் முப்புரமெரித்த சங்கரனு டையது. பசியுடனும் விரதத்துடனும் அரைவேளைப்போஜனத்

டாட்டும் இரவிலும் பகலிலும்வெயிலிலும் மழையிலும்கடுத்தின் மத்தியிலிருந்து கொண்டு கொடிய தவமியற்றிப்பெற்றபரிசு இது. ஒருதரத்திற்கு மேல்மறுதடவை உபயோகிக்க என்னால் முடியாது. என்னுடைய ஒருஏவலைமுடித்துவிட்டு இவ்வாயுதமானது பரமசிவனையடைந்துவிடும். ஆகையால் இவ்வாயுதத்தைத்தடுத்து நீ உயிருடன் வாழப்போகின்றாயென்பது பகற்கனவு. இவ்வாயுதத்தை இழக்கும் பாக்கியத்தை நான் அடைந்தாலும் பெரிதில்லை. என்னிடம் சமர்புரியத்துணிந்த உனதுகர்வத்தை அடக்கவேண்டுமென்பதே என்கருத்து. இதோபார்! இதன் வேகத்தையும் சக்தியையும்'' என்றுகூறிக்கொண்டே கூரியவேலாயுதத்தைச்செல்ல விடுத்தனன்.

-

அரக்கன் கையினின்றும் விடுபெற்ற ஆயுதத்தின் சக்திவிவரித்தற்பாலதன்று. பளீர்பளீரென்று ஒளியை வீசிக்கொண்டிருக்கும் பகலவனை மறைத்து, மழைத்துளியை சிறிதளவேனும் வைத்துக் கொண்டிராத மேகங்களை ஒன்றுக்கொன்று மோதும்படி செய்து பெரியசப்தத்தை உண்டாக்கி, கண்ணிமைகொட்டும் நேரத்திற்குள் மறைந்துவிடும் பிரகாசத்தையுடைய மின்னல்போன்று வெகுநேரம் கண்கூசும் ஒளியைப்பரப்பி, விரீர் விரீரென்று சப்தமிட்டுக் கொண்டு அவ்வாயுதமானது அந்தரத்தில் கிளம்பின காட்சியே காட்சி! இதைக்கண்ணுற்ற தேவர்களே திகைப்படைந்து அபிமன்யுவுக்கு யாது விளையுமோவென ஏங்கி அந்தரத்தில் வந்து கூடினர். பிரளய கால அக்னிபோன்று கிளம்பிய அவ்வாயுதமானது அபிமன்யுவின்தேரை பஸ்மீகரஞ்செய்து, அழகுநிகழும் மணங்கமழும் எழில்வழியும் முகத்தையுடைய அவனுடையமெல்லிய ஹிருதயத்தைப்பிளந்து விண்ணில் மறைந்தது! "அன்னையே அடைக்கலம்! வத்சலா இப்பிறவியில் இழந்தேன்! அச்சுதனே அடைக்கலம்! அரவிந்தனே அருளில்லை'! அரவணைச்செல்வனே அடைக்கலம்'!! " என்றுகூறியவாறே சமரிற்சிறந்த சிறுவன் தேர்த்தட்டில் சாய்ந்தான்! அபிமன்யுவின் ஆயுள் முடிந்தது.

கடோத்கஜனுடைய வேலாயுதத்தின் ஒளியை சுபத்திராதே

வி கண்டு கண்களை மூடிக்கொண்டாளேயொழிய, அவ்வொளிக்குக்காரணம் யாதென்பதை அறியமுடியவில்லை ஆனால் "அன்னையே அடைக்கலம்" என்று தனது கிள்ளைமொழி மைந்தனுடைய குரலைக்கேட்டதும், அவ்வணங்கு பின்புறம் திரும்பிப்பார்த்தாள்; மணக்கோலம் விரும்பிச்சென்ற மைந்தன் பிணக்கோலமாய் விழுந்து கிடக்கும் கோலத்தைக்கண்டுதிடுக்கிட்டாள், தான் காண்பது கனவோநினைவோவென ஐயமுற்றுளாதலால், கண்களைநன்றாய்த்துடைத்துக்கொண்டுபார்த்தாள்; அவனுடைய குளிர்ந்தகரங்களை கன்னத்தில் வைத்துக்கொண்டாள்; "ஹா! இதென்னகோலம்" என்று கதறிக்கீழேவிழுந்தாள்; எழுந்திருந்து மைந்தனையெடுத்து மடிமீது வைத்துக்கொண்டாள்; தனது மார்பில் அடித்துக்கொண்டாள்; தலைமயிரைப்பிடித்திழுத்தாள்; பட்டாடையை பைத்தியக்காரிபோன்றுகிழித்தாள்; அவளுடையநேத்திரங்களினின்றும் கண்ணீரானது சிற்றாறுபோல் வெள்ளப்பெருக்கெடுத்தது. "மைந்தா! என்வயிற்றில் தீயை வைத்துவிட்டாயே! இப்பிணக்கோலம் காண்பதற்கா அத்தினாபுரியினின்றும் உன்னுடன் புறப்பட்டது! இன்னும் இரண்டு வருடங்கள் கழித்து நினது தந்தை வந்து சுபத்திரா! மைந்தன் எங்கே? காணோமே" என்று கேட்டால் நான் என்னபதில் உரைக்கக்கூடும்! வத்சலையை லக்ஷ்மணனுக்கே கொடுக்கட்டும், நமக்குவேண்டாம் என்று கூறியுங்கேளாப்பிடிவாதத்துடன் 'துவாரகைக்குப்புறப்படத்துணிவுகொண்ட மைந்தா! உன்னை இனிமேல் எப்பிறவியிலடா காண்பேன்! வழியில் பலவித இடையூறுகள் நேரிடும். அவைகளையெல்லாம் விலக்கிக்கொண்டு போக நம்மால் முடியாது என்றுகூறின சமயம், அன்னையே! நான் அர்ஜுனன் பெற்றபிள்ளையல்லவா? என்று க்ஷத்திரியத்திண்ணக்கத்துடன் சபதஞ்செய்துபுறப்பட்ட உன்னை இக்கோலத்தில் காணும் பாக்கியத்தைச்செய்த தெய்வத்தை என் நிந்திக்கக்கூடாது! மதிகெட்டதெய்வமே! முதற்கோணலே முற்றிலுங்கோணலாகச்செய்துவிட்டாயே! ஈசனே! இவ்வாறு என்னைச்சோதிப்பதுதகுமா! அரக்கர் மத்தியில் அகப்பட்டகான் இவ்வாறு படுத்துயரைப்பார்த்துப்பேசாமலிருப்பது அழகாகுமோ! ப

அண்ணா! ஆசை சகோதரா! பலதடவைகளில் எனக்கு உதவி செய்த உடன்பிறந்தோனே! நீயுமா இச்கோலத்தைக்கண்டு மனமகிழ்ந்து கொண்டிருக்கின்றாய்! மலையதனால் அணைகட்டி மதில் இலங்கையழித்தவனே! ஏழைபடுந்துயரதனை நீயறியாயா? இவ்விதஇடுக்கண்களை நான் அநுபவிக்க வேண்டுமா! இதுவரைபட்டதுன்பங்களெல்லாம் போதாதா! இனிமேல் துயரப்பட என்னால் முடியாது! ஹே! கோவிந்த! கோபாலா! இறந்துகிடக்கும் என்மைந்தனை எழுப்பித்தா உனக்குப்பெரிதோ? உயிர்த்துணைவனையும்பிரிந்து, உயிரினுமினிய மைந்தனையுமிழந்து மானிலத்தில் வாழுவது யாதுபயன்? மைந்தனெங்கேயென்று வினவும் நாதருக்கும் மைத்துனர்களுக்கும் நான் யாது மறுமொழி கூறுவேன். வத்சலையை மணம்புரியச்சென்ற குழந்தை அபிமன்யுவெங்கேயென்று விதுரர் கேட்பாரே! ஊரார் வினவுவாரே! அவர்களுக்கெல்லாம் நான் யாது மறுமொழிகூறுவேன்? கமலநயன! கருடவாஹனா! நீதான் கிருபைசெய்யவேண்டும்!

ஆறும் பிறையும் அரவமும் அடம்பும் சடைமேலணிந்து
நீறும் பூசியே றூரும் இறையோன் சென்று குறையிரப்ப
மாறொன்றில்லா வாசநீர் வரை மார்பகலத்தளித்துகந்தான்
நாறும் பொழில் சூழ்ந்தழகாய நறையூர் நின்றநம்பியே

—பெரியதிருமொழி

உன்னைத்தான் நம்பியிருக்கின்றேன். நீதான் எனது மைந்தனை உயிருடன் எழுந்துவரச்செய்ய அருளவேண்டும்.

செக்கர் மாமுகிலுடுத்து மிக்க செஞ்சுடர்ப்
பரிதிசூடி அஞ்சுடர் மதியம் பூண்டு
பலசுடர் புனைந்த பவளச் செவ்வாய்
திகழ் பசுஞ் சோதி மரதகக்குன்றம்
கடலோன் கைம் மிசைக்கண் வளர்வதுபோல்
பீதக வாடை முடி பூண்முதலா
மேதகு பல்கல னணிந்து சோதி

(தொடரும்)

வாயவும் கண்ணவும் சிவப்ப மீதிட்டுப்
பச்சை மேனி மிகை மிகைப்ப
நச்சு விளக்கவர் தலையாகின மணியேறி
ஆறிகடல் நடுவுள் அறிதுயி லமர்ந்து
சிவன் பனிக்கிர முனிவர் முதலினத்தோர்
தெய்வக் குமரங்கள் கைதொழக் கிடந்த
தாமரை யுந்தித் தனிப்பெரு நாயக!
மூவுலகளந்த சேவடி யோயே!

நீதான் அடைக்கலம்! பக்தர்க்குத்தாசனாய் விளங்கும் உன்னால் செய்யமுடியாத காரியமும் உண்டோ! பக்தர்களுக்காக அரிய பெரிய காரியங்களைச்செய்துமுடித்த பக்தவத்சலா! இதற்கருணையும் வந்தருள்வாய்! துஷ்டநிக்ரகம் சிஷ்டபரிபாலனஞ் செய்யும் பொருட்டு அவனியில் அவதரித்த அச்சுதனே! ஹே! மாயா! மணிவண்ணா! தேவகிவயிற்றிற்றோன்றிய நாள்முதலாய் பலவித மாயங்களைச் செய்யும் நீ என்மனக்குறையைத் தீர்த்துவைப்பாய்! உடன்பிறந்த உன்னைத்தவிரநான்வேறுயாரை அடைக்கலம்புகுவேன்! யாதவர்களுககாக பலவித காடுகளைதிருத்தி பசும்புற்றரைகளாகச்செய்ததும், யாதவர்களை அடிக்கடி இடையூறுசெய்யும் பலவித அரக்கர்களையும் பலவிததருணத்தில் வதைத்ததும், தேவகியையும் வசுதேவரையும் துன்பஞ்செய்துவந்தது தனது மாதுலனென்று பாராமல் உயிரைவாங்கினதும், இந்திரனுடைய மமதையை அடக்க வெண்ணி கோவர்த்தனமலைக்குப் பூஜைசெய்யச் சொல்லி இந்திரனுக்குக் கோபமூட்டி அவனால் பெருத்த மழை பொழியப்பட்ட சமயம் கோவர்த்தனத்தைக் குடையாகப்பிடித்ததும், காளிகனை பாதாளத்திற்கழுத்தினதும் நீ செய்த திருவிளையாடல்களல்லவோ! அங்ஙனமிருக்க உனது மருமானாகிய அபிமன்யு, சிறந்த நண்பனின் புத்திரன், ஆசைத்தங்கையின் குமாரன் பிணக்கோலத்துடன் கிடப்பதை பார்த்துக்கொண்டிருப்பது தகுமா? பலவித காரியங்களை எளிதிற்செய்து முடித்த உனக்கு இந்த உதவிசெய்யத் தெரியாதா! முடியாதா! அருமை அண்ணா, நீ

முன்னமோர் அரியாகவந்ததித் திரணியனை
முனிவொடு வதைக்கவில்லையோ,
முத்திசொல் சபரிக்கு அருள்செய்து அவள்கையால்
முழுஅமுது செய்யவில்லையோ,
மின்னுமணி மாடங்கள் மிகவே குசேலர்க்கு
மேவஅருள் செய்யவில்லையோ,
வென்றியுள எனமாய் அன்றிலகு கோட்டிலே
மேதினியை வைக்கவில்லையோ,
மன்னு சுக்ரீவனுக் கருளி மாமேழெய்து
வாலியைக் கொல்லவில்லையோ.
மாநில மெலாம் வயிறு தனிலேயடக்கியே
வைத் திரக்ஷிக்கவில்லையோ,
கன்மொழி தமிழ் மறை காசினிக்கருளினை
காத்தலடியாளை அரிதோ,
கார்மேவு சோலைசூழ் குருகைவரு சக்கரக்
கையனே மகிழ் மாறனே!

வண்ண மால் வரையே குடையாக
மாரிகாத்தவனே மதுசூதா
கண்ணனே கரிகோள் விடுத்தானே,
காரண் களிறட்ட பிரானே
எண்ணு வாரிடரைக் களைவானே
யேத்தரும் பெருங்கீர்த் தியினானே
நண்ணிநா னுன்னை நாடொறு மேத்தும்
நன்மையே யருள் செய்யெம்பிரானே

அன்புமிகுந்த அண்ணா! ஆசைக்குகந்த அண்ணா! எனது மைந்தனை உயிருடன் எழுப்பித்தரவில்லையாகில் எனதுயிரையும் வாங்கிக்கொள்! உன்னையே தஞ்சமென்று நம்பினேன்! என்னைக் கைவிடுதல் உனக்கழகோ? அனாதைக்கு தெய்வமே துணை யென்ற தெய்வமொழியையே நம்பியிருக்கின்றேன்! ஈசனே! ,,

என்று கூறினவண்ணமாய் அவனுடைய தேகத்தின்மேல் விழுந்து விட்டாள். அவளுடைய குழல்சரிந்தது; கழல வளைந்தது; மாலை கரிந்தது; காவிபொரித்தது: விழி மிறழ்ந்தது, மொழிகுழறிற்று; தேகத்தினின்றும் வியர்வை நீர் சிறிய ஊற்றுக்கள்போன்று மயிர்க்கால்வழியாய் வெளிப்போந்தது. இவ்விருவர்களுடைய நிலைமையைக் காணச்சகியாதவனாய்க் கதிரவனும் மேகக்கூட்டங்களினுள் மறைந்தான்.

௬-ம் அத்தியாயம்.

## அலறின குரலுக்கு அபயம்,

"நாதா! இதுவரையிலும் சதுரங்க விளையாட்டில் நம்மை வெல்லுவார் ஒருவருமில்லையென்று மமதைகொண்டிருந்தீர்கள். இன்று அதைப்பொய் யென்று நிலைநிறுத்தி மாமிக்கோர்மாமி உண்டென்ற பழமொழியையும் உண்மையென நிரூபித்து விட்டேன்'! என்று உலகமாதாவாகிய ருக்மணிபிராட்டியார் கண்ணபிரானைப்பார்த்து மொழிந்த சமயம், பகவான் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

கண்ணபிரான்:— காதலி! இக்களியாட்டத்தில் உனதுதிறத்தை மெச்சினேனாயினும் என்னை வெல்லக்கூடிய சக்தி உன்னிடத்தில் இல்லையென்பதை நன்குணர்வேன்.

ருக்மணி:— அவ்வாறானால் ஏன் இதுவரை நடந்த ஆட்டங்கள் யாவற்றிலும் தோல்வியுற்றீர்கள்? உங்களது உலகம்-புகழும் திறன் தோல்வியிற் தான் தோன்றுமோ?

கண்ணபிரான்:— நான் தோல்வி யுற்றதினால் நீ திறமைபடைத்த விளையாட்டுடையவளென்று எண்ணி விடுவேனோ?

ருக்மணி:— பலேபேஷ்! எங்களவாதம் சேர்த்தியா யிருக்கின்றது. நீங்கள் தோல்வியுற்றதினால் நீங்கள்தான் சமர்த்தரென்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்களோ!

கண்ணபிரான்,— ருக்மணி! உன்னுடைய சமத்காரத்தை இத்தடவை காண்போம். கொட்டையை உருட்டு— என்றதும் ருக்மணி சதுரங்கக்கொட்டையை வீசினாள். அது ஒருவருக்கும் ஜயத்தைக் காண்பிக்காமல் உருண்டு, உருண்டு செல்ல ஆரம்பித்தது. வெகுநேரம்வரை உருண்டுகொண்டிருப்பதைப் பார்த்து ஆச்சரியங்கொண்ட அன்னை, "நாதா! இதுவென்ன ஆச்சரியம்! என்று வினவினாள். அத்தருணம் அம்மையார் கேசத்தினின்றும் பாரிஜாதமலர் கீழேவிழுந்து கரிந்துபோயிற்று; கண்ணபிரானுடைய பட்டுப்பீதாம்பரம் திடீரென்று இருதுண்டாகக்கிழிந்தது.

ருக்மணி:— நாதா இந்த உத்பாதங்கள் எந்தக் கெடுதலைக் குறிக்கின்றனவோ? ஏ மாயாவினோத! எதனால் இவ்வாறு அபசகுனக்குறிகள் தென்படுகின்றன?

கண்ணபிரான்:— ஆசையின் ஆலயமே! எனக்கு ஒன்றும் தெரியவாராது. எல்லாம் ஈசன்செயல்!

ருக்மணி:— அச்சுதனே! அற்புதனே! தற்பரனே! மண்ணுலகும் விண்ணுலகும் ஒன்றாய் நின்ற மாயவனே! உங்களுக்குத் தெரியாதென்று கூறுவதை இடைப்பெண்கள் நம்புவார்கள். மன்னர்குலத்துதித்த என்னை ஏமாற்ற உங்களால் முடியாது. இந்த உத்பாதங்களின் உண்மையைக் கூறினாலன்றி உங்களைத்தொட மாட்டேன். இது சத்தியம்.

கண்ணபிரான்,— கன்னிகாரத்தினமே! உண்மையாக நான் ஒன்றுமறியேன். நேற்றுக்காலைமுதல் இதுவரை உன்னைவிட்டுப் பிரிந்தது கிடையாது. அவ்வாறிருக்க நான் எதை அறிவேன்?

ருக்மணி:— நாதா! இந்த ஏமாற்றங்கள் என்னிடம் செல்லாது. ஒவ்வொரு கிருஹத்திலும் ஒவ்வொரு கிருஷ்ணனாகச் சென்று பதினாயிரம் கோபிகா ஸ்திரீகளை ஏமாற்றின உமது கெட்டிக்காரத்தனத்தை என்னிடம் காண்பிக்க வேண்டாம். அந்தப்பக்கம் சத்தியபாமா இருக்கிறாள்! போய்வாருங்கள்.

கண்ணபிரான்:— காரிகையே! உண்மையைச்சொன்னால் நீ நம்பமாட்டேனென்கிறாய், அதற்குயார்பழி—என்று சொன்ன சமயம் ருக்மணியினது காதகில் அணியப்பட்டிருந்த விலையுயர்ந்த வளையல்கள் படீர் படீரென்று தெறித்தன.

பார்த்தார் பக்தவச்சலன். அனுதைக்கு தெய்வமேதுணை யென்று தனது அன்பிற்சிறந்த சகோதரி இடும்பவனத்தில் அலறுவதைக்கேட்டார், கற்பிற்சிறந்த அக்காரிகையின கஷ்டங்களே இவ்வித அபிகுறிகளாகக்காண்கின்றன வென்பதை யுணர்ந்தார். உடனே பீஷ்மன் புதல்வியை விளித்து; "காந்தா! உண்மையைக்கூறுகின்றேன், நமது பலராமன் குழந்தையை சுபத்திரையின் செல்வக்குமாரனும் எனது அன்பிற்குப் பாத்திரமானவனுமான அபிமன்யுவுக்குப் பாணிக்கிரகணஞ்செய்து கொடுப்பதாக வெகு நாட்களுக்குமுன்பே வாக்களித்திருக்கிறேன். பலராமனும் சரி யென்று சொல்லியிருந்தான். இப்பொழுது பாண்டவர்கள் ஏழ்மை நிலையிலிருப்பதாகக்கருதி, நான் எவ்வளவோ வேண்டியுங் கேளாமல், துரியோதனன் புதல்வனுக்குக்கொடுக்கப் போகிறான். இந்த விவாகச்செய்தியைக் கேள்வியுற்ற அபிமன்யு தனது அன்னையுடன் புறப்பட்டு, வத்சலையைக் 'களவாடியாவது கலியாணம் புரியவேண்டுமென்கிறநோக்கத்துடன் துவாரகையைநோக்கிவந்து கொண்டிருக்கையில், இடும்பவனத்தில் கடோற்கஜனுடன் போர் புரிந்து அதன்பயனாய் உயிரைத்துறந்து யுத்தகளத்தில் பிணமாய்க் கிடக்கிறான். மைந்தனிறந்த சோகத்தால் சுபத்திரை என்னை ஆராதித்துப் புலம்பிக் கொண்டிருக்கிறாள். ருக்மணி! அவளுடைய வார்த்தைகளுக்கு உடனே பதிலுரையாததால் இந்தக் கெடுதிகளெல்லாம் நமக்கு ஏற்பட்டன. இனிமேல் நீ கவலையுற வேண்டியதில்லை. இப்பொழுது புறப்பட்டுச் சென்று அவளுடைய மனக்கவலையைத் தீர்த்து வைக்கிறேன். காதலி! முன்பே உன்னிடம் கூறியிருக்கிறேன் வத்சலையை அபிமன்யுவுக்கே கன்னிகாதானஞ்செய்து கொடுப்பதாய். ஆகையால் நீ வேண்டிய சாமான்களுடன் தயாராயிரு "என்று கூறினர். மாயவிலாசனுனபகவான் இடும்பவனத்தைநோக்கிப்புறப்பட்டார்

தனது இயற்கையான தோற்றங்களை மறைத்தார் தாமோதரன். சங்கு, சுதர்சனம் முதலிய கரத்தாபரணங்களைக்கழற்றி ஓர் மூட்டையாகக்கட்டிக்கொண்டார். பட்டுப்பீதாம்பரம் முதலியவைகளைக்களைந்துவிட்டு கிழிந்த பழைய வஸ்திரங்களை அணிந்து கொண்டார். இயற்கையால் நறுமணங்கமழும் அவரது பொன்னிறக்கேசம் சடைசடையாய்த்தொங்கிற்று. ஒருகரத்தில் பெரிய கம்பு;மற்றொருகரத்தில் ஓர்உடுக்கு(ஓர்விதவாத்தியக்கருவி) இவ்வாறு வைகுண்டநாதன் தன் வேடத்தைக்களைந்து மலைக்குறவன் வேடம் பூண்டார். பளீர் பளீரென்று நெற்றியிற்றுலங்கிக்கொண்டிருந்த நாமம் மறைந்து கரிப்பொட்டாகமாறிற்று. கால்களில் சலங்கைகளின் ஒலி கலீர் கலீரென்று ஒலிக்க, கையிலுள்ள உடுக்கின் நாதம் டமடமவென்று முழங்க, கம்பின் சத்தம் கட் கட்டென்று கேட்க, பகவான் இடும்பவனம் அடைந்து, தேர்த்தட்டின்மீது சாய்ந்து மூர்ச்சையாய்க்கிடக்கும் அணங்கைநெருங்கினார்.

"பச்சை குத்தலையா, அம்மே! பச்சை குத்திலையா"
பாம்பு பச்சை, பச்சை பச்சை, பல்லி பச்சை,
தேளு பச்சை, தேரு பச்சை, தேங்காயீ பச்சை

என்று கூவிக்கொண்டு கோவிந்தன் சுபத்திராதேவியைநெருங்கி, "அம்மா! குறி வேண்டுமா! குறிசொல்லவேண்டுமா" என்று கேட்டார். தூக்கமேலீட்டினால் வாளாவிருந்த பற்குனன் பத்தினியைத்திரும்பவும், "அம்மா! கவலையொழிக்க! உங்கள் வருத்தத்தைக்கூறினால் தீர்த்து வைக்கிறேன். எப்பேர்ப்பட்ட வியாதியாயிருந்தாலும் மருந்து கொடுப்பேன். ஆயர்குலதிலகன் ஆணையாய் எல்லா வியாதிகளையும் தீர்த்து வைக்கும் சக்தி எனக்குண்டு" என்று கூறினசமயம் சுபத்திராதேவி நேத்திரங்களைத்திறந்து "அப்பா! நீயார்? என்னகேட்கிறாய்?" என்று கேட்டாள்.

பகவான்:— அம்மா! உங்களுடைய வருத்தத்தைக்கூறினால் என்னால் இயன்றஉதவிசெய்வேன். நான் இருப்பது குடகுமலை குறிசொல்லும் ஜாதியைச்சேர்ந்தவன். வெகு நன்றாய்க்கூறி சொல்வேன்.

சுபத்திரை:— அப்படியானல் நான் யாரென்றும், எதற்காக வருத்தப்படுகிறேனென்றும் நீயே அறிந்து கொள்ளலாமல்லவா? என்னைக்கேட்டு அறியவேண்டியதில்லையே!

பகவான்:— உண்மைதானம்மா! நீங்கள் யார் சொல்லவேண்டுமா! கண்ணபிரான் சகோதரி, சுபத்திரை யென்பது உங்கள் திருநாமம். பாண்டவர்களில் நடுப்பிறந்தோன் மாயச்சந்நியாசி வேடம் பூண்டு உங்களை மணம் புரிந்து கொண்டான். ஓர் சுபசமாசாரத்திற்குச்செல்லுகையில் உங்களுக்கு அசுபச்செய்தி நடந்தது. இவைகள் பொய்யல்லவே.

சுபத்திரை:— பொய்யல்ல, உண்மைதான். இன்னும நன்றாக உரை.

பகவான்:— உங்கள் மைந்தனுடன் ஓர்விவாக விஷயத்தைக் குறித்து துவாரகை சென்றுகொண்டிருக்கிறீர்கள், வழியில்ஓர் அசுர அரசனுடன் போர் புரிந்து உங்கள் புத்திரன் அதோ மாண்டு கிடக்கிறான். அவனை எழுப்பித்தர வேண்டுமென்று உலகளந்த எம்பிரான் கண்ணனைக்குறித்து கதறுகின்றீர்கள். உடன் பிறந்தோனயினும் இதுகாறும் உங்களுக்கு உதவி செய்ய உடன்படவில்லை அந்த அச்சுதன். இது உண்மைதானே?

சுபத்திரை:— உண்மைதான், கண்ணபிரான் உதவிசெய்ய வருவாரா? ஏ! குறவா! உன்னுடைய குறி சொல்லும் திறமையை மெச்சினேன், எப்பொழுது என் மைந்தன் உயிர் பெற்று எழுந்திருப்பான்?

பகவான்:— அம்மே! ஒருவருடைய நடந்த சரித்திரத்தை தான் இனமாக உரைப்பேன். எதிர்கால சம்பவங்களைக்கூறவேண்டுமானல் ஏராளமாகப்பரிசளிக்கவேண்டும்.

சுபத்திரை:— இப்பொழுது என்வசம் பணங்கிடையாது: அதைத்தவிர வேறு எதைவேண்டுமானலும் கேட்டு வாங்கிக் கொள்ளலாம். குறி சொல்பார்ப்போம்.

பகவான்:— பரிசை முன் கூட்டிக்கொடுத்தாலொழியக்கூற மாட்டேன். உங்கள் கரத்தில் தென்படும் பச்சைமோதிரத்தைக் கொடுக்கவேண்டும்.

சுபத்திரை.— அடே! குறவா! நான் யாரென்பதை நன் குணர்வாய். ஏதோ காலவேற்றுமையினால் இப்பொழுது இக்கதிக்கு ஆளாயிருக்கின்றோம். இன்னுங்கொஞ்ச நாட்களில் பழைய நிலைமைக்கு வருவோமென்பதிற்கு ஐயம்வேண்டாம். அந்தமோதிரத்தைக்கொடுக்கமுடியாது. எனது விவாஹகாலத்தில் எனது சகோதரன் கண்ணனால் பரிசாக அளிக்கப்பட்ட அம்மோதிரத்தை இழக்கமாட்டேன். அதைத்தவறவிடக்கூடாதென்று சகோதரனுங்கூறியிருக்கின்றான். ஆகையால் அதைத்தவிர வேறெதை வேண்டுமானாலுங் கொடுக்கத்தயார், எனது கழுத்தில் அணியப் பட்டிருக்கும் ஆபரணங்கள் முழுவதையுங்கழற்றித்தருகிறேன். எனது விலையுயர்ந்த பட்டாடையைத்தருகிறேன், ஆனால் அக்கணையாழியை மாத்திரம் பிரியமாட்டேன்.

பகவான்:— அம்மணி! அப்படியானால் நான்போய்வருகிறேன். எனக்குவேண்டியது அக்கணையாழியே.

சுபத்திரை:— குறவா! உனக்குக் கிஞ்சிற்றேனும் இரக்கம் கிடையாதோ! எதைப்பிரிந்து இருக்கமுடியாதோ அதைத்தான் வேண்டுமென்று பிடிவாதமாய்க்கேட்கின்றாய். உனக்கு எப்படியாவது பணந்தானே வேண்டும்? அக்கணையாழியைவிட எனது நகைகளே விலையுயர்ந்தவைகள்.

பகவான்:— அக்கணையாழியையும் உங்கள் பட்டாடையுங் கொடுப்பீர்களானால், உங்களுடைய எதிர்காலத்தையுங்கூறி, உங்கள் மைந்தனையும் எழுப்பிக்கொடுக்கிறேன். அக்கணையாழியை விட்டுப்பிரிய மனமில்லாவிடில் நான் சென்று வருகிறேன்.

சுபத்திரை:— ஈசா! இத்தர்மசங்கடத்திற்கு என்னசெய்வேன்;

(தொடரும்)

சுபத்திரை வியப்புந்திகைப்பு மடைந்தாள். கண்ணபிரான் புன்முறுவல்செய்தார். ஆச்சரியமும், திகைப்புங்கொண்ட தாமோதரன் தங்கை, ' அண்ணா உன்னுடைய மாயச் செயல்களை சங்கரனும் பிரமனும் அறியமுடியாமலிருக்கையில் நான் எப்படி அறியக் கூடும். எனது குலகோத்திரங்கள் முழுவதையுங் கூறின குறவன் நீயா!

காற்றிலே குளிர்ந்த தென்ன?
கண்ண பெருமானே நீ
கனலிலே சுடுவதென்ன?
கண்ண பெருமானே!
சேற்றிலே குழம்பலென்ன?
கண்ண பெருமானே! நீ
திக்கிலே தெளிந்த தென்ன?
கண்ண பெருமானே!
ஏற்றி நின்னைத் தொழுவதென்னே?
கண்ண பெருமானே!
ஏழையர் தன்னைக் காப்பதென்னே?
கண்ண பெருமானே!
போற்றினோரைக் காப்பதென்னே?
கண்ண பெருமானே! நீ
பொய்யர் தன்னை மாய்ப்பதென்னே?
கண்ண பெருமானே! நீ
போற்றி! போற்றி! போற்றி! போற்றி!
கண்ண பெருமானே!
நின் பொன்னடிகள் போற்றி நின்றேன்!
கண்ண பெருமானே!

(பாரதி)

மாயமானவரே! மூவராலும் உனது மாயையைக் கண்டு கொள்ளக்கூடாதே என்று துதித்தாள்.

ரைவேந்திரபர்வதமானது சிறிது நேரத்திற்குள் அளகாபுரி

யாக மாறிற்று. பொன்மேடைகளும், தங்கத்தட்டுகளும், சுவர்ணச்சுவர்களும், கனகக்கட்டிடங்களும் எங்கும் தோன்றின.

பின்பு கண்ணபிரான் சபைதனையிடமும் அபிமன்யுவிடமும் விடைபெற்றுக்கொண்டு கடோற்கஜனை மாத்திரம் அழைத்துக்கொண்டு துவாரகாபுரியடைந்தார். தன்னுடைய மந்திராலோசனை மேடைக்குச்சென்று, கடோற்கஜனை அருகில் உட்காரச்செய்து "ஏ! பிரகுமார! நீ ஜாதியில் அரக்கனாயினும் குணங்களிலும் செயல்களிலும் அந்தணரை ஒத்திருக்கின்றாய். உன்னுடைய வனத்தில் பகவானை ஆராதனை செய்துகொண்டிருக்கும் முனிவர்களையும் தபோதனர்களையும் நீ தொந்திரவு செய்யவில்லை யென்ற விடயத்தை நானறிவேன். இப்பொழுது உனது சகோதரனுடைய விவாகம் நடக்கவேண்டும். சாதாரணமாக விவாகத்தை நடத்திவிடலாம். அதற்கு ஒருவனுடைய உதவியையும் எதிர்பார்க்கவேண்டாம்; ஆனால் ஓர் பெரியகாரியம் செய்யவேண்டியிருப்பதால் உன்னுடையஉதவி அவசியமாய் வேண்டியிருக்கிறது. அன்யாய அநியாயமாயும் நய வஞ்சனையுடனும் பாண்டவர்களைச் சூதில் வென்று, கற்புக்கரசியான கணவர்களையே தெய்வமென வழிபடுங்காரிகையான திரௌபதியை துச்சாதனனை விட்டு அவைக்களத்திற்கு இழுத்துவரச்செய்து, அவளுடைய துயிலைக்களைய உத்திரவு கொடுத்து, அவ்வாறு செய்தசமயம் பகவானுடைய அருளால் துயில்வளருவதைக்கண்டு பயங்கொண்டு பல்லிளித்த, அந்த அயோக்கிய துரியோதனனைப் பழிக்குப் பழியாகச் செய்யநினைத்திருக்கின்றேன். இவ்விவாகத்தில் அவனுடையவும், அவனைச்சார்ந்த கூட்டங்களுடையவும் ஆடைகளைக்களைந்து நிர்வாணமாகச் செய்யவேண்டும். இல்லாவிட்டால் எனது மனப்புண்தீராது எனது தங்கையாகிய பாஞ்சாலிக்கு மனநிம்மதி வாராது, இந்தஏற்பாட்டிற்கு உன்னுடைய உதவிவேண்டுமென்று கேட்கிறேன். முதலாவதாக உன்னுடைய சேனைசனியங்களை இன்றிரவுக்குள் இங்கே வரவழைக்கவேண்டும். அவர்களுடைய மாயாசக்தி எவ்விதச் செயல்களுக்கும் இடங்கொடுக்குமாதலால், சில அரக்கர்களைக்கொண்டு அதோ தெரிகின்ற மணப்பந்தலை அடி-

யுடன்பிடுங்கி, ரைவேந்திரபர்வதத்திலுள்ள திருமணமண்டபத்தில் வைக்கவேண்டியது. அப்பந்தலுக்குப்பதிலாக மாயப்பந்தலொன்று நிருமாணிக்கப்படவேண்டும். பந்தலின ஸ்தம்பங்கள், அணிகள், பாய்கள், முதலியயாவும் ராக்ஷசர்களாக இருக்கவேண்டும். சில அரக்கர்கள் விளக்குகளாகவும் தோரணங்களாகவும கமுகு வாழை முதலிய குலைகளாகவும் தொங்கவிடவேண்டும். பந்தலில் விரிக்கப்படும் ரத்னக்கம்பளங்களும் பட்டுப்பாய்களும அரக்கர்களாக இருக்கவேண்டும். இதுதான் மாயப்பந்தலின விசித்திரம். இரண்டாவதாக மாயாபஜார். இது பலவித கடைகளைக்கொண்டதாகவும், அதில் காதுகடுக்கன்கள், கை வளையல்கள், ஆபரணங்கள்; பட்டாடைகள, பீதாம்பரங்கள், ஜரிகைப்புடவைகள், முதலியவைகள் வைத்திருக்கவேண்டும். இந்தசாமானகளெல்லாம் அரக்கர்களின வேறுபட்ட உருவஙகளே, அவர்களே, சிறு மோதிரத்திலிருந்து பெரிய ஆடைகள வரை காணப்படவேண்டும். இக்கடைகளின் முன்பு "பழைய ஆடைகளுக்குப் புதிய ஆடைகள்! பழைய நகைகளுக்கு புதிய நகைகள்!" என்று விளம்பரங்கள் காணப்படவேண்டும். வாங்கூடிய பழைய ஆடைகளை வாங்கி வைத்துக்கொண்டு மாய ஆடைகளையும மாயநகைகளையும தாராளமாய்க்கொடுக்கவேண்டும் இதுவே மாயாபஜாரின் சூட்சமம். மூன்றாவதாக வத்சலைமாயம் இதில் உனது திறன காண்பிக்கப்படவேண்டும முதல் முதலாக நீ துரியோதனனுடைய சகோதரி துச்சலை வேடம்பூண்டு ஒரு தட்டில் வெற்றிலை பாக்கு சந்தனம் புஷ்பம் பலவிதபழங்கள் பட்டாடைகள் நகைகள் முதலியவைகளை வைத்து எடுத்துக்கொண்டு, இரண்டு அரக்கர்களை தோழிகளாக்கி வத்சலை இருக்குமிடஞ்சென்று, அவளைத்தனது அரண்மனைக்கு அழைத்துச்செல்லவேண்டுமென்று கூறி அழைத்துக்கொண்டு நேராக ரைவேந்திரபர்வதஞ்சென்று மைத்தன அபிமன்யுகரத்தில் அப்பைந்தொடியை ஒப்புவிக்கவேண்டியது பின்பு நீ அரக்க உருவைவிட்டு வத்சலை வேடந்தாங்கி மணவீடுசென்று உன்னுடைய வேடிக்கைகளைச்செய்யவேண்டும். சரியாய்முகூர்த்தவேளையில் "அபிமன்யு" என்றகுரல் கேட்டதும் நீயும் உனது ஆட்

களும் சொந்தஉருவை எடுத்துக்கொண்டு மறைந்துவிடவேண்டும் அதற்குப்பின்பு செவியில் கமலங்களாகவும் கடுக்கன்களாகவும் தொங்கக்கூடிய அரக்கர்கள் மெதுவாகத்தங்களுடைய பலத்தைக் காட்டி இழுக்கவேண்டும். துரியோதனனுடைய கூட்டத்தார் யாவரும் நிர்வாணமாய் இருப்பதைக்கண்டு யாவரும் கைகொட்டி நகைக்கவேண்டும். இந்த ஏற்பாட்டிற்குத்தான் உனது உதவியை நாடுகிறேன். இந்த வேலைகளைத்திறனுடனும் சமத்காரமாகவும் செய்துமுடிக்கவேண்டும். இன்றிரவு 10-மணிக்குள் பந்தலும் மாற்றப்படவேண்டும், வத்சலையும் ரைவதகிரிகொண்டு வரப் படவேண்டும்" என்று திருவாய்மலர்ந்தருளினார்.

பார்த்தான் கடோத்கஜன்! உலகளந்தோனுடைய உதவி தனக்கிருக்கையில் ஒருவித இடையூறும் சம்பவிக்காதென்று நினைத்தான். பகவானது துணையிருக்குமளவும் பத்திரமாயிருக்கலாமெனக்கருதி, "ஆபத்பாந்தவா! துரியோதனாதியர்களை நிர்வாணமாக்கி நாங்கள் பல் இளிப்போம் அக்கொடியவன் சூழ்ச்சசபையில் பாஞ்சாலிக்குச்செய்த அவமானத்திற்குப் பழிக்குப்பழிவாங்குவோம் என்று பதிலுரைத்து விடைபெற்றுக்கொண்டு தனது அரியபெரிய ஏற்பாட்டைச்செய்யச்சென்றான். கண்ணனும் தமதிருப்பிடம் சென்றார்.

கடோத்கஜன் மறைந்ததும், பலராமர் தனது இளையோனைப் பார்க்கவந்தார். "அண்ணா! வாருங்கள்! நமஸ்காரம் ஏது இவ்வளவு துரிதமாயிங்கு வந்தது? கல்யாணவீட்டில ஜோலி அசாத்தியமாக இருக்குமே" என்று மாயன் கூறினார்

பலராமர்.— கிருஷ்ணா! என்ன பேசாமலிருக்கின்றாய் எல்லா ஜோலிகளையும் பொறுப்புடன் நீ செய்யவேண்டியதிருக்க மணப் பந்தல் பக்கமேவருவதில்லை.

கிருஷ்ணர்.— அண்ணா! இரண்டு நாளாக உடம்பு சௌக்கியமில்லை. தலைவலிக்கிறது உடம்பு சோர்வடைகிறது. அப்படி இருந்தும் இதுகாறும் கல்யாணஜோலிகளைச்செய்து கொண்டிருக்

தேன். சம்பந்தி துரியோதன மகாராஜருடன் வெகுநேரம் வரைச் சதுரங்கமாடியும், புஷ்பம் சந்தனம் முதலியவைகளை நன்றாகப்பார்த்தும், குழந்தை வத்சலையிடஞ்சென்று, "வத்சலா! நீ கவலைப்பட வேண்டாம். அர்ஜுனன் சுதனை மணந்துகொள்ளவில்லையே யென்று வருந்தவேண்டாம் எல்லாம் ஈசன்செயல்" என்றுகூறி சமாதானப்படுத்தியும், முகூர்த்தத்திற்கு வேண்டியவைகளைத் தயார் செய்து முனிவர்களுக்கும் அந்தணர்களுக்கும் தனிவிடுதிகள் ஏற்படுத்தியும் விட்டு இப்பொழுதுதான் கிருஹத்திற்கு வந்தேன்.

பலராமர்:— கிருஷ்ணா! மெத்த சந்தோஷம். ஆனால் அர்ஜுனனைப்பற்றி இன்னும்மறந்துவிட மாட்டேனென்கிறாய். நான் மணவோலை அனுப்பியும் வராத நமது சகோதரியுடைய அவள் காதலையும் நினைப்பதில் பாபமே ஒழிய புண்ணியமில்லை. பாவம்! சுபத்திரை! உன்னுடைய கபட நாடகமே இதற்குக்காரணம். நான் சால்வதேசமன்னனுக்கு அவளை விவாகஞ்செய்து கொடுக்கவேண்டுமென்று நினைத்திருக்கையில் நீ அர்ஜுனனை வரவழைத்து இல்லாத சங்கதிகளை நடத்தினாய்.

கிருஷ்ணர்:— அதையெல்லாம் இப்பொழுது நினைப்பானேன். முகூர்த்தம் நடக்கவேண்டும். இப்பொழுது சாவகாசமாய் பேசிக்கொண்டிருக்க சாவகாசம் கிடையாது.

பலராமர்:— கிருஷ்ணா! நீ சொல்வது உண்மைதான். ஆனால் தலைவலிக்கிறதென்று இங்கு இருந்துகொண்டு மாயக்காரி நடத்திவிடக்கூடாது. தலைவலித்தாலும் உடம்பு சோர்வடைந்தாலும் பொருட்படுத்தாமல் நமது அரண்மனைக்குவந்து எல்லாக்காரியங்களிலும் கலந்துகொள்ளவேண்டும்.

கிருஷ்ணர்:— அண்ணாவுடைய உத்திரவைத் தட்டி நடக்க காலமுண்டோ!

பலராமர்:— சபாஷ்! தம்பி சென்றுவருகிறேன்.

பலராமர் சென்றதும் கபடநாடக சூத்திரதாரி சிரித்தார். "ஆஹா! இந்த பலராமனின் பணத்தைரியத்தையும், எனது மனோ தைரியத்தையும் நாளைக்காலை பார்க்கிறேன்" என்று நினைத்த சமயம், ருக்மணிதேவி வெளியேவந்து, "நாதா! மிகுந்த சிரமப் பட்டு வேலைகள் செய்கிறது போலக் காணப்படுகிறதே" என்றாள். "எல்லாம் நமது குழந்தை வத்சலையின் பொருட்டுத்தான், ருக்மணி" என்றார் கோபாலன். "சபாஷ் நாதா! தாங்கள் வைவேத்திரகிரியில் செய்திருக்கும் ஏற்பாடும் இப்பொழுது தமையனுடன் புரிந்த சம்பாஷணையும் மிகப் பொருத்தமானதே!" என்று கூறி தனது இருகரங்களையும் துளபமணிமார்பன் மீது போட்டு, அவரை இறுகக் கட்டிக்கொண்டாள். பாலுக்குங்காவல், பூனைக்குந் தோழனாகிய கண்ணபிரான் தனது காதலி ஆலிங்கனஞ் செய்ததை உணர்ந்து பூரித்து புளகாங்கிதமடைந்து தனது கரங்களால் அவளது மெல்லிய இடையைக்கட்டி, மார்பைத்தழுவி அவளுடைய களங்கமற்ற வதனத்தில் முத்தங்கள்கொடுத்து கேளிவிலாசத்தை அனுபவித்தார்.

---

## அத்தியாயம் 8.

### அரசன் அன்றுகொல்லும், தெய்வம் நின்றுகொல்லும்

——(o):——

"அச்சுதம் கேசவம் ராம நாராயணம்
கிருஷ்ண தாமோதரம் வாசுதேவம் ஹரிம்;
ஸ்ரீதரம் மாதவம் கோபிகா வல்லபம்
ஜானகீ நாயகம் ராமசந்திரம் பஜே.

அச்சுதம் கேசவம் சத்யபா மாதவம்
மாதவம் ஸ்ரீதரம் ராதிகா ராதிதம்;
கிருஷ்ண கோவிந்த ஹேராம! நாராயண
ஸ்ரீபதே வாசுதேவ வாஜித ஸ்ரீநிதே.

நாராயணம் நிராகாரம் நரவீரம் நரோத்தமம்
நரஸிம்ஹம் நாகநாதம் தம்வந்தே நரகாந்தகம்;
கோவிந்தம் கோகுலானந்தம் கோபாலம் கோபிவல்லபம்
கோவர்த்தனோத்தாரம் தீரம் தம்வந்தே கோமதிப்ரியம்.

பீதாம்பரம் பத்மநாபம் பத்மாக்ஷம் புருஷோத்தமம்
பவித்ரம் பரமானந்தம் தம்வந்தே பரமேச்வரம்;
ராகவம் ராமசந்திரம் ராவணாரிம் ரமாபதிம்
ராஜீவலோசனம் ராமம் தம்வந்தே ரகுநந்தனம்.

நாராயணா! கோபாலா! கோவிந்த முராரே! " என்று வைகறையில் கூவிக்கொண்டு அந்தணர்களும், தபோ முனிவர்களும், ரிஷிபுங்கவர்களும், கரங்களில் தண்டம், கமண்டலம், மான்தோல் புலித்தோல் தேவபூஜை சிவபூஜைப்பெட்டிகள் புஷ்பங்கள் முதலியவைகளை எடுத்துக்கொண்டு யமுனாநதியை நாடிச்சென்று கொண்டிருந்தனர். பொழுதும் விடியுந் தருணத்திலிருந்தது. செந்நிறக்கிரணங்களை பரப்பிக்கொண்டு திவாகரன் கீழ்த்திசையிற் றோன்றி துவாரகாபுரியின்மீது தனது கனகக்கிரணங்களை வீசி, அந்நகரை அளகாபுரியோ அமராவதியோவென ஐயமுறும்படி கனகாபுரியாக மாற்றினன். காலை ஸ்நானஞ்செய்ய வீதிகளை விரைவாய்க் கடந்துகொண்டிருந்த மறையோர்களின் நேத்திரங்கள், பகலவனின் ஒளியால் பொன் எழுத்துகள்போற் செய்யப்பட்ட " பழைய கிழிந்தவஸ்திரங்களுக்குப் புதிய பட்டாடைகள் கொடுக்கப்படும். நகைகளும் ஆபரணங்களும் இனமாய்க் கொடுக்கப்படும் " என்ற விளம்பரப் பலகையின்மீது விழுந்தன. பகலவன் நாமத்தைத் துதிசெய்துகொண்டு சென்ற விற்பன்னர்கள் இவ்வதிசயச் செய்தியைநோக்கி வியந்து விரைந்து வீடுசென்று தங்கள் கிழிந்தவஸ்திரங்களுக்கும் கெட்டுப்போன நகைகளுக்கும் புதிதானவைகளை மாற்றிக்கொண்டு சென்றனர். துவாரகாபுரி அந்தணர்கள் முழுவதும் இம்மாதிரி மாற்ற ஆரம்பித்தும், கடையில் சேகரித்துவைத்திருந்த ஆடையாபரணங்கள் குறையவில்லை.

வத்சலையின் விவாஹதினம்! மஹாராஜாக்கிய துரியோதனன் தனது உற்றார் உறவினர்களை அழைத்துக்கொண்டு வீதிக்கு வந்தான், துரியோதனாதியரின் பத்தினிகளும தங்கள் தங்கள் பந்துக்களுடனும் சேடிகளுடனும நதிக்குத் தீர்த்தமாடப் புறப்பட்டனர். சுருங்கச்சொல்லுங்கால் அஸ்தினபுரி ராஜமக்கள் நதிநோக்கி நடந்தனர் இவர்களுடைய கேத்திரங்களையும், மாயாபஜாரின் கடைகளில் தொங்கவிட்டிருந்த பலகைகள் பறித்தன. தனது மகளின விவாக மஹோற்சவத்தையொட்டி பலராமர் இவ்வித ஏற்பாடு செய்திருக்கிறாரென்று நினைத்து சம்பந்திகள் தங்களது ஆடைகளையும் ஆபரணங்களையும மாற்றிக்கொண்டனர். எல்லாருடையஇடுப்பிலும் புதுப்புதுபட்டாடைகள்! விதவித ஜரிகைஉடைகள்! தேகத்தில் கண்ணைக்கவரும் நகைகள்! காதுகளில் கம்மல்கள்! கைகளில் வளையல்கள! கழுத்தில் சங்கிலிகள்! இந்த மாயவலைக்குள் அகப்படாதவர்கள வயது முதிர்ந்த பீஷ்மாச்சாரி துரோணாச்சாரி, கிருபாச்சாரி, காரதர் முதலியவர்களே. துரியோதனன, கர்ணன், சகுனிமுதலியவர்கள் தங்களது புது ஆடைகளையும் ஆபரணங்களையும கிரீடங்களையும் பார்த்துப்பார்த்து மகிழ்ந்து கொட்டாவி விட்டனர்,

இங்கு இவ்வாறிருக்க, அதேநேரத்தில் மனோவேகத்துடன் விண்ணிலும் பறந்து செல்லக்கூடிய புரவிகள் பூட்டிய ரதமொன்று பலராமருடைய மாளிகையின் வாயிலில் வந்துநின்றது; அதினின்றும யௌவன மங்கை ஒருவள் கீழிறங்கி அரண்மனைக்குட் சென்றாள். அவளுக்குப்பின் இருபணிமக்கள் தங்கத்தாம்பாளங்களை கையில் எடுத்துக்கொண்டு யௌவனமங்கையைப்பின்தொடர்ந்தனர். பலராமருடைய தாமபத்னி அவர்களைக்கண்டுவரவேற்று உபசரித்தும் பணிமக்கள தாமபாளங்களைக் கீழேவைத்தனர். வெற்றிலை பாக்கு சந்தனம புஷ்பங்கள் புடவைகள் முதலியவைகள் அந்ததட்டுகளில் காணப்பட்டன. சிறிதுநேரம் சாதாரண விஷயங்களைப்பேசினாளும, "அம்மணி! கன்னிகைவத்சலையை என்னுடன் அழைத்துச்செல்ல அனுமதிதரல் வேண்டும்; எனது அத்தையர் விதந்துகளாதலால் கல்யாணமண்டபத்திற்கு வரமாட்டார்கள்.

பெண்ணைப்பார்த்து நகைகள் பூட்ட அவர்கள் ஆசைகொண்டிருப்பதால் வத்சலையை என்னுடன் அனுப்பவேண்டும். 'என்று வந்தமங்கை உரைத்ததும், " அம்மா துர்ச்சலே! குழந்தையை அனுப்புவதைப்பற்றி ஆட்சேபனை கிடையாது. ஆனால் சீக்கிரம் கொண்டு விட்டுவிடவேண்டும் " என்று பலராமர்மனைவி கூறினாள். அதற்குச்சம்மதித்தாள் துர்ச்சலை அம்மாள். வத்சலையை விளித்தாள் பெற்றதாயார், வாடியவதனத்துடன் வந்தாள் "கண்ணே! உனதுமைத்துனி அம்மையாராகிய இவர்களுடன் சென்றுவா" என்று அவளுடைய தாயார் கூறினதும், வருத்தங்களை எடுத்துக் காட்டும் வதனத்தையுடைய வனிதையாகிய வத்சலை பதில் ஒன்றும் உரையாமலும் வந்த மைத்துனியை வணங்காமலும் வெளியே வந்து ரதத்தின்மீது ஆரோகணித்தாள். அவளது உடம்புமாத்திரம் அந்த ரதத்தின்மீது காணப்பட்டதேயொழிய மனதானது அத்தினாபுரியில் இருப்பதாக எண்ணிய அபிமன்யுவின் மீது நாடிற்று. " கோபாலா! நீ தான் என்னைக்காப்பாற்றவேண்டும். நான் காதல்கொண்ட புருடனுக்கு நீ தான் என்னை மணஞ்செய்துவைக்க வேண்டும். உன்னையன்றி வேறுதுணை எனக்கு இல்லை. காதலின் வலிமையையும், சாசுவதமான வெற்றியையும நீ அறிவாய்; அனுபவித்திருக்கிறாய்; அனுபவித்துக்கொண்டிருக்கிறாய்; அனுபவிப்பாய்.

அன்பே நின்றயும் மண்பெருலகாம்,
எரியுங் கானல் விரியும் பாலையில்,
திரியும மனிதர் நெஞ்சஞ் சிரிது,
தங்கி அங்கு அவர் அங்கமகுளிரத்,
தாருவாய்த் தழைத்தும, ஓயாத் தொழிலில்,
நேருந் தாகம் நீக்குவான் நிமல,
ஊற்றா யிருந்து அவருள்ளம் ஆறறியும்,
ஆறலைக் கள்வர் அறுபகை மீறில்,
உறு துணையாய் அவர்நெறி முறைகாத்தும்,
முயற்சியாம் வழியில் அயர்ச்சி நேரிடில்
ஊன்று கோலாய் அவருக்கும உயர்த்தியும்,

இவ்விதம் யாரையுஞ் செவ்விதப் படுத்தி,
இகத்துள சுகத்திற்கு அளவு கோலாகி,
பரத்துள சுகத்தை வரித்த சித்திரமாய்,
நின்ற [உண்மைக்] காதலின் நிலைமை நினையில்
இரும்பும் காந்தமும் பொருந்துந் தன்மைபோல்!
(மனோன்மணீயம்)

இருப்பதை நீ அறிவாய்! கண்ண பிரானே! நீ தான் என்னைக்கடைத்தேற வழிகாட்டவேண்டும். தெய்வீகத்தன்மை பெற்ற எனது காதலுக்குப்பங்கம் நேரிடக் கூடாது. காதலர்கள் ஆயுட்காலத்தில் எவ்வித இன்னல்கள் வந்து நேர்ந்தபோதிலும், துன்பங்கள் வந்தடைந்தபோதிலும் வெகு காலமாக பிரிக்கப்பட்டாலும், அவர்களுடைய உண்மைக்காதல் நாள்தோறும் ஒருகலை கூடிவளரும் சுக்லபக்ஷத்துமதிபோல்மேன் மேலும் விருத்தியடையுமே ஒழிய குன்றாது. இதற்கு நளதமயந்தி, ராமசீதா, அரிச்சந்திரன் சந்திரமதி, துஷ்யந்தன், சகுந்தலை, முதலியவர்களின் சரிதங்களே சான்று. காதலின் சாசுவதவெற்றியைப்பற்றி பலகவிகள் புகழ்ந்துரைத்திருக்கின்றார்கள். ஆகையால், ஏ! ஆபத்பாந்தவா! அனாதரக்ஷகா! இந்தஇரதத்தில் நான் செல்லும் பொழுது என்னைத்தூக்கிச்சென்று எனது காதலன் கரத்தில் வைத்து விடவேண்டியது. துர்க்காதேவி ஆலயத்திற்கு ப்பூஜைசெய்து திரும்பிவந்துகொண்டிருந்த எனதன்னை ருக்மணியை நீ தூக்கி இரதத்தில் வைத்து துவாரகை கொணர்ந்து மணஞ்செய்து கொண்டு இன்பமனுபவிக்கவில்லையோ! அதுமாதிரி எனக்கும் உதவி செய்ய முன்வரமாட்டாயா! பாண்டுரங்கா! பக்தவத்ஸலா! பங்கயநயனு! '' என்று மனதில் நினைத்துக்கொண்டாள். சிறிது நேரம் தரைமீது விரைவுடன் ஓடிச்சென்ற ரதமானது விண்ணில் எழும்புவதைநோக்கியசங்கை மனமகிழ்ந்தாள். தன்னைக் காப்பாற்றுவதற்கு கண்ணபிரான் தீர்மானித்துவிட்டார். விரீர் விரீரென்று சத்தமிட்டுக்கொண்டு ரதமானது ஆகாயத்திற் பறந்து சென்று மைவேந்திர மலையடிவாரத்தில் புதிதாய் நிர்மாணிக்கப் பட்டிருந்த அரண்மனை வாயிலின் முன்பு கீழிறங்கிற்று. என்ன

அதி அற்புதம்! ஆனந்தம்! சிறிதுநேரத்தில் அபிமன்யுவின் கரங்களிடையில் தானிருக்கப்போவதாக வத்சலை உணர்ந்தாள்.

இந்திரனது ஆளுகையின் கீழமர்ந்தோராகிய அரம்பையர்கள், அல்குலின் மேற்புறத்தில் பாந்த மேகலையும், கோக்கப்பட்ட பாதஜாலங்களும், பாம்பின் தலைபோற் செய்யப்பட்ட நூபுரவணியும் பூண்டவர்களாய், வத்சலாதேவியை அழைத்துவந்தனர்.

தேவலோக மாதுபோற் காணப்பட்டாள் சுதாகாயகி, அவளுடைய நடையைப்பார்த்த செருக்கையுடைய ஹம்சங்கள் அயர்ந்து வீழ்ந்தன.

> கற்றைவிரி பொற்சடை பயிர்த்துறு கலாபம்
> சுற்றுமணி புக்கிழை மிக்கிடை துவன்றி
> விற்றவழ வாணிபிர மெய்ப்பணிகள் மின்னச்
> சிற்றிடை நுடங்கவொளிர் சீறடி பெயர்த்தாள். (கம்பர்)

கார்மேகம்போற் கருத்த கேசத்தின் மத்தியில் விண்மீன்கள் போன்று ஒளிக்கும் பலவித வஜ்ஜிரவைடூரியங்களையும், பலவித நறுமணங்கமழும் மலர்களையும் அபரிமிதமாக அணிந்து கொண்டிருந்த வத்சலையைநோக்கி அங்கு கூடியிருந்தோர் யாவரும் வியப்படைந்தனர். அச்சம் நாணம் மடம் பயிர்ப்புமுதலிய அருங்குணங்களையும், அறவோர்களித்தல் பெரியோர் கீழ்படிதல் முதலிய ஒப்பற்ற செய்கைகளையும், தங்களகதே கொண்ட அவளுடைய கயல்மீன் பிறழ்ந்த கண்கள் தேவர்களையும் மூவர்களையும் பிரமிக்கச்செய்தன,

> சுமைத்தவரை யின்மைமறை தாஜமென லாமச்
> சுமைத்திரள் முலைத்தெரிவை தூய்வடிவு கண்டார்
> அமைத்திரள்கொ டோளிபரு மாடவரு மெல்லாம்
> இமைத்தில ருயிர்த்திலர்கள் சித்திரமெ னத்தாம். (கம்பர்)

இவ்விதமாய் விவரிக்க இயலாத வனப்புப்பெற்ற வத்சலாதேவி மணமண்டபம் புகுந்தாள்.

துவாரகையில் விவாகமஹோத்சவம் நடைபெற ஆரம்பித்தது. சம்பந்திகளும் உற்றார் உறவினர்களும் விவாகமண்டபத்தில் வந்து கூடினார்கள். மங்களநாதம் எங்கும் ஒலித்தது. வேதியர்கள் அணிஅணியாக வீற்றிருந்து அக்னிவளர்த்து வேதமோதினர். வசந்தகாலமாரிபோல் பன்னீர் தெளிக்கப்பட்டது. கமகமவென்று கமழும் மணத்தையுடைய மாலைகள் எல்லாருடைய கழுத்திலும் காணப்பட்டன. மங்கையர்கள் மங்களஒலி எழுப்பினர். நாரதரே விவாகத்தை நடத்தி வைக்க வந்திருக்கிறாராதலின் மாப்பிள்ளை பக்கத்தில் அமர்ந்து கொண்டு வேதியர்கள் செய்யும் கிரியைகளை கவனித்துக்கொண்டிருந்தனர். வைதீகமுறைகள் ஒழுங்காக ஆரம்பித்தன. மாப்பிள்ளையின் அலங்காரத்தைப்பார்த்துப் பார்த்து யாவரும் பிரமித்துப்போயினர். வாசனைஎண்ணை விட்டுச்சீவி முடியப்பெற்ற கருங்கூந்தலும், நெற்றியில் தகதகவென்று துலங்கும் ஜவ்வாது திலகமும், விண்மணிகள் ஒலிக்கும் காதுக்கடுக்கன்களும், கூறிய அம்பு போன்ற விற்புருவங்களும் வளைந்த நாசியும, முத்தைப்போன்ற பற்களும, சிவந்த அதரங்களும், வட்டமுகமும் மாப்பிள்ளையைக் கந்தர்வ அரசன் போன்று எடுத்துக்காட்டின. இடுப்பில் கோமேதகம் பச்சை மாணிக்கம் வைடூரியம் முதலிய கற்களால் வைத்து வேலைசெய்யப்பட்டிருந்த பீதாம்பரம் காணப்பட்டது. மாப்பிள்ளை தேஜோமயமாய் வீற்றிருக்க மணமகளைக்கவனிப்போம்.

கண்ணபெருமானுடைய கள்ள ஏற்பாட்டின்படி கடோத்கஜன் மாயவத்சலை வேடமபூண்டான்! தனக்குத்தாகமும் பசியும்அதிகமாக இருக்கிறதென்று தாயிடம்வத்சலை கேட்டகாலையில்போஜனஅறைக்குச்சென்று சிறிதளவு போஜனமெடுத்துக்கொள்ளுமாறு அன்னை கூறினாள். அவ்வாறே வத்சலையும் சமயலறைக்குள் நுழைந்து, அங்கிருந்த மனிதர்களை வெளியே போகச்செய்து சாதம,கறி முதலான வகைகள் ஒன்றையும் சிறிதளவு கூடமீதம வைக்காமல் அருந்தினாள். தண்ணீர் வேண்டுமென்று கிணற்றண்டைசென்று அதை அப்படியே காலியாக்கினாள். துரியோதனாதியருக்கும்

கலியாணத்திற்கு விஜயம் செய்திருந்தவர்களுக்கும்ஓர் உருண்டை சாதமும், ஒரு பாத்திரம் தண்ணீரும் மீதி வைக்காமல் காலியாக்கினாள் மாயவத்சலை. இதற்குள் பெண்ணைத்தேடி புரோகிதர்கள் வந்துவிடவே, வத்சலை கலியாணமண்டபத்தை நாடிச்சென்றாள்.

## தேவகன்னிகை போற்காணப்பட்டாள் வத்சலை

மணமகன் அருகிற்சென்று வீற்றிருந்தாள் வத்சலை. அப்பொழுது லட்சுமணன் தனது கடைக்கண்பார்வையை இடது புறம்செலுத்தி சந்திரனைப்பழித்த முகத்தையும், கோவைக்கனியை நிகர்த்த செவ்விதழ்களையும், கருமேகத்தை யொத்த கூந்தலையும், பொன்வண்டுகளுக்கிணையான கண்களையும், தாமரைப்பூவை யொத்த மார்பையுங்கண்டு அவளது உயர்ந்த அழகில் ஈடுபட்டவனாய், தன் மெய்மறந்து அவளது பாதத்தைத்தொடும்படி மெதுவாகத் தனது பாதத்தை நீட்டினான். கொஞ்சங்கொஞ்சமாக நகர்த்தினான் காலை. அவளுடைய காலடியிலே வைத்தான். அதுதான் தருணமென்று வத்சலை அவன்காலை அமுக்கி விட்டாள். மிகுந்த வேதனையை அடைந்த லட்சுமணன் தனது பாதத்தை இழுத்துக்கொண்டுவிட்டான். புரோகிதர்கள் மாப்பிள்ளையை அழைத்து மணப்பெண்ணின் கரத்தைப்பிடிக்கச்சொன்னார்கள். அம்மொழியை அமிருதமொழியாக நினைத்த மணமகன் தனது வலது கரத்தை இடப்பக்கமாக நீட்டினான். வத்சலையும் தன வலக்கரத்தைக் கொடுக்க லட்சுமணன் அம்மெல்லிய கரத்தைப்பிடிக்க ஆவல்கொண்டு துரிதமாய் எட்டிப்பிடித்தான். "ஆஹா! என்ன ஆச்சரியம்! நமது பைந்தொடியின் கரம் மெல்லியதாக வல்லவோ இருக்கும். ஆனால் இக்கரம் மிகுந்த கடுமையாகக் காணப்படுகிறதே" என்று மனதிற்குள் நினைத்தான் மணமகன்.

துரியோதனன்தியரின் வஸ்திராபகரணக்காக்ஷியின் ஆரம்பம்! முகூர்த்த நாழிகை ஆரம்பித்தது! எல்லாருடைய காதுகளில் கடுக்கன் களாகவும், கம்மல்களாகவும், தலைகளில் கிரீடங்களாகவும் தலைப்பாகைகளாகவும், கரங்களில் வளையல் களாகவும் காப்புக

ளாகவும், மாறுவேடம்பூண்ட ராக்ஷதர்கள் தங்களுடைய பலத்தைச்சிறிது சிறிதாகக்காட்டத்துவக்கினர். "மாமா! என் தலையில் இரண்டு மனிதர்கள் உட்கார்ந்திருப்பது போலுணர்கிறேன். காதுகளில் புதுக்கடுக்கன்கள் அணிந்திருப்பதால் பொறுக்கமுடியாத வலி ஏற்படுகின்றது. சிறிது நேரங்கூட இந்த வீற்றிருக்க முடியாது. சீக்கிரம மாங்கல்யதாரண மாகட்டும்" என்று வணங்கா முடிமன்னனாகிய துரியோதனன் கூறினான்.

சகுனி:— எனக்கும் அவ்வாறே உணர்ச்சி யேற்படுகின்றது. எல்லா சாமான்களும் புதிதாகையால் இவ்வாறு தானிருக்கும் முகூர்த்தம் சீக்கிரம் முடிந்துவிடும்.

இத்தசமயத்தில் துரியோதனுடைய வலது காதிலுள்ள அரக்கன் காதைப்பிடித்து இழுத்தான். துரியோதனன் "ஐயோ" வென்று அலறினான்.

சகுனி:— துரியோதனா! கூச்சலிடாதே, கொஞ்சநேரம் பொறுத்துக்கொண்டிரு.

துரியோதனன்:— மாமா! காதையாரோ கிள்ளிவிட்டார்கள். அப்பொழுது இடுப்பில் ஆடையாக யிருந்த அரக்கன் நன்றாக இடுப்பைப்பற்றினான் மாமா! வேஷ்டி யிருந்த தொந்திரவு பண்ணுகிறது. அதை நீக்கி விட்டு நமது பழைய ஆடையை அணிந்து கொள்வதே நலம்.

சகுனி:— ஸ், சத்தம் போடாதே. நமதுபழைய ஆடைகளெல்லாம் இனிமேல் திரும்பி வராது

துரியோதனன்:— ஆஹா! இதுவென்ன! யாரோ வலது காத்தைக்கடித்து விட்டார்களே. இத்தருணம் தலைப்பாகையாயிருந்த அரக்கன் முதுகில குத்தினான். மாமா! முதுகில் பலமான குத்து விழுந்து விட்டது.

சகுனி:— துரியோதனா! சத்தம் போடாதே! ஒருவரும் உன்னைக்கடிக்கவுமில்லை, குத்தவுமில்லை.

இத்தருணம் அங்கதேசாதிபதியாகியகர்ணன் அங்குவந்து " நண்ப! என்தேகம் முழுவதும் சொல்லமுடியாதவலியெடுக்கிறது இந்த ஆடைகளின் தொல்லைபெரிதாகஇருக்கின்றது" எனக் கூறினன். இம்மாதிரி ஆடவரும் பெண்டிரும் ஒருவர்க்கொருவர் முறையிடஆரம்பித்தனர். மாயவேடம பூண்ட அரக்கர்களோ பலவிதமாய்த்தொந்திரவு செய்ய ஆரம்பித்தனர்.

மணமகளுக்கு முன்பு நாரதர் வீற்றிருந்தார் ஹோமத்தைச்செய்து கொண்டிருந்த நாரதர் திடீரென்று பின்பக்கம் திரும்பினர். அப்பொழுது அருகிலிருந்த அந்தணர் ஒருவர் " முனிவரே! ஏன் கூச்சலிட்டுக்கொண்டு பின்புறந் திரும்பிப்பார்த்தீர்? " என்று வினவினதும், " மறையோரே! என் பின்புறத்தில் யாரோ தன் கால் விரலைக்கொண்டு கிழித்து விட்டான். அது மிகுந்தவேதனையாயிருக்கிறது. பின்புறத்தில் இந்த வேலையைச்செய்தது யாரென்று பார்க்கையில் ஒருவரையுங்காணேம்" என்று கூறினர்.

லட்சுமணன் தனது காமானது இரும்புச்சங்கிலிகளால் அடிபடுவதைப்போல் உணர்ந்து உரக்கக்கூச்சலிட்டான். அப்பொழுது துரியோதனன், " ஸ்! சத்தமிடாதே " என்று கூறினன். மெதுவாக வத்சலை தனது காலை மணமகன் கால்மீது வைத்து அமுக்கி விட்டாள். அதேதருணம் மணமகளுடைய மாலையாக இருந்த அரக்கன் கழுத்தில் நன்றாகக்கடித்துவிட்டான் " தந்தையே! இத்தவிவாகம் வேண்டாம்! " என்று கூறி எழுந்திருக்க முயன்றான், சகுனியும் கர்ணனும அவனைப்பிடித்து உட்காரத்தினர். சிறிது நேரம் ஒருவிததுன்பத்தையும் மணமகன் அடையவில்லை. வத்சலை தனது கரத்தை லட்சுமணன் தோள்மீது போட்டு ஒரு இழுப்பு இழுத்தாள். பொத்தென்று கீழேவிழுந்தான் மணமகன். இதைப்பார்த்ததும் ஓடிவந்தார் பலராமர் " வத்சலே! மணமகனைத்தொந்திரவு செய்தால் உன்னைத்துன்புறுத்துவேன் " என்று கூறிதனது மருமகனைத் தூக்கி மணவறையில் உட்காரவைத்தார்.

தொப்பென்று விழுந்ததையா பந்தலின் மத்தியில் தொங்க

விடப்பட்டிருந்த விளக்கு ஓமகுண்டத்திற்குள். "ஐயோ! இதென்ன நடங்கலாக இருக்கின்றதே" என்று வேதியர் நினைத்தனர். விவாக விஷயத்திலேயே யாவரும்கண்ணுங்கருத்தாய் இருந்தார்களே ஒழிய கண்ணபிரான் வாராமலிருப்பதை ஒருவரும் கவனிக்கவில்லை. ஆனால் நாரதர் ஞானதிருஷ்டியால் அறிந்து பலராமரைத் தனியாக அழைத்து, "பலராமரே! இதுகாறும் பந்தலுக்கு வரவில்லை உமது தம்பியாகிய கிருஷ்ணன். அவன் ஏதாவது மாய வேலைகள் பண்ணினாலும் பண்ணுவான். மேலும் நேற்று வைகுண்டத்திலிருந்து திருமங்கல்ய மொன்று வரவழைத்திருக்கிறான். அது இவ்விவாகத்திற்கென்று நினைத்தேன், ஆனால் அந்த ஆபரணத்தை இங்கு காணேம், ஏமாந்து போகக்கூடாது ஒருவேளை ஏமாற்றி வத்சலையை அபிமன்யுவுக்குக்கொடுத்தாலும் கொடுத்து விடுவான், நீர் போய் அந்த மாயனை அழைத்துவாரும் என்று சொன்னதும் அவர் தலையில் ஒரு அரக்கன் மணிபோல் பொத்தென்று விழுந்தான், நாரதர் தன் தலையை மெதுவாகத்தடவிக்கொடுத்தார்.

கண்ணனைத்தேடிக்கொண்டு பலராமர் பந்தலைவிட்டு வெளியே செல்லுமுன் கபடநாடக சூஸ்திரதாரராகிய பகவான் அங்கு தோன்றினர். "கிருஷ்ணு! என்ன வேடிக்கை செய்கிறாய், எல்லாருக்கும கழுத்து காதுகள தலை முதலிய இடங்களெல்லாம் நோவெடுக்கிறதாம் ஒருவர் அல்லது இருவருக்கு அவ்வாறு இருக்கிறதென்றால் தீன்றமிலலை, எல்லாருக்கும் இருப்பதினால் கவலையாக இருககின்றது, உனது மாயை என்று நாரதர் கூறுகின்றார்" என்று பலராமர் கூறினர்.

கண்ணபிரான்:— அண்ணு! அவர் பொய்யுரைப்பதற்கு பயப்படமாட்டார். நாரதர் கலகப்பிரியர். உங்களுககும எனக்கும் சண்டையை மூட்டி விட்டு வேடிக்கை பார்க்க அவர் வந்திருக்கிறார். அவர் உரைப்பதை கேட்கவேண்டாம்.

பலராமர்:— கிருஷ்ணு! அதுபோகட்டும், நம்முடையகடைத் தெருவில் எந்தக்கடையில் புதிய வேஷ்டிகளையும் ஆபரணங்களையுங் கொடுத்து பழைய கந்தலாடைகளையும் கெட்டுப்போன ஆபரணங்களையும் வாங்குகிறார்கள்? இது யாருடைய உத்திரவு?

கண்ணபிரான்: எனக்கு ஒன்றுமே தெரியாது. நீங்கள் கூறுவது எனக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது.

பலராமர்;— என்ன இப்படிப்பேசுகின்றாய்? நீ அறியாதது உண்டா?

கண்ணபிரான்;— இல்லாமல் என்ன! அபிமன்யுவுக்கு வத்சலையைக் கொடுக்கமாட்டேனென்று சொல்லி, நான் கூறியதை கேளாமல் இச்சம்பந்தம் செய்யத்துணிந்தீர், துரியோதனனுக்கு எதிரிகள் அநேகர் இருக்கிறார்கள். அவர்களில் யாராவது இந்தவேலை செய்திருப்பார்கள்.

பலராமர்:— போடா முட்டாள்! அதையெல்லாம் இப்பொழுது பேசவேண்டாம். முகூர்த்தம் நடக்கப்போகிறது பேசாமலிரு.

கிருஷ்ணன்:— நான் பேசாமலிருப்போமென்றால் நீங்கள் விடுவதில்லை. முகூர்த்தம் நடக்கட்டும்.

முகூர்த்தமும் நெருங்கிற்று மணமகன் தனது கரத்தில் திருமாங்கல்யத்தை யெடுத்துக்கொண்டு மணமகளிடத்தில் நெருங்கினான், மேளவாத்தியங்கள் டாப்டாமென முழங்கிற்று. மங்கையர்கள் மங்கள ஒலி எழுப்பினர். திருமங்கல்யக்கயிற்றை மணமகன் வத்சலையின் கண்டத்தைச்சுற்றிக்கொண்டு வரும்பொழுது. ஒரு உதை கொடுத்தாள் மாயவத்சலை லட்சுமணனை வயிற்றில். பந்துபோல் விழுந்தான் மணமகன். "அபிமன்யு! அபிமன்யு!! அபிமன்யு!!!" வென்று மும்முறை பகவான் கூறினதும் மாயமாய் பந்தல் மறைந்து விட்டது. துரியோதனாதியர் காதுகளில அரக்கர்கள் தங்கள் சுயஉருவுடன் தொங்கினார்கள். தலைகளில் அரக்கன்! கழுத்தில் அரக்கன்! "ஐயோ! ஐயோ! வலிக்கின்றதே" என்று எல்லோரும் சத்தமிட்டனர்.

புதிய ஆடைகள்யாவும் அரக்கர்களாக மாறிற்று. யாவரும் நிர்வாணமாய் நிறுத்தப்பட்டனர். பலராமர், பீஷ்மாச்சாரி கிரு பாசாரி, துரோணாசாரி, நாரதர் முதலிய மகரிஷிகள் மாத்திரம் ஆடையுடன் தோன்றினர். துரியோதனுதியரின் மனைவியர் நிர் வாணமாயினர். தங்களது மானத்தைக் காப்பாற்ற அரண்மனைக் குள் ஒளித்துக்கொள்ள ஓடினர். ஆனால் அரக்கர்கள் உள்ளே விடாது தடுத்து எல்லாரையும் வீதியில் விரட்டினர். பலராமர் இந்த அநியாயத்தைப்பார்த்துத் தனது மனைவியை அழைத்துக் கொண்டு வத்சலையிடம் சேருகினார். அங்கு வத்சலையைக்காணு ம். மலைப்பரிமாணமுடைய அரக்கன் நின்றுகொண்டிருந்தான், "வத்சலே! வத்சலே!" என்று பலராமரும் அவர்பத்னியுங் கூவிக் கொண்டிருக்கையில், பீஷ்மர் விதுரர் துரோணர் முதலியவர்கள், ஆகாயத்தில் ஒருகாட்சிகண்டார்கள். எம்பெருமானாகிய கண்ண பிரான் கருடன்மீதாரோகணித்து ருக்மணி சத்தியபாமா சகிதம் தென்திசை நோக்கிச்சென்றுகொண்டிருந்ததைப்பார்த்து, அடங் கா ஆனந்தமடைந்து பலவாறாக ஸ்துதிசெய்தனர்.

தங்களது மானத்தைக் காப்பாற்ற நிர்வாணமனிதர்களும் ஸ்திரிகளும் கண்களுக்குப்புலப்படும்வீடுகளிலும் மாளிகைகளிலும் நுழையப்பார்க்குந்தருணம், கடோற்கசனுடைய ஆட்கள் அங்கு தோன்றி, அவர்களை வீதியில் விரட்டி விடுவார்கள். இவ்வாறாக ஒரு முகூர்த்தநேரம் நடந்தது. வீதிவீதியாக துரியோதனாதி யர் விரட்டப்பட்டனர். துவாரகாபுரிவாசிகள் இந்நிர்வாணக் காக்ஷியைக்கண்டு களித்தனர். அப்பொழுது பிர்மாண்டமான தேகம்படைத்த கடோற்கஜன் பெரிய மூட்டையொன்றைக் காத் தில்வைத்துக்கொண்டு வானில் எழும்பி, "அயோக்கிய துரியோ தனுதியர்களே! அன்று நீ அரசசபையில் எனதன்னை திரௌபதி அம்மாளை மாத்திரம் நிர்வாணமாக்க நினைத்தாய். எம்பெருமான் பாற்கடல்வாசன் உதவியால் உனது கெட்ட எண்ணம் நிறைவே றாது ஒழிந்தது. ஆனால் இன்று உங்கள் யாவரையும் நிர்வாண மாக்கி, பல்லை இளித்துப் பரிகாசஞ்செய்யுமாறு, அர்ஜுனன் புத ல்வனாகிய அபிமன்யுவும், பீமசேனன புதல்வன் கடோற்கஜனாகிய

னாலும் எண்ணினோம். எங்கள் எண்ணம் அதே பாற்கடல் வாச னால் நிறைவேற்றப்பட்டது. அன்று உனக்கு செல்வாக்கு இரு ந்ததினால் என தன்னையை மானபங்கஞ் செய்ய எண்ணினாய். கெட்ட ஆத்மாக்களே! உங்களுடைய கொடுங்கோன்மை ஒய்ந்து போகும் காலம் வந்துவிட்டது எத்தனை வருடகாலந்தான் நீங் கள்செய்யும் அக்கிரமங்களை தெய்வம் பொறுத்துக்கொண்டிருக் கும். துஷ்டர்களைக்கொன்று நல்லோர்களையும் சாதுக்களையும் காப்பாற்றி, தர்மத்தையும், சத்தியத்தையும் நிலைநிறுத்தி, சாதுக் களுக்கு உயர்ச்சியையும், புகழையும் ஐசுவரியத்தையும் மோக்ஷ சாம்ராஜ்யத்தையும் கொடுக்க பகவான் பூமியில் கண்ணபிரானாக அவதரித்திருக்கின்றார். நீங்கள் பாண்டவர்களுக் கியற்றும் ஒவ்வொரு அநீதிகளையும் அவர் அறியாதவரன்று. கடை பிணங்களே ' அரசன் அன்றுகொல்லும் தெய்வம் நின்றுகொல்லு மென்பதை அறியுங்கள். உங்களது வாழ்நாள் முடியுங்காலம் வந்துவிட்டது. இவ்வளவு நாழிகைவரை உங்களுடைய நிர்வா ணதெரிசனஞ் செய்தது போதும். இந்த உங்களது சொந்த ஆடைகளை எடுத்துக்கொண்டு இக்கணமே அத்தினபுரிக்குப் பிர யாணப்படவேண்டியது. இல்லாவிட்டால் உங்களை படாதபாடு படுத்துவார்கள் எனது மனிதர்கள். உங்களுக்கு விருப்பமிரு க்குமானால் அத்தினபுரிக்குப்போகுமகாலையில் சைவேந்திரபர்வதம் சென்று அந்த வத்சலைக்கும் அபிமன்யுவுக்கும் நடக்கப்போகும் திருமணத்தைப்பார்த்துவிட்டுச் செல்லுங்கள்'' என்று கூறித்தன் காத்திலுள்ள மூட்டையைக் கீழே சிதறினான்.

அந்த ஆடைகளை அணிந்துகொண்டு பிழைத்ததே பெரும் பாக்கியமென்று நினைத்து யாவரும் அத்தினபுரிக்கு உடனே பிர யாணமானார்கள். தனது குமாரத்தியைக்காணாது ஏக்கமடைந்து கண்ணபிரான் திருவுருத்தை நாடிச் சென்றுகொண்டிருக்கும் பல ராமரிடத்தும் அவருடைய மனைவியிடத்தும் விடைபெற்றுக்கொ ள்ளாமலே துரியோதனுதியர் பிரயாணத்தொடங்கினர். இந்த அதிசய சம்பவத்தைக்கண்டு துவாரகாபுரிவாசிகள் மகிழ்ந்து கண் ணனைத் துதித்தனர்.

# அத்தியாயம் 9.

## —உண்மைக் காதலின் வெற்றி.—

கிருஷ்ணா! உண்மையைக்கூறு? எனது கண்மணி வத்சலை எங்கிருக்கிறாளென்று அவளைக் காணாவிட்டால் எனதுயிர்போய்விடும் என்றார் பலராமர்.

கிருஷ்ணன்:— அண்ணா! "ஊருக்கிளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி." என்பது பழமொழி. உம்முடைய புத்திரியைக்காணாவிட்டால் அதற்கு நானென்னசெய்வேன். உண்மையாய்க்கூறுகிறேன். உமது புத்திரியைப்பற்றி நான் ஒன்று மறியேன்.

பலராமர்:— இந்த மாயா ஜாலங்களெல்லாம் என்னிடம் செல்லாது. மரியாதையுடன் வத்சலையை என்னிடம் ஒப்புவித்துவிடு இல்லாவிட்டால்......

கிருஷ்ணன்:— என்னைக்கொன்றுவிடுவீர்களோ? அப்படிச் செய்தால் மிகுந்த சந்தோஷம். முதலில் வத்சலை எங்கிருக்கிறாளென்று கேட்டீர். இப்பொழுது வத்சலையை என்னிடம் ஒப்புவித்துவிடு என்கிறீர். என்னைப் பித்தனென்று எண்ணியிருக்கிறீர்.

பலராமர்:— கிருஷ்ணா! உன்னுடைய மாயையை நான் அறிவேன். கோபத்தை வீணில் கிளப்பாதே. வத்சலையை ... ... ...

கிருஷ்ணன்:— அண்ணா! என்னிடம் விளையாடவேண்டாம். சிலநீராக நான் வியாதியினை வாயிலகப்பட்டிருப்பதால் வத்சலையைப் பற்றி கேள்விகள்கேட்டு என்மனதைப் புண்ணாக்கவேண்டாம். ஒருவேளை துரியோதனன் தூக்கிச்சென்றிருக்கலாம். அங்கு சென்று விசாரியுங்கள்.

பலராமர்.— துரியோதனனும் அவனுடைய ஆட்களும் அப்பொழுதே அஸ்தினாபுரிக்குப் புறப்பட்டுவிட்டார்கள். கடோற்கஜனென்ற பீமசேனனுடைய புத்திரன் கூறினதை நீ கேட்டாயல்லவா?

கிருஷ்ணன்:— என்ன கூறினான்?

பலராமர்:— ரைவேந்திரகிரியில் அபிமன்யுவுக்கும் வத்சலைக்கும் விவாகம் நடக்கப்போகிறதாம்.

கிருஷ்ணன்:— அப்படியானால் வத்சலையைப்பற்றி என்னிடம் கேட்கவேண்டியதில்லையே.

பலராமர்:— இந்தவேலையெல்லாம் நீதானே செய்தாயாம்.

கிருஷ்ணன்:—யார்? சுத்தப்பொய்!

பலராமர்:— நாரதரைக்கொண்டு திருமங்கல்யம் வாங்கினை உண்மை தெரியும்.

கிருஷ்ணன்:— தெரியுமானால் என்னிடம் கேட்கவேண்டியதில்லையே.

பலராமர்:— விளையாடாதே கோபால! உண்மையைச் சொல் வத்சலை வைவேந்திரகிரிக்கு எப்போது கொண்டு செல்லப்பட்டாள்.

கிருஷ்ணன்:— நானறியேன்.

பலராமர்:— உள்ளதைக்கூறுகிறாயா? கலப்பையையெடுக்கவா?

பலராமருடைய கலப்பையைக்கண்டால் கண்ணபிரானுக்குப் பயம் ஆகவே கடுகடுங்கிக்கொண்டிருக்கையில் "நாராயண! நாராயண! நாராயண!" என்று கீதம்பாடிக்கொண்டு திரிலோக சஞ்சாரி அங்குவந்துசேர்ந்தார். கண்ணபிரான் வத்சலையை அபிமன்யுவுக்கு மணஞ்செய்து கொடுக்கவேண்டித்தானசெய்த வேலைகளைப் புகழ்ந்துகூறி "அண்ணா! எல்லாம் ஈசன்செயல். என்னுடைய வார்த்தையைக்கேட்டிருந்தால் இந்த அவமானத்திற்கு ஆளாக வேண்டாமே வத்சலையை அபிமன்யுவுக்குவென்று நாம் நினைத்திருந்தது உண்மையாயிற்று. துரியோதனாதியர்களை அவமானப் படுத்தவேண்டுமென்று நான் எண்ணினது ஈடேறிற்று. வாருங்கள் வைவேந்திரபர்வதம் இந்திராதிதேவர்களும், சங்கரரும் அங்குவந்து கூடியிருக்கின்றனர். பாண்டுகுமாரர்களும் பாஞ்சாலியும் கூட வந்திருக்கிறார்கள். விரைவிற்சென்று மணத்தை முடிப்போம்" என்றார். பகவான் கருடாழ்வாரை நினைத்ததும் வந்து சேர்ந்தார். பலராமர், நாரதர் முதலியவர்களை அழைத்துக்கொண்டு வைவேந்திரகிரி சென்றார்.

கல்யாண சமயம் நெருங்கிற்று வேதியர்கள் வேதகோஷங் கிளப்பினர். மயனால் குற்றமறச்செய்து முடித்த மணிமண்டபம் கதிரவன் ஒளியால் விவரிக்க இயலாத வண்ணம் பளபளவென ஒளித்தது. திடீரென்று,

மங்கல முரசின மழையி னார்த்தன
சங்குகள் முரன்றன தாரை பேரெனப்
பொங்கின மறையவர் புகலு நான்மறை
கங்குலி னொலிக்குமா கடலும் போன்றவே (கம்பர்)

விண்ணுலகிலிருந்து மண்ணுலகிற்கு வந்த தேவர்கள் ஸைவேந்திரமலையில் திடீரென்று நிர்மாணிக்கப்பட்ட மாளிகையையும், அதன் செல்வக்காட்சியையும், காட்சியின் இன்பத்தையுங் கண்டு திடுக்கிட்டுப் போயினர். உம்பருலகின் வனப்பைத்தோற் கடிக்கும் அழகுவாய்ந்த ஸைவேந்திரமலையே விண்ணுலகம் போல் தோன்றிற்று. விவாகமகோத்சவத்தைக்காண,

இந்திரன் சசியொடு மெய்தினா னிளஞ்
சந்திர மௌலியுந் தைய லாளொடும்
வந்தனன் மலரயன் வாக்கினா ளுடன்
அந்தம புகுந்தன ன்ழுகு காணவே (கம்பர்)

தண்டுலம் பரப்பி, தர்ப்பைப்பில் சாத்தி, வேதவிதிப்படி மண்டலம் ஏற்படுத்தி, மெல்லிய மலர்களை யெடுத்து அவற்றின் மீது தூவி, நெருப்பை மூட்டி, ஸ்ரீ அபிமன்யு வேதமந்திரங்களால் துதிசெய்தான். கண்ணபிரான் கன்னி வத்சலையுடன் அபிமன்யுவுக்கு எதிரே நின்றுகொண்டு, "கண்ணே! வத்சலையை உனக்கு தாரைவார்த்துக் கொடுக்கின்றேன். அவளுடன்கூடி இல்லறத்தை நடத்துவாயாக" என்று கூறினர்.

மாதர்கள் ஆர்த்தனா; வானவர் ஆர்த்தார்;
கீதர்கள் ஆர்த்தனர்; கேளிரும் ஆர்த்தார்;
சூதர்கள் ஆர்த்தனர்; துறவரும் ஆர்த்தார்;
வேதர்கள் ஆர்த்தனர்; வேலையடங்க

அரிச்சந்திர புராணம்

வானவர் பூமழை மன்னவர் பொற்பூ
ஏனையர் தூவு மிலங்கொளி முத்தம்
தானகு நாண்மல ரென்றிவை தம்மால்
மீனகு வானின் விளங்கிய திப்பார் (கம்பர்)

"என்னரமணீயமான நந்தவனம்! இளந்தென்றல் ஜிவ்வென்று வீசுகின்றது. மந்தமாருதமானது மலர்கள் மீது ஏறித்தவழ்ந்து மணத்தை அள்ளி எடுத்து வந்து நம்மீது ஜிலீர்ஜிலீரென்று தூவுகிறது. காதல! எத்தனைவருடங்கள் நாம்பிரிந்திருந்தாலும் அந்தபகவானுடைய அருளால் ஒன்று சேர்ந்ததற்காகச் சந்தோஷமடைகிறேன். நாதா! இப்பொழுது பகலவனின் ஆட்சி கொடியதாயிருப்பினும் இப்பூங்காவினுள் அவனுடைய ஆதிக்கம் செல்லவில்லையல்லவா?" என்று வெண்முத்தைப்பழிக்கும் பற்களை மெதுவாய் அசைத்து வத்சலை மொழிந்தாள். அபிமன்யு தனது இரு கரங்களையும் வத்சலையின் மார்பின்மீது போட்டு அவளைத்தழுவி ஆலிங்கனஞ்செய்து கொண்டு விண்மாரிபோன்று முத்தமாரிபெய்தான். பலவருடங்களாகப்பிரிந்த காதலர் கூடுந்தருவாயில் அவர்கள் மனச்சந்தோஷத்தை எவ்வாறு எடுத்துரைக்கக்கூடும்?

அபிமன்யு:— என் ஆசையின் ஆலயமே! அருள் சாக்கும் அன்பே!

(ராகம் நாட்டை தாளம்—சதுஸ்ரசகம)

... ... ... ... — உன்மேல்
மையல் பொங்கி நின்றேன்
நிலவு செய்யு முகமும்—காண்போர்
நினை வழிக்கும் விழியும்
கல கலென்ற மொழியும்—தெய்வக்
களி துலங்கு நகையும்
இலகு செல்வ வடிவும்—கண்டுன்
இன்பம் வேண்டு கின்றேன்.

கலையே! பிணையே! கவினுர் மடமயிலே! உன்னைமுத்தமிட்டு ஆலிங்கனஞ்செய்ய வேண்டி நான் பட்டகஷ்டங்களும் இடையூறுகளும் ஈசனே அறிவார். காதலென்ற நம்பிக்கையினாலேயே நான் உன்னை அடையமுடிந்தது.

வத்சலை.— காரிகை மனங்கவர்ந்த கட்டழகா! காதலின் தன்மையைக்கண்ணபிரானும் பகருவமாயடையவில்லை.

காதலி னுயிர் தோன்றும்—இங்கு
காதலி னுயிர் வீரதநிலேறும்—இங்கு
காதல் கவிதைப் பயிரை வளர்க்கும்.

அபிமன்யு:— என் கட்டழகி! நின்றன் காதலை யெண்ணிக் களிக்கின்றேன். அமுதூற்றினை யொத்த இதழ்களும, நிலவு ஊறிததநும்பும் விழிகளும், பத்தரை மாற்றுப்பொன்னொத்த மேனியும், இந்தவையத்துள் நாளுள்ள மட்டிலும் மறவேன். நீயே எனது உயிர். எந்த நேரமும் உன்னைப்போற்றுவேன். துயர் போயின. போயின துன்பங்கள், உனைக்காதலி யென்று அழைக்கின்ற போதிலே என்வாயில் அமுதம் ஊறுகின்றது.

(ராகம் நாட்டை தாளம் சதுஸ்ராரகம்)

பொன்னு நல்லமணியும்—சுடர்செய
பூண்க ளேந்தி வந்தாய்
மின்னு நின்றன் வடிவிற்—பணிகள்
மேவி நிற்கு மழகை
என்னு ரைப் பனேடி—திருவே
என்னுயிர்க் கோர முதே
நின்னை மார்பு சேரத்—தழுவி
நிகரிலாது வாழ் வேன்.

என்று கூறவும் வத்சலை அபிமன்யுவை இறுகப்பிணைந்து கொண்டாள்.

அபிமன்யு:— கற்புக்காசியே! உன்னையே கதியென்று நினைக்கிறேன். பொன்னை நிகர்த்தமேனி! மின்னலை நிகர்த்த சாயல்! வத்சலா! மன்மதன் தனதுகரும்புக்கணையில் மலர்க்கணை தொடுக்கிறுன். என் கட்டிக்கருமபே! கற்கண்டின் கனிரசமே!

என்று ஒருவர்க்கொருவர் குலவிக்கொண்டிருக்கையில் கண்ணபிரான், பலராமர், முதலியவர்கள் வந்து சேர்ந்தனர். வதசலை யும் அபிமன்யுவும் அவர்களைப் பணிந்து நின்றனர். பின்புயாவரும் விவாக மண்டபம் வந்து சேர்ந்தனர்.

அந்த தேவர்களும் முனிகளும் இருடிகளும் கூடியிருந்தனர் தேவேந்திரனது திருமணம் போன்று அபிமன்யுவுக்கும் வத்சலைக்கும் திருமணம் நடந்தது தேவமாதர்கள் நாட்டிய மாடினார்கள் மங்கள வாத்தியங்கள் முழங்கிற்று. தும்புரு நாரதர் கீதம் வாசித்தனர்.

பிறகு, வெவ்வியகனலையுடைய வேள்வியில் அபிமன்யுவும் மந்திரங்கள் முழுதும்ஓதி, நெய்யால் ஹோமாக்கினியில் ஆகுதிகள் செய்து, வத்சலையின் தளிர் போன்ற திருக்கரத்தைப்பிடித்தான் அவ்விருவரும் தீயை வலம் வந்து வணங்கினர். பொலம் பொரியை அக்கினியிலிட்டனர். கடைசியில்;

> இலங்கொளி யம்மி மிதித்தெதிர் நின்ற
> கலங்கலில் கற்பினருந்ததி கண்டார் (கம்பர்)

மற்றுள செய்வன செய்து மகிழ்ந்தார். முற்றியமாதவர் தாள் பணிந்தனர். கண்ணபிரானும் ருக்மணியும் புதுக்காதலர்களை ஆசீர்வதித்தனர். அங்கு,

> ஆர்த்தன பேரிக ளார்த்தன சங்கம்
> ஆர்த்தன நான் மறை யார்த்தனர் வானோர்
> ஆர்த்தன பல்கலை யார்த்தன பல்லாண்
> டார்த்தன வண்டின மார்த்தன வேலை : (கம்பர்)

பின்னர் போஜனம் முடிந்ததும் யாவரும் ரத்னகம்பளத்தின்மீது வீற்றிருந்தனர். அர்ஜுனனும் சுபத்திரையும் தனியாசனத்திலமர்ந்திருந்தனர். வத்சலையும அபிமன்யுவும் ஊஞ்சலில் வீற்றிருந்தனர். அப்பொழுது கண்ணபிரான், " சபையோர்களே! உங்களுக்குக் காதல் என்பதைப்பற்றிக்கொஞ்சம் பிரசங்கம் செய்யப்போகிறேன். காதலென்பது ஓர் தெய்வீகநிகழ்ச்சி; தெய்வீகசக்தி; தெய்வீகஅபசம்; காதலென்பது ஸ்திரி புருஷர்களுக்கிடையில் நின்று ஒருவரோடு ஒருவரைக்கவர்ந்திழுக்கும காந்தசக்தி; மாயா சக்தி. காதலே ஒருஆடவனையும் பெண்ணையும் இறுகப்பிணிக்கும் கயிறு. துன்ப அலைகளையுடைய சம்சாரசாகரமானது, விசன மாருதத்தால் கொந்தளிக்கும் தருணம், அக்கடலின் பத்தியிற்

கிடந்துழலும் மாந்தர்களுக்குக்கரை வந்து சேர உதவியாயிருப்பது காதலென்ற நீராவிக்கப்பல் தன் மனைவியைத்தவிரப்பிறர் பெண்டிரைக்கண்ணெடுத்துப்பாராத ஓர் புருடனையும், தன் கணவனைத்தவிர பிறமனிதரை மனதில் நினையாத ஓர் பெண்மணியையும் காவல் காப்பவன் காதலென்ற காவலனே. காதலின் வலிமையைப்வெளிப்படக்காட்டும் மணங்களே திருமணங்கள்; பாணிக்கிரணங்கள், மற்றவையாவும் மரணங்களே. காதலைப்பூர்த்திசெய்யக்காதலர்கள் இவ்வுலகிற்படும் அளவிறந்த இன்பத்தையும், அதினுமளவிறந்த துன்பத்தையும் துக்கத்தையும் சங்கடங்களையும் நினைக்கும பொழுதே எனக்கு மயிர்க்கூச்செடுக்கின்றது. இவ்வுலகமானது அகண்டு நீண்டு பெரியதாயிருப்பினும் காதற்காறறு வீசாவிடில் ஒருகாசும் பெறாது,

> பெற்றாற் பெறிற் பெறுவர்பெண்டிர்பெருஞ்சிறப்புப்
> புத்தேளிர் வாழுமுலகு

சபையோர்களே! காதலை யடையவேண்டியதவ்வொருவனும் அளவற்றதுக்கப்படுகிறானென்று கூறினேன்' ஆனால் காதலின் வெற்றியாது. வெறறியுண்டா? உண்டு, அவ்வெற்றி சாசுவதமான வெற்றியே;

> காதல், காதல் காதல்,
> காதற்போயிற், காதற்போயிற்
> சாதல், சாதல், சாதல்

இதுவே வெற்றி நமமுடைய வத்சலையின் காதலை அடையும்பொருட்டு அபிமன்யு இறந்தான். காதலே அவனை உயிர்பெற்று வாச்செய்து, கன்னிகையின் காத்தை ஈயர்த்து. காதலின் வெற்றியை நமது காதலர்களிடமிருந்து எளிதில் அறிந்துகொள்ளலாம் என்று ஓர்சொற்பொழிவு நிகழ்த்தினார். உண்மைக் காதலின் வெற்றியைபக்கேட்ட வத்சலையும் அபிமன்யுவும் ஆனந்தமடைந்தனர், விவாக மகோற்சவங்களெல்லாம சிறப்பாய் நடந்த பிறகு யாவரும் தத்தம் இருப்பிடங்களுக்குச்சென்றனர், தங்களுடைய வனவாசத்தைப்பூர்த்தி செய்யவேண்டி பாண்டவர்களும் வத்சலையிடத்தும் அபிமன்யுவிடத்தும் விடைபெற்றுச்சென்றனர் பலராமர் தனது புத்திரியையும் மருமகனையுமழைத்துக்கொண்டு துவாரகாபுரி வந்து சேர்ந்தார் வத்சலையும் அபிமன்யுவும் தங்களது திருமணத்தை சிறப்புடன் செய்த கண்ணபிரானைத்துதித்தனர்,

சுபம்! சுபம்!! சுபம்!!! பொங்குமங்களம் எங்கும் பொலிக

வத்ஸலா முற்றும்

அரசன்:— மந்திரி! எல்லா நியாயங்களும் அறிந்த நீரே இவ்விதம் கூறுவது ஆச்சரியமாயிருக்கிறது. என் புதல்வன் குலசேகரனுக்கு இப்போது பதினெட்டு வயது பூர்த்தியாய் விட்டது. ராஜ்ய பாரம் வகிப்பதற்குப் போதிய சக்தியும் விவேகமும் உள்ளவன். அன்றியும் உம்போன்ற முதியோர்கள் அரசாங்கத்தில் இருக்கும் போது எவரும் கவலைப்படக் காரணமில்லை. ஆதலால் எல்லோரும் ஏக மனதுடன் என் இஷ்டத்தைப் பூர்த்தி செய்து வையுங்கள்.

மந்திரி:— தாங்கள் இவ்விதம் கூறும்பொழுது குடி ஜனங்களாகிய யாங்கள் என்ன சொல்லட்டும். தங்களிஷ்டம்போல குலசேகரருக்கு முடிசூட்டி வையுங்கள். எல்லோரும் அவருக்கு அன்புள்ள ஊழியர்களாயிருந்து ராஜ காரியங்களை எச்சரிக்கையாய்ப் பார்த்து வருகிறோம். அவருடைய புகழானது இப்பரதகண்ட முழுமையும் வியாபிக்கு மென்பதில் சந்தேகமில்லை.

அரசன்:— சந்தோஷம்! அவ்விதமே பகவான் அருள்புரிவாராக. அடா சேவகா! எமது புத்திரன் குலசேகரனை இங்கே அழைத்துவா.

[சேவகன் போய் குலசேகரரை அழைத்து வருகிறான்-குலசேகரர் அரசனைக்கண்டு வணக்கம் செய்து நிற்கிறார்.]

அரசன்;— குலசேகரா! பகவான் உனக்குத் தீர்க்காயுளையும் சர்வா பீஷ்டங்களையும் கொடுத்து ரக்ஷிப்பாராக. இப்போது இக்கொலு மண்டபத்தைப் பார்த்தாயா? மந்திரி பிரதானி முதலிய உத்தியோகஸ்தர்களும், குடி சனங்களும் ஏராளமாகக் கூடியிருக்கின்றனர். இவர்கள் எல்லோருடைய சம்மதத்தின் பேரில் இங்கு ஓர் சுபகாரியம் நடத்த உத்தேசித்திருக்கிறேன். அதற்கு நீயும் சம்மதங் கொடுக்கவேண்டும்.

குலசேகரர்:— என்ன! தாங்கள் கூறுவது வியப்பாயிருக்கின்றது. என்ன சுபகாரியம் இங்கு நடத்தக் கருதுகின்றீர்கள்?

அரசன்:— புதல்வா! இப்போது யான் முதுமைப் பருவத்தை அடைந்திருப்பது உனக்குத் தெரிந்த விஷயமே. இனிமேலும் இந்த ராஜ போகத்திலேயே யிருந்து காலத்தைப் போக்கினால் என் ஜன்மம் கடைத்தேறுவதெப்படி? ஆதலால் யான் பகவானைகுறித்

து அருந்தவம் புரிந்து அழியாப்பேரின்ப நிலையை அடைய விரும்புகின்றேன். இப்போதே இவ்விராச்சியத்தை உனக்கு மகுடாபிஷேகம் செய்துவிட்டு உன தன்னையோடு யான் வனம் புகுதல்வேண்டும்.

குலசேகரர்:— (திடுக்கிட்டு) ஆ! இதென்ன விபரீதம்! தங்கள் இருவரையும் பிரிந்து என்னால் இருக்கமுடியுமா? யான் பதினெட்டு வயதுடைய ஓர் சிறுவனல்லவா? இச்சிறுவன் தலையில் இப்பெரிய இராச்சிய பாரத்தைத் தூக்கி வைப்பது உசிதமாகுமா?

அரசன்:— கண்மணி! நீ சிறந்தஅறிவாளியாயிருந்தும் இவ்விதம் கூறலாமா? யான் நற்றவம் புரிந்து நற்கதியடைவது உனக்குப் பெருமையில்லையா? தகுந்த மந்திரி பிரதானியர் இருக்கும போது நீ ஏன் கவலையுறவேண்டும்? அன்றியும் எல்லோருக்கும் மேலாக பகவான் ஒருவர் இருக்கிறார். அவரே எல்லாக் காரியங்களையும் நடத்தி வைப்பவர். அவரை நீ அன்போடு பூசித்து வந்தால உனக்கு ஒரு குறையும் நேரிடாதென்பது நிச்சயம. ஆதலால் உன் கவலையை விடுத்து என் இஷ்டத்தை நிறைவேற்றி வைப்பாயாக.

குலசேகரர்:— அரசே! தங்களுடைய அமிர்தமொழிகளால் எனது மயக்கம் தெளிந்து நிட்சித்தமானேன். பகவானையே தாய் தந்தையராக யான் நினைத்துக்கொள்கிறேன். இனி தங்களிஷ்டம போல் செய்வதில் எனக்கு ஆக்ஷேபமில்லை.

அரசன்:— சரி, ரொம்ப சந்தோஷம்! மந்திரி! இப்போது நல்ல சுபமுகூர்த்தமாயிருப்பதால் குல சேகரனுக்கு முடிசூட்டி வைக்கிறேன். அபிஷேக முதலிய கிரியைகளைப் பின்பு சாவதானமாய்ச் செய்யுங்கள். வேதியர்கள் வேத மந்திரங்களைச் சொல்லட்டும். வாத்திய கோஷம் முழங்கட்டும்.

*[அரசன் குலசேகரருக்கு முடிசூட்டுகிறார்·பெரியோர்கள் ஆசி கூறுகின்றனர். மலர்மாரி பொழிகின்றது.]*

அரசன்:— (சபையை நோக்கி) மந்திரி பிரதானியர்களே! குடி. சனங்களே! எனதெண்ணம் நிறைவேறியது. உங்கள் எல்லோருக்கும் எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன். பகவான் அருளால் இந்நாடு செழித்து நலம்பெறுவதாக. யான்வனத்

திற்குச் செல்கின்றேன். எல்லோரிடமும் விடை பெற்றுக்கொள்கிறேன்.

குலசேகரா! தர்ம சிந்தனையுடன் நீதிவழுவாமல் இவ்விராச்சியத்தை அரசு புரிந்து வா. பகவான் துணைச்செய்வார். யான் வனத்திற்குச் செல்கிறேன்.

நாதநாயகி:— கண்மணீ! குலசேகரா! உன் பிதாவோடு யானும் வனத்திற்குச் செல்கிறேன். பகவானது கிருபையால் நீ நீடுழி வாழ்வாயாக. உன் மனைவி முதலிய எல்லோருக்கும் என் நன்றியைத் தெரிவி. என் பிரிவாற்றாமல் சோகித்திருக்கும் என் சேடியர்களை நன்றாய்ப் பாது காத்துவா. எல்லோரும் நன்மையடைவார்களாக.

[அரசனும் அரசியும் தவவேடம் பூண்டு-வனத்திற்குச் செல்கின்றனர். எல்லோரும் எழுந்து வணக்கம் செய்கின்றனர்.]

## களம்—1. காக்ஷி—2.

### இடம்—அரசன் கொலு மண்டபம்.

### குலசேகரராஜன் கொலு.

[மந்திரி பிரதானி முதலியோர் அமர்ந்திருக்கின்றனர்.]

குலசேகரர்:— மந்திரி! என் நாடு நகரங்களெல்லாம சுபிக்ஷமாயிருக்கின்றதா? குடி சனங்கள் நல்லொழுக்கத்தோடு சமாதானமாய் வாழ்ந்துவருகின்றார்களா? மங்கையர்கள் கற்புநிலை வழுவாமல் இல்லறம் நடத்திவருகின்றார்களா? சிற்றரசர்கள் பகுதிப்பணங்களை ஒழுங்காய்ச் செலுத்திவருகின்றார்களா?

மந்திரி:—தாங்கள் பட்டத்திற்கு வந்து எமக்குறைய ஒரு வருஷம் முடிவாகின்றது. இதுவரை நம் நாட்டுக்கு யாதொரு குறைவுமில்லை. மாதம் மும்மாரி பொழிகின்றது. பயிர்பச்சைகள் செழித்து நல்ல பலனைக் கொடுக்கின்றது. குடிசனங்கள் நல்லறிவுடன் நல்லொழுக்கமும் பெற்று வாழ்ந்துவருகின்றனர். சிற்றரசர்கள் பசுபரிகையுடன் பகுதிப்பணத்தைச் செலுத்திவருகின்றனர். எல்லோரும் அதிசயிக்கத்தக்க விதமாய்த் தங்கள் பிரக்யாதி நாடெங்கும் பரவிவருகின்றது.

குலசேகரர்:— சரி, இருக்கட்டும். சோழராசன் தனக்குச் சமானமாக இவ்வுலகில் ஒருவருமேயில்லை யென்று கர்வித்திருப்பதாகவும் நம்மையும் நமது அரசாங்கத்தையும் வெகு அலக்ஷியமாகப் பேசிவருவதாகவும் கேள்வியுற்றேன். அது உண்மைதானு?

மந்திரி:—அரசே! தாங்கள் பட்டத்திற்கு வருவதற்கு இரண்டு வருஷத்திற்கு முன்னதாகவே இப்பிரஸ்தாபம் உண்டு. சோழராசன் மிகப் பலிஷ்டனாயிருப்பதாலும் அவரோடு பல சிற்றரசர்கள் சேர்ந்திருப்பதாலும் அவர் ஜோலிக்குப் போகாமலிருப்பதே மரியாதை யென்று தங்கள் தகப்பனர் அவர்கள் ஒதுங்கியிருந்துவிட்டார்கள். அதுமுதற்கொண்டே அவ்வரசனுக்கு நம்மைப்பற்றி அலக்ஷியபுத்தி ஏற்பட்டிருக்கின்றது.

குலசேகரர்:—அப்படியானல் அவ்வரசனுடைய அகங்காரத்தை அடக்கி ஒடுக்கவேண்டியது அவசியமல்லவா? அப்படிச் செய்யாவிட்டால் நமது சிற்றரசர்கள் நம்மை மதிப்பார்களா? நமது ராச்சியத்திற்கே கேடுவருமல்லவா?

மந்திரி:—தாங்கள் கூறுவது உண்மையே. சோழராசனுடைய வசைமொழிகள் வரவர அதிகப்பட்டுக்கொண்டே வருகிறது. சில சமயங்களில் அவர் ரகஸ்யமாயும் ஏதேதோ சதியோசனைகள்செய்து வருவதாக ஒற்றர்கள் மூலமாய்க் கேள்விப்படுகிறேன். ஒருவேளை திடீரென்று அவர் நம்மிராச்சியத்தின்மீது படையெடுத்துவந்தாலும் வரக்கூடும்.

குலசேகரர்:—அப்படியா? இந்தச் சோழராசனுடைய அகங்காரத்தை ஒரு நொடிப்பொழுதில் அடக்கிவிட்டு மறுசோலி பார்க்கிறேன். அதுமட்டுமல்லாமல் இப்பரதகண்ட முழுமையும் சுற்றித் திரிந்து எதிர்த்தோரையெல்லாம் தொம்சம் செய்து ஜெயக்கொடி நாட்டி வருகின்றேன். நாளையே எனது சதுரங்க சைனியங்களுடன் சேர்த்துக்கொண்டு சோழதேசத்தை நோக்கிப் பிரயாணமாகிறேன்.

மந்திரி:—அரசே! தங்களுடைய புஜபலபராக்கிரமம் எனக்குத் தெரிந்ததே. ஆயினும் இச்சிறு பிராயத்தில் தாங்கள் சோழதேசம படையெடுத்துச் செல்வது உசிதமல்ல. ஏனெனில் சோழராசர் சிறிதும் தயைதாக்ஷண்ணிய மில்லாதவர்.

குலசேகரர்:— என்ன இப்படிச் சொல்லுகிறீர்கள்! இந்தச் சோழனைப்போல் நூறுசோழர்கள் வந்தாலும் எனக்கு லக்ஷியமில்லை. இதற்காக எவரும் கவலை வைக்கவேண்டாம். யான் போய்த் திரும்பும் வரை இவ்விராச்சியத்தை மட்டும் கவனமாய்ப் பரிபாலித்து வாருங்கள்.

(பிரதானியை நோக்கி) பிரதானி! இங்கு பேசிய விஷயங்களைத் தெரிந்துகொண்டீரல்லவா? நாளை அதிகாலையிலேயே யாம் இந்நகரை விட்டுப் பிரயாணமாக வேண்டும். நமது ரத, கஜ, துரக, பதாதி முதலிய எல்லாப் படைகளையும் யுத்தசன்னத்தமாகத் தயார் செய்து எமக்கு அறிக்கை செய்வீராக.

பிரதானி:—நல்லது, அப்படியே செய்கிறேன் பிரபு.

(சபை கலைகிறது. எல்லோரும் பிரிகிறார்கள்.)

## களம்—1. காக்ஷி—3.

### இடம்---அந்தப்புரத்தைச் சார்ந்த ஓர் பூஞ்சோலை.

### செண்பகவல்லியும் தோழி நீலவேணியும்.

சேண்பகவல்லி:—அடி நீலம்! இப்பூஞ்சோலையைப் பார்த்தாயா? மா, பலா, தெங்கு, கமுகு, புன்னை, அசோகம், வாழை முதலிய விருக்ஷ சாதிகள் எவ்வளவு அழகாய்ச் செழித்து வளர்ந்து பூத்துக் காய்த்துப் பொலிகின்றது பார். அவ்விருக்ஷங்களில் மயில்களும், குயில்களும், மைனாக்களும், மாடப்புறாக்களும், பச்சைக் கிளிகளும் பஞ்சவர்ணக்கிளிகளும், அங்குமிங்கும பறந்து ஆடியும் பாடியும் திரிவது எவ்வளவு விநோதமாயிருக்கின்றது. ஆஹா! என்ன ஆனந்தம்! இப்பூங்காவில் பிரதிதினம் நவம் நவமான காக்ஷியே நமக்குப் புலனாகின்றது.

குயிலினம் வதுவைசெய்யக் கொம்பிடைக்குனிக்கு மஞ்ஞை
அயில்விழி மகளிராடும் அரங்கினுக்கழகுசெய்ய
பயில்சிறை அரசவன்னம் பன்மலர்ப்பள்ளிநின்றும்
துயிலெழத்தும்பிசாலை செவ்வழிமுரல்வ சோலை.

தண்டலைமயில்களாடத் தாமரைவிளக்கந்தாங்க
கொண்டல்கள் முழவினேங்கக் குவளைகண் விழித்துநோக்க
தெண்டிரை எழினிகாட்டத் தேம்பிழி மகரயாழின
வண்டுகளினிதுபாட மருதம்வீற்றிருக்குமாதோ. (கம்பர்)

நீலவேணி:—அம்மணி! இதோ கருப்பஞ்சாறுபோல் தெளிந்து செல்கின்ற நீரோடைகளில் கயல்மீன்கள் துள்ளித்துள்ளி விளையாடும் காக்ஷியைப் பாருங்கள். அப்பக்கத்தில் மல்லிகை, முல்லை, செண்பகம், இருவாக்ஷி, பாரிஜாதம, மருக்கொழுந்து, ரோஜா முதலிய புஷ்பச்செடிகள் வரிசை வரிசையாய் நின்று புஷ்பித்துக்கொண்டிருப்பது எவ்வளவு அழகாயிருக்கின்றது. இவைகளெல்லாம் இருக்கட்டும். அந்நீரோடைகட்கு அருகிலுள்ள மடுக்களிலும் சுனைகளிலும் புஷ்பித்திருக்கும் செந்தாமரை மலர்களின் தோற்றத்தைப் பாருங்கள். எவ்வளவு ரமணீகரமாயிருக்கின்றது. இப்மலர்கட்குச் சமமாக எதையாவது உவமை கூறமுடியுமா?

செண்பகவல்லி:— எம்பெருமானது திருக்கண்களுக்கு இம்மலர்களை உவமையாகக் கூறுவது வழக்கமாயிருக்கிறது. செந்தாமரைக் கண்ணன் என்றே எம்பெருமானுக்கு ஓர் திருநாமமும் உளது. இம்மலர்களில் எவ்விதம் அழகும், மென்மையும், குளிர்ச்சியும் பொருந்தியிருக்கின்றதோ அதுபோன்று எம்பெருமானது நயனங்களிலும அழகும், சீலமும், இரக்கமும் பொருந்தியிருககின்றது. ஆதலால் எம்பெருமானது திருக்கண்களுக்கு இது ஓர் ஏகதேச உவமையாகும்.

நீலவேணி:— அம்மா! இப்போது தென்றல் காற்று எவ்வளவு சுகமாய்வீசுகின்றது பாருங்கள். இதில் ஓர் அதிசயம்! காற்று வீசும்பொழுது ஓர் வித சுகந்த வாசனை நாசியைத் தொளைக்கின்றது. ஆ! ஆ! என்ன ஆனந்தம்!

செண்பகவல்லி:— அடி, நீலம்! இக்காவில் ஏராளமான விருக்ஷங்களும், புஷ்பச் செடிகளும் நிறைந்திருக்கிறதல்லவா! இவைகளிலுள்ள பசுந்தளிர் மணமும், நறுமலர் மணமும், தீங்கனிமணமும் காற்றோடு சேர்ந்து வருவதால் இங்கு இப்பரிமளகந்தம் வீசாநின்றது. அதோ பார்! இக்காற்றைக் கண்டவுடன் பக்ஷி சாதிகள் எவ்வளவு ஆரவாரம் செய்கின்றன. அடங்கிக் கிடந்த அம்ல பக்ஷிகள் மரக்கிளைகளில் குதித்து விளையாடுவது எவ்வளவு விநோதமாயிருக்கின்றது.

நீலவேணி:— அம்மணி! இக்காற்று என் சரீரத்தில் பட்டதும் உடம்பு முழுவதும் ஜில்லென்று குளிர்ந்துவிட்டது. ஓர் புதிய

உற்சாகமும் தோன்றுகிறது. எனக்கே இவ்விதமானால் வெயிலின் கொடுமையால் அடிபட்டு களைத்துப்போனவனுக்கு இது எவ்வளவு சுகத்தையளிக்கும். தேவாமிர்தமும் இதற்குச் சமமாகாதல்லவா?

செண்பகவல்லி:— அடி அதற்கென்ன சந்தேகம்! காற்றுத் தானே மக்களுக்கு ஜீவாதாரமாயுள்ளது. மனிதர்களின் ஆரோக்கியத்திற்குத் தக்கபடி இயற்கை வளங்களையும் பகவான் அமைத்திருக்கின்றார். இதோ வானத்தையளாவி நிற்கும் விருக்ஷங்களினிடையே இக்காற்று ஊடுருவிவருவதால் இவ்வளவு குளிர்ந்து வீசுகின்றது. இக்குளிர் காற்று மக்களது அகத்திலுள்ள துன்பங்களையும் புறத்திலுள்ள துன்பங்களையும் போக்குமென்பதில் சந்தேகமில்லை.

*கேரினமு மகளிர் கூந்தல் நிறை நறை வாச நீக்கி*
*வேரியஞ் சாலச்சோலை வேனிலான விருந்து செய்ய*
*வார்கலி யமுவந்தந்த மருந்தென வொருவராவி*
*தீரினுமுதவற்கொத்த தென்றல் வந்திறுத்ததன்றே.* (கம்பர்)

நீலவேணி:— அம்மணி! தென்றற் காற்றின் மகிமையைப் பற்றி நீங்கள் கூறியதெல்லாம் சரியே. ஆனால் ஒரு விஷயம் மட்டும் உங்கள் கவனத்திற்கு வரவில்லை.

செண்பகவல்லி:— என்ன விஷயம்! சொல்லடி பார்ப்போம்

நீலவேணி:— உங்கள் போன்ற பருவ மங்கையர்கள் மீது மன்மதன் மலரம்பு தொடுத்தால் இத்தென்றற் காற்று துன்பத்தை உண்டாக்குமா? சுகத்தை உண்டாக்குமா? தயவு செய்து சிந்தித்துப்பாருங்கள்.

செண்பகவல்லி:— என்னடி! கெண்டை பேசுகின்றாய். சரி, இருக்கட்டும். ஏதோ இன்று நல்ல காற்று வீசுகின்றது! சற்று நேரம் இங்கேயிருந்து இவ்விநோதங்களைப் பார்த்துக்கொண்டிருப்போம்.

நீலவேணி:— அம்மணி! அரசர் கொலுமண்டபத்தைவிட்டு வருகிற நேரம் வந்துவிட்டதல்லவா? கதிரவனும் மேற்றிசையடையும் காலம் வந்துவிட்டது. யான் வீட்டுக்குச்செல்கின்றேன்.

செண்பகவல்லி:— அடீ! அரசர் வருவதற்கு இன்னும் சற்று நேரம் செல்லும். அதுவரை நீ இங்கே யிருந்து போகலாம.

நீலவேணி:—அப்படியேயாகட்டும். அம்மணி! உங்கள சேடி. கோமளத்தை எங்கே? நெடும்போதாகியும் காணவில்லையே.

செண்பகவல்லி:— அந்தப்பிசாசு எங்கு ஒழிந்துபோனளோ தெரியவில்லை. எங்கேயாவது போகிறதாயிருந்தால் அவள் என்னிடம் சொல்லிக்கொண்டு போகிறதில்லை. இதுதான் அவளிடத்தி லுள்ள கெட்ட வழக்கம்.

நீலவேணி:—அம்மணி! உங்களிடத்தில் பங்கஜ முதலிய எத்தனையோ சேடியர் இருக்கிறார்கள். ஆனல் கோமளத்தைப்போல் நற்குணமுடையவா ஒருவருமில்லை. அவள் உங்களிடத்தில் மிக்க பேரன்புடையவள். நீங்கள் அடித்தாலும் வைதாலும் அவளுக்கு வருத்தமென்பதே கிடையாது.

[கோமளம் தலைவிரிகோலமாய் அங்கே ஓடிவருகிறள். செண்பகவல்லியை வணங்கிக் கண்ணீர் சொரிகிறள்.]

செண்பகவல்லி:—அடீ! கோமளம்! இதுகாறும் எங்கே போயிருந்தாய்? இப்போது உனக்கென்ன கொள்ளைவந்துவிட்டது கண்ணீரை வடிக்கிறுய்?

கோமளம்:—ஐயோ! என்ன கஷ்டம்! இனி என்ன செய்வது! ஆ! பகவானே!

செண்பகவல்லி:—என்னடி! உனக்கு வந்த துன்பம் என்ன?

கோமளம்:—எனக்கொன்று மில்லையம்மா. எல்லாம் உங்கள் அரசரைப்பற்றியது தான்.

செண்பகவல்லி:— (திடுக்கிட்டு) ஆ! அரசரைப்பற்றியா? என்ன சங்கதி? இப்போது நீ கொலுமண்டபத்திற்குப் போயிருந்தாயோ?

கோமளம்:— யான் அங்கு போகவில்லை. கடைவீதிக்குப் போயிருந்தேன். வருமவழியில் அரசாது பாராச்சேவகரைக் கண்டேன். அவர் ஒரு விசனகரமான சமாசாரத்தைச் சொன்னர். உடனே ஓடிவந்தேன்.

## சேண்பக வல்[illegible]ம் குலசேகரரும்.

---

சேண்பகவல்லி·— என்ன சமா[illegible]சொல்லு!

கோமளம்:— *அரசர் நாளை காலையில் சோழ ராஜரோடு யுத்தம் செய்யப் பிரயாணப்படுகிறாராம். பிரதானி சைனியங்களைத் திரட்ட ஆரம்பித்து விட்டாராம்: பிரயாணக்கோரிக்கைகள் வெகு ஜரூராய் நடக்கின்றனவாம். இது தான் சங்கதி.*

சேண்பகவல்லி:— *ஆ! தெய்வமே! என் பிராணநாதர் இச் சிறு பிராயத்தில் எவ்வாறு யுத்தத்திற்குச்செல்லலாம். அரசர் சபையில் இதை எடுத்துக்கூற ஒருவருமில்லையா? முதிர்ந்த வயதுடைய மந்திரிகூட அரசரைத் தடுக்கவில்லையா? ஐயோ! இன்று அகஸ்மாத்தாக இந்த யோசனை உண்டாகக் காரணமென்ன? அடி! கோமளம்! அரசர் சபையில் நடந்த சங்கதியை விரிவாய்ச் சொல்லமாட்டாயா?*

கோமளம்:— *அம்மணி! அவ்விஷயங்களெல்லாம் எனக்குத் தெரியாது. இம்முடிவை மட்டும் சேவகர் கூறினார்.*

சேண்பகவல்லி:— *ஆ! ஆ! இனி என்ன செய்வேன். என் கதி எவ்வாறுகுமோ தெரியவில்லையே.*

நீலவேணி.— *அம்மணி! கருணை நிதியான பகவானிருக்கும போது நீங்கள் ஏன கவலைப்படுகின்றீர்கள்? அவர் உங்கள் கணவரை ரக்ஷிப்பார். இதோ அரசர் வருகிற ஆரவாரம கேட்கிறது. யானும் சேடியும் உள்ளே போகிறோம்.*

{ *இருவரும் உள்ளே போகிறார்கள் குலசேகரர் வருகிறார். செண்பகவல்லி வணங்கி நிற்கிறாள்* }

குலசேகரர்:— *பிராணநாயகி! செந்தாமரை மலர் போன்ற உன் திருமுகம் இப்போது வாடி யிருப்பானேன்? குவளை மலர் போன்ற உன் திருககண்கள் கலங்கியிருப்பானேன்? கண்மணி! உனக்கு நேர்ந்த குறை யாது?*

**சேண்பகவல்லி.**— தங்களுடைய மகத்தான ஐசுவரியத்தில் எனக்கு என்னகுறை இருக்கின்றது? ஒன்றுமில்லை. தாங்கள் சோழ ராசரோடு போர் தொடங்கப் போவதாக இப்போது கேள்வியுற்றேன். அதுமுதல் என் உள்ளம் பதைக்கின்றது. குடல் துடிக்கின்றது. தங்களை யுத்தத்திற்கு அனுப்பிவிட்டு யான் எப்படி உயிர் வாழ்வேன் பிராண நாதா!

**குலசேகரா:**- அன்பே! நீ பாண்டிய ராசன் புத்திரியாயும் அறிவில் சிறந்தவளாயுமிருந்தும் இவ்வற்ப விஷயத்திற்குக் கவலையுறலாமா? என்னையும் என்னிராச்சியத்தையும் பற்றிக் குறைகூறிவரும் சோழனது அகங்காரத்தை அடக்க வேண்டியது அவசியமல்லவா? அன்றியும் யுத்தம் க்ஷத்திரியர்களுக்குக் குல தர்மமன்றோ?

**சேண்பகவல்லி:**- தாங்கள் கூறுவதை யான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் அதற்கும் தகுந்த பிராயம் வரவேண்டாமா? சிறு வயதுடைய தாங்கள் அப்பெரிய அரசரோடு யுத்தத்திற்குச் சென்றால் யான் எப்படிச் சகிப்பேன் பிராண நாதா?

**குலசேகரர்:**- கண்மணி! நீ பெண் பாலாயிருப்பதால் எனது புஜபல பராக்கிரமத்தை அறியமாட்டாய். சோழ ராசன் எவ்வளவு படையோடு வந்தாலும் யான் அவரை முறியடித்து ஜெயகோலத்தோடு மீண்டு வருவது நிச்சயம். ஆதலால் நீ சிறிதும் சந்தேகங் கொள்ளாமல் சந்தோஷமாய் எனக்கு விடை கொடுத்தனுப்பல் வேண்டும்.

**சேண்பகவல்லி.**- தாங்கள் இவ்விதம் கூறும்பொழுது யான் என்ன சொல்லட்டும். தங்கள் இஷ்டம் எப்படியோ அப்படிச்செய்யுங்கள். தங்களுடைய நல்வரவுக்காக யான் எப்போதும் பகவானைத் தியானம் செய்து காலத்தைக்கழிக்கிறேன். இனி பகவானே எனக்குத் துணை.

**குலசேகரர்.**- ரொம்ப சந்தோஷம். எனக்கும் அவரே துணை. யாமிருவரும் பகவானை நம்பிய பிறகு கொஞ்சமும் கவலைப்படக் காரணமில்லை. உனக்கு எத்தனையோ தோழிகளும் சேடியர்களும் இருக்கிறார்களல்லவா? அவர்களில் நீலவேணி மிகவும் மதியுடைய

வாய்ந்தவள். நீ அவளோடு நல்ல அறிவு நூல்களைப் படித்து சம்பாஷணை செய்து நற்பொழுது போக்கி வருவாயாக.

சரி, நாழிகையாய்விட்டது. நாளை அதிகாலையில் பிரயாணமாக வேண்டும். அதற்கு வேண்டிய காரியங்களை கவனித்து வருகிறேன். (அரசர் வெளியே செல்கிறார்)

மறுநாள் அதிகாலையில் குலசேகரர் நியமநிஷ்டைகளை முடித்துப் போர்க்கோலம் பூண்டு நால்வகைப்படைகள் சூழ சோழ தேசம் செல்கின்றார்.

## களம் — 2. காக்ஷி — 1.

இடம் — அந்தப்புரத்தில் ஓர் தனி இடம்.

செண்பகவல்லி ஓர் சோபாவில் சாய்ந்துகொண்டு கண்ணீர் வடிக்கிறாள்,

செண்பகவல்லி:— (தனக்குள்) ஆ! பகவானே! என் பிராணநாதர் சோழதேசம் சென்று ஆறுமாதமாகியும் இதுவரை யாதொரு சமாசாரமும் தெரியவில்லை. இப்போது அவர் யுத்தமுகத்திலிருக்கின்றாரோ அல்லது வேறு எங்கேனும் தங்கியிருக்கின்றாரோ அறியேன். மந்திரி முதலானவர்களுங் கூட இதைப்பற்றி எவ்வித சமாசாரமும் அறிவிக்கவில்லை. சோழராசர் மிகப்பொல்லாதவரெனவும், பல சிற்றரசர்களின் துணை பெற்றவரெனவும் பலர் சொல்லக் கேட்டிருக்கின்றேன். யுத்தத்தில் எல்லோரும் சேர்ந்து என் பிராணநாதரை வளைத்துக் கொண்டால் அந்தோ! அவர் கதி என்னாகும்! ஏ பகவானே! ரெங்கநாதா! என்னுயிர்நாதர் கள்ளங்கபடு அறியாதவர். சத்தியநெறி விலகாதவர். உம்மிடம் பேரன்பு பூண்டவர். ஆதலால் ஆபத்துக்காலத்தில் அவரை ரக்ஷிப்பது உமது கடமையாகும். ஏ பகவானே! அனாத ரக்ஷகா! யான் உம்மையே நம்பியிருக்கிறேன். சீக்கிரம் என் பிராண நாயகரை எனக்குத்தந்து ரக்ஷிக்கவேண்டும் பகவானே!

(நீலவேணி அவசரமாய் உள்ளே நுழைகிறாள்.)

நீலவேணி:— என்னம்மா கண்ணீரை வடித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் நாயகரிடமிருந்து ஏதோ சமாசாரம் வந்திருப்பதாய்க் கேள்வியுற்றேன். உண்மைதானோ?

சேண்பகவல்லி:— ஆ! என்ன! என்னுயகரிடமிருந்தா சமா சாரம் வந்திருக்கிறது? எப்போது? அவர் சுகமே யிருக்கின்றாரா?

நீலவேணி:— அம்மணி! அதைப்பற்றி எனகருத்தெரியாது. வீதியில் வரும்போது பல ஜனங்கள் கொலு மண்டபத்தை நோக்கி ஓடுகிறார்கள். விசாரித்ததில் அரசரிடமிருந்து ஓர் தூதர் வந்திருப்ப தாய்த் தெரியவந்தது.

சேண்பகவல்லி:— அப்படியானால் அவ்விஷயம் கோமளத் திற்குத் தெரியாதிருக்குமா? அவள் இப்போது கடைவீதிக்குத் தானே போயிருக்கிறாள். தெரிந்திருந்தால் இதற்குள் ஓட்டமாய் வந்துஎனக்குச் சொல்லியிருப்பாளே. ஆ! பகவானே! என் பிராண நாதரின் நிலைமை எப்படி யிருக்கின்றதோ!

(கோமளம் ஓட்டமாய் வந்து அந்தப்புரத்தில் நுழைகிறாள்.)

கோமளம்:— அம்மணி! நமஸ்காரம்! பகவான உங்களிடத் தில் கருணை கூர்ந்திருக்கிறார். ஆ! ஆ! அவர் பரம கருணாநிதியென் பதில் சந்தேகமுண்டோ?

சேண்பகவல்லி:— என்னடி கோமளம்! எதையோ சொல் லிக்கொண்டிருக்கிறாய் இருக்கட்டும். என் பிராண நாதர் சௌக் கியமாயிருக்கிறாரா? இதைப்பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?

கோமளம்:— அம்மணி! நீங்கள் பலகாலும் பகவானைப் பூசித் ததற்கு கைமேல் பலன்கிடைத்தது. உங்கள் நாயகர் சௌக்கியமா யிருக்கிறார். யுத்தத்தில் சோழ ராசரை முறியடித்து ஜெயகோலத் துடன் விளங்குகிறார்.

சேண்பகவல்லி:— (உள்ளம் பூரித்து) அடி! இது உண்மை தானா? இச்செய்தி யாரால் வெளி வந்தது? என் நாயகர் இப்போது எங்கேயிருக்கிறார்? இங்கே எப்போது வருவார்?

கோமளம்:— அம்மணி! அரசர் அனுப்பிய தூதர் இதோ வருகிறார். எல்லா விபரங்களையும் அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

(தூதர் வந்து செண்பகவல்லியை வணங்குகிறார்)

தூதர்:— அம்மணி! மகராசா சௌக்கியமாயிருக்கிறார். சோழ ராசரோடு போர் பொருது அவரை முறியடித்து ஜெயகோலத்தோடு சோழ தேசத்தில் வீற்றிருக்கிறார். இச்செய்தியை மந்திரி முதலானவர்கட்கும் தங்கட்கும் தெரியப்படுத்தி வரும்படி மகராசா என்னை அனுப்பி வைத்தார்.

செண்பகவல்லி:— ரொம்ப சந்தோஷம்! எல்லாம் பகவான செயல். என் நாயகர் இங்கே எப்போது வருவார்?

தூதர்:— அம்மணி! அவ்விஷயத்தைக் குறித்து மகாராசா ஒன்றும் பிரஸ்தாபிக்கவில்லை. ஆனால் ஓர் விஷயம். வடதேசத்தி லுள்ள அங்க, வங்க, கலிங்க, காஷ்மீர, பாஞ்சால முதலிய தேசங் களெல்லாம் சென்று திக் விஜயம் செய்து வரவேணுமென்று மக ராசாவுக்கு எண்ணமிருப்பதாய் அவ்விடத்தில் பிரஸ்தாபம நடக் கிறது.

செண்பகவல்லி:— ஆ! இதென்ன கஷ்டம்! சோழராசனை ஜெயித்தது போதாதா? இன்னும் வட தேசங்களெல்லாம சுற்றித் திரிந்தால் என் நாயகருக்கு என்னென்ன நேரிடுமோ? அந்தோ! என்னசெய்வேன்!

தூதர்:— அம்மணி! யுத்த முகத்தில் மகராசாவினுடைய வீரப்பிரதாபங்களை என்னால் சொல்லி முடியாது. நேரில் பார்த்த வர்கட்கே தெரியும். உலகிலுள்ள அரசர்கள் எல்லோரும் திரண்டு ஒரு முகமாய் வந்தாலும் நம மகராசாவை அசைக்கமுடியாது. இவ் விஷயம் எங்கும் பிரசித்தமாய் விட்டபடியால் மகராசா யுத்த சன் னத்தமாக வடதேசங்கட்குச் சென்றாலும் அவரோடு யுத்தஞ்செய்ய ஒருவரும் துணியமாட்டார்கள். பாத காணிக்கைகளை வைத்து அவரைப் பணிந்து சமாதானம் செய்துகொள்வார்களென்பது நிச் சயம். ஆதலால் நீங்கள் கவலையை விடுத்து சந்தோஷமாயிருங்கள்.

செண்பகவல்லி:— பகவானே எனக்கும் என் நாயகருக்கும் ரக்ஷகர். ஆதலால் நான் கவலைப்படக் காரணமில்லை. சரி, இருங் கட்டும். ஏ தூதரே! இவ்விடத்தில் எல்லோருடைய க்ஷேமத்தையும் எனது தாழ்மையான வணக்கத்தையும் என் நாயகருக்குத் தெரிவிப் பீராக.

அடி! கோமளம்! சீக்கிரம் தூதருக்கு வேண்டிய மரியாதை களைச் செய்தனுப்பு.

(தூதர் மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு விடைபெற்றுச் செல்கிறார்)

நீலவேணி:— அம்மணி! உங்கள் கவலை ஒழிந்தது. ஜெயம் சந்தோஷம்! இன்னும் சில தினங்களில் ஜெய கோலத்தோடு வரும் உங்கள் நாயகரைக் காணலாம். யுத்தமுகத்தில் நிகழ்ந்த பல அதிசய செய்திகளை உங்கள் நாயகர் சொல்லக்கேட்டு மகிழ்வீர்கள்.

செண்பகவல்லி:— அடி! தோழி! அரசர் வர இன்னும் எவ்வளவு காலம் பிடிக்குமோ தெரியாது. அந்தப் பற்றி தூதராலும் நிச்சயிக்கமுடியவில்லை. அவரை நேரில் கண்டாலொழிய என் மனம் சாந்தியை அடையாது. அதற்குள்ளாக நீ பெரிய ஆசையை மூட்டுகிறாய், இது நல்ல வேடிக்கைதான்.

நீலவேணி — சரி, இருக்கட்டும். சொற்ப தினங்கட்குள் நீங்களும் உங்கள் ஆசை நாயகரும் உல்லாசமாய்ப்பேசி விளையாடுவதை யான் காண்பேன். இப்போது யான் வந்து நெடுநேரமாகிவிட்டது. போய் வருகிறேன். (நீலவேணி வெளியே செல்கிறாள்.)

---

## களம்—2. காக்ஷி—2.

### இடம் — அரசனது கொலு மண்டபம்.

கொலு மண்டபத்தில் பெரிய ஆரவாரம். கண்ணைக்கவரும் அற்புத அலங்காரம். நவரத்தின கசிதமான மகர தோரணங்கள் ஒளி வீசுகின்றன. மலர்மாலைகள் சுகந்த வாசனையைப் பரப்புகின்றன. நகர மாந்தர்கள் பல்லாயிரக்கணக்காய் வந்து குழுமியிருக்கின்றனர். சிங்காரமான உடுப்புகளை யணிந்து மந்திரி பிரதானியர் வீற்றிருக்கின்றனர். அரசாங்க உத்தியோகஸ்தர்களனைவரும் புடைசூழ்ந்து அமர்ந்திருக்கின்றனர், கட்டியக்காரர் எச்சரிக்கை செய்கின்றனர். குதிரை வீரரும் வாள் வீரரும் கொலு மண்டபத்தைச் சுற்றிப் பாராக்கொடுக்கின்றனர். தேவேந்திர சபைபோல் கொலு மண்டபம் சிறப்புற்று விளங்குகிறது.

மந்திரி:— பிரதானி! இங்கு குழுமியிருக்கும் ஜனக்கூட்டங்களின் உற்சாகத்தைப் பார்த்தீர்களா? எல்லோரும் முறுவலெய்திய முகத்தினராய் விளங்குகிறார்கள். நம் அரசர் குலசேகரரது கீர்த்தி பிரதாபங்களையே ரகஸ்யமாய்ப்பேசி தலையை அசைக்கிறார்கள். அரசரது வருகையை நோக்கி விழித்த கண் வாங்காமல் ஆவலாயிருக்கிறார்கள். என்னே இவர்களின் ராஜபக்தி!

பிரதானி:— நண்பரே! ஓரதிசயம்! அன்று அரசர் சோழராசரோடு போர் செய்யப் புறப்பட்ட காலை இந்நகர் குடி ஜனங்களின் பரிதாப நிலையை கவனித்தீர்களா? ஐந்து பிராயமுடைய குழந்தைகள் முதல் துக்கித்துக் கண்ணீர் வடிப்பதை யான் கண்டேன். ஆனால் இப்போது அரசர் சோழராசருடன் போர் பொருது வெற்றியடைந்து ஜெய கோஷத்தோடு திரும்பி வருவதால் இவர்கள் இப்பெரு மகிழ்ச்சியை அடைந்திருக்கிறார்கள். நீதிவழுவாமல் செங்கோல் நடாத்தும் அரசரிடத்தில் குடி. சனங்கட்கு இத்தகைய பக்தி உதிப்பது இயல்பேயாகும்.

மந்திரி:— நீங்கள் கூறுவது உண்மையே. முற்காலத்தில் ஸ்ரீ இராகவன் வனத்திற்குச் செல்லுங்கால் அரசன் பிரிவாற்றாமல் பரிதபித்து அயோத்தி நகர்வாசிகள் பட்டபாடும், பின்னர் ஸ்ரீ இராகவன் வனவாசத்தை முடித்து மீண்டும் அயோத்திக்கு ஏகுங்கால் அந்நகர வாசிகளின் அடங்கா மகிழ்ச்சியையும் யாம் சரிதங்களின் வாயிலாய்ப் படித்துணர்ந்திருக்கிறோமேயன்றி நேரில் பார்த்ததில்லை. ஆனால் இப்போது நம் அரசரின் வெளியேறல் மூலமாய் அவ்விரு வகைக் காக்ஷிகளின் அம்சத்தை இங்கு நிதர்சனமாகக் காண்கிறோம்.

சரி, இருக்கட்டும். அரசரை வாழ்த்துவதற்காக நம் உதவி மந்திரியும் வேறு சில பிரமுகர்களும் நகர்ப்புறம் சென்றிருக்கிறார்களல்லவா? இன்னும் பதினைந்து நிமிஷத்தில் அரசர் நகர மண்டபத்திற்கு வருவதாக அவர்களிடமிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. ஆதலால் இது முதல் யாம் வெகு எச்சரிக்கையாயிருக்கவேண்டும். இந்நகர ராஜவீதிகள் நன்றாய் அலங்கரிக்கப் பெற்றிருக்கின்றனவா? வீதிகளில் போர் வீரர்கள் அணி வகுத்து நிறுத்தப் பெற்றிருக்கின்றார்களா?

பிரதானி:— ஆம், அரசரை உபசரித்தற்குரிய எல்லா ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பெற்றிருக்கின்றன. கோட்டை வாயிலில் பதினெண்வகை மேள வாத்தியங்கள் முழங்கப்படுகிறது. பட்டத்து யானை பூரண கும்பத்தைச் சுமந்து நிற்கின்றது.

மந்திரி:— இதோ அரசர் வருகிற ஆரவாரம் கேட்கிறது. வேதியர்கள் வேத மந்திரங்களை உச்சரிக்கட்டும். சங்கநாதம் முழங்கட்டும். இடியோசை போன்று இருநூறு குண்டுகள் வெடிக்கட்டும்.

[குலசேகரராசன் வெற்றிக்கொடி இலங்க பல தளகர்த்தர்களுடன் கொலுமண்டபத்திற்குள் நுழைகிறார். எல்லோரும் அரசருக்கு மரியாதைசெய்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். மலர்மாரி பொழிந்தது. அரசர் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறார்.]

அரசர்:— மந்திரி! நம் அரசாங்க காரியஸ்தர்களும் குடிசனங்களும் சௌக்கியமாயிருக்கிறார்களா? மாதம் மும்மாரி பொழிந்து நம் நாடு செழிப்புற்றிருக்கின்றதா? நீதி பரிபாலனம் செவ்வையாய் நடைபெறுகின்றதா?

மந்திரி:— மகாராசாவே! தங்கள் அனுக்கிரகத்தால எல்லோரும சௌக்கியமே. எவ்வித கஷ்டமுமின்றி குடிசனங்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் இவ்வேழு மாத காலமாய்த்தங்களைப்பிரிந்த துக்கம ஒன்றுமே அவர்களை வருத்தி வந்தது. அதுவும் இன்றோடு ஒழிந்து போயிற்று.

அரசர்:— ரொம்ப சந்தோஷம். மதி நுட்பம் வாய்ந்த மந்திரிகள் இருக்கும்போது அரசாங்கத்திற்கு எவ்வித குறையும் வராதென்பது திண்ணம். இவ்வுறுதியைக் கொண்டே யாம் இராச்சியத்தை உம்மிடம் ஒப்புக்கொடுத்து சோழ தேசஞ் சென்றோம். எம்பெருமான் கிருபையால் போன காரியமும அனுகூலப்பட்டது. சோழராசர் எவ்வளவு பலிஷ்டனாயிருந்தபோதிலும் எம்மிடத்தில் கருடனைககண்ட சர்ப்பம் போல் ஒடுங்கிப் போனார். கடைசியாக எம்மை அடைக்கலம் புகுந்து ரக்ஷிக்கப்பட்டார். எமக்குப் பாத காணிக்கையாக அவரால் சமர்ப்பிக்கப்பட்ட ரத்தினக்குவியல்களும் பொற்குவியல்களும் இதோ மூடை மூடையாக இருக்கின்றது. அவைகளைச் சரிபார்த்து நம பொக்கிஷத்தில சேர்ப்பிக்கவேண்டும்.

மந்திரி:— என்ன ஆச்சரியம்! சோழ ராசர் மிகவும் பலிஷ்டரல்லவா? முன் பல முடி மன்னர்கள் அவரிடம் போருக்குச் சென்று தோல்வி யுற்றிருக்கிறார்கள். அத்தகைய வீரரை தாங்கள் வென்ற மட்டிலும் தங்களுடைய வீரப்பிரதாபங்கள் இவ்வுலக முழுவதும் பரவுமென்பதில் சந்தேகமில்லை.

அரசர்:— மந்திரி! யாம சோழ ராசனை முறியடித்த பிறகு அங்க, வங்க, கலிங்க, காஷ்மீர முதலிய தேசங்கட்குச் செல்ல உத்தேசித்திருந்தோம். ஆனால் அத்தேச மன்னர்கள் நமக்குக் காணிக்கையாகப் பல வெகுமானங்கள் அனுப்பி என்னிடம் சிநேக பாவத்தைக் காட்டிக்கொண்டமையால் அவ்விடங்கட்குச் செல்வது நிறுத்தப்பட்டது.

மந்திரி:— பிரபு! தாங்கள் இவ்வளவு புஜபலம் பொருந்தியவரென்பதை ஒருவரும அறியோம். ஏதோ யாங்கள்செய்த பூஜாபலம் தங்களை அரசராகப் பெற்றோம்.

அரசர்:— மந்திரி! ஓர் இரகசியம்! சோழ ராசனை வென்றது எமது புஜபலமன்று. எம்பெருமான் ஸ்ரீ அரங்கநாதனது அனுக்கிரகமென்பதை நீர் அறியவேண்டும்.

மந்திரி:— தங்கள் மரபினர் எல்லோருக்கும் அவ்வெம்பெருமானே வழிபடு கடவுள் என்பதை அறிவேன். ஆயினும் சோழ ராசனை வென்றதற்கு தங்களது ஊக்கமும் புஜபலமுமே முக்கிய காரணமெனக் கருதுகிறேன்.

அரசர்:— மந்திரி! உமது அபிப்பிராயம் சரியன்று. "அவனன்றி அணுவும் அசையாது" என்ற முதுமொழியை நீர் கேட்டதில்லையா? ஆதலால் எல்லாம் எம்பெருமான் செயலென்றே கருதல் வேண்டும். சரி, நாழிகையாயிற்று. அந்தப்புரத்தில் என் நாயகி என் வரவுக்காகக் காத்திருப்பாள். போய் வருகிறேன்.

{ அரசர் அந்தப்புரம் சென்று செண்பகவல்லியைச் சந்திக்கிறார்
யுத்த விநோதங்களைக் கேட்டு செண்பகவல்லி ஆச்சரியப்படுகிறாள்
இருவரும் உல்லாசமாய் சம்பாஷணை செய்கிறார்கள். }

## களம்—3. காக்ஷி I.

இடம்—அந்தப்புரம்.

சேண்பகவல்லி ஓர் சோபாவில் சாய்ந்து கண்ணீர் வடிக்கிறாள்.

சேண்பகவல்லி:— (*தனக்குள்*) *ஆ! என்ன ஆச்சரியம்! யுத்தத்திற்குச் சென்ற என் பிராண நாதர் இந்நகருக்கு வந்து ஒரு வருஷமாகியும் எனக்கு அவருடைய பேட்டி கிடைப்பது அரிதாகவே யிருக்கிறது. ஒரு மாதத்தில் ஒரு வாரங்கூட அவர் என் அந்தப்புரத்திற்கு வருவதில்லை. வந்த காலத்திலும் அவருடைய பேச்சு வார்த்தைகளும் நடவடிக்கைகளும் வேறு விதமாய்க் காணப்படுகிறது. முற்காலங்களில் அவர் அந்தப்புரத்திற்கு வந்தால் என்னோடு கேளீ விலாசமாய்ப் பல இன்சொற்கள் பேசி மகிழ்வதும், சதுரங்கம் முதலிய களியாட்டங்களில் என்னைத் தோற்கடித்துப் பரிகசிப்பதும் எனக்கு மிகுந்த ஆனந்தகரமாயிருக்கும். மன்மதனும் இரதியும்போல் யாங்களிருவரும் சகலவித போக பாக்கியங்களையும் அனுபவித்து வந்தோம். இப்பொழுதோ என் நாயகர் அதற்கு நேர்மாறாக நடந்துவருகிறார். அந்தப்புரத்திலுள்ள எந்த போக வஸ்துக்களையும் அவர் விரும்புவதில்லை. சதுரங்கமுதலிய விளையாட்டுகளைக் கனவிலும் நினைக்கமாட்டார். யான் அருமையாய் வளர்த்துவரும் கிள்ளைகள் மைனாக்கள், மாடப்புறாக்களைக் கூட அவர் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை. பரிமள கந்தம் வீசும் பூங்காவிற் சென்று ஆடுகின்ற மாமயில்களையும் கூவுகின்ற அழகிய குயில்களையும் கண்டு களித்து வருவோமென்றால் அவர் சம்மதிப்பதில்லை. சந்தன புஷ்பாதிகளைக் கூட அவர் ஏற்றுக்கொள்ள மறுக்கிறாரென்றால் அவருடைய மனப்பான்மையை என்னென்று கூறுவது? ஹா! ரெங்கநாதா! என் நாயகர் இவ்விதமிருந்தால் யான் இல்லறவாழ்க்கையின் இன்பத்தை அனுபவிப்பதெப்படி?*

*(அது சமயம் தோழி நீலவேணி அங்கு வருகிறாள்)*

நீலவேணி:— *அம்மணி! இதென்ன கோலம்! அதிகாலையில் எழுந்து கண்ணீரைப் பெருக்கிக் கொண்டிருக்கிறீர்கள். தேவேந்திரனது மனைவியான இந்திராணிக்குங் கூட உங்களது செல்வச் சிறப்பு இல்லையே. அவ்விதமிருக்க நீங்கள் கவலையுறுவதற்குக் காரணம் யாது?*

செண்பகவல்லி:— அடி! என்னுருயிர்த்தோழி! என் விஷயம் உனக்குத் தெரியாதா? என் நாயகரது அன்பில்லாமல் எனக்கு எத்தனைச் செல்வமிருந்தும் என்ன பிரயோசனம்? ஏதோ என் கால வேற்றுமை என் நாயகருக்கு என்னிடத்தில் பிரியமே கிடையாது. இது தான் என் கவலைக்குக் காரணம்.

நீலவேணி:— என்ன பரிகாசம்! இரண்டு தினங்கட்கு முன் கூட அரசர் இங்கு வந்திருந்ததைக் கண்டேனே. அறிவிலாவது ஒழுக்கத்திலாவது ஆண்மையிலாவது அவருக்குவிஞ்சியவர் கிடையாது. அத்தகைய உத்தமரை நீங்கள் குறை கூறுதல் சரியாகுமா?

செண்பகவல்லி:— அடி! என்னுடைய அபிப்பிராயத்தைச் சரிவரக் கேட்டுக் கொள்ளாமலே தடித்தனமாய்ப் பேசுகிறாய். அரசரது அறிவொழுக்கங்களைப் பற்றி இங்கு யான் பேசவில்லை. அரசர் என்னை நேசிக்கவில்லையென்பதே எனக்குள்ள மனக்குறையாகும்.

நீலவேணி:— அம்மணி! நீங்கள் கூறுவதை யான் ஒத்துக் கொள்ள மாட்டேன் அரசருக்கு உங்கள் பேரில் நேசமில்லையானால் அவர் ஏன் இங்கு வரவேண்டும்? அவர் அடிக்கடி வந்து கொண்டிருப்பதே அவருக்கு உங்கள் மீதுள்ள அன்பைக் காட்டுகிறதல்லவா?

செண்பகவல்லி:— என்ன சள்ளை! எல்லா மர்மங்களையும் சொன்னாலொழிய உன் மனத்தைத் திருப்பமுடியாது. யுத்தத்திற்குச் சென்று மீண்ட கால முதல் என் நாயகரது உள்ளம் மாறுபட்டிருக்கிறது. சாதாரண ராஜபுத்திரரைப்போல் அவர் காணப்படவில்லை. இகலோக போகங்களில் அவருக்கு இச்சை கிடையாது. என்னிடத்திலும் அன்பைக்காணேம். யான் செய்யும் உபசாரங்களெல்லாம் அவருக்கு அபசாரமாகவே காணப்படுகிறது. இதற்கெல்லாம் காரணம் எம்பெருமான் அரங்கநகரப்பனிடத்தில் அவர் வைத்திருக்கும் ஆராத காதலேயாகும்.

நீலவேணி:— உங்கள் நாயகர் தெய்வ பக்தியில் சிறந்தவரென்பதை எல்லோரும் அறிவர். அப்படிப்பட்டவர் உங்களுக்கு நாயகராயமைந்தமைக்கு நீங்கள் பெரிதும் சந்தோஷிக்க வேண்டும். ஆதலால் எவ்விஷயத்திலும் நீங்கள் அவரைப் பின்பற்றி நடப்பதே சிலாக்கியமாகும்.

சேண்பகவல்லி:— அடி! நகைகாய்! என்னுடைய அபிப் பிராயமும் அதுவே. அவர் துறவியாயி நந்து எபபெருமானிடம் பக்தி செய்வதில் எனக்கு ஆக்ஷேபமில்லை. ஆனல் பிரதிதினம் அவர் செய்து வரும் நற்றொண்டுகளிலும் நறகால க்ஷேபங்களி லும் என்னைச் சேர்த்துக் கொள்ளாமல் ஒதுக்கி வைத்திருப்பதே எனக்கு மிகுந்த துக்கததைக் கொடுக்கிறது. யான் எப்போ தும் அவர் கூடவே யிருந்து அவருக்கு வேண்டிய தொண்டுகளைச் செய்து வந்தால் அதுவே எனக்குப் பரம யோக்கியமாயிருக்கும்.

நீலவேணி:— அம்மணி! எம்பெருமான் கிருபையால் உங் கள் அபீஷ்டம் நிறைவேறும். சரி, இருக்கட்டும். உங்கள் சேடி கோமளம் வருகிற ஆரவாரம் கேட்கிறது. அவள் வெளியே போய் வந்தால் ஏதாவது புதிய விசேஷம் சொல்வது வழக்கமல் லவா?

சேண்பகவல்லி:— ஆம்! அவள் பொல்லாத பிசாசு. ஊரில் எங்கேயோ மூலை முடுக்குகளில் நடக்கும் விசேஷமெல் லாம் அவள் காதிற்கு வராமல் போகாது.

(கோமளம் விரைந்து வந்து செண்பகவல்லியை வணங்குகிறள்)

சேண்பகவல்லி:— என்னடி! கோமளம்! எதையோ பறி கொடுத்தவள் போல் மிரள மிரள விழிக்கிறய். ஏதேனும் விசே டமுண்டோ?

கோமளம்:— அம்மணி! கெட்ட காலம் தலைக்குமேலிருந் தால் என் துக்ககரமான சம்பவங்கள் நேரிடாது. ஆதலால் மனத்தைத் தைரியப்படுத்துவதே முக்கியமானது.

சேண்பகவல்லி:— என்னடி! சமாசாரத்தைச் சொல்லா மல் எதையோ பேசுகிறய். உனக்கு நேரிட்ட துக்கமென்ன? சொல்லடி!

கோமளம்:— எனக்கொன்றுமில்லை யம்மா! எல்லாம் உங் களைப்பற்றிய சமாசாரந்தான்.

சேண்பகவல்லி:— அரண்மனையில் என் பிராணநாதர் சௌக்கியமாயிருக்கிறாரா? அவரைப்பற்றி ஏதேனும் தெரியுமா?

கோமளம்:— யான் அரண்மனைப் பக்கம் போகவில்லை யம்மா! ஆனல் அரண்மனை காரியஸ்தர் சர்வாதிகாரி ஓர் புரளி

நீதேறி மந்திரியின் மாளிகையை நோக்கி வேகமாய்ச் செல்கிறார். வேறு சிலர்கள் அவரைப் பின் தொடர்ந்து ஓடுகிறார்கள். இதை யான் நேரில்கண்டேன்.

செண்பகவல்லி:— (திடுக்கிட்டு) என்னடி! சர்வாதிகாரி மந்திரியின் மாளிகைக்குச் செல்லக் காரணமென்ன?

கோமளம்:— அது விபரம் தெரியாது அம்மணி!

செண்பகவல்லி:— வீதியில் பிரஸ்தாபம் ஒன்றுமில்லையா?

கோமளம்:— பிரஸ்தாபம் உண்மையாகுமா? பிரஸ்தாபத்தை நம்புவது சரியல்ல.

செண்பகவல்லி:— ஹோ! பிசாசு! நீ கேள்விப்பட்ட பிரஸ்தாபமென்ன? என் நாயகனைப்பற்றி ஒன்றுமில்லையே.

கோமளம்:— அம்மணி! குதிரைகள் வருகிற ஆரவாரம் கேட்கிறது. சர்வாதிகாரி இங்கு வந்துவிட்டாரென்று நினைக்கிறேன். அவர் மூலமாய் எல்லா விபரங்களையும் அறிந்துகொள்ளலாம்.

(பங்கஜம் ஓடி வந்து செண்பகவல்லியை வணங்கிறாள்)

செண்பகவல்லி:— அடி! பங்கஜம்! நீ வந்த விசேஷம் யாது?

பங்கஜம்:— முதல் மந்திரியும் அரண்மனை சர்வாதிகாரியும் வேறு சிலர்களும் உங்களுடைய பேட்டிக்காக வந்திருக்கிறார்கள்.

செண்பகவல்லி:— ஆயின் அவர்களை முன் தாழ்வாரத்திற்கு அழைத்துவா. (பங்கஜம் வெளியே செல்கிறாள்)

{ செண்பகவல்லி சேடிகளுடன் அந்தப்புரத்தின் தாழ்வாரத்தையடைகிறாள். மந்திரி சர்வாதிகாரி முதலியோர் அங்குவந்து செண்பகவல்லிக்கு மரியாதை செய்கின்றனர். }

செண்பகவல்லி:— (மந்திரியை நோக்கி) அதிகாலையில் நீங்கள் இங்கு வரக் காரணம் என்ன?

மந்திரி:— அம்மணி! அரசனைப்பற்றி சில சமாசாரம் சொல்ல வேண்டியிருக்கிறது.

செண்பகவல்லி:— என்ன சமாசாரம்?

மந்திரி:— அரசர் சயனித்திருந்த பளிங்கு மாளிகை இன்று காலை ஏழுமணி வரையும் திறக்கப்படவில்லை. வெளியேயிருந்து எவ்வளவோ ஆரவாரங்கள் செய்தும பயனிலவாய் முடிந்தது.

சேண்பகவல்லி:— (திடுக்கிட்டு) என்ன அதிசயம்! பிரதி தினம் காலை ஐந்து மணிக்குத் துயில் நீப்பவர் இன்று ஏழுமணி வரை துயில் எழாத காரணம என்ன? ஆனால் நேற்றிரவு அரசர் பளிங்கு மாளிகையில் சயனித்தது நிச்சயந்தானே!

மந்திரி:— ஆம். அதில் சந்தேகமில்லை. இதோ யிருக்கும் சர்வாதிகாரி முதலியோர் அவரை நேரில் பார்த்திருக்கிறார்கள்.

சேண்பகவல்லி:— (சர்வாதிகாரியை நோக்கி) இன்று காலையில் நடந்ததென்ன? தெளிவாய்ச்சொல்லும்.

சர்வாதிகாரி:— அதி காலையில் திருப்பள்ளி உணர்த்தும் பரிவாரங்கள் மாளிகையின் கதவுப்பக்கம் நின்றுகொண்டிருந்தார்கள். ஆனால் நெடு நேரம் காத்திருந்தும் அரசர் துயில நீத் தவாமையால் அவர்கள் பயந்து எனக்கு அறிவித்தார்கள். யான் சென்று மாளிகையின் வாயிற் கதவைக் கவனித்ததில் உள் பக்கம் தாளிட்டபடியே யிருக்கிறது. இதனால் அரசர் மாளிகைக்குள்ளிருப்பது நிச்சயம்.

சேண்பகவல்லி:— நேற்றிரவு அரசர் மாளிகையைக் காவல் புரிந்த சேவகன் யார்?

சர்வாதிகாரி:— அச்சேவகன் இதோ வந்திருக்கிறான்.

சேண்பகவல்லி:— (சேவகனை நோக்கி) ஏ சேவகா! நேற்றிரவு நீ அரசனை எப்போது பார்த்தாய்?

சேவகன்:— நேற்றிரவு பதினொரு மணிக்கு அரசர் நித்திரைக்குச் செல்லுதைப் பார்த்தேன்.

சேண்பகவல்லி:— அப்பால் நீ தங்கியிருந்த இடம எது?

சேவகன்:— அரசர் மாளிகைக் கதவைத தாளிட்டு சயனித்துக்கொண்டார். நானும் வேறு இருவர்களும் இரவு முழுவதும் மாளிகைக்கு வெளியே நின்று பாராக்கொடுத்துக் கொண்டிருந்தோம்,

சேண்பகவல்லி:— இடையில் அரசர் வெளியே செல்ல வில்லையே.

சேவகன்:— இல்லை

சேண்பகவல்லி:— (கண்ணீர் சொரிந்து) அந்தோ! என்ன செய்வேன்! என் நாயகருக்கு என்ன அபாயம் நேரிட்டிருக்கிறதோ?

மந்திரி:— அம்மணி! பகவான் கிருபையால் உங்கள் நாயகர் சௌக்கியமாயிருப்பார். கவலையுறவேண்டாம்.

சேண்பகவல்லி:— ஆ! ஆ! அவர் சௌக்கியமாயிருந்தால் காலையில் துயில் நீத்து எழுந்து வந்திருப்பாரல்லவா? அவ்விதமில்லாத வரை அவருக்கு ஏதோ அபாயம் நேரிட்டிருக்க வேண்டும். மந்திரி! இனி யான் உயிர் வைத்திருக்க மாட்டேன்.

நீலவேணி:— அம்மணி! மந்திரியவர்கள் சொல்வதைக் கவனிக்க வேண்டும். உங்கள் நாயகர் திடசாதனமுடையவர். ஆதலால் அவருக்கு அபாயம் நேரிடக்காரணமில்லை. தைரியமாயிருங்கள்.

மந்திரி:— அம்மணி! இனி காலதாமதம் கூடாது. சீக்கிரம் அரச மாளிகை திறக்கப்படவேண்டும்.

சேண்பகவல்லி:— (மந்திரியை நோக்கி) நீங்கள் எல்லோரும அரச மாளிகை போய்ச்சேருங்கள். யான் என் சேடியர்களை விடுத்து மாளிகையைத் திறக்கச் செய்கிறேன்.

(சேடியர்களை நோக்கி) அடீ! பங்கஜம்! கோமளம்! நீங்கள் இருவரும் ஒரே ஓட்டமாய் அரசரது மாளிகைக்குச் சென்று நமது நூலேணியின் மூலம் மேன்மாடியிலுள்ள பலகணியைத் திறந்து உள்ளே இறங்கி கதவைத் திறக்கவேண்டும். சீக்கிரம் செல்லுங்கள்.

( மந்திரி சர்வாதிகாரி முதலியோர் வெளியே செல்கின்றனர்
பங்கஜமும் கோமளமும் நூலேணியை எடுத்துச்செல்கின்றனர் )

சேண்பகவல்லி:— அடீ! நீலவேணி! எனக்குத் தேகமெல்லாம் பதறுகிறது. குடல் துடிக்கிறது. என் நாயகரது நிலை எவ்வாறுகுமோ?

நீலவேணி:— அம்மணி! ஸ்ரீ அரங்கநாதனது கிருபையிருக்கும்போது நீங்கள் ஏன் கவலையுறவேண்டும். இன்னும் சில நிமிஷங்களில் உங்கள் நாயகர் இங்கு வரப்போகிறார். சற்று பொறுமையாயிருங்கள்.

## களம்—3. காக்ஷி—2.

இடம்:- ராஜமாளிகை.

ராஜவீதியில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் சூழ்மியிருக்கின்றனர். ராஜமாளிகையைச் சுற்றி குதிரை வீரர் பாராக்கோடுக்கின்றனர். சேடியர்களால் ராஜ மாளிகை திறக்கப்பட்டது. மந்திரி, பிரதானி, சர்வாதிகாரிமுதலிய முக்கிய உத்தியோகஸ்தர்கள் மாளிகைக்குட் பிரவேசித்து அரசருக்கு மரியாதை செய்கின்றனர். அரசர் சப்ரமஞ்சத்தின் அருகாக பத்மாசனமிட்டு கண்களை மூடி கைகளைக் கூப்பி நிஷ்டையிலிருக்கிறார்.

மந்திரி:— மகாராசாவே! குடிசனங்களெல்லோரும் தங்கள் தரிசனத்திற்காக வந்து காததிருக்கிறார்கள். திருக்கண்களை விழித்து கடாக்ஷித்தருளவேண்டும் பிரபூ!

அரசர்:— (கண் விழித்து) மந்திரி! இதென்ன! வீதியில் பெருங்கூட்டமாயிருக்கிறது. கட்டுக்காவல் அதிகமாயிருக்கிறது. முக்கிய உததியோகஸ்தர்கள் எல்லோரும் இங்கு வந்து சூழ்மியிருக்கிறீர்கள். என்ன விசேட்ம்?

மந்திரி:—பிரபூ! இன்று ஓர் அதிசயம்! காலே ஏழுமணிவரை தாங்கள் திருப்பள்ளி நீக்கவில்லே. திருப்பள்ளி உணர்த்தும் பரிவாரங்கள் வழக்கம்போல் காத்திருந்தும் தங்கள் தரிசனம் கிடைக்காததால் பயந்து சர்வாதிகாரிக்குத தெரியச்செய்தார்கள் சர்வாதிகாரி என்னிடம் ஓடி வந்து தெரியப்படுத்த நாங்கள் அந்தப்புரம் சென்று பட்ட மகஷிக்குத்தெரியச் செய்தோம். அப்பால் அந்தப்புரத்திலுள்ள சேடியர்கள் மூலமாய் இம்மாளிகை திறக்கப்பட்டு இப்போது தங்களைத் தரிசனம் செய்தோம். இது தான் நடந்த சங்கதி.

அரசர்:— மநதிரி! இச்சொற்ப விஷயத்தை இவ்வளவு பகிரங்கம் செய்வானேன்? அந்தப் புரத்தில் என் நாயகி மிகவும் கலங்கியிருப்பாளல்லவா? சரி, இருக்கட்டும். எல்லோரையும் அவரவர் இல்லததிற்குச் செல்லும்படி கட்டளையிடுகிறேன். சீக்கிரம கூட்டம கலேயவேண்டும்.

*பிரதானி முதலியோர் அரசரை வணங்கி வெளியே செல்கின்றனர். ராஜ வீதியிலுள்ள கூட்டம் கலேகின்றது.*

மந்திரி:— மகாராசாவே! அகஸ்மாத்தாக தாங்கள் இன்று நிஷ்டையிலிருநத காரணமென்ன

ஓம்: ஸ்ரீ!

# நம்மாழ்வார் வரலாறு

(முதற்புத்தகம்.)

## ஓரரிய செந்தமிழ் ஆராய்ச்சிநூல்.

இது

**வீர நாராயணபுரம்,**

ஸ்ரீ மந்நாதமுனிகள் சந்நிதி

என்னும்

காட்டுமன்னார்கோயில்

இராமகிருஷ்ண சடகோபதாஸரால்

இயற்றப்பெற்று

---

மைசூர் வேதகிருஹம்

உயர்மதித்திரு

ஆ. கோவிந்தச்சார்ய ஸ்வாமிகள் அவர்கள் C. E. M. R. A. S.

எழுதிய

ஆங்கில முன்னுரையுடன்

திருநெல்வேலி

உயர்திரு. T. R. பெரியநம்பியாபிள்ளை அவர்களால்

தமது "ஸ்ரீவைஷ்ணவன்" பத்திரிகையில்

வெளியிடப்பெற்றது

---

திருநெல்வேலி

மீரானியா அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1931

All Rights Reserved.

ஓம்: ஸ்ரீ!

# முன்னுரை.

இத்தகையதோர் ஆராய்ச்சி, புதுப்புது திருத்தங்களினும் புதுப்புது ஆராய்ச்சித் துறைகளினும் இறங்கும் மக்கட்கிடையிலே சென்று, அன்னோர்க்கும் பிறர்க்கும் ஒப்ப உண்மையைத் தெருட்டுவதாகும் என்னல் மிகையாகாது. பண்டைய வழக்கப்படியே வேதாந்த சித்தாந்த சம்பிரதாய நூல்களை யோதி உணரும் ஒரு வகை வைதிக ஸ்ரீ வைஷ்ணவர்களும், பண்டைய ஒழுகலாற்றையும் புதியமுறையையும் கைபாண்டுவரும் ஸ்ரீவைஷ்ணவர்களும் இவ்விரு வகையினுமில்லாது தத்தமக்குத் தோன்றியவாறே செல்லும் ஸ்ரீவைஷ்ணவர்களும், இதே நெறியிற் செல்லுகின்ற சைவர்களும், தங்கள் தங்களுக்குச் சமயப்பற்றும் கடவுண்ஞானமும் உண்மையில் இருந்தால், தத்தமக்குரிய ஒழுகலாறுகளையும் அவற்றின்வாய்ப்பட்ட பெரியோர்கள் தம் இயக்கினையும் வீண் வழக்குகளில் வைக்காமல், நடுநெறிபற்றியேகூற அமைவர். அமையவே, சமயமும் கடவுண் ஞானமும் என்றும் போலவே நின்று ஒளிரும்! அவ்வாறு சேறல் வாவர அற்றுப்போகவே, ஒரு சிலர் அவ்வச்சமய குரவர்கள் பால் ஓரமாக நடந்து பாங்கான எண்ணத்தைக் கொள்ளாமல் தீங்கான உரை இயற்றுகின்றனர். இன்னோரன்ன குணமுடையோர், தமது உறுதிக்கண்ணே நின்று எங்ஙனமாதல் போகட்டும்; அதை யாம் பொருட்படுத்துகின்றோம் இல்லை. இவர்கட்குப் பன்னெடுங்காலத்திற்கு முன்னமே, மாமதியுடையோராய்த் திகழ்ந்த பெரியார் பலர் உண்மையைப் புகட்டி உலகை உய்வித்தருளிய தன்மையை, இன்னோர் மக்கட்குத்தெருட்டுதல் தவிர்த்து அவமே அன்னோரை ஈர்த்தீர்த்துப் பலப்பல குற்றங்களைச் சாற்றி அழிவழக்குப் பேசுகின்றனர்; அது நியாயமாகாது; அறத்தாறுமாகாது! பண்டைய அப்பெரியார்களது அருட்பெருங்கருணைத் தன்மையை இன்னதெனவோர்ந்தறிந்து கோடலின்றி அன்னோர்க்குக் கடவுட்டன்மை இல்லையெனச் சாதித்தலும் பெருங்குற்றமே யாகும்.

அவ்வாறு இஞ்ஞான்றைய ஒரு சிலர், ஒல்காப்பெரும் புகழ்த் தொல்பேரடியாரான 'நம்மாழ்வார்' என்னும் திருக்குருகூர் சடகோப அடிகட்குக் கடவுட்டன்மை யில்லையென்று வெற்றுவார உரை

களைக் கூறுதற்கொருப்பட்டு முன்னுறலின், அவ்வுரைகள் கண்டாற்றாத அடியேம், மேலே குறித்த ஸ்ரீவைஷ்ணவர்களேனும் பிறரேனும் மயக்க முறுமைப்பொருட்டே அக்கடவுட் பேரடியாரது சரித்திரத்தையும், கடவுட்டன்மையையும் ஒருவாறு ஈண்டுவரையத் துணிந்தேம். ஸ்ரீவைஷ்ணவ சமூகத்திடையிலே, இதுபோன்றதோர் ஆராய்ச்சி நூல் இது காறும் வெளிவந்திலது. இதனைத் தனித்தமிழ் உயர் நடையிலே கூடியவரையில் எழுதியிருக்கின்றேம்; ஆனால் சில விடங்களில் மட்டும் கட்டாயமாக வேண்டற்பாலனவாகிய வடமொழிகளைச் சேர்த்திருக்கின்றனம். இதன் இரண்டாம் புத்தகமும் (நம்மாழ்வார் அருளிச்செயல்; நம்மாழ்வார் காலம்) திருவருளால் விரைவில் வெளிவரக்கூடும். உத்தியோக குடும்ப அலுவல்களின் இடையே, திருவருட்டுணை யொன்றினையே பெருந்துணையாகக்கொண்டு இதனை வரைந்து வந்தமையின், இதன் கண் சொற்பொருட் குற்றங்களும், இலக்கண இலக்கிய வழூஉக்களும் போதிந்திருக்கக் கூடும். அத்துடன், இது, ஒருவர் மட்டுந் தன்னந்தனியே நடாத்தும் பத்திரிகையில் வெளிவந்தமையாலே இதனுள் அச்சுப்பிழைகள் மிக மலிந்துள்ளன. பொருள் வேற்றுமை தரக் கூடிய அச்சுப்பிழைகளும் உள. அவற்றை யெல்லாம் இப்போது திருத்தி திருத்தக்குறிப்பு ஒன்றுசேர்க்கமுடியவில்லை. யாம் இதனைப் பிழையற மிக ஒழுங்காகச் சோதித்து நீண்டதோர் ஆங்கில முகவுரையுடன், தனியே அச்சிட்டு வெளியிட எண்ணி இருக்கின்றமையின், இருந்தபடியே இது போழ்து விட்டுவிட்டோம். அன்பர்கள் எம்மை மன்னித்து, இது தனி நூலாக வெளிவரும்போழ்து இதனையும் வாங்கி ஆதரிப்பார்களாக!

இனி எம்மதத்திலும் பெரியார் உளர் என்ற கொள்கை எம்முள்ளத்தில் எப்போதும் உண்டாதலின்: எச்சமயத்தாரையும் வெறுத்தல் இன்றியே, ஒரு சிலர் கூறுகின்ற ஒவ்வா உரையை மட்டில் செவ்வே கண்டித்து உண்மையை நடுநிலை பிறழாது ஆராய்ச்சி முறையிலே நிறுவியுளோம். அவ்வாறு நிறுவிச் செல்லுமிடையே சைவச்சான்றோர்களது செய்திகள் சில வந்திருக்குமாற்றிற்கு ஆங்காங்கு தக்க சமாதானம் தந்திருக்கின்றேம். சம்பந்தப்பெருமானால் சமணர்கள் கழுவேற்றப்படவில்லை யென்றும், மணிவாசகனார் அந்தணர் இல்லை, மற்று அவர் ஓர் இலிங்கக்கட்டிச் சைவரேயாம்

என்றும், மங்கை மன்னன் சம்பந்தரை காழியில் வென்றதிலையாது என்றும், இவர்கள் இருவோருடைய காலம் வேறு என்றும் திருக்கோவையார் மாணிக்கவாசகர் பாடியதன்று என்றும் சில ஆராய்ச்சிக்காரர்கள் பேசியும் எழுதியும் வருகின்றனர். இவற்றையெல்லாம் எமது நம்மாழ்வார் காலம் என்ற பகுதி மூலமாக உலகோர்க்கு அறிவிக்கும் பொருட்டு, சுமார் பதினாயிர ரூபா பெறுமான தமிழ் ஆரிய ஆங்கில ஆராய்ச்சி நூல்களை விடாது பயின்று ஆராய்ந்து வருகின்றோம். இஃது நூல்வடிவிலேனும் பத்திரிகை மூலகமாகவேனும் வெளிவர குறைந்தது இரண்டாண்டுகள் செல்லும் எனக்கருதுகின்றோம். தெய்வத் திருவருள் எப்படி விடுமோ தெரியவில்லை. தெய்வ பலம் இருப்பதோடு அன்பர்களது அரிய பெரிய உதவியும் வேண்டற்பாலது.

இனி 'மாணிக்கவாசகர் வரலாறும காலமும்' என்ற நூலின் பேராசிரியர் அவர்களான பல்லாவரம். ஸ்ரீலஸ்ரீ வேதாசலம் சுவாமிகள் அவர்கள் என்னும் மறைமலையடிகளாருடைய நம்மாழ்வாரைப் பற்றிய கருத்துக்கள் சிலவற்றினின்றும் மாறுபட்டே இதனை வரைவதற்குத் துணிந்தேமேனும், அவராலும் அவர்கள் நூல்களாலும் இலக்கண இலக்கிய ஆராய்ச்சி அறிவினை யாம் பெரிது பெற்றமையின் பொருட்டு அன்னார்க்கும் பூத பௌதிக ரஸாயன தத்துவசரித்திர உரைகளை ஆராய்ந்து எழுதி பேர் அறிவினை மக்கட்கெல்லாம் பரப்பும் மேனாட்டுத் தத்துவ ஆசிரியன் மார்களாகிய, William James, Leo-Tolstoy, Dt· Frazil Max Muller, Wilson Oliver Lodge, William McDougall, Inge, C. S Myers Tyndall முதலியோர்கட்கும், கீழ்நாட்டு Romesh chandra Dutt, Dr. Krishnasami Ayyangar முதலியோர்கட்கும் எமது நன்றியறிதலையும் கடப்பாட்டினையும் செலுத்துகின்றோம்.

இந்நூலைச் சிறிது சிறிதாக ஸ்ரீவைஷ்ணவப் பத்திரிகையில் 1—5—1928 தொடங்கி 1—6—31 வரைக்கும் வெளியிட்ட அப் பத்திரிகாசிரியர் திருமிகு T. R. பெரியநம்பியாபிள்ளை அவர்கட்கும், இந்நூலை யாம் வரைந்து செல்லுங்காலத்து இதன் அருமை பெருமைகளை உண்மையில் கண்டுகளித்து நல் எண்ணம் (நல்லபிப்பிராயம்) உடைய ஓர் அரிய முன்னுரையை அளித்த பண்டித

சிரோன்மணியும் உபய வேதாந்த ப்ரவர்த்தகரும், "English Translation of Bhagavad Gita with Ramanuja's Commentaries," "Lines of south Indian Saints" (Alwars) "Life of Ramanuja," "The Veda mecum of Vedanta" "Vedantism and Theosphy," "Divine wisdom of the Dravida saints" "Translation of Artha Panchangam" என்னும் அரிய பல ஆங்கில நூல்களது ஆசிரியருமான மைசூர் வேதகிருகம் ஆள்கொண்ட வில்லி கோவிந்தாசார்ய ஸ்வாமிகள் C. E. M. R. A. S., அவர்கட்கும் யாம் எழுமையும் உழுவலன் போடு கடமையாற்றுகின்றேம்.

அடியேமுக்குத் தோன்றாத் துணையாய் நின்று எம்மை எந்நேரத்தினும் இடைவிடாது காத்தளிக்கும் எமது ஞானசிரியர் அரங்கநாராயணச்சீயர் அவர்களது அரிய பெரிய திருவடிகட்கு எமதுடல் பொருள் ஆவி எல்லாம் உரிமை பெறுக!

குறிப்பு:— வேதாசலம் சுவாமிகள் அவர்களும் இன்னஞ்சிலரும் எமக்கு விடுத்த கடிதங்கட்கெல்லாம் தகுந்தபடி முன்னரே விடை இறுத்துள்ளோம். அவ்விஷயங்கள் நம்மாழ்வார்காலத்திலே வரும்.

அன்புநிலைக்கழகம்
கள்ளக்குறிச்சி.
25—6—1931

இராமகிருஷ்ண சடகோபதாஸ்,

## FOREWORD.

I find that this work is a splendid and classical thesis on Saint Satagopa, the foremost of all the other Sri-Vaishnava Saints. The author has treated the subject as a research scholar would, not only touching on the historical aspect of the question, but the cultural, linguistic, social, religious, not to speak of the spiritual aspect par-excellance of the matter. Nor has he not done justice to the scientific (psychic) view which is the modern requisition, in order to justify the miraculous elements found in the lives of Sri Vaishnava Saints and Seers. If the modern imitations of Christian ways and their beliefs, disposes them unconsciously to swallow miracles such as Immaculate conception, transubstantion of water into wine, Resurrection, Transfiguration, Ascension, the author's arguments about the Sri Vaishnava Saints having lived like "unnunso'ru paruhuneru" etc, must certainly be more credible to them; and such incidents as Sasa'rira svarga," "Viman-arohana" ethoe.

Thus this work as a modern day production is invaluable in more ways than one. By the way effect of the such presentations will have opened our nations' eyes to the valuable spiritual assets of our Holy Land, (Bharata-Kanda) and in course of time justifying us in the oft-repeated hope for all mankind-a spiritual message from India to all countries which is the voice in vogue.

After having read this work thoroughly and deeply I am realizing that the author is a research scholar with method, manner and material such as modern scholarship demands. This kind of erudition and scholarly

spirit is quite necessary to the present state of our country.

Lastly, I advise my friend the author that he should treat all the Alwars in this way (as he has some what done also for Tirumangai-mannan[1]) and illustrate by scenes of the Divya-Desas.

Veda-Griham,
Mysore
18—11—29

Alkondavilli–
Govindacharya Swamigal,
C. E. M. R. A. S.

---

1. Vide: Vedanta Deepika Vol. 18 Pages 272 to 278 and 293 to 297.

# நம்மாழ்வார் வரலாறு

(முன்134-ம் பக்கத்தொடர்ச்சி)

" அரன்நா ரணன்நாமம் ஆன்விடைபுள் ளூர்தி
உரைநூல் மறையுறையுங் கோயில்—வரைநீர்
கரும மழிப்பளிப்புக் கையதுவேல் நேமி
உருவமெரி கார்மேனி யொன்று.

[முதற்றிருவந்தாதி செ 5]

" பொன்றிகழு மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகம் தாய நெடுமாலும—என்றும்
இருவரங்கத தால்திரிவ ரேலும் ஒருவன்
ஒருவனங்கத் தென்று முளன். " என்றுரென்பது*(Do98

---

* இச்செய்யுள்களின் நுட்பவுரையினை ஆழ்ந்தறியாது, பலர் பலபட உரைவகுப்பர். பொய்கை அடிகள இவ்விருவரையும் சமமாகக்கொண்ட பொதுநிலையுடையோ ரென்பாருமுளர். அன்னோர் மொழிகிடக்கும் முறையுணர்ந்து தெளியாதவர். ' உருவமெரிகார்மேனி யொன்று ' ' ஒருவன், ஒருவனங்கத்தென்று முளன்' என்று விரியும் மொழிகளை அவற்றின ஆற்றலுக்கேற்ப ஆழ்ந்து பாருங்கள். பின்னர் அவற்றிற்குப் பண்டைப்பெரியார் கூறிய விழுமிய விரிவுரையைக்கண்டு தெளிந்தால் உண்மை புலப்படும். இங்ஙனங்கூறியருளிய இவ்வடிகளே, " பேய் முலைநஞ் சூணாக வுண்டான் உருவொடு பேரல்லால் காணுங்கண் கேளாசெவி; " ' உலகளந்த மூர்த்தியுருவே முதல், ' ' திருமாலையல்லது தெய்வமென் றேத்தேன்; ' ' மாயவனை யல்லால், இறையேனு மேத்தாதென் நா; ' என்று எத்துணை ஆற்றல் பட விஷ்ணு பாரம்மியத்தைக் காட்டுகின்றார் காண்மின்! சருவாதிகாரப்பெரும் பொருளாம் விஷ்ணுவூடே, சிவபெருமான் உள்ளிட்ட எல்லாச்சராசரமும் அடங்கப்பெறுதலினன்றே, இவ்வாழ்வார் மீண்டும்,

" ஏற்றான்புள் ளூர்ந்தான் எயிலெரித்தான் மார்விடந்தான்
நீற்றான் நிழல்மணி வண்ணத்தான்-கூற்றொருபால்
மங்கையான் பூமகளான் வார்சடையான் நீண்முடியான்
கங்கையான் நீள்கழலான் காப்பு "

என்று ஓதியருளினுரென்பது.

இனித்திருமாலே முத்தொழிலையும் புரிபவனேனும் தான், தனக்கெனவே உரிமையில் என்று கொண்ட காத்தற்றொழில் போக மற்றைப்படைத்தற்கும் அழித்தற்குந்தானே உடனின்று அவ்வவற்றிற்கு ஏற்றபெயர்களுடன் பிரமனும் உருத்திரனும் விளங்குவன். இவ்விருதொழில்கட்கும் விஷ்ணுமூர்த்தம் அல்லாதவேறு கடவுளரைக் கொண்டது ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயம் அன்றென்க.

பிரமசத்தம் படைப்பிற்கும், உருத்திரசத்தம் அழிப்பிற்கும், ஏதுவாய் அவற்றிற்கிசையுமாறு ஆண்பாற்குரிய அன்விகுதி பெற்று பிரமன் உருத்திரன் என்றாயின. மற்றுவிஷ்ணு என்னும் சத்தமோ அன்விகுதி பெறாமலே இயங்குதலையுடைத்து. காத்தற்குச் சருவ வியாபகமும் சருவவல்லமையும் சருவாதிகாரமும் வேண்டற்பாலன வாகலின், அண்டாண்ட பிண்ட சராசரசேதனாசேதனசமூகப்பெரும் பொருள்களெல்லாம் ஒன்றாய் இயையுமாறு அஃது எவ்விகுதியும் பெறாதே கடுநின்றிலங்கி, "ஆணல்லன், பெண்ணல்லன், அல்லால் அலியுமல்லன்," என்றவாறு பேசைக்கிய ஒற்றுமைப்பாட்டில் வயங்கித் தனக்குரிய ஒப்பற்ற பேராற்றலை விளக்குகின்றது, இதனால், 'விஷ்ணு' என்ற ஒருபொருளே வரம்பில் ஆற்றலை உடைத்தாய், யாவற்றையும் இயக்குவிக்கும் பெரும்பொருளாய் அமையுமாற்றைக் கண்டு தெளிதல் அறிவுடைத்தாம் என்க. எனவே, பிரமருத்திரர்களையெல்லாம் சிற்சில இடங்களில் அடிகள் வழுத்திநின்றது, இறைவனது பரந்து விரிந்த வரம்பில் ஆற்றலை மக்கள் அறிந்துணரவேண்டியே என்றுணர்க.

இது கொண்டே, அடிகளார்,

§ "ஒன்றெனப் பலவென அறிவரும் வடிவினுள்நின்ற
நன்றெழில் நாரணன் நான்முகன் அரனென்னுமிவரை
ஒன்றநும் மனத்து வைத்துள்ளிநும் இருபசையறுத்து
நன்றென நலஞ்செய்வ தவனிடை நம்முடைநாளே!"

§ திருவாய்மொழி: 1-3-6

என்றருளியதூஉமென்பது. பலதெய்வங்களையும்! பிரமன் உருத்திரன் என்று தொழிற்கண் வேறுபெயரிட்டழைக்கப்பெறூஉம் கடவுளர்களையும் ஆழ்ஆழ நினைந்து பார்த்தால். இறுதியில் உளத்திற்படுவது ஒரே ஒருபொருள் தான் ஆகுமென்பதூஉம், அதுவொன்றே பேரின்பமளிக்கவல்ல பெருங்கடவுளாம என்பதூஉம், அவரது திருக்கருத்து. இங்ஙனம் நுண்மை கொண்டோராதில்லாது, தம்மனதைப்பலவழியில் விட்டுப்பல மனவுரைகளைப் பெய்த மாணிக்கவாசகர் காலமுடையார் கூற்று ஒப்புக்கொள்ளத் தக்கதன்று. அன்னார் இப்பாக்களை எடுத்துககாட்டித் தாங்கொண்ட உரைகளை வரைந்துசெல்லும்போது, இவற்றின் வியாக்கியானங்களையும் உடன் எடுத்துக்காட்டி மறுத்திடுவரேல், யாரும்இவரது உரைகளை, சோதித்து சேதிப்பாம்! தம்முடைய உக்தியை மட்டில் அடிவலியின்றி காட்டிச்செல்வதால், அவைகள் எல்லாம் கமதடிகளாது பக்திப்பெருங்கடலில் ஒதுங்கிய சிறுசிறு செத்தைகளாம் என்றொழிக

இனி 'ஒன்றென' என்றபாசுரத்தில், 'ஒன்றென, " பலவென' அறிவரும் வடிவு, 'என்றமுத்திறப்பட்ட பாகுபாட்டில், 'ஒன்றென' என்பது 'ஏகமூர்த்தி' என்றும், பலவென்பது, மூன்று மூர்த்தி" 'நான்கு மூர்த்தி'கள் என்றுங்கொண்டு, ஒருமூர்த்தியாயும் பலமூர்த்திகளாயும் * நின்ற இறைவனை, 'நின்னை இன்னன் என்றுரைத்த லெமக்கெவன் எளிது?' என்றுங்கு, இன்னன் என்று எற்றுதற் கியலாத ஒன்றையும் பலவாயும், விரிந்த அருமையும் பெருமையும் உடைய அழகிய திருவுருவினன் என்றடிகள் கூறுகின்றார். ஈண்டு, ஒன்றென்பது, பிறரறியாத்தத்துவமாய பரத்துவத்தை; பலவென்றது, அப்பரத்வத்தி நின்று விரிந்த பலதிறப்பட்ட தெய்வங்களையும, மக்களையும், மற்றும் எல்லா சராசரப் பொருள்களையு மெனக. அதாவது, அவ்

---

* ஈண்டு, 'ஏகமூர்த்தி மூன்றுமூர்த்தி நாலுமூர்த்தி........' என்ற திருமழிசையடிகளாது திருச்சந்த விருத்தம் பதினேழாம் செய்யுளை நோக்[illegible]

வப்பொருளாக மக்களாக தெய்வமாக ஊடுருவி நிற்கும் இயல்பினை யெனக. தேருங்கால் தெய்வம் ஒருவனே என்பது ஒன்று அத்தெய்வத்தினுடைய அகண்ட பிர்ம்மாண்ட உலகாதிய சேதனா சேதனங்களே பலவென்பது. இவற்றினூடியங்கி வியாபித்துச்செல்லும் அவ்வொருவனாகிய இறைவன்றன் வடிவு அறிதற்கு மிக அருமையாயது என்றாரடிகள். இக்கருத்து மேல் பரிபாடல் ஆசிரியர் கருத்தோடொன்றுமாறறிக. ஒன்றாயும் பலவாயும் அறிதற்கு அருமையாயும் உள்ள இது, நாரணன், நான்முகன், அரன் என்ற மூவரின் வேறாயும் ஒன்றாயும் உளது. என்றால், இப்பொருள், வேறாய்த் தனித்திருக்குங்கால், இயக்கமறுத்தருத இன்ப வீட்டு நிலையாகிய பரமபதத்தியலைக் காண்பிக்கும். பிரமருத்திரர்களுடனும் மற்றைப் பொருள்களுடனும் ஒன்றாயிருந்தக்கால், தனித்த அவ்வியலைத் தவிர்த்த ஏனைய தொழிற்கணின்ற தன்மையைக் குறிப்பிக்கும்; வேறாயிருக்குஞ் ஞான்று இம்மூவரின் மேற்பட்ட ஓரேபொருளாகத்தோற்றும். ஒன்றாயிருக்கும் ஞான்று மூவகைப்பொருளாகவேனும், இன்னம் பலப்பல பொருளாக வேனும் விரிந்து நிற்கும் வேறுபட்டபொருளாயும், ஒன்றுபட்ட பொருளாயும் மூவாயும் பலவாயும் தோன்றப்பெறுவன வெல்லாம், இறைவன்றன் அதிசூக்கும மாயா காரியமெனக. ஓரேவோர் அறிவுடைப்பொருள், மூவேறு பொருளாயும் பலவேறுபொருளாயும் பிரிக்கப்படுதல் இல்லை. அரசகாரியம் பலவேறு துறையில் பலவேறு அரசபிரதி நிதிகளால் நடைபெறினும், அஃது அவ்வொரே அரசனைச்சாருதல்போல, உலகப் பெருங்காரியம் பலவேறு துறைகளில் பலவேறு தெய்வங்கள், எனினும் அக்கடவுள் தன் ஆற்றலால நடைபெறநிலங்கி, ஒரே மூர்த்தமாயும் பலமூர்த்தங்களாயும் தெனபடும் அந்த ஓரேகடவுளைச்சாரும். பலபிரிவினையுடைய அரசகார்யம் ஓரோவோர் அறிவுபபொருளாய், அதன் நிர்வாஹத்தில் பலபடி பட்டிருக்குமாபோல, கடவுட்கார்யமும் நிர்வாஹத்தின்பொருட்டுப் பலவேறு அறிவுப்பொருள்களாய் பகுக்கப்பட்டே நடைபெறும். ( பக்கம் 133 லும் கூறினும் ) இதுதான் இயற்கை என்பது. இந்த இடத்தைத்தான் போறிவாளிகள்

சற்று ஆழ்ந்து நோக்கவேண்டியது, இது நோக்கியே அடிகளும இறைவனது ஏகத்தன்மையினையும அவனது பரந்துவிரிந்தபலவேறு தன்மையினையும கண்டு அவனது வடிவினை (இயற்கைத்தன்மையை) அறிதற்கு மிகவருமை என்றருளுகின்றார். அஃதேல் மூவரையும் உடன் படுத்துக்கூறல் என்னையெனின் யாண்டும வேறுவிரிற்பதாகியமுழுமுதற்றன்மைவாய்ந்த ஓர் † அறிவுடைப்பொருள் முதலாவார்மூவர் என்றும, ‡ மூன்று கவடாய்முளைத்தெழுந்த என்றும் கூறுமாறு, பிரிவுறுதமூன்று முக்கியபொருள்களாய் ஒருபடிப்பட்டு அறிவின் காரிய எல்லேக்கண்ஒன்றுயும், தொழிற்குரித்தானபெயர்களில் வேறுயும் காட்டி நிற்பது கொண்டு, இம்மூவரையும் ஒன்றெனா உடன் சேர்த்துப்பாடுதல் செய்து பின்னர் அதனைத்தனித்த தன்மையில் காட்டித்தமது அரியபெரிய உண்மைக்கொள்கையை நாட்டிச்செல்வர். அத்தனிப்பொருள், இயமூவரின் வேறுயும் இம்மூவாரயும் விரிந்து விளங்குதலை ஆழ்ந்து ஆழ்ந்து ஆராய்ந்தறிதல்வேண்டும்.

இங்ஙனம் மூவர்க்கும வேறுயும் மூவாரயும் பலவாயும் உள்ளதும் முழுமுதற்பொருளே, தனித்தும் மூவாரயும், மற்றுமாயும இருக்குமெனா, “ தானோர் உருவே தனிவித்தாய்” * என்றசெய்யுளில் அமைத்துக்காட்டினர். மேலெழுந்த பாசுரமும் இப்பாசுரமும் பொருணயத்திலும் பக்தி நயத்திலும் ஒற்றுமைப்பட்ட தன்மையைச் சிறிதறிவுடையாரும் நனகுணர்வர். ஒன்றுயும் பலவாயும் அறிதற்கருமையான காரணக்கடவுள், தன் ஆற்றலே வேறுவிய தனது மற்றைப் பெயர்களாகிய நான்முகன் அரன் என்னும் மூர்த்தங்களோடு சேர்த்துவைத்து எண்ணினுலும், மனதில் பெறப்பெறுவது ஒன்றேயாம என்றும் அஃது பிரம, விஷ்ணு உருத்திரமூர்த்தங்களே யாமென்றும, அம்மூன்றுருக்கள் சேர்ந்த பொருளே முழுமுதற் பொருளாமென்றும், அஃதே எல்லாமும் என்றும்

† கா-தி முதல் திருவந்தாதி. செ. 15

‡ கம்பராமாயணம்ஆரண்யகாண்டம்,கவந்தன்படலம்,செ42.

* திருவாய்மொழி 1. 5. 4.

தனிவிளக்கிக்காட்டிய நம்மாழ்வார், இப்பாசுரத்தில் திருமாலாகிய தான், தனித்து நின்று ஏகமாயும், தொழிற்பொருட்டுத் தன்னினின்று வேறுபட்டிருப்பதாகத் தென்படும் மூவராயும், மற்றுச் சராசரப்பொருள்களாயும் தோன்றி விரியும் இயல்பினையுடைய எம்பெருமான் என்றருளிச்செய்கின்றனர். செய்தாராகவே, அடிகள் முன்னேடுபின் முரண்பட வோதினர் என்பது எந்த அறிவின்பாற்பட்டது? அடிகள், தனிப்பெரும் பொருளாகிய இறைவனை மட்டும் அல்ல; தொழிற்பிரிவுப் பொருளாகிய மூவரை யும் மட்டுமல்ல; மற்றத் தெய்வங்களையும் மட்டுமல்ல. அசேதனப் பொருள்களையும்பற்றி அவர் பாடுகின்றார். * இங்ஙனமெல்லாம் பாடுவது, இறைவனது சர்வவியாபகத்தன்மையை நோக்கியும் அடியார்களிடத்தில் அவனுக்குள்ளதாய சௌலப்ய குணத்தையும் எண்ணியும் அன்றோ! இங்ஙனம் பாடியதாலே அடிகள் கடவுட்டன்மையை வாய்ந்திலர் என்று எவர்தான் கூறத்துணிவர்? அது கிடக்க,

இனி மாணிக்கவாசகர், "ஏகன்," "அநேகன்," "இறைவன்" என்று கூறுதலின், ஏகன் என்பவன் யாவன்? அநேகன் என்பவன் யாவன்? இறைவன் என்பவன் யாவன்? ஏகன் என்பவன் ஒரு கடவுள்; அநேகன் என்பவன் மற்றொரு கடவுள்; அல்லது பல கடவுளர்கள்; இறைவன் என்பவன் வேறொரு கடவுள். ஆக முத்திறப்பட்ட கடவுளை அவர் ஓதினராகல்வேண்டும். ஒரேவோர் அறிவுடைப்பொருளாகிய இறைமைப்பொருள், இவ்வாராய்ச்சிக்காரர் கூற்றுக்கு முரண்பட மாணிக்கவாசகரால் கண்டு இவ்வாறு ஓதப்பெற்றிருக்கு மாற்றிற்கு ஏது என்னை? மாணிக்கவாசகர் கருத்தையே தெற்றெனத்தெளிதல் இல்லாது, பிழைபடக்கூறிச் செல்லும் இவர்தாமோ ஆழ்வாரது கருத்தை ஆராய்ந்து தெளிய வல்லுநர்? ‡ அதுகிடக்க.

---

* திருவாய்மொழி 3ம் பத்து 4ம் திருப்பதிகம்.

‡ கண்டு திருவாசகவிரிவுரையைப்பார்க்காமலேமனஞ்சென்று

இனிக்கடவுள் இலக்கணத்தைக்கூறுங்கால், மணிவாசகப்பெருமான், "பெண், ஆண், அலி எனும் பெற்றியன்" என்றும், 'ஆண் எனத்தோன்றி, அலியெனப் பெயர்ந்து, வாணுதற் பெண்ணென வொளித்தும்" என்றும் கூறிச்செல்கின்றனர். இவர் கூறுமாறு ஆண் அலி பெண் என்ற பெற்றிக்களின்றி இறைவன், ஆணாய்த்தோன்றி அலியாய்ப்பெயர்ந்து, பெண்ணாய் ஒளித்து என்றுடன் கூறப்பெற்றிருக்கின்றமையின், தோன்றுதல், பெயர்தல் ஒளித்தல் முதலிய ஒன்றற்கொன்றொவ்வா வேறுபாடுடைய செயல்கள் ஒரேவோர் அறிவுடைப்பொருளாகிய அவ்விறைவற்குக்கூடுமாறு யாங்ஙனம்? கூடுமேல், அப்பொருள், தோன்றல், பெயர்தல், ஒளித்தல் ஆதல் என்னை? பெண் ஆண் என்ற அம்மையப்பர் முறையிலே சொல்லப்பெறும்இறைவன் அலியாதல் யாங்ஙனம்? இறைவன் ஆண் அலி பெண் என்றால் ஆணாய்த்தோன்றல் எதற்கு? அலியாய்ப்பெயர்தல் எதற்கு?பெண்ணாய்ஒளித்தல் எதற்கு? இவர் கூற்றுப்படி 'சிவம்' ஒன்றே பிரிவுறாத ஒரேவோர் அறிவுடைப்பொருளாயின் அவ்வறிவு இங்ஙனம் பிரிக்கப்பெற்றுத் தோன்றல், பெயர்தல் ஒளித்தல் முதலிய காரிய வேறுபாட்டிற் கிலக்காய்ப்புரைபட்டொழிதலென்னை? இது தானா கடவுள் இலக்கணம் ஆமாறு? மிகு நன்று! திருக்குருகூர் அடிகள் கடவுள் இலக்கணத்தை இங்ஙனமே கூற நேருங்கால்,

"ஆணல்லன் பெண்ணல்லன் அல்லால் அலியுமல்லன்" என்றோதுகின்றனர். மேல் மாணிக்கவாசகர் கூறிய பொருள் முறையும்

---

வாறு வரைவதென்னை யென்றிவர் கடாயினால், அந்நூலையும் அந்நூற்கு வெளிவந்த மறுப்புரையும் யாங்கண்டோம். 'பகவத் விஷயம்' என்னும் திருவாய்மொழி விரிவுரைகளையும் உடன் கண்டாராய்ந்து திருவாய்மொழிச்செய்யுள்கட்கு உரை உரைக்கவில்லையாதலால், இவ்வெமது உரையினையும் வியாக்கியானங்களையும் உடன் சேர்த்து மறுக்கப்புகுவரேல், அவ்விரிவுரையோடு பிறர் உரைகளையும் சேர்த்து வரைந்த எமது மதிப்புரை வெளிவருமென்க.

இப்பாசுரத்தின் பொருண்முறையும் ஏமின் நிச்சற்றுக்கூர்ந்துநோ ளித்துப்பொருள்கண்டுபிடித்து, எப்பொருள் விசேடம் பொருந்திய து என்று நாட்டுவரேல் அவர் யாரேனுமாகட்டும் அவர் தான் அறிவுடைப்பெரியார் என்போம். திருவாய் மொழிப்பாக்களை அவரவர் ததநம் உக்திவழிக்கு இணங்காது பாடலின்படியே சென்று உரையாசிரியன்மார் கருத்தையும் நேரே ஆராய்ந்து பொருள் கூறினல் அறிவாகுமல்லது, மனம் போனவாறு சென்று வாததாலேனும காய்ச்சலாலேனும் உரை கூறி இழுக்குறல் அறிவாகுமா? பெரியாரை அவமதித்துப்பேசுதல் எல்லாம், பிறப்புக் கடோறும் வருத்துதல் வேண்டுமென்றுணர்க.

ஆழ்வார் தாம் அருளிய திருப்பாடற்கண், ஆணாய்த்தோன்றலும் பெண்ணுருவொளித்தலும அலியாய்ப்பெயாதலும் அற்றதொரு பாமபரப்பெரும்பொருள், எழிதிற் காண்டற்குரியதன்றாய், காண்பார்க்குளனாய், காணகில்லார்க்கு இலனாய், நினைந்தார்க்கு நினைந்தாஙகு தோன்றவல்ல திருவுருவினனாய், நினையாதார்க்கு அவ்வாறல்லனாய், விளங்கும் பேர் இயல்வுள்ள இறைவன் கண்டீர் என்கிறார். இதனுட்போந்த அதிசூக்கும பொருள், ' கடவுள் மனித அறிவுகோணடு கணிக்கப்படாத வகையுடைத்து.' என்பதே. பேரறிவு படைத்த ஒருசிலரே, அதனை, உயிர்வகையுள் மிகுசிறேட்டமாகிய ஆண் உருவில் வைத்து அதாவது புருஷோத்தமனாகப் பாவித்து ' இறைவன் ' 'முனைவன்' ' கருத்தன் ' ' நாராயணனை' என்று வழிபடுவர். ' அவள் ' ' அது ' என்றோதாது, ' அவன்' என்றீண்டோதல் ஆண்உருவே உயிரினங்களுள் சிறந்த தன்மையாய் இருத்தலின் எனக

அற்றேல், பிரமருத்திரர்கள், பிரமன் உருத்திரன் என்று ஆண்பால் விகுதி பெற்றமை சிறப்பிலது என்றது முன்னுக்குப் பின் முரண்படுமே எனபரேல், நுண்மையறியாதோதியனாய்: ஆண்டு வியாபகத்தன்மையைக்குறித்தவாறு. என்னை வியாபகமெனின், உலகோம்பற்குச்சருவவியாபகமும் சருவசக்தியும் வேண்டுவனவாகலின், அவனனம் செய்யவல்ல ஒருகருத்தா,

பொதுவாக அழைக்கப்பெறும் ஒருபொதுப்பெயர் கொண்டிலங்கல் வேண்டும். வேண்டவே, அக்குணம் அவ்விஷ்ணு வென்றற்கே அவ்வாறு அமைந்திருத்தலின், பிரமனையும் உருத்திரனையும், நடுநின்றியக்கி வயங்கி விளங்கும் வன்மையையுடைய சருவவியாபகக்கடவுளென அதற்குப்பொருள் போதரல் காண்க. காணவே மற்றைஇருகடவுளர்க்கும் அத்தகைய வியாபகத்தன்மைப்பொருள் அடங்கிய பெயர் எய்தியதில்லை என்பதை நன்குணரலாம். சான்றோர், கடவுளை இறைவன் என்பதுபோல அப்பொருட்கு ஆண்பால் விகுதி ஏற்றிக்கூறுதல், அதனுடைய ஒப்பற்ற பெருமையைக்குறித்தவாறு. என்னை பெருமையெனின், 'அவன்' என்றே தப்பெறும். கடவுண்மாட்டுப்பொதிந்த பெருங்குணங்கள் இன்ன இன்ன என்றோர்தற்கில்லை. இல்லையாகவே, அவன் இப்பெற்றியன் என்றொருவாறு ஓதியுணர்க என்றறிவுறுத்தற்கன்றோ, எங்க. ஆழ்வார் ஓரிடத்தில், அகலில் அகலும் அணுகில் அணுகும் * என்றோதுகின்றார். இதன் நுட்பம் எவனோ? சற்றுக்கூர்ந்து ஆராய்ந்து பார்த்தால் கடவுள், இத்தகையதுஎன்றியம்பற்படாவொரு பொருளென்று கோடலும், அது இல்லையென்று விட்டோர் விட்டோரே; உண்டு என்று கிட்டினோர் கிட்டினோரே! இந்த உண்மையை நுண்மையுற ஆராய்ந்தோரே, அப்பொருளுண்மையும், அதனுன் எய்தப்பெறும். பெரும்பாக்கியத்தையும் தெளிந்து நுகர்தற்கு அருகராவர் என்று பொதுப்படக்கூறுகின்றார். இங்ஙனம் உண்மை கூறிச்செல்லும் ஆழ்வார்க்குக் கடவுட்டன்மையில்லை யென்றும், தோன்றலும் பெயர்தலும், ஒளித்தலுமாய இயல்வுடையு கடவுள் என்று கூறிச்செல்லும் மாணிக்கவாசகர்க்கு மட்டும் கடவுட்டன்மை நிரம்பவும் உண்டு என்றும் நமது ஆராய்ச்சிக்காரர் பன்னிப்பன்னிப்பகர்ந்து போகின்றார். என்னே அவரது பேரறிவின் விசாலம் இருந்தவாறு! மதப்பற்றினால் ஒருவரை வாழ்த்துவதும் மற்றொருவரைத் தாழ்த்துவதும் எல்லாம், மதத்தாலாய குறும்பேயல்லது மதியாலாய குறும்பன்றுமென்றொழிக.

---

* திருவாய்மொழி 1 7 10

இனித் திருவாய் மொழியில் ஆழ்வார் பலவிடங்களில் சில வழிபாட்டைச் செய்தாரென்றும் அதனால் அவர்க்குக்கடவுட்டன்மையில்லை யென்னுர் கூறுகின்ருர். இவர் கூறும் உரை இவர்க்கே இழுக்காகுமல்லது மற்றையோர்க்காகாதென்றுணர்க. சில வழிபாடாற்றுவது மட்டும் ஆழ்வார் கருத்தாமாறில்லை. சிவசத்தம் வரும்போழ்தெல்லாம் பிரம சத்தமும் வாராமல் இராது. சிற்சில இடங்களில் இந்திர சத்தமும் வரும். இங்ஙனம் சிலபல விடங்களில் இத்தகைச்சத்தங்கள் வரப்பாடுதல், இறைவனது அகண்டாகாரத் தன்மையும் பரமசிவர்கள் முதலியோர் அவன் பக்கல் அண்டியிருக்கிற நிலையும், அவ்விதிசிவாதிகள் எல்லாம் அக்கடவுளுக்கு அந்தர் பூதர் என்ற உண்மையும் மக்களுக்கு உணர்த்த வேண்டி என்றறிக. இன்னம் இதன் விரிவு பின்னர் கூறப்பெறுகின்றது. சைவப்பெரியார்களும் தம்தம் பாடல்களின் இடையே விஷ்ணு சத்தம வராமற்பாடவில்லை. உதாரணமாக,

ஞானசம்பந்தர், மூன்றாம திருமுறை திருப்பல்லவனிச்சுரப் பதிகத்தில், "பச்சை மேனியர்" என்கிருர். பச்சைமேனி நாராயணக்கடவுளுக்கு அன்றி வேறெத்தெய்வத்திற்குமில்லை. உமாபிராட்டி தம்மோடு ஒரு பாகத்தில் இருப்பதால், அதற்குத்தகபச்சைமேனியர் என்ருர் என்பரேல், சிவபிரான் பச்சைமேனிப்பாகர் என்று பாடுதல் தவிர்த்து பச்சைமேனியர் என்று முழு உருவை நோக்கிக்கூறியதென்னை? சிவபிராற்குப்பச்சைமேனி முழுவதும் கிடையாது; பாதிதான் உண்டெனின் அதுவுங்கிடையாது. உமை சிவன் உருவில் அடங்கித்தோன்றும் இயல்பினளாதலின், பச்சைமேனி என்பது அவட்கேனும் சிவபிராற்கேனும் பொருந்தாது ஆகவே அது நாராயணக்கடவுளையே குறித்து நிற்குமாற்றை உள்ளுணர்வுடையோர் உணராமற்போகார். இவ்வாறுந்தம்மையறியாமலே ஒரோவோர் இடங்களில் உண்மைவழக்காறுபுலவர் வாக்கில் விழுவது தெய்வ உண்மையின் ஒளியேயாம்! சுந்தரர் ஏழாந்திருமுறை திருவலிவம் பதிகம் மூன்றாம் செய்யுளில், "ஆழி யளுபகன்றே உயர்ந்தானை" என்கிருர். இவ்விடத்தில் இறைவனது திருவிக்கிரம மூர்த்தியின வழிபாடு ஆற்றப்பெறுகின்றது. சக்க

ரக்கையனாய், சடக்கென அகன்று விரிந்து, ஆகாயமளவும் உயர்ந்தபெருமானை என்பதே இதற்குப்பொருள், சமுத்திரம் போன்று விரிந்து உயர்ந்தவன் என்று இதற்குப்பொருள் கோடினால் உயர்ந்த இறைவன் யாவன்? சமுத்திரம் உயருமோ? திருவிக்கிரம மூர்த்தியாய் உயர்ந்ததினாலன்றே இறைவற்குத் 'திருநெடுமாலன்' என்று பெயர் வந்ததுவென்பது. மணிவாசகனாரும், இப்பொருள்பற்றியே,

* " நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
ஈரடியாலே மூவுலகளந்து
நாற்றிசை முனிவரு மைம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடுமாலன்"

என்றதுவுமென்க. திருநாவுக்கரையர் திருக்காளத்தி திருத்தாண்டக மூன்றும் செய்யுளில இன்னமிவர், திருக்காஞ்சித்திருமேற்றளி திருநேரிசை ஆருமசெய்யுளில், "மாயனாய் மாலனாகி" என்கிறார். நாரணன் காண் நான் முகன் காண் நால்வேதங்காண் " என்கின்றார் மாணிக்கவாசகர் "கருமுகிலாகிய கண்ணே போற்றி † ,என்றும், ,,கோலமேனிவராகமே! ‡ என்றும், ,, மாயனே! " § என்றும் கூறிச்செல்கின்றார். கருமுகிலாய கண்ணே முதலியன நாராயணக்கடவுளைச் சுட்டாமற்போய்விடுமோ? பொதுவாக என்ன சொல்லிக் கொண்ட போதிலும், சிறப்பாக இத்தொடர் மொழிகள் எல்லாம் விஷ்ணுவைக் குறிக்குமென்றே அறிக.

இன்னம் மாணிக்கவாசகர், தமது திருவாசகத்திலே,

" பொருந்துமிப்பிறப்பிறப்பிவை நினையாது
பொய்களேபுகன்று போய்க்
கருங்குழலினா கண்களாலேறுண்டு

* திருவாசகம்: போற்றித் திருவகவல் 1 to 4
† " do 127
‡ திருக்கழுக்குன்றப்பதிகம் செ. 5
§ செந்திலாப்பத்து செ செ. 7

கலங்கியே கிடப்பேனைத்,
திருந்து சேவடிச் சிலம்பவை சிலம்பிடத்
திருவொடு மகலாதே
அருந்துணைவனா யாண்டு கொண்டருளிய
அற்புத மறி யனே " (அற்புதப்பத்து. செ. 4.)

என்ற பாட்டில், திருந்து சேவடிச்.........அருளிய " என்ற ஈற்று ஈரடிகட்கு " அழகிற்சிறந்து சிகப்பேறிய திருவடிகளில் செவ்வையாகத் திருத்தப்பெற்றணிந்த சிலம்புகள் ஒலிக்கும் இலக்குமியொடும் பிரியாமலே அருமையான பெருந்துணைவனாய் அடியேனை ஆண்டுகொண்டு அருளப்பாடு செய்த" என்று உரை செல்லுகின்றது. ஈண்டு, ஆண்டுகொண்டவன் முடிவில் திருமாலேயாகின்றான் அன்றோ! 'திருவொடு மகலாதே' என்றதனால், இலக்குமி நீங்கப்பெறாத திருமார்பையுடைய நாராயணனே என்று பெறப்படுகின்றது. 'திரு' என்றும், 'அகலாதே' என்றும் மாணிக்கவாசகர் கூறியிருந்தால், யாங்கொண்டபொருள் சிதையும். உமாதேவிக்கு 'திரு' என்ற பெயரே கிடையாது. 'அகலாது' என்ற வினையெஞ்சுகிளவிப் பிரியாமல் அல்லது நீங்காமல் என்று தான் பொருள்தரும். "அகலகில்லேன் இறையுமென்றலர் மேல் மங்கை உறைமார்பா"* என்றவிடத்தில், அகலல் இப்பொருட்கண்வந்தது நீங்காதிருப்பவள் இலக்குமியேயாதலின், 'திரு' என்றது ஈண்டு பெரிய பிராட்டியையே குறிக்கும். பரிபாடல் முதற்கொண்டு இற்றைநாள்காறும் நிலவும் நூற்களில் எல்லாம் வரும் 'திரு' என்ற கிளவி இலக்குமியையே குறிக்குமென்பது வெள்ளிடைமலை. திருநீங்கப்பெறாதவன் நாராயணனே என்க. எனவே மாணிக்கவாசகரை ஆண்டு கொண்டவன் ஸ்ரீமந்நாராயணன்றான் என்னும் சூக்குமப்பொருள் மாணிக்கவாசகர் வாக்கினுள் பொதிந்துள்ளது பாருங்கள்! மார்க்கண்டேயனுக்கு வாழ்வுநாள் தந்தருளியது நாராயணக்கடவுளேயாம் என்று நம்மாழ்வார் ஓதுதல்

* திருவாய்மொழி: 6-10-10

போல, மாணிக்கவாசகர்க்கு அருளப்பாடு செய்தது நாராயணனே என்றுணர்க. *

இனி திருவாசகத்தில் போதரும்,

% வந்திமையோர்கள் வணங்கி யேத்த
மாக்கருணைக் கடலாயடியார்
பந்தனை விண்டற நல்குமெங்கள்
பரமன் பெருந்துறையாதி அந்நாள்
உந்து திரைக் கடலைக் கடந்தன்
றோங்குமதிலிலங்கை யதனிற்
பந்தணை மெல்விரலாட் கருளும்
பரிசறிவா ரெம்பிரானாவாரே!

என்ற ஒரு செய்யுளில் நாராயண பராம்பியம் காட்டப் பெறுகின்றது. இதனில், "அரக்கரது கொடுமையால் வெதும்பிய தேவர்கள், சிவபிரானை வேண்ட அவருங் கருணை கூர்ந்து அத்தேவர்கள் பொருட்டு ஆஞ்சநேய அம்சமாய் ஸ்ரீ ராமதூதராகிக் கடலைத் தாண்டி மதில்களாற் சூழப்பெற்ற இலங்கைமாநகர்புக்க அந்நாளிலே, ஸ்ரீராமபிரானது பிரிவாற்றாது மனங்கலங்கி வாடிய சீதாபிராட்டியார் தன் உளந்தேற, ஸ்ரீராமன் வரலாறு தெரிவித்துக் கணையாழி கொடுத்துக் காத்தருளிய தன்மையை யார் அறிவரோ, அவர்தான் எமக்குப் பிரான் ஆவார்கள்." என்று பொருள் கிடைக்கின்றது. கிடைக்கவே சிவபிரான் அநுமான் வடிவில் விஷ்ணு அம்சமாகிய ஸ்ரீராமபிரானுக்குத் தூதரும் அடிமையுமாகின்றார் காண்க. இதுகொண்டு ஸ்ரீமந்நாராயணனது பராம்பியம் இதனுள் சூக்குமமாகச் சேமித்து வைக்கப் பெற்றுள தென்பதை சிற்றறிவுடையாரும் எளிதில் உணரலாம்.

---

* "புக்கடிமையினால் தன்னைக் கண்ட மார்க்கண்டேய னவனை
நக்கபிரானு மன்றுய்யக்கொண்டது நாராயணனருளே!
... ... ... ... ... ...
... ... ... ... ... திரு. 4; 10, 8.

% திருவாசகம்:— திருவார்த்தை. செ. 5.

அற்றன்று ¶ "........ ஆர்கலிசூழ், தென்னிலங்கைஅழகமர் வண்டோதரிக்குப் பேரருளின்பமளித்த பெருந்துறை மேயபிரான்" என்ற மணிவாசகனார் வாக்குப்படி, சிவபெருமான் மண்டோதரிக்கு அருள்செய்த தன்மையை யன்றோ குறிக்கும் என்னில், அறியாதுரைத்தாய்; அலைமோதும பெருங்கடலைக் கடந்திலங்கை புகுந்தவன் அநுமனே யாதலானும் சிவபிரான் கடலைக் கடந்திலராதலானும், இப்பதிகத்துக்கு மாணிக்கவாசகர் திருவார்த்தை எனப்பெயரிட்டதற்கேற்ப அநுமான் ஸ்ரீ ராமபிரான் அருளிய திருவார்த்தையை அம்மை பிராட்டிக்கு உரைத்தருளினன் என்பது பொருத்தமாயுளதாதலானும், நுமமுரை போலியுரையாதலறிக. அற்றேல் தன்னிடத்திற் பக்தி செலுத்திய மண்டோதரிக்கு அருள் புரிதல் வேண்டி இடையேயிருக்கும கடலைக்கடந்து சென்றனன் என்பது பொருந்தாதோ என்னில், பொருந்தாது: என்னை? கடவுள் இருப்புக்கும் பக்தர் இருப்புக்கும் நடுவே காடு, மலை, யாறு, கடல் முதலிய பல விருந்தாலும், பக்தன் வேண்டுகோட் கிணங்கி விரைவிற் செல்லும் ஒரு தெய்வம இவற்றினை யெல்லாம் கடந்து சென்றது என்றல் மரபாகாது. பக்தர் பால் பரம கருணையோடு செல்லும் ஒரு கடவுளுக்கு இவை யெல்லாம் ஒரு தடையாமா? கஜேந்திரன் ஆபத் காலத்தில்; ஆதிமூலமே என்றவுடன் சடக்கென, வோடிய கடவுள் முன்பு எத்துணையோ மலை, காடு, யாறு, கடல் ஆதிய பல விருந்திருக்குமன்றோ? அவற்றினை யெல்லாம் இறைவன் கடந்து சென்றான் என்று எங்காகிலும் பெறப்படுகின்றதா?

அதுவேயுமன்றி மேல் எடுத்துக் காட்டிய இரண்டு செய்யுள்களினும் பொருள் வேற்றுமை உண்மையை எளிதில் அறியலாம். "வக்திமை" என்ற செய்யுட் கண் புராண வரலாற்று முறைமையப் படி தேவர்கள் தொழ அவர்கள் பால் இரங்கி அநுமனைக் கடலைக கடந்து சீதைக்கருளி, அவ்வாற்றான் விஷ்ணுவாகிய ஸ்ரீ ராமனைக் கொண்டு இராவணனை முடித்து தேவர்கள் இடுக்கண் தீர்த்தான் என நன்கு பெறப்படுகின்றது. இனி "அழகமர் வண்டோதரிக்குப் பேரருள் இன்பம் அளித்த" என்றபடியினாலே, தென்னிலங்கை வாசனான இராவணன்றன் மனைவியாகிய வண்டோதரிக்கு எங்கேயோ ரிடத்தில் ஏதோ தன்னுவியன்ப அருள் செய்திருக்கலாம என்று ஏற்படுகின்றது. முன்னைய செய்யுள்போல், கடலைக்கடந்து

¶ ,, குயிற்பத்து. செ. 2.

சென்றான் என்று பெறப்படுதல் இல்லை காண்மின்! ஆங்காங்கு பத்தர்களுக்கு அவர்கள் நினைந்த தெய்வம் தோன்றியோ தோன்றாமலோ அருள்செய்வது உண்மையே. அது போன்று மாணிக்கவாசகரும், வண்டோதரிக்குசிவபிரான் அருள்செய்தானென்று கூறுகின்றார் 'வந்திமைபோாகள்' என்றபாட்டில் மட்டும் நடந்த உண்மையெது வோ அது தானாகவே அமைந்து நிலவுகின்றது. இங்ஙனம் வெளிப்படையாய் பொதிந்துள்ள உண்மையை மறைத்தே வெற்றுரை கிளத்த முன்வருதல், அறிவாது அறியாமை என்ற தூர்க்குணந்தான் என்று சொல்ல நேருமே அல்லது பிறிதென்னை? செய்யுள்களில் மொழிகிடக்கும் முறைபுணர்ந்து பொருள் கோடல் வேண்டும். இந்த செய்யுளோ சிக்கலான அதாவது வலிந்து பொருள் கொள்ளத்தக்க நிதியில இல்லை. எளிதில் உணர்ந்துகொள்ளலாம். ஆகவே, சிவாம்சமாகிய அநுமானே கடலைக்கடந்து சென்றான் என்று ஈண்டு போதருமல்லது, வேறொன்றும் போதாது. அங்ஙனம் வண்டோதரிக்கு அருளவே சிவபிரான் சென்றான் என்று பிடிவாதமாகச் சொல்லிக் கொண்டுபோனால், அது உன்மத்த செயலாகுமென்றொழிக்க.

இனிச் சிவாம்சமாகிய அநுமான் ஸ்ரீராமனுக்குத் தொண்டு செய்தமை "ஸ்ரீகாரவாச்ய லப்தகச் சேவிந்து" முதலிய வசனங்களைக் காண்க. சைவப்பெரியாராகிய பட்டினத்தடிகளும்,

"முன்னையிட்ட தீ முப்புரத்திலே
பின்னையிட்ட தீ தென்னிலங்கையிலே"

என்று கூறியதூஉம் இப்பொருள்பற்றியே வந்ததென்க. எனவே உண்மை எதுவோ அது மாணிக்கவாசகர் வாக்கினுள் நுழைந்ததென்றோராக.

இனி அம் மாணிக்கவாசகர், தமது திருக்கோவையாரில் (செ.53).

"கருங்கண்ணனை யறியாமைநின்றோன் றில்லைக்கார்ப்பொழில்வாய்
வருங்கண்ணனை வண்டாடும் வள்ளைவல்லியன்னீர்
.............................................................................."

என்ற செய்யுளில், 'கருங்கண்ணனை அறியாமைநின்றோன்' என்ற சொற்றொடர்க்கு, கரியமேகம்போன்ற திருமேனி உடைய திருமாலை அறியாமல் வெட்கி நின்றோனாகிய சிவபிரான் என்றே பொருள் போதரும். இதற்கு உரை வகுத்தோர், இச்சொற்றொடர்க்கு, "கரியமாலை அவனறியாமற் றன்னை யொளித்து நின்றவன்" என்றார். இவ்வுரை பொருந்தாது. என்னை? 'கரியமாலை அவனறியாமற் றன்னை

யொளித்து' என்றதில், மாலை என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு ஈண்டு முடிக்குஞ் சொல்லின்றி வாளாநிற்பதென்னை? 'மஹா விஷ்ணுவைத் தெரிந்துகொள்ளாமல் நின்ற சிவபிரான்' என்ற நேர் பொருள் இருக்க, அதனைக்காட்டாது, (அவன்) என்ற ஓரிடைச் சொல்லை இடைப்பெய்து வைத்துத் திரிபுபொருள் கூறுவதென்னை? கரியமாலை அவன் அறியாமல் என்பன எங்ஙனம் முடிக்கப்பெறும் நீரனர்? அவ்வாறேதேனும் நூலாட்சியுண்டா? "அறியாமை நின்றுமென்னுஞ் சொற்கள் ஒருசொன்னீரவாய் ஒளித்தோனென்னும் பொருளபட்டு, இரண்டாவதற்கு முடிபாயின." என்ற இவ் வுரையாசிரியா வேறேதேனும் மேற்கோள்கொடுத்து, இதனை நன்கு விளக்கிக் காட்டாது போயினதென்னை? மேலும் இவர், 'ஐகாரம அசைநிலை யெனினு மமையும்' என்றது எவ்வேது பற்றி? அசைநிலைகள் எல்லாம் பொருள் தட்டுபடுமிடத்தும் இசைநிறைத் தற்பொருட்டும் ஏகதேசமாகச் செய்யுட்கண் ஆட்சிபெறுதல் இயற் கையும் பாட்டிலக்கணமுமாகலின், நேர்பொருளைச் செவ்விதிற் காட் டும் இரண்டனுருபு ஈண்டு அசையாதல் யாங்ஙனம? இத்திருக் கோவையாரின் உரையாசிரியரை சிலர் நச்சினார்க்கினியர் என்பர்; அருளசைவாளன் கோவை உரையாசிரியர் சேனாவரையர் என்பர் இப்போதைய சிலர் பேராசிரியர் என்பர். ஆராயுமிடத்து இம்மூவரு மல்லர் எனத் தெரிகின்றது. இதனை நம்மாழ்வார் காலவாராய்ச்சி யிற் காட்டுதும். அது கிடக்க.

இனிக கருங்கண்ணனை என்ற இரண்டனுருபை நான்கனுரு பாக்கிக கருங்கண்ணனுக்கு என்று பொருள் கூறுவாருமுளர்: அது வும் பொருந்தாது, என்னை? ஈண்டு இரண்டனுருபு நான்கனுருபாதற் குக காரணம வேண்டும்; நூலாட்சியும் வேண்டும். இங்ஙனம் வரும் இடங்கட்கெல்லாம் ஒருவர் தம்மனம் போன வாறு பொருள்கோட லாகாது: அற்றேல்,

> "யாதன் உருபிற் கூறிற் றாயினும்
> பொருள் சென் மருங்கின் வேற்றுமை சாரும்." *

என்ற சூத்திர விதிப்படி, ஈண்டு, இரண்டனுருபேற்ற இச் சொற்கொடா பொருள் சென்ற பக்கத்தே நான்கனுருபாய் மயங் கியவாறு காண்க என்னில், இச்சூத்திரவுரையில், மணற்கு என் பது மணற்கண் என்றும், அரசர்கட் சார்ந்தான், அரசரைச் சார்ந்

* தொல்காப்பியம் சொல்லதிகாரம். சூ. 106,

யனை னுடைய பேர் உயர்வைப் புலப்படுத்துதற்பொருட்டு, அவனுக்கே இயற்கையாயுடைய பல்வேறு ஆற்றல்களைத் தாம் விடுபெறுங் காலத்து, ஒருசேர கொண்டாற்றல் கண்டு களிக்கின்றார். நன்மை இவ்வாறிருக்க, அரனையே முடிந்தநிலையாக வைத்தோதினரென்று கூறி இழுக்குறல் ஏதமாமெனக.

இனி, இவர் சிவபிரான் முதற்கண் கூறப்படுதல் ஒன்றினை மட்டும் நோக்கி, அதுகொண்டு அவற்குக் கழிபெருமேன்மையைத்தந்து மகிழ்கின்றவாறு, ஆழ்வார் நாராயணக்கடவுளை ஈண்டுப் பிறண்டும் முதற்கணேறி அக்கடவுட்குக் கழிபெருமேன்மையைத் தந்திருத்தல்கொண்டு யாம் மகிழாதுவிடுவமோ? அதுவேயுமன்றி, ஆழ்வார் பாட்டில் அரவொலியே பெரிதுங் கேட்கப்படுமென்று சிலர் இழுமாப்பெய்துதல்போல், ஈண்டு எடுத்துக்காட்டப்பெற்ற புறநானூற்றுச் செய்யுளில், குமரவொலியே பெரிதுங் கேட்கப்பட்டு, முதற்கண்வந்த அரவொலி வலிகுன்றிநிற்கும னறியாம் இறும்பூதெய்தாது விடுவமோ?* ஆகவே, 'சிவபெருமான் முதற்கண்வைத்து ஓதப்பட்டமை காண்க' என்று சொல்லிக்கொள்வதில், அறிவுடைரும் அதிருக்கும இடப்பம் ஏதுமில்லை யென்றொழிக. இப்புறநானூற்றிலும மற்றும் மணிமேகலை சிலப்பதிகாரந்திருவள்ளுவர சிவஞானி முதற்கண்ணேயும, திருவாய்மொழியில் அஃது பிற்கண்ணேயும் வந்திருத்தல்கொண்டு ஏதேதோ கூறி இடர்ப்பட்டுத் தெளிவின்றிய மயக்க வழிபாட்டிலே தம்மைப் பெருமைப்படுத்திக் கொள்வோர் கொள்க! எமக்கது வேண்டா!

இனி அப்யர்ஹித நியாயமென்றும் அல்பாச்தர நியாயமென்றும் கூறப்பெறுகின்ற இரண்டுவகைப் பதச்சேர்க்கையிலே, உயரிய சொற்களை முற்படக்கிளத்தல் அப்யர்ஹிதநியாயமென்பது, குறைந்துகொண்டே வருகிற அதாவது தாழ்ந்த ஒலி குறைந்த சொற்களை ஒன்றன்பின் ஒன்றாக முறையே வைத்துக்கூறல் அல்பாச்தர நியாயமென்றும வியாஹரணம் கூறும். அவ்விதிப்படியே, ஆழ்வார் ஈண்டு கூறியது, அப்யர்ஹித நியாயவழிப்பட்டு, உயர்ந்ததும் சிறப்பானதுமான அரியொலியினையே வலியுறமுன்னர் உணர்த்தினமையின், அரவொலி, இவ்வொலிக்கண்ணேயே அடங்கப்பெற்றமை காண்க. அவ்

* இவாது முரண்பட்ட உரைக்காக இங்ஙனம் கூறினோமென்க.

கனம் அடங்கப்பெற்றமையினாலே, அலற்ற என்னும் வினையெச்சம், முதற்கண் அரி என்னும் எழுவாயைக்கொண்டு பின்னரே, அப்பரா கனை அதன்கண் அடங்கி, 'பெற்றார்' என்பதனோடு தழுவி முடிவு பெறுகின்றது. இங்ஙனம் 'அலற்றி' என்பது 'பெற்றார்' என்பதனோடு வினை முடிவுசெயப்பெறவே, அரனைமட்டில் முடிந்தமுடிபு நிலையாகக் கொள்ளாது, முதற்கணெழுந்த வொலியின்கண்ணே அடங்கப்பெறுகிற குறைந்த வொலியினையுடைய அய அர சொற்கள், தமக்கென ஓர் உயர்வுப் பொருளும் பெருமலே அரியாக அரியொலியோடடங்கிநிற்கு மாற்றினையும், அதனால் முடிந்த முடிபுநிலை 'அரி' தான் என்பதையும் உய்த்துணர்க. இதுகொண்டு, அடிகள், ஒன்றாயும பலவாயும் அறிதற்கருமையான கடவுளை, விஷ்ணுவாயும், பிரமனும், சிவனும் எல்லாமாயும் ஒருங்கியைந்த மாயாலோல மாயாவசிஷ்ட மாயாமாயப பராபரத் தனிப்பெரும்மூர்த்தி என்கிறார். அம்மூர்த்தியே தான் ஸ்ரீமந் நாராயணன் என்று அடிகள் ஆழங்காற்பட்டு அவனைக்கண்டு அலற்றிப் பேரின்பநிலைய வீட்டைப் பெறுமருளினைப்பெற்றமைதலே அறிவுடைத்தாம். இவ்வாறு தொழுதவாற்றால், அடிகளாரது பரந்து விரிந்த பெருங்கருணையினையும், வேற்றுமையற்ற உயர்தன்மையினையும், கடவுட்டன்மையினையுங் கண்டு தெளிக!

இனி அடிகள், தம்முடைய அளவுகடந்த அன்பின் பெருக்கால் இறைவனைப் பலமூர்த்தங்களாயும் ஒன்றாயும் வைத்துத் தொழுது வழிபடும்போழ்து, அகமும்புறமும மறந்தநிலையிலே அதாவது இறைப்பொருள் ஒன்றின்மீதுமட்டும பதிந்த நினைவிலே இந்நியாயம் மாறுபடும வகையிலும பாடிச்செல்வர். இது பேரடியார்க்கமைந்த இலக்கணம். சிலவிடங்களில் அங்ஙனம் பாடியதுகொண்டு அங்கெல்லாம இந்த முறையைப் பொருத்தப்படாது. ஈண்டு, ஆழ்வார் முடிந்தநிலையாக அரனை வழுத்தினர் என்று பிறர்கூறுமுறை பொய்யாமென்று காட்டற்கே இந்நியாயத்தைக்கொண்டு உண்மை நிறுவினோமென்க.

அகலித்ததனையும் விரிந்த இவ்வுரையால், ஆழ்வார் முழுமுதற் கடவுளொன்றினையே வழுத்தும மனவொருமைப்பாடுற்ற கடவுட்டன்மையிற் றலைசிறந்த பேர் அடியார் என்றுணரற்பாற்று.

இனி, ஆழ்வார் குழந்தைப் பருவத்தே இறைமைக்குரிய பொருந்தி நிட்டை கூடிய உண்மையைப் பலபடியும் எடுத்துக்காட்

டினேம்; அது நோக்கியன்றோ வைணவரல்லாத பிறரும் ஆழ்வாரை "குழந்தை மாமுனிவன்" என்று அழைப்பதாயினர். இங்ஙனம் பிறந்த நாள் தொட்டுத் தெய்வ மணம் வீசப்பெற்ற அடியார் திலகராகிய இவ்வடிகளார் கடவுட் டன்மையிற் சிறந்தோராயிருக்க, அதையறியாது, இவர் கடவுட் பேரடியார் அலலர் என்றும் ஒரு புலவரே யாமென்றும் கூறும் பிறருரையெல்லாம் பிழைபட்டொழியுமாற்றை,

"வாய்கொண்டு மானிடம் பாடவந்த கவியே னல்லேன்
ஆய்கொண்ட சீர்வள்ளலாழிப்பிரா னெனக்கே யுளன்
சாய்கொண்ட விம்மையும் சாதித்து வானவர் நாட்டையும்
நீ கண்டு கொள்ளென்று வீடும் தரும் நின்று நின்றே!" என்ற

திருவாய்மொழியில் ஓதப்பெற்றிருக்கும் திருப்பாட்டொன்றினாலே தெளிவுறுக. இவ்வடிகள், அடியார் அல்லர் வெறும்புலவரே யாம் என்று ஆய்ந்தறியாது கூறும் அன்னியர் உரையெல்லாம், வெற்றுரையே யாமென்று சிற்றறிவுடையினும் தெற்றெனத்தெளிந்து கொள்வதால், மீண்டும் மீண்டும் யாமெடுத்துக் கூறவேண்டிய கட்டாயமில்லை யென்க.

இனியாழ்வார் தம் கொள்கையை அநுசரித்தே, இராமாநுசர் தமது விசிட்டாத்வித அருமைப்பெருங் கொள்கையினை, பிரம சூத்திர பாஷ்ய வுரைவாயிலாகவும் கீதாபாஷ்ய வுரைவாயிலாகவும் விரித்து விளக்கிப்போந்தார் என்பது வைணவர்தம் தொன்றுதொட்டு வரூஉம் அரிய மரபுவழக்குமாகும். இரு பெரு நூல்களையும் அவற்றின மாப்பெரும் பாஷ்யங்களையும் ஒத்திட்டாராய்வார்க்கே இது இனிது புலனாகும். அன்றி 'வாமதேவர், பிரஹலாதர், நம்மாழ்வார் முதலியபெரு அடியார்கள், தாங்கள் அகவுணர்வை அறிந்து பிரம்மமாகிய கடவுளே தங்கட்கு உயரிய நோக்கப்பொருளாயும், வழியாயும், ஆத்மயிர் தமாயும் உள்ளதெனக்கண்டு கொண்டு, அக்கடவுள்பால் பிரியா அன்பும், மாறா உறுதியும (நம்பிக்கை) வைத்துத் தம்மையும், அதனோடுடன் நின்று கலக்கச்செய்து (எழுப்பி) வாழ்ந்தருளினராகலா. அத்தூய பெரியார்கட்கு இறைவன் ஆத்மாவுக்குள் ஆத்மாவாய் நுண்கு மிகத்துவியாபிக்கும் உண்மை சாதாரண ஒருகருத்தை(கொள்கையை)

மட்டும்தழுவியதன்று; ஓரருட்கோல உண்மை ஒளியையும் தழுவிய தாம்'* என்றறிஞர் கூறிய நூடம் அடிகளாரது, இத்தத்துவ கோட்பாட்டையும், கடவுட்டன்மையினையும், இறைவன் மீது அவர் கொண்ட மாப்பேர் உண்மை யன்பினையுங் காட்டுமாற்றையுங் காண்க.

இனி யடிகள் திருக்குருகூரின் கண்ணே திருவவதாரஞ்செய்த விலும் கடவுட்டன்மை மிகுகின்றது. முன்னே யாம் கூறியவாறு (பக்கம் 12) உலகவுடம்பிற்கிருதயமாய இந்தியாவின் தலைப்பீடமாகிய விருந்தாவனத்தே இறைவன், நான்காலும் உயிர்வகைகளிற் சிறந்த மக்கள் வடிவில், (மக்களுட் சிறந்தவனாய்) உலகில் திருவவதரித்து லீலைகள் செய்தாரென்றோம். இறைவன் மக்கள் வடிவில் லீலைகள் செய்தலாவது என்னையெனின்; ஆன்மாக்கட்கெல்லாம் அவரவரது இயற்கை வினையைக்களைந்து இயற்கை அறிவுவிளக்கந் தந்து வீடளித்தற்பொருட்டேயா மென்றுணர்க. இவ் லீலைகள் என்னும் இறைவனது திருவிளையாடல்கள் அவனது கல்யாணகுணங்களைத் தெரியச்செய்து அவனது கபடநாடகத்தன்மையை விளக்கிக் காட்டும்! இவ்விருந்தாவனத்திலே, இறைவன் மக்கள் வடிவில் மக்கள இயல்பைக்கொண்டு மக்களைப்போல லீலைகள் (திருவிளையாட்டுகள்) பல புரிந்து அவ்வாற்றான் ஆன்மாக்களை வசீகரித்துத் தன் பக்கல் ஈர்த்துத் தனது அகண்டாகார சுரூபத்தன்மையினையும், ஒரு மனிதனைத் தோன்றுமற்றோன்றி உயிர்களைக்காக்குந் தன்மையினையும் காட்டும் மாப்பேர் உண்மையாறுகளும், சின்னஞ்சிறுபோழ்திலே, உலகியல்பறியா சிறுவயதிலே மக்களோடு தான் ஒக்கக்கலந்து செய்த விளையாடல்களையும், கூடாரோடும், கூடுவரோடும் பலவகைத் திருவுருவில் பலவகையாய்க் கலந்து கூடிப்புரிந்தருளிய கபடநாடக

---

* "Vamadeva, Prahalada, and Nammalwar sought the heart of Reality and treated Brahman as their very centre source and self, and lived, moved and had their being in Him. To them, the truth that Brahman is the self of the self was not a mere view but a vision."

—(A lecture on Philosophy of Ramanuja delivered by Prof. P. N. Srinivasachari M. A.,) Vide Hindu dated 16—2—1929.

விளையாடல்களையும் எண்ணி யெண்ணிப் புகழுதற்கே இறைவன் கண்ணன் திருவுருவில் இவ்வாறு தோன்றினன். மற்றைய அவதாரங்களினும் கண்ணன் அவதாரமே மிகச் சிறந்ததும் அடியார்கட்கு உகந்ததுமாய பெற்றியுடைத்து. இதுபற்றியன்றே பரிபாடல் பாடியருளிய பெரியோர்களும், பழைய சங்க நல்லிசைப்புலவர்களும் கண்ணனை மிகமிகப் புகழ்ந்தெடுத்து ஓதினரென்பது.* சமயதத்துவ ஆசிரியன்மாரும், கண்ணன் அருளிய கீதையுரையினையே உவந்தெடுத்துப் பாராட்டிப்பாடிய உரைகள் பல நிகழ்த்தினர். மற்று, உலகெங்கணுமே கண்ணன்புகழ் ஓதப்பெறுகின்றமை காண்மின்! பெரியாழ்வாரும் மற்றைய ஆழ்வார்களைக் காட்டினும், கண்ணன் திருவிளையாடல்களில் மிகவும் ஈடுபட்டு நெக்குநெக்குருகிப் பாடல் பல பாடியருளினர். இவர்கள் எல்லாரையும்விட நம்மாழ்வார், அழகியதோரருஞ் செய்யுளிலே நயமும் அன்பும் பொருந்த கண்ணனது அதிசுக்கும பிரதாபங்களைப் பாடியருளினர். அது,

* "திருமாலினமேற் பாடப்பட்ட பரிபாடற் பாட்டுகள், கிறித்து பிறப்பதற்கு இருநூறாண்டுகட்கு முன்னரே இயற்றப்பட்டனவாகும் என்பதற்கு, அப்பாட்டுக்களுள் யாண்டும் கண்ணனாவது இராமனாவது குறிப்பிடப்படாமையே சான்றாம். பிற்றை ஞான்றை வைணவ சமயத்தாரால் திருமாலின் விழுமிய பிறப்பினராய்க் கொள்ளப்பட்டுப் பெரிது வணங்கப்படுங் கண்ணனும் இராமனும் அப்பாடல்களுட் (பரிபாடலுள்) சிறிதுங் குறிப்பிடப்படாமையை ஆராயுங்கால்," என்று மாணிக்கவாசகர் கால நூலாசிரியர் அந்நூல் 274-ம் பக்கத்தில் கூறிச்செல்லினர். கண்ணன் வழிபாடு பரிபாடற் பாட்டினுள் இல்லையாமெனனில்: நன்று கூறினை! அவ் ஆசிரியரே அதே நூல் 238-ம் பக்கத்திலே, "..................திருமாலுக்கென்றே பாடப்பட்ட பண்டைத்தமிழ்பாக்களும் அடங்கிய 'பரிபாடலி'லுங் கண்ணபிரான் வணக்கமேயல்லாமல், இராமனைப்பற்றிய குறிப்பு ஒரு சிறிதாயினுங் காணப்படவில்லை" என்று வரைவதால் பரிபாடல் நூலினுட் கண்ணன் வணக்கம் உளதெனப் பெறும். இப்போழ்து மஹாமஹோபாத்தியாயர்—பண்டிதமணி-சாமிநாதையர் அவர்களால் பதிப்பிட்டுப் பெற்று வழங்கும், 'பரிபாடல்' நூலை ஆராய்வார்க்கு, கண்ணன் வழிபாடு பெரிதும் போற்றப்பட்டிருத்தலைக் காணலாம். இனி இராமன் வழிபாடும் அதனுள் உய்த்துணரவைக்கும் முறையில் வைக்கப்பட்டுளதென்று ஆழ ஆராய்வார்க்குப் புலனாகும். இந்நூல் 119-ம் பக்கம் பார்க்க.

"பிறந்தவாறும், வளர்ந்தவாறும், பெரியபாரதம் கைசெய்தைவர்க்குத்
திறங்கள் காட்டியிட்டுச் செய்துபோன மாயங்களும்,
நிறைந்து என்னுள்புக்கு எனதாவியை நின்றுநின்றுருக்கி உண்கின்றவிச்
சிறந்தவான் சுடரே! உன்னை என்றுகொல் சேர்வதுவே?"

என்பது. இந்தச் செய்யுளையும் அதன் வியாக்கியான வுரையையும், கூரத்தாழ்வார் செய்தருளிய 'ஆதிமானுஷத்வம்' என்னு நூலினையும் பெரியோரால் கேட்டுணர்ந்து கண்ணனது விளையாடல்களைச் சற்றுக்கூர்ந்து நினைவுவெளிக்குக் கொண்டுவந்து ஒருமுகப்பட்டிருப் போமாயின், நம்மையும் மறந்த ஓர் உணர்ச்சி நம்மை எய்தும். எப்பவே, நாம் அப்போதுதான் கண்ணன் லீலைகள் எல்லாம், தூரி சற்று பரிசுத்த வாய்ப்பட்டவையெனக் கருதுவோம். சிக்கற இந் நன்மை உண்மை உரைகளை உய்த்துணரகில்லாது, ஆழமில்லாத பெரும்பேச்சளவு நிற்கும் தற்போதையர் சொல்வழிப்பட்டு அறி வினராகுதலில் பயன் என்ன பெறுவோம்? அது நிற்க:

இனி, குருதிகொண்டுசெல்லும பெரிய இரத்தக்குழாய் (Arteries) இருதய தலைப்புத்தானத்தினின்று பிரிந்து, ஒவ்வோர் உறுப்பிற் கும செலலாநிற்கும். இருதய அசைவும் (Heart beating) அத் தலைப்பக்கத்தினின்றே கிளம்பி முழு இருதயத்தையும் அசைவிக் கும். அங்ஙனம் அசையும்போது, நடுப்பகுதியின் ஆட்டம மிக மிக நுணுக்கமாக சற்றுக கமபித்த நடையில் செலலும. அடிப் பகுதியின் தோற்றம், கமபித்ததுபோற் றோன்றும் நடுப்பகுதியை எற்றிட்டுப்பாக்கும அசைவுடன், மேற்பகுதியை நோககிய தன்மை யாய் நடைபெறும. இது இருதயத்தின் அசைவின் இலக்கணம அமைந்த ஆறு. உடம்பின் கூற்றையும் இருதயக்கூற்றையும ஆழ ஆழ நனித்தறிந்து நன்மையாய் நோககுங்கால் இவ் எமது கூற் றின் உண்மை விளங்கும். இதனை நன்கறிய பெயர்போன மேனாட்டு ஆசிரியர்கள அரிதின் ஆய்ந்து வெளியிட்ட உடம்பியல் நூல் (Physiology) உயிரியல் நூல (Biology) மனவியல் நூல் (Psychology) முதலிய அரும்பெரும தத்துவ நூல்களை மிக மிக ஆழப் படித்தல் வேண்டும. வேண்டுமேல், வேறோரிடத்தில் இவைகளைப் பற்றிக் கூறுவாம்.

இனி இருதய அமைப்பின்றன்மை போலவே, விருந்தாவனப் இருதயமேற் பகுதியின் கண்ணே, இறைவன் யாவரை உயிர்கட்கும் இரத்த ஓட்டம் ஓடச் செய்யும் பெரிய இரத்தக் குழாய்போல தன்றாற்றலை விட்டு எல்லாவற்றையும் அசைத்துக்கொண்டேயிருப்பான். அது பற்றித் தான் அவன் 'காளிங்கன்' என்னும் ஒரு பாம்பினை இருதயமாகக்கி அவன் றலையினின்றும் நடனமாடிக் காட்டியதூஉமென்பது! நடுப்பகுதியாகிய அரங்கத்தின் கண்ணே, இறைவன் அறிதுயிலில் அமர்ந்திருப்பது இருதயத்தின் சற்று கம்பித்த தன்மையைக் காட்டுமென்றறிதற் பாற்று. இனி அடிப்பகுதியே திருக்குருகூர் ஆகும். அதன் கண் கடவுட் போடியாராகிய நம்மாழ்வார் தோன்றி இந்திய இருதயத்தின் தலைப்புத்தானமாகிய விருந்தா வனத்தினின்று வந்த இறைவனது திருநடனமாகிய அசைவைப்பற்றித்தான் அசைந்து, மனித இருதய அடிபீடம் மேற்பார்க்கும் வண்ணம் போலவே பார்த்து, நடுப்பகுதியாகிய அரங்கனது நுண்ணிய கம்பித்த (அறிதுயில்) வடிவோடு கலந்து, இறைவனது திருவிளையாடல்களையெல்லாம் அநுபவித்துப்பேரின்ப நுகர்கின்றார் என்று முடிவு செய்க. இந்த இருதய ஒப்புமையைக் கண்டாக்கால், நம்மாழ்வாரென்னும் போடியாருக்கு எத்துணைக்கடவுட்டன்மை பொருந்தியுளதென்றறியலாம். மக்களுடம்பிற்கு இருதயம் அமைந்து, அசைந்து உயிர்வுறச் செய்தல்போல உலக உடம்பிற்கு இந்திய இருதயம் அமைந்து அதனை இறைவன், மேற்காட்டியவாறு அசைத்து உயிர் உறச்செய்கின்றான் என்றும், நமது இருதயத்திற்குச்சற்று ஓய்வு(Rest)* அமைந்திருப்பது போல

* எமது அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் எட்டிய அளவில் உடம்பியல் நூல் உயிரியல்நூல்வல்ல மேனாட்டு ஆசிரியர்கள் சமீபத்தில் ஆராய்ந்து கண்டு முடிவு கட்டிய உரையினின்று, இரத்தாசயத்திற்கு (நெஞ்சப்பை) மிக நுணுக்கமான ஓய்வு உண்டு என்று உணர்கதரப். இவ்வுணர்ச்சிக்கு ஏற்ப, மேல் யாமெடுத்துக் காட்டியிருக்கிற உவமை உரை உண்மையாயிருத்தலின், இங்ஙனம் கூறி யாமொரு முடிவு கட்டினும். நமது சாஸ்திரங்களிற் போதருகின்றவாறு, இருதயகமலத்துள் மிகச் சூக்குமமாக வியாபித்து அதனை அசைக்கச் செய்யும் பரமான்மாவுடன் ஆன்மா, உடம்பினை மறந்த துயில்வேளையில் மிக மிக நுணுக்கமாகக் கலக்கும் ஒரு தன்மையே, என்னும் அதற்கு ஓய்வு நேரம் என்று எமதாராய்ச்சியிற் புலனாயிற்று. அது கொண்டே இங்ஙனம் கூறினுமென உணர்க. விரிப்பின் பெருகும்.

இந்திய இருதயத்திற்கு ஒப்பு உளதாக இறைவன் அறிதுயி அமர்ந்திருக்கின்றான் என்றும, நமது இருதய அடிபபாகம், நன்கு வேலை செய்து, நம்மை உயிருடனும் அறிவுடனும தழையச் செய் தல் போல், இந்திய இருதய அடிப்பாகமாகிய திருககுரு கூரினின் றும், அடிகள் அசைந்து இறைவனது முழுத்தன்மையைப் பெற்று எல்லாரையும் உயிர் பொருந்திய பேர் அறிவுடன் ¶ இடங்கச்செய் கின்றார் என்றும் ஈண்டு விளக்கஞ் செய்துகொள்க. மேல் மேல் கூறப்புகின் இது மிக விரியும்.

இனி மூன்றாவதாக அடிகள் பிறநூற்களிலிருந்து சொல் சொற் றொடர்பு பொருள் முதலியவற்றை எடுத்தாளுகின்றமையின், அவர்க்கு ஓதாதுணரும் கடவுட்டன்மை யில்லையென் றிவ்வாராய்ச் சிக்காரர் கூறுகின்றார். இப்பகுதியை காலவாராய்ச்சியில் எடுத்துக் காட்டினால் பொருத்தமாயிருக்குமென நினைக்கின்றோம். ஆனால் 'கடவுட்டன்மை' என்ற பாகு பாட்டில் இவர் தனுசமயப் பெரியா ரின் இலக்கணத்தைச் சிறிதளவும் பாராது பிறரிடம் குற்றங்கண் டால் செல்லாது. யாம் திருவாசகத்தை ஆராயும்போது எடுத்த எடுப்பில், முடத்தாமரைக் கண்ணியார் என்னும் புலவர் பெருமா னார், சோழன்–கரிகாற் பெருவளத்தானைப் பற்றிப்பாடிய பொரு நராற்றுப்படையில், ஈர்க்கிடைப் போகா விளவனமுலை" (அ. 36) என்றதோரடி, திருவாசகம் போற்றித் திருவகவலில் வரும், "ஈர்க் கிடை போகா இளமுலை" (அடி 34) என்ற அடியோடொத்திருக் குமாற்றைக்கண்டோம். முடத்தாமரைக் கண்ணியாரிடமிருந்து மாணிக்கவாசகர் எடுத்தனரா? அல்லது மாணிக்கவாசகரிடமிருந் து முடித்தாமரைக் கண்ணியார் எடுத்தனரா? என்றாராய் வுழி

---

¶ அறிவுக்கு, உயிர்த்தன்மைஉயிரில் தன்மை என்று இரண்டு பாகு பாடுள. இவற்றுள் உயிர்த்தன்மையோடு கூடிய அறிவாவது, ஓர் உயிர் ஒளி பெற்று மருண்ட தன்மையினின்று நீங்கித்தூய நினைவு விளக்கத்தில் முனைத்து ஒன்றினை உறுதிபெறத் தனக்குரிமையாக்கி அதனை கண்ணே வயங்கி உண்மையினைப் பகுத்து நிற்கும் பேர் அறிவாம். மற்றது அங்ஙனம் தெளியாது மருண்ட தன்மையிலேயே ஆழ்ந்து கிடப்பதாம். அறி வென்பது ஒன்றே; அது யாவர்க்கும் பொருந்தியுளது. அஃது விளக் கம் பெற்றுளதாயின், அதற்கு உயிர் உண்டு; அதனாற்றான் உயிர் பொருந் திய பேர் அறிவு என்றது. விளக்கம் பெறாதாயின் அஃது உயிரில் அறிவே எனக.

முடத்தாமரைக் கண்ணியாரிடமிருந்தே மாணிக்கவாசகர் எடுத்தாண்டனர் என்றேற்படுகின்றது. முடத்தாமரைக் கண்ணியார் காலம், ஆசிரியர் சாத்தனார்க்குச் சற்று முற்பட்டது. ஆசிரியர் சாத்தனார் ஆசிரியர் இளங்கோவடிகள் முதலியோர் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலே அரசோச்சி வாழ் வெய்திய சேரன் செங்குட்டுவன் காலத்திலும், உருத்திரங்கண்ணார், முடத்தாமரைக் கண்ணியார் முதலியோர் கி. பி. முதல் நூற்றாண்டில் அரசு செலுத்திப் பெருவாழ்வு எய்திய கரிகாற் பெருவளத்தான் காலத்திலும் இருந்தார் ஆக்கப்பாலர் என்று எமது ஆராய்ச்சியில் பெறப்படுகிறது. * மாணிக்கவாசகரை அவர் காலமுடையார் கூற்றுப்படியே, கி. பி. மூன்றாம் நூற்றாண்டினராக வைத்துக்கொண்டாலும், முடத்தாமரைக்கண்ணியார், மாணிக்கவாசகருக்கு முற்பட்டவர் என்பதில் ஐயம் எட்டுணையுமில்லை. எனவே, முடத்தாமரைக் கண்ணியார் தம் சொல் சொற்றொடர்புகள் அப்படியே திருவாசகத்தில் வருகின்றன. வரவே, பிற நூல்களிலிருந்து ஏதும் எடுத்தாளாது உளத்தில் உதித்தபடியே பாடிக் கடவுட்டன்மையை மாணிக்க வாசகரும் பிறரும் பெற்றனர் என்னும் இவர் தங்கூற்று யாங்ஙனம் பொருந்தும்? பிறசெந்தமிழ் நூல்களில் வரும் சொல் சொற்றொடர்புகளை நம்மாழ்வார் எடுத்தாளுதலால், அவர்க்குக் கடவுட்டன்மை கிடையவே கிடையாது என்ற இவர், மேல் யாம் எடுத்துக்காட்டியதற்கு யாதுசெய்வர்? ஆகலின், ஒரு நூலில் இருந்து பிறிதொரு நூலில் ஒற்றுமை யுறக்காணப்பெறும் சில பல சொல் சொற்றொடர்புகளைக்கொண்டு, அந்நூல் யாத்த புலவர்க்கேனும் அடியார்க்கேனும் கடவுட்டன்மை இல்லையென்று யாங்கூறத் துணியோம்.

அற்றன்று, ஆழ்வார் ஓதாதுணரும் ஆற்றல் வாய்ந்த கடவுட்டன்மையோர் என்ற உரையை மறுக்கவன்றே இவ்வாறெடுத்துக் காட்டினேமென்னில்; திருவள்ளுவநாயனார் உள்ளிட்ட சில ஆசிரியன்மார்கள் ஆழ்வாரிடமிருந்தே சில பல சொற்களையும் சொற்றொடர்புகளையும் எடுத்தாண்டுளர் என்று எமது ஆராச்சியிற் புலனாகின்றதாலும், அப்பெரியோர்க்கு ஓதாதுணரும் பெற்றி உண்டென

* இவ்விரிவு எல்லாம் நம்மாழ்வார் காலப்பகுதியில் வரையப்பெறுகின்றன.

முன்னரே மொழிந்துளே மாதலானும் நும்முரை ஆழ்ந்துணரா அசட்டுரை யெனக. பிறர் ஆழ்வாரிடமிருந்தே இவ்வாறெடுத்தாண்டிருக்கின்றனர் என்பதை காலவாராய்ச்சியிற் காட்டுவோம். இதனால் ஆழ்வார்க்கு இவர் கூறுமாறு கடவுட்டன்மை யில்லையென்பதெல்லாம் அழிவழக்காகிப் பயன் பெறு தொழுதலைக் காண்க. இனி ஆழ்வார் தம் அரிய பெரியதிருவாய்மொழி யொன்றே அவரது அடியார் ஒழுக்கத்தை நிரம்பக் காட்டுதலானும், அங்ஙனங் காட்டுவதாக யாம் பலவிடங்களிலும் கூறியுள்ளே மாதலானும், அவர் சத்திய நெறியைப்பற்றிய கடவுட் பேரடியாராகத் திகழ்ந்தாரென்று உய்த்துணர்ந்துகொள்க. அவ்வாறு அத்திருவாய்மொழி விழுமிய மெய்ம்மணி நூலெனக் கோடற் கொருப்படா மக்கள் யாவரே ஆயினும்

* "அம்மொழி கேட் டடிபணிந்தா னுயிரம்பாட் டந்தாதிச்
செம்மொழிப்பா மாலையொன்றுஞ் செப்பிடக்கேட் டெழுதிவைத்தான்
மெய்ம்மொழிப் பாவலர்தஞ் சீர் மிக்குணர்வார்; வெள்ளறிவார்
கைம்மொழியென் றிகழ்கின்றோர் கடையர்களிற் கடையோரே."

என்றொரு சைவர்தாமும் கூறிய வாறோர்ந்து அமைக!

இன்னும் நம்மாழ்வார் கடவுட்டன்மையைக் கூறக் கூற என்றும் முடிவுறாத வேலையாய் முடியும். ஆதலின் அவரது 'அருளிச் செயல்' என்னும் மூன்றாம் பகுதிக்கண் மற்றை நூல்களோடு அவரது நூலை ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து அவ்வடிகளைப் பற்றிய இதர வைபவ விசேடணங்களையும் எடுத்துக்காட்டப்பெறும். ஆண்டுங் கண்டின்புறுதல் அன்பர்தங்கடமையாகும்.

என்றிவ்வாறுய பலப்பல ஏதுக்களைக்கொண்டு இத்துணையும் விரித்த நம்மாழ்வார் கடவுட்டன்மை என்னும் இவ்வாராய்ச்சியின் பயனாகப் பிறர் கூறுவன யாவும் குற்றம் நிறைந்த குறும்புரையென வறிந்து அடிகளார், சிறந்த கடவுட்டன்மை வாய்ந்த கடவுட்பேரடியார் என்றுணர்ந்து அமைதி பெறுக.

'நம்மாழ்வார் வரலாறும் கடவுட்டன்மையும்' என்னும் இச் செந்தமிழ்ப் பேர் ஆராய்ச்சிப்பகுதிகள் இரண்டும், சோழ நாட்டு

---

* புலவர் புராணம்: நம்மாழ்வார் சருக்கம் செ. 29.

வீரநாரணபுரத்து *த் தமது மாறன் மந்திரத்திலுள்ள அன்புநிலைக் கழகவாதரவில் ஷெ கழக ஆசிரியர், மன்னுபுரிகிழார் இராமகிருஷ்ணசடகோபனுரால் இயற்றப்பெற்று ஒருவகையான் முடிந்தன.

திருக்குரு கூரடிகள் திருவடிவாழ்க!

---

ஒருகோட்ட முனைநீட்டி புலகூட்டி வலிகாட்டு முத்தமன்னை
ஒருகோட்ட மில்லாது புலன்வீட்டிப் பகைவாட்டி உள்ள வென்றன்
திருகோட்ட மறைகாட்டி வினையாட்டி கலக்கூட்டித் திருத்திநின்ற
திருகோட்டமுடைகுருகூர்ச்சடகோபர் அடிவேட்டித்திரிவனன்றே!

## பத்திராதிபரின் குறிப்பு.

கள்ளக்குறிச்சி நண்பர் உயர்திரு இராமகிருஷ்ண சடகோப தாஸர் எழுதிய நம்மாழ்வார் வரலாற்றை ஆதிமுதல் அந்தம்வரை ஆழ்ந்த கவனத்துடன் படித்துப்பார்த்தேன். இவ்வியாசம் நவீன ஆராய்ச்சி முறையில் எழுதப்பெற்றுள்ளது. முதற்கண் நம்மாழ்வார் சரிதத்தை சுருக்கமாக வரைந்து பின்னர் அவரது பக்திபெருக்கையும், பரோபகார சிந்தையையும் அவரது சமரஸக் கொள்கையின் தத்துவத்தையும் வெகு தெளிவாக விளக்கிக்காட்டி யிருக்கிறார். நம்மாழ்வாரது பாசுரங்களை கொண்டே அவரது ஹிருதயத்தை விளக்கியிருப்பது பெரிதும் போற்றத்தக்கது. தமிழ் வேதமாகிய ஆழ்வார்களது அருளிச் செயல்களுக்கு நம்பிள்ளை முதலானோர் எவ்வளவு சிரமப்பட்டு வியாக்கியானங்கள் எழுதி தொகுத்து வைத்திருக்கிறார்களென்பது எல்லோரும் அறிந்த விஷயமே. அது போன்று இந்நண்பரும் பல நூல்களை ஆராய்ந்து அவைகளிலிருந்து பல மேற்கோள்களும் உதாரணங்களும் எடுத்துக்காட்டி அழகுபட இவ்வியாஸத்தைச் செப்பம் செய்திருக்கிறார். இதன் தமிழ் நடையும் கற்றோருள்ளம் களிப்புறும் வண்ணம் அமைக்கப்பெற்றிருப்பது பொன்மலர் நாற்றமுடைத்தது போல் விளங்குகிறது.

---

* இது இப்போது காட்டுமன்னார்கோயில் என வழங்கப்பெறுகின்றது; ஸ்ரீமந்நாத முனிகள் சந்நிதி என்றுங் கூறுவர்.

மற்றுமோர் விஷயம் வாசக நேயர்களின் ஞாபகத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். இவ்வியாசத்தில் சிவபிரானைப்பற்றியும் மாணிக்கவாசகர் முதலிய குரவர்களைப்பற்றியும் சில இடங்களில் பிரஸ்தாபிக்கப் பெற்றிருக்கிறது. சிவபிரானைப்பற்றியாவது மாணிக்கவாசகரைப்பற்றியாவது தாழ்த்திப் பேசவேணுமென்பது இவரது விருப்பமல்ல. இத்துறையில் இவர் இழிபவருமல்ல. இந்நண்பரை யான் நேரில் அறிவேன். இவர் பல ஸ்ரீ வைஷ்ணவமகாநாடுகளில் சென்று பல சொற்பொழிவுகள் நிகழ்த்தக் கேட்டிருக்கிறேன். பல சைவ நண்பர்களும் இவரது சொற்பொழிவை விருப்புடன் கேட்டு இன்புற்றிருக்கின்றனர். இத்தகையார் இவ்வியாசத்தில் மாணிக்கவாசகர் முதலிய குரவர்களைப்பற்றிப் பிரஸ்தாபிப்பதற்குக் காரணமிருக்கிறது. இக்காரணத்தை இவரே இவ்வியாஸத்தில் ஓரிடத்தில் வெளியிட்டிருக்கிறார். ஆழ்வார்களிற் றலைவராய ஸ்ரீ நம்மாழ்வாரைக்குறைகூறி திருவேதாசலம் அவர்கள் ஞானசாகரப்பத்திரிகையில் வரைந்திருப்பது இந்நண்பருக்கு மிக்க வருத்தத்தை உண்டுபண்ணியது. திருவேதாசலம் அவர்கள் கண்மூடித்தனமாய் எழுதிய ஆபாஸ உரைகளால் வரும் கேட்டை யொழிக்கவே இந்நண்பர் மாணிக்கவாசகர் முதலிய குரவர்களைப்பற்றிப் பேச நேரிட்டதென்பதை நேயர்கள் அறியவேண்டும்.

இத்தகைய அரிய வியாஸத்தை யாதொரு பிரதிபிரயோசனமுமின்றி வைணவனுக்குதவிய இந்நண்பருக்கு எமது மனமார்ந்த வந்தனம் உரிமையாகுக. எம்பெருமான் இவருக்கு நீடித்த ஆயுளையளித்து இவர்மூலம் பல ஞானக்கதிர்களை நாட்டில் பரவும்படி அருள்புரிவானாகுக. சுபம்! சுபம்!!

மூன்றாவது:— ஸதாசாரம் = (ஸத்புருஷரால் அநுஷ்டிக்கப்பட்டது.

பாலகாண்டம் முதலாவது சருக்கத்தில் 2 முதல் 4 சுலோகத்தினால், வான்மீக முனிவர் நாரத மஹரிஷியை நோக்கி சுவாமீ! இவ்வுலகத்தில், இக்காலத்தில், சகல கல்யாண குணங்களும் சவுசீல்ய குணமும் மற்றும் அநேக குணங்களுடன் தருமத்தை நன்றறிந்த சத்புருஷனைக் கேட்டறிய அடியேன் விரும்புகிறேன். அடியேனுக்கு தேவரீர் அருளிச்செய்யவேண்டும் என்று வினவினபொழுது நாரத மஹரிஷி, மிகுந்த களிப்புடன் "ஓய் முனிவரே! நீர் கேட்ட குணங்களெல்லாம் பொருந்திய புருஷனைச் சொல்லுகிறேன் கேளும்.

'இக்ஷ்வாகுவம்ஸ ப்ரபவோ ராமோ நாமஜநை: ச்ருத: |'

"இக்ஷ்வாகு குலத்தில் அவதரித்த ஸ்ரீ ராமபிரான என்பவர்தான்" என விடையளித்திருக்கிறார். இதனால் ஸ்ரீராமபிரான் ஸத்புருஷன் என்றும், அவரால் அநுஷ்டிக்கப்பட்டவை ஸதாசாரம் என்றும், ஏற்படுவதால், மூன்றாவது ப்ரமாணமும் பொருந்தமாகிறது.

நான்காவது:— ஆத்ம ஸந்துஷ்டி.

"பாட்யே கேயே சமதுரம்"
"ஹ்லாதயத் ஸர்வகாத்ராணி மநாம்ஸி ஹ்ருதயாநிச |"
(ராமாயணம்.)

இந்த ராமாயணம், மனதிற்கும், இருதயத்திற்கும், மிக்க களிப்பாக யிருக்கின்றது என, இராமாயணம் 4-வது சருக்கத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

இதனால் நான்காவதான ப்ரமாணமும பூர்த்தியாகின்றது.

இனி, ஸ்ரீராமாயணத்தில் தருமங்கள் வருணிக்கப்பட்டிருக்கின்றன வென்பதற்குரிய ஆதாரங்களைக் கவனிப்போம்.

ஸ்ரீ வால்மீகிராமாயணம்:—

ஆரண்ய-கா. சரு 37. சுலோ 13.
"ராமோ விக்ரஹவான் தர்ம: ஸாதுஸ் ஸத்ய பராக்ரம: |"

(இ-ள்) "ஸ்ரீராமன் உருவங்கொண்ட தருமமபோலும், நற்குணமுடையோனும், உண்மையான தோள்வலியுற்றவனுமாகின்றனன்." என இராவணனுக்கு, ராமத்வேஷியான மாரீசன் உரைத்த வசனம்.

யுத்த-கா. சரு. 28. சுலோ. 19.

யஸ்மின் ந சலதே தாமோ யோ தர்மம் நாநிவர்த்தே |
ஸ ஏஷ ராம . ||"

(இ-ள்) "எவரிடமிருந்து தருமம் சலிக்கவில்லையோ எவர் தரு மத்தை விட்டு விலக வில்லையோ, அவரே இந்த இராமபிரான்." என, இராவணனைப் பார்த்து சுகனுடைய வசனம்.

யுத்த-கா. சரு. 91. சுலோ 69.

"தர்மாத்மா சத்ய சந்தஸ்ச ராமோ தாசரதிர் யதி |
பௌருஷே சாப்ரதித்வந்த்வ: ததைனம் ஜஹி ராவணிம் ||"

(இ-ள்) "ஸ்ரீராமபிரான் தர்மஸ்வரூபி என்பதும், சொன்னசொற் றவறாதவர் என்பதும், இணையற்ற பராக்கிரம முடையவ ரென்ப தும உண்மையாயின், இந்த பாணம இந்திரஜித்தை ஹதம்செய்யட் டும்." என சபத பூர்வமாயுரைத்த, இளைய பெருமாளுடைய வசனம்.

ஸ்ரீ பாகவதம் - ஸ்கந்தம் 9 - அத் - 10. சுலோ 55.

"ஏக பத்நீவ்ரததரோ ராஜர்ஷி சரித: சுசி: |
ஸ்வதர்மம் க்ருஹமேதீயம் சிக்ஷயந் ஸ்வயமாசரத் ||"

(இ-ள்) இராமபிரான் ஏகபத்நி விரதத்துடன், சுத்தராக கிரு ஹஸ்த தர்மத்தைத் தாம் அநுஷ்டித்தார். ஜனங்களும் அதனைக் கண்டு அவர் அவர்கள் தர்மத்தை விடாமல் செய்தார்கள்." என பரீக்ஷித்து மஹா ராஜனை நோக்கி, சுகப்பிரம்ம ரிஷியின் வசனம்.

கம்ப ராமாயணம்:—

"தோன்றிய நல்லற நிறுத்தத் தோன்றினன்." அயோத்தி-நகர் நீங்கு-168

"நல்லற நிறுத்த நணுகித்,
தாமரைவனை துறந்து தரை நின்றவனை" ஆரணி—விராத - 30.

இராம பிரான் உலகத்தில் தருமத்தை நிலை நிறுத்தவே அவ தரித்திருப்பதாகக் கவிகூற்று.

"சூரனுத்தவனுஞ் சுடர் சேமியு
மூசறுந்த வொருவனு மோம்பிலும் (ஆரணி—அகத்தி 22)
ஆரறத்தி னொடன்றி நின்றாவர்
வேரறப்பென வெருவன் மின்னென்றான."

"வெம்புகண்டகர் விண்புக வேரறுத்
தீம்பர் நல்லறஞ் செய்ய வெடுத்தவிற் (கிட்கிந்தா - கிட்கிந்தை 4)
கொம்பு முண்டருங் கூற்ற முமுண்டென
வெம்புமுண்டென்று சொல்லுநம்மானையே."

உலகத்தில், துஷ்ட நிக்கிரகமும், தர்மஸம்ஸ்தாபநமும் செய்வதற்காக, தாம் அவதரித்திருப்பதாக, இராம பிரானுடைய வசனம்.

"பின்னையேது முதவுந்துணை பெருந்துறை பெருண்
மின்னையே யிடைதடங்கிட விரைந்துதொடர்வா (ஆரணி-விராத.39)
னென்னையே யனையவன் பிறரவோர் கடமை விட்
டென்னையே நுகர்தி யென்றன னெழுந்து விழுவான்."

இராம, லெட்சுமணர், உலகத்துக்கெல்லாந் தாயைப்போன்ற அன்பினை யுடைய தருமசுவரூபிகள், என சீதாப்பிராட்டியின் வசனம்.

"ஓயாத மலரயனே முதலாக வுளராகி
மாயாத வானவர்க்கு மற்றொழிந்த மனுவுயிர்க்கு (ஆரணி-விராத 52)
நீயாகின் முதற்றாதை நெறிமுறையா லீன்றெடுத்த
தாயாவார் யாவரே தருமத்தின் றனி மூர்த்தீ."

பிரம்மதேவன் முதலான சகல தேவர்களுக்கும், உலகத்தி லுள்ள உயிர்களுக்கும், இராமபிரான் முதல்தந்தையாகவும், தருமசுவரூபி எனவும், விராத ஸ்தோத்திரம்.

"இருவர் மானிடர் தாபத ரேந்திய
வரிவில்வாட் கையர் மன்மதன் மேனியர்
தருமநீரர் தயரதன் காதலர்
செருவி னேரு நிருதரைத் தேடுவார்,

ஒன்று சோக் கலருண வலியோங்கர
னின்று நோக்கி நிறுத்து நினைப்பினர்
வென்றி வேற்கை நிருதரை வேரறக்
கொன்று நீக்குது மென்றுணர் கொள்கையார்." (ஆரணி சா. 4, 5.)

இராம லக்ஷ்மணர்கள் தரும சிந்தை யுடையவர்கள், சிறந்த தரும வழியிலே தாங்கள் நின்று ஆராய்ந்து அத்தருமத்தை உலகமெங்கும் நிலைபெறச் செய்யுங்கருத்துடையவர்கள், என கரனிடம் சூர்ப்பணகை வசனம்.

"சங்கு சக்கரக் குறியுள தடக்கை யிற்றுளி
லெங்கு மித்தனையிலக்கணம் யாவர்க்குமில்லை (கிட்கி - மராமர-117)
செங்கண் விற்கரத்தி ராமனத்திரு நெடுமாலே
யிங்குதித்தன னீண்டற நிறுத்துதற் கின்னும்."

கோதண்ட பாணியான இராமன், தர்மஸம்ஸ் தாபனத்தின் பொருட்டு இங்கு திருவவதரித்த ஸ்ரீ மஹா விஷ்ணு வென்பதாக சுக்ரீவ மகாராஜனிடம், தெரிவித்த கவவ்யாகரண பண்டிதரான திருவடியின் வசனம்.

"உழைத்த வல்லிருவினைக் கூறு காண்கலா
தழைத் தயநலகினுக் கறந்தினுறேலா (கிட்கி-வாலிவதை-22)
மிழைந்தவறீ கியல்பல வியம்பி யென் செய்தாய்
பிழைத்தனை பாவியுன் பெண்மையா லென்றான்."

பல பிறப்புகளில் தாமசெய்து சேர்த்த கொடிய கருமங்களை யொழிக்கும் உபாயத்தைககாணுமல் வருந்திக் கதறுகின்ற உலகத் தவர்கள் உய்யுமாறு அவதரித்துத் தர்ம மார்க்கங்களை யெல்லாம் தான் அநுஷ்டித்துக் காட்டும் புருஷோத்தமனை இராமபிரான், என்பதாக, தாரையிடம் கூறிய வாலியின் வசனம்.

"அறமன்னுனுட னேம்பியன்பினே
றெவுண்ணுவுயிரொன் றவோவினன் (கிட்கி-சம்பாதி-45)
பெறவொண்ணுத தொர் பெற்றி பெற்றவத்
திறவென்னு மிதினின்ப மியாவதோ."

தருமஸ்வரூபியான இராமபிரான் திறத்தில் ஜடாயுவுயிரைக் கொடுக்க நேர்ந்தது பெரும் பாக்கியமென்று வானரரிடம் சம்பாதி வசனம்.

இத்யாதி வசனங்கள் ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸ்ரீராம சரிதத்தினுலே தரும ஸ்வரூபமும், தர்மாநுஷ்டானமும வர்ணிக்கப்பட்டிருக்கின்றன வென்பதற்கு போதிய சான்றும்.

## இராமாவதார காலம்.

(1) வால்மீகி இராமாயணம்-பாலகாண்டம் சரு. 25, சுலோ. 28,29.

"பயம் த்யஜ்த பத்ரம் வோ ஹிதார்த்தம் புதிராஸ்ணம் |
ஸபுத்ர பௌத்ரம் ஸாமாத்யம் ஸமித்ரஜ்ஞாதிபாந்தவம் ||"

"ஹத்வா க்ரூரம் துராத்மானம் தேவரிஷீணாம் பயாவஹம் |
தச வருஷ ஸஹஸ்ராணி தசவருஷ சதாநிச ||
வத்ஸ்யாமி மாநுஷே லோகே பாலயன் ப்ருத்வீமிமாம் ||."

(இ-ள்.) "ஓ தேவர்களே! இனி அச்சம் என்பதை விட்டு விடுங்கள்; உங்களுக்கெல்லாம் நன்மையே உண்டாகும். அந்தத் துராத்மாவான இராவணனை அவனுடைய பரிவாரங்களோடு சங்கரித்துப் பூலோக பரிபாலனஞ் செய்துகொண்டு பதினோராயிரம் வருடமிருப்பேன்" என்று தன்னைச் சரணமடைந்த தேவர்களை நோக்கி ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் அருளிச்செய்தனர்.

(2) வால்மீ-இரா. உத்-கா. சரு. 37-கருப்பின் ப்ரக்ஷிப்தசரு. சுலோ.18,19.

ஸனத்குமார முனிவர் இராவணனை நோக்கி—

க்ருதே யுகே வ்யதீதே வைமுகே த்ரேதாயுகஸ்யது |
ஹிதார்த்தம் தேவமர்த்யானாம் பவிதாந்ருபவிக்ரஹ: ||
இக்ஷ்வாகூணாம் ச யோராஜாபாவ்யோ தசரதோபுவி |
தஸ்ய ஸுநுர்மஹாதேஜா ராமோநாமபவிஷ்யதி ||"

(இ-ள்.) "க்ருதயுகம் கழிந்தபின்னர் த்ரேதாயுகத்தின் ஆரம்பத்தில் தேவர்களுக்கும் மனுஷியர்களுக்கு மிதமியற்றுமாறு இக்ஷ்வாகு குலத்திலே தசரதனென ஒரு ராஜன் ஜனிப்பான்; அந்தத் தசரத மஹாராஜனுக்குப் புதல்வனாய் ஸ்ரீராமனென்னும் ஒரு மஹாநுபாவன் அவதரிக்கப்போகின்றனன்" என உரைத்தனர்.

(3) அத்யாத்ம ரா. பாலகாண்டம் சரு. 7. சுலோ. 26½, 27½.

"த்ரேதாமுகே தாசரதிர் பூத்வா ராமோஹம்அவ்யய: |
உத்பத்ஸ்யே பரயா சக்த்யா ததாத்ரக்ஷ்யஸிமாம்தத ||:"

(இ-ள்.) "அழிவற்ற நான் த்ரேதாயுகத்தில் தசரத சக்ரவர்த்திக்குக் குமாரனாக அவதாரஞ்செய்யப் போகிறேன். அப்போது மறுபடியும் நீ என்னைப் பார்க்கப்போகிறாய்" என்பதாக ஸ்ரீ மஹாவிஷ்ணு தனக்கு வரமருளியிருப்பதாக பரசுராமர் ஸ்ரீ ராமபிரானிடம் விண்ணப்பஞ் செய்தனர்.

(4) அத்யாத்ம ரா. ஆரண்யகாண்டம் சரு. 9. சுலோ. 19.

த்ரேதாயுகே தாசரதிர்பூத்வா நாராயண: ஸ்வயம் |
ஆகமிஷ்யதி தேபாஹோர் ச்சேதயிதா யோஜனம் ததா ||
தேனசாபாத் விநிர்முக்தோ பவிஷ்ய ஸியதாபுரா ||1,

(இ-ள்.) "ஸ்ரீமந் நாராயணமூர்த்தி த்ரேதாயுகத்தில் தசரத

குமாரனாக பூமியில் அவதாரமெடுத்து, ஸ்ரீ ராமனென்னும் திரு நாமத்துடன் வரப்போகிறார். அவர் திருக்கரத்தால் உன் கரங்கள் சேதிக்கப்படுங் காலம், 'உன் சாபவிமோசன காலமாகும்." என்பதாக அஷ்டவக்ரமுனிவர் தனக்கு உரைத்திருப்பதாய் கபந்தாசுரன் ஸ்ரீ ராமபிரானை நோக்கிக் கூறினன்.

(5) அத்யாத்ம ரா. சுந்தர காண்டம் சரு. 1. சுலோ. 48.

> "புராஹம் ப்ரஹ்மணா ப்ரோக்தா ஹ்யஷ்டாவிம்சதிபர்யயே |
> த்ரேதாயுகே தாசரதிராமோ நாராயணோஅவ்யய: ||"

(இ-ள்.) "இருபத்தெட்டாவது பரிவிருத்தியில் த்ரேதாயுகத்தில் சாக்ஷாத் நாராயணன் தசரத குமாரனாகிய ஸ்ரீ ராமனாக அவதரிக்கப்போவதாய் ப்ரஹ்மதேவர் என்னிடம் அருளிச்செய்திருக்கிறார் என்பதாக இலங்கணி என்பவள் திருவடி (ஆஞ்சநேயர்)யிடம் உரைத்தனள்.

(6) விவஸ்வான = ஸூர்யன்

அவருடைய புத்ரர் = மனு (வைவஸ்வதமனு)
அவருடைய புத்ரர் = இக்ஷ்வாகு

இக்ஷ்வாகு பரம்பரையில் தசரதசக்ரவர்த்திக்கு ஸ்ரீராமபிரான் அவதாரம்.

(7) வால்மீ ரா. பால கா. சரு. 18. சுலோ. 9, 10, 11.

> "ததஸ்ச த்வாதஸே மாஸே சைத்ரே நாவமி கேதிதெள ||
> நக்ஷத்ரே அதிதி தைவத்யே ஸ்வோச்ச ஸம்ஸ்தேஷு
> [பஞ்சஸு |
> க்ரஹேஷு கர்க்கடே லக்னே வாக்பதாவிந்து நாஸஹ ||
> ப்ரோத்யமானே ஜகன்னாதம் ஸர்வலோக நமஸ்க்ருதம் |
> கௌஸல்யா ஜநயத்ராமம் ஸர்வலக்ஷண ஸம்யுதம் ||
> விஷ்ணோரர்த்தம் மஹாபாகம் புத்ர மைக்ஷ்வாகவர்த்தனம் |"

(இ-ள்.) "பின்பு பனிரண்டாவது மாஸமான சித்திரை மாஸத்தில் நவமிதிதி புநர்வஸு நக்ஷத்திரம்கூடின தினத்தில் ஐந்து க்ரஹங்கள் உச்சமாயிருந்தவளவில், கர்கட லக்னத்தில், குரு சந்திரனோடு கூடியிருந்தவளவில், கௌஸல்யாதேவி, ஸகல ஜகத்துக்கும்

நாயகராய், ஸமஸ்த பிராணிகளுக்கும் வந்தநீயராய், ஸாமுத்ரிக சாஸ்திரத்திற் சொல்லிய ஸமஸ்தமான உத்தம புருஷலக்ஷணங் களோடு கூடினவராய், விஷ்ணுவினுடைய பேர்பாதி பாகத்தினு லுண்டானவராய், மஹாபாக்யவானாய், பித்ருக்களை நரகத்தினின்று முத்தரிப்பிக்குமவராய், தசரத மஹாராஜனுடைய மனோல்லாசத் வர்த்த வ்ருத்திபன்னுபமமான ஸ்ரீ ராமபிரானைப் பெற்றனள்.

(8) கம்ப-ரா. பால-கா. திரு அவதாரப்படலம் 104, 110.

"ஒரு பகலுலகெலா முதரத்துட் பொதிந்
தருமறைக் குணர்வரு மவனை யஞ்சனக்
கருமுகிற் கொழுந்தெழில் காட்டுஞ் சோதியைத்
திருவுறப்பயந்தன டிறங்கொள் கோசலை."

"மேடமாமதி திதி நவமி மீன் கழை
நீடுநா மாலை கற்கடக நீதிசேர்
ஓடமா களிறனுதயமாகி கோசல
நாடினேகாதசர் நால்வருச்சசே."

இந்த ஆதாரங்களினால், வைவஸ்வத மன்வந்தரத்தில் 28-வது சதுர்யுகமான த்ரேதாயுகத்தில் சித்திரை மாஸத்தில் சுக்லபக்ஷ நவமி திதி, புனர்வஸு நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் ஸ்ரீமந்நாராயணனே தசரத சக்ரவர்த்திக்கு திருக்குமாரராக ஸ்ரீராமனென்னும் திருநாமத் துடன் அவதாரம் செய்ததாக ஏற்படுகிறது.

## ஸ்ரீமத் ராமாயண கரணகாலம்.

ஸர்வஜ்ஞரான ஸ்ரீராமபிரான் மகுடாபிஷேக மஹோத்ஸவம் கண்டருளிய பின்னர், தருமநெறி தவறாது இராஜ்ய பரிபாலனம் செய்தும் ஒழிந்த வேளைகளில் வைதேஹியுடன்கூடி உத்தியான வனத்திற்குச் சென்று நாடோறும் விநோதமாக பொழுது போக்கி யும் வந்தனர். ஸ்ரீராமபிரான் பிரதிதினம் முற்பகலில் ராஜாங்க ஸம் பந்தமான சகல காரியங்களையும் நீதிமுறை தவறாது நிறைவேற்றி அதன்பின்னர் அந்தப்புரஞ் சென்று பிராட்டியுடன் அகமகிழ்ந் திருப்பார். ஜானகி ரகுநாயகர்களுக்கு இவ்விதமாகவே

"தசவர்ஷஸஹஸ்ராணி கதாநி ஸுமஹாத்மநோ: |"

(வா—ரா. உத். கா. ஸரு. 42. ஸ்லோ. 26.)

பதினாயிரமாண்டுகள் பெருமையாகச் சென்றன.

வா—ரா. உத்-கா. சரு. 42. ச்லோ. 31, 32

"அப்ரவீச்ச வராரோஹாம ஸீதாம் ஸுரஸுதோபமாம் |
அபத்ய லாபோ வைதேஹி த்வய்யயம் ஸமுபஸ்தித: ||
கிமிச்சஸி வராரோஹேகாம: கிம் க்ரியதாம் தவ | "

(இ-ள்.) ஒருநாள் ஸ்ரீராமபிரான் ஜானகியை நோக்கி "ஹே! வைதேஹி! நீ கர்ப்பந்தரித்திருப்பது எனக்கு மிகவும் களிப்பைத் தருகின்றது. இப்பொழுது நீ யாது விரும்புகின்றனை? நீ யாது வேண்டினும் அதனை யான் நிறைவேற்றுவேன்" எனக் கூறினர்.

அதற்கு பிராட்டி, கங்கைக்கரையிலுள்ள மிகப்பரிசுத்தமான தபோவனங்களுக்குச் சென்று, அங்கு, மகரிஷிகளுடைய பாத மூலத்தில் சிலநாள் பணிவிடை செய்து ஆனந்தமனுபவிக்க வேணு மென்ற ஆசையிருப்பதாகத் தெரிவித்தாள்.

அந்த சமயம் ஸ்ரீராமபிரான் சீதாபிராட்டியை இராவண கிர ஹத்திலிருந்து அழைத்துவந்ததைப்பற்றி சிலர் அபவாதம் சொல்வ தாகக்கேட்டு, பிராட்டி கருவிருந்த காரணத்தையே வியாஜமாகக் கொண்டு, அவளை யழைத்துக்கொண்டுபோய்க் கங்காநதி தீரத்தில் வான்மீக முனிவராச்சிரமத்தருகே விட்டுவிடுமாறு, இளையபெருமா ளுக்கு நியமித்தருளினர்.

சீதாபிராட்டி தனியே புலம்பித்தவிப்பதை ரிஷிகுமாரர்களால் கேள்வியுற்ற வான்மீக முனிவர் உடனே அவ்விடஞ்சென்று, பிராட் டியை சமாதானப்படுத்தித் தமது ஆச்சிரமத்திற்கு அழைத்துவந்து, அங்குள்ள ரிஷிபத்னிகளிடம் ஒப்புவித்து அவளைக் கருத்துடனே காத்துவருமாறு கட்டளையிட்டனர்.

யமுனாதீரவாஸிகளான முனிவர்கள் மூலமாக மதுவின் மகிமை யையும், அவனது மகன் லவணாசுரனது வரலாற்றையும் கேட்டு ஸ்ரீராமபிரான், லவணாசுரனை வதைக்குமாறும் அவனது நகரத்தி லேயே யிருந்து ராஜ்யபரிபாலனஞ் செய்துவருமாறும் சத்ருக்ன ருக்கு நியமித்தருளினர். லவணாசுரனுடன் போர்புரிவதற்காக அயோத்தியிலிருந்து புறப்பட்டு மூன்றும் நாள், சத்ருக்னர், வான் மீகி ஆச்சிரமத்தில் தங்கினர்.

தசரத சக்கிரவர்த்தியார், தனக்கு அநேக ஆயிரம் ஆண்டுகளுக்குப்பின்னால் அசுவமேதயாகமும், புத்திர காமேஷ்டியும் செய்ததின் பயனாக கிடைத்த ஜ்யேஷ்ட புத்திரனான ஸ்ரீராமச்சந்திரனையும் குலகுருவான வசிஷ்டர், கட்டளையிட்டவுடன் விசுவாமித்ரமுனிவரிடம் ஒப்புவித்ததினால், மிக ப்ரேமாஸ்பதமான-வஸ்துவாக இருந்தாலும் ஆசார்யன் நியமனமானால், அதைக் கொடுப்பதில் கொஞ்சமும் சங்கிக்கக்கூடாதென்பது சூசிதம்.

"தொல்லிருடனைக் கொலைதொடர்கின்றளைபுவ
கொல்லிலை நாசியைக்கொய்து நீக்கினாய்
வல்லை நீ மனுமுதன் மரபினோ யெனப்
புல்லினனுவகையிற் பொருமி விம்முவான்."

(ஆரணி-அயோமுகி. 92.)

என்றபடி.

அயோமுகி யென்னும் அரக்கியைக் கொலை செய்யாது, அவளது உறுப்புகளை மாத்திரம் அறுத்துவிட்ட இளைய பெருமாளை ஸ்ரீராமபிரான் மிக்க மகிழ்ச்சியுடன் புகழ்ந்திருப்பதால் ஸ்திரீ ஹத்தி மகாபாதகம் என்பதும் தர்ம சாஸ்திரத்திற்கு ஒவ்வாத செய்கையென்பதும் ஸ்பஷ்டம்.

விச்வாமித்ர மஹரிஷி, தாடகை-வரலாறு முழுமையுங் கூறிய பின்பு, ஸ்ரீராமபிரானை நோக்கி:—

"ஏனாம் ராகவதுராவ்ருத்தாம் யக்ஷீம் பரமதாருணாம் |
கோப்ராஹ்மண ஹிதார்த்தாய ஜஹிதுஷ்ட பராக்ரமாம் ||
நஹிதே ஸ்திரீவதக்ருதே க்ருணா கார்யாநரோத்தமா |"

(வா-ரா. பா-கா. சரு 25. சுலோ 16, 18.)

(இ-ள்) ஸ்ரீராமா! சாதுக்களுக்கு ஹிதஞ்செய்யும்பொருட்டு கொடுமையும் கெட்ட நடக்கையுமுடைய இந்த தாடகையை நீ கொலை செய்யக் கடவை. ஸ்திரீ ஹத்தி எப்படி செய்யலாமென்று நீ அருவருப்புக் கொள்ளவேண்டாம்" எனக் கட்டளை யிட்டனர்.

"ஈறினல்லறம் பார்த்திசைத்தேனிவட்
சீறி நின்றிது செப்புகின்றேனலேன்
ஆறி நின்றதறனன்றரக்கியைக்
கோறியென் றெதிரந்தணன் கூறினான்."

(கம்ப-ரா. பா-கா. தாடகை 16.)

என்ற கம்பராமாயணச் செய்யுள் இங்கு நோக்கத்தக்கது.

முனிவருடைய அந்தக்கட்டளையை கேட்டருளி ஸ்ரீராம பிரான் அம்முனிவரை நோக்கி:—

"ஸோஹம் பிதுர்வச:ச்ருத்வாசாஸனுத் ப்ரஹ்மவாதிந: |
கரிஷ்யாமி ந ஸந்தேஹஸ்தாடகாவத முத்தமம். ||"

(வா-ரா. பா-கா. சரு 26. சுலோ 4.)

(இ-ள்) "ஸ்வாமி! அடியேனுடைய பிதா, தேவரீர் கேஷிக்கும் காரியத்தைச் செய்யும்படி அடியேனுக்குக் கட்டளையிட்டிருப்பதால் அந்தப்படி பரம்ஹ வாதியரான தேவரீருடைய கட்டளைப்ர காரம் அடியேன் தாடகையை இப்போதே வதம் செய்கிறேன். சந்தேகமில்லை," என்றருளிச் செய்தனர்.

கம்ப ராமாயணத்திலும்,

"அய்யனங்கது கேட்டறனல்லவும்
எய்திலைது செய்க வென்றேவிளுல்
மெய்ய நின்னுரை வேதமெனக்கொடு
செய்கையன்றோ வறஞ்செய்புமாறென்றுன்."

(கம்ப-ரா. பா-கா. தாடகை 17.)

எனக் கூறப்பட்டிருக்கிறது.

பெண் கொலை பெரும்பாதகமான காரியமாயிருந்தும் ஸ்ரீராம பிரான் தாடகையை வதஞ்செய்ய விசைந்ததினுல் ஆசார்யன் நியமனமானுல் எவ்வித காரியத்தையும் சிஷ்யன் சங்கிக்காமல் செய்ய வேண்டும் என்ற தருமம் சூசிதம்.

10. இக்ஷ்வாகு குலத்தைச் சேர்ந்த திரிசங்கு என்னும் அரசன், மனித சரீரத்துடன் ஸ்வர்க்கத்தை யடையும்படியான யாகம் ஒன்று நடத்தித்தரவேண்டுமென, தனது குலகுருவான வசிஷ்ட மகா முனிவரிடம் விண்ணப்பஞ்செய்ய அதற்கு முனிவர் அது சாஸ்திர விரோதமான காரியமாதலால், அந்தக்காரியத்தில் "யான் முயலேன்." என அருளிச்செய்தனர். அதன் பின் அவ்வரசன்

வசிஷ்ட மகாமுனி திருக்குமாரர்களான நாற்றுவரையுங் கிட்டி அவ வேள்வியை செய்விக்குமாறு பிரார்த்தித்தனர். வசிஷ்ட புத்திரர் நாற்றுவரும் அதைச் செவியுற்று அவ்வரசனை நோக்கி "அரசனே! எமது தந்தையார் முடியாதென மறுத்திருக்க நாங்கள் அதனை எவ வண்ணமுற்றுவிப்போம். நீ உன் நகரம் சோர்ந்து வாழக்கடவை." என்றுரைத்தனர். அம்மொழிகளைச்செவியுற்று கடுஞ்சினங்கொண்டு அவர்களை நோக்கி

வா-ரா. பா-கா. சரு. 58. சுலோ. 8, 9.

"ப்ரத்யாக்யா தோஸ்மி குருணுகுரு புத்ரை ஸ்ததைவச |
அந்யாம் கதிம் கமிஷ்யாமி ஸ்வஸ்தி வோஸ்துத போதனு: ||"

(இ-ள்) குரு குமாரர்களே! என்னை ஆசிரியரும் மறுத்து, ஆசிரிய குமாரர்களாகிய நீங்களும் மறுத்துவிட்டபடியால், யான் வேறு ஆசிரியரைத் தேடி வேள்வியை முடித்துக்கொள்ளுகிறேன்." னன்.

"ரிஷிபுத்ராஸ்துதத்ச்ருத்வா வாக்கியம் கோராபிஸம்ஹிதம் |
சேபு;பரமஸம் க்ருத்தா ஸ்சண்டாலத்வம் கமிஷ்யஸி || "

குரு புத்திரர்கள் அரசனது இறுமாப்பை யறிந்து, வெகுண்டு "அறிவில்லாதவனே! நீ நீசனுகக் கடவை." எனச் சபித்தனர்.

"நினக்கெலா நாகினைய நீணிலத்தியாவரேனும்
மனக்கினியாரை நாடி வகுப்பல் யான் வேள்வி யென்னச
சினக்கொடுந் திறலோய் முன்னர்த் தேசிகற்பிழைத்துவேறோர்
நினைக்கிதனுடி நின்றய் நீசனும் விடுதியேன்றன்."

(கம்ப-ரா) பா-கா. மிதிலை 109,)

"அதராத்ராயாம் வ்யதீதாயாம் ராஜா சண்டாலதாங்கத. | "
என்றபடி.

அந்த சாபத்தால் திரிசங்கு மன்னனும் சண்டாளத்தன்மையை யடைந்து, விச்வாமித்திர முனிவர் தவஞ்செய்யும் இடத்தைத் தேடிப்போய் அம்முனிவரைக் கண்டு சரணமடைந்து, தான் புலைய னுனதின் காரணத்தைத் தெரிவித்து, தனக்கு அவ்வேள்வியை முற் றுவிக்க வேண்டுமெனப் பணிந்து வேண்டினன். கௌசிக முனி

வரும் ஏற்கெனவே வசிஷ்டரைப் பகைத்தவராதலால், திரிசங்குமன்னனுக்கு அபயமளித்து யாகஞ்செய்விக்க அங்கீகரித்தனர். விச்வாமித்திர மாமுனி யாசகாராகயிருந்துகொண்டு விதிப்ரகாரம் யாகத்தை நடத்தியபொழுது, தேவர்களை மந்த்ரங்களால் அழைத்தும், இவ்வியாகம மறைகளில் கூறப்படாததென்று அவிர்ப்பாகம் வாங்க வராமல் நின்றுவிடுதலும், முனிவர் கடுஞ்சினங்கொண்டு, நெய்த்துடுப்பை உயரவிடுத்துப் பிடித்து திரிசங்குவை நோக்கி

வா-ரா. பா-கா. சரு. 60. சுலோ. 13, 14.

"பச்யமே தபஸோ வீர்யம் ஸ்வார்ஜிதஸ்ய நரேச்வர |
ஏஷத்வாம் ஸ்வசரீரேண நயாமி ஸ்வர்க்கமோஜஸா ||
ஸ்வார்ஜிதம் கிம் சிதப்யஸ்தி மயா ஹிதபஸ:பலம் |
ராஜம்ஸ்த்வம் தேஜஸா தஸ்ய ஸசரீரோ திவம் வ்ரஜ ||"

(இ-ள்) "அரசனே! என் அருந்தவத்தின் மகிமையால், இதோ நின்னை இச்சரீரத்துடன் விண்ணுலகிற் கேற்றுவிக்கின்றேன், நின்னை, ஸ்வர்க்கத்தை யடைவிக்கவல்ல, தவத்தின் சக்தி எனக்கிருப்பது உண்மையாயின், அச்சக்தியால் நீ விண்ணுலகையடையக்கடவை." என்றருளிச் செய்தவுடன், அங்கெழுந்தருளியிருந்த முனிவர்களுடைய கண் முன்பே திரிசங்கு மெலெழுந்து வானுலகைக் கிட்டினன். இந்திரனும் இவன் வருகையைக்கண்ணுற்று

வா-ரா. பா-கா. சரு. 60. சு. 17.

"த்ரிசங்கோ கச்ச பூயஸ்த்வம் நாஸிஸ்வர்க்க க்ருதாலய: |
குருசாப ஹதோ மூடபதபூமி மவாக்சிரா: ||"

"அடா! மூடா! நீ குரு சாபத்தால் புலையனாய் விட்டபடியால் இவ்வுலகில் சிறிதிடமும் நினக்குக் கிடைத்தலரிது. நீ மீண்டும் பூமிக்குச் செல்லக் கடவை" யெனத் தலை கீழாகத் தள்ளிவிட்டனன்

"ஆக்க வன்றுறக்க மெய்தவமரர்கள் வெகுண்டு ஈசன்
ஈங்கு வந்திடுவ தென்னே யிருநிலத்திழிக வென்னத்
தாங்கலில் கவிழ்வான் மற்றுத்தாபதசரணமென்ன
ஒங்கின னின்னில்லென்ன வுரைத்தரு மொக்க நக்கான்."
(கம்-ரா. பா-கா. மிதிலை 116.)

இந்த இதிஹாசத்தால் குருவை அதிகமாக நிர்ப்பந்தம் செய்யலாகாதென்பதும், தனது குலாசாரியனை விட்டு வேறொரு ஆசிரி

ஆச்ரயிக்கக் கூடாதென்பதும் சூசிதம்.

---

## இரண்டாவது சத்புத்திரனை அடைதல்.

*வா. ரா. பால-கா. சரு. 8. ச 1.*

"தஸ்ய த்வேவம் ப்ரபாவஸ்ய தர்மஜ்ஞஸ்ய மஹாத்மந: |
ஸுதார்த்தம் தப்யமாநஸ்ய நாஸீத் வம்சகர: ஸுத: ||"

(இ-ள்.) தசரதச் சக்கரவர்த்தி இப்படிப்பட்ட மகிமையுள்ளவராயும் தர்மாத்மாவாகவுமிருந்தும், சந்தானத்துக்காக பல தவங்கள் செய்தும், அவருக்கு வம்சம் பெருகும்படியான குமாரன் உண்டாகவில்லை. அதனால் சக்கரவர்த்தி மிகவும் கவலையடைந்து மந்திரிகளோடுகூட யோசித்து, சந்ததி யடையும்பொருட்டு அஸ்வமேத யாகம் செய்ய நிச்சயித்தனர்.

"அறுபதினாயிர மாண்டு மாண்டற
உறுபகை யொடுக்கி யிவ்வுலகை யோம்பினேன்
பிறிதொரு குறையிலை யெற்பின் வையகம்
மறுகுறு மெனபதோர் மறுக்கமுண்டரோ."

என்ற கம்பராமாயண பாலகாண்டச் செய்யுள் இங்கு நோக்கத்தக்கது. "மைந்தரை யின்மையில் வரம்பில் காலமும் நொந்தனென்." என்றார் மேல் அயோத்தியாகாண்டத்திலும் நன்மக்களைப் பெறுவதாலடையக்கூடிய இம்மைப்பயன்.

"மக்கள் மெய்தீண்டலுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்டலின்பஞ் செவிக்கு"
அமிழ்தினுமாற்ற வினிதே தம்மக்கள்
சிறுகை யளாவிய கூழ்" (குறள்)

என்றபடி, தம்மக்களினுடலைத் தொடுதல் உடற்கின்பமாயும் அவர் சொற்களைக் கேட்டல் செவிக்கின்பமாயும் அவர்கள் சிறு கையாலளாவிய சோறானது, அமிர்தத்தினுமிக வினியதாயும இருப்பதால், உலகில் ஒருவன் வேண்டிய அளவு செல்வமும், கீர்த்தியும் பெற்றிருந்தாலும் மக்கட் செல்வம் ஒன்றை பெறாவிடில் அவை யனைத்தும் பயனில்லை.

"பொன்னுடையரேனு புகழுடையரேனுமற்
றென்னுடைய ரேனுமுடையரோ—இன்னடிசிற்
புக்களையுந் தாமரைக் கைப்பூ நாறுஞ் செய்யவாய்
மக்களை யிங்கில்லாதவர்."          என்ற நளவெண்பாவும்

"தண்ணந் தாமரைக் கண்ணனே! கண்ணா!
தவழ்ந்தெழுந்து தளர்ந்ததோர் நடையால்
மண்ணில் செம்பொடி யாடி வந்து என் தன் மார்வில்
மன்னிடப் பெற்றிலேன அந்தோ!
வண்ணச் செஞ்சிறு கைவிரலனைத்தும்
வாரிவாய்க் கொண்ட அடிசில் மிச்சில்
உண்ணப் பெற்றிலேன் ஓ! கொடுவினையேன்.
என்னை என் செய்யப் பெற்றது எம்மோயே"

என்ற பெருமாள் திருமொழியும் நோக்கத்தக்கன.

மறுமைப்பலன்கள். (1) ருணநிவர்த்தகத்வம்
(2) நரகோத்தாரகத்வம்
(3) உத்தம லோகப்ராபகத்வம்
(4) ஸம்ஸாரநிவிருத்திகரத்வம்

என நான்கு.

1. ருணநிவர்த்தகத்வமாவது, பிதிர்க்கடனிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளுதல்.

அதாவது:— ஸ்ரீ மகாபாரதம் (மொழிபெயர்ப்பு) ஆதிபர்வம் அத்- 126. பாண்டு குந்தியை நோக்கி (பெண்ணே! பிதிர்க்கள், தேவர்கள், மனிதர்கள், ரிஷிகள் ஆகிய நால்வர் விஷயத்திலும் கடன்பட்டவனாகவே மனிதன் பூமியிற் பிறக்கிறான்.

எவன் தருமத்தை யறிந்து அந்தந்தக் காலங்களில் இந்தக் கடன்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளாமலிருப்பானோ அவனுக்கு நல்ல லோகங்களில்லை என்று லோகங்களை யறிந்தவர் நினைக்கின்றனர். தேவர்களை யஜ்ஞங்களினாலும், ரிஷிகளை வேதாத்தியயனம செய்வதினாலும், பிதிர்க்களை புத்ரஸந்தானத்தை உண்டு பண்ணுவதனாலும் சிராத்தம் செய்வதினாலும், மனிதர்களை அன்பினாலும (மனிதன்) ஆராதிக்கவேண்டும். நான் என் தர்மத்தைச் செய்து ரிஷிகள், தேவர்கள், மனிதர்கள் இவர்களுடைய கடன்களிலிருந்து என்னை விடுவித்துக்கொண்டேன். பிதிர்க்களின் கட-

னிலிருந்து மாத்திரம் விடுவித்துககொள்ளவில்லை. அந்தக் கடன் மற்றவற்றைவிடப் பெரிது. எனது தேகம் போகும்போது பிதிர்க்களுக்கே நாசம் வருமென்பது நிச்சயம். மற்ற மூன்றுக்கும் கெடுதல் வரும்போது தான்மட்டும் கெடுவன். ஆதலால், இந்த லோகத்தில் புத்திர ஸந்தானம் கிடைப்பதற்காக உத்தமர்களான பிராமணர்கள் பிரவர்த்திக்கின்றனர். "என்று உரைத்திருப்பதால், சத்புத்திரனைப்பெறுவதால் பிதிர்க்கடனிலிருந்து தன்னைவிடுவித்துக்கொள்ளுகிறான்.

"தேவரிஷி பித்ரு விப்ராணமங் ருணேஷ் பிததாத்மக: என்று இராமபிரானை நோக்கி சக்கரவர்த்தி கூறியிருப்பது (அயோத்தியா காண்டத்தில்) நோககத்தககது.

2. நரகோத்தாரகத்வம்.

"புந்நாம்நோ நரகாத்ராயத இதி புத்ர:" |

"புந்நாம் நோநரகாத் யஸ்மாத் பிதரம த்ராயதே ஸுத: |
தஸ்மாத் புத்ர இதிப்ரோக்த: பித்ரூந் யத்பாதி வைஸுத:||"

பிள்ளையானவன் பிதாவையும் பிதராகளையும் புத் என்னும் நரகத்தில் வீழ்ந்தழுந்தாமல் (தான் செய்யும் நற்சடங்குகளினால்) நற்கதியேற்றி காக்கின்றமையால் புத்திரனெனப்படுகின்றனன். ஆதலால் சத்புத்திரனைப் பெறுவதால் நரகத்தினின்றும் விடுதலையடைகிறான்.

3. உத்தமலோகப்ராபகத்வம்.

"நரபுத்ரஸ்ய லோகோஸ்தி" என்றபடி.

புத்திரனில்லாதவன் நல்லுலகை யடைய முடியாது.

ஸ்ரீ மஹாபாரதம் (மொழி பெயர்ப்பு) ஆதிபர்வம்.

ஜரத்காரு, என்பவரை நோக்கி, அவருடைய பிதிர்க்கள் கூறியது:

"நாங்கள் யாயாவரர்களென்று பெயருள்ள உக்கிரமான தவமுள்ள ரிஷிகள்; பிராம்மணா! ஸந்ததி குறைந்துபோனதினால் பூமிக்குக் கீழே போய்க்கொண்டிருக்கிறோம்: அதிர்ஷ்டமில்லாத எங்களுக்கு அதிர்ஷ்ட ஹீனனான ஜரத்காரு என்னப்பட்ட ஒருவன் தான் ஸந்ததியாயிருக்கின்றான். அந்த மூடன் தவம் ஒன்றையே பற்றியிருப்பதினால் புத்திரர்களைப் பெறுவதற்குக் காரணமான விவாஹத்தைச் செய்துகொள்ள விருப்பமற்றிருக்கிறான்; அவனுக்குச் சந்

ததியில்லாமற்போனதினால் எங்களுக்கு நாதனாக அவனிருந்தும், நாங்கள் பாபம் செய்தவர்களைப்போல நாதனற்று இந்தப்பள்ளத்தில் தொங்குகிறோம்; மனுஷ்ய லோகத்தில் எவர்களுக்குச் சுகந்தரத்தகுந்த ஸந்ததி இல்லாமலிருக்கிறதோ அவர்கள் புண்ணியம் செய்தவர்களாயினும் அவர்களுக்கு ஸ்வர்க்கத்தில் ஸ்தானமில்லை.", என்று கூறியிருப்பதால், சத்புத்திரனைப் பெறுவதால், ஸ்வர்க்கத்தை யடைகிறான்.

4. வம்சாபிவிருத்திகரத்வம்

"ப்ரஜாதந்தும் மா வ்யவச்சேத்ஸீ:" என்றபடி வம்சாவளியைக் கெடுத்துவிடக்கூடாது.

சூரிய வம்சத்தில் தோன்றிய பகீரதன் என்னும் அரசன் கபில முனிவரின் கோபத்தினால் எரிந்து பஸ்பமாய்க் கிடந்த தனது மூதாதையர்களான அறுபதினாயிரம் சகரர்களைக் குறித்துத் துயரமடைந்து, தேவலோகத்திலிருந்து கங்கையைப் பூலோகத்திற்குக் கொணர்ந்து அந்த ஜலத்தினால் நீற்றின் குவியல்களை நனைத்துப் புனிதமாக்கினான். சகரர்களுமுடனே பரிசுத்தராகி சுவர்க்க லோகத்தையடைந்தனர்.

"பகீர தோபி ராஜ ரிஷிர்கங்கா மாதாய யத்நை: |
பிதாமஹாந் பஸ்மக்ருதாந் பச்யத்தீன சேதந:||
அதகத் பஸ்மநாம் ராசிம் கங்கா ஸலிலமுத்தமம் |
ப்லாவயத் தாத பாப்மாந: ஸ்வர்கம் ப்ராப்தா ரகூத்தம||"*

என விச்வாமித்திர முனிவர் ஸ்ரீராமபிரானை நோக்கிக்கூறிய ஸ்ரீராமாயண வரலாறும்

" த்ரிஸப்தபி: பிதாபூத: பித்ருபி: ஸஹ தேऽநக |
யத் ஸாதோ ऽஸ்ய க்ருஹே ஜாதோ பவாந்வைகுலபாவந: ||"¶

பகவாந் (நரசிம்ம மூர்த்தி)பிரஹ்லாதரை நோக்கி 'ஓ ஸாதுவே குலத்தைப்பரிசுத்தப் படுத்துகிறவனை நீ இந்த குலத்தில் ஜனித்தபடியால் உன்னுடைய பிதா இருபத்தொரு தலைமுறைகளுடன் சுத்தனான்" என அநுகரஹித்தார் என்ற ஸ்ரீபாகவத வரலாறும் நினைக்கத்தக்கன.

---

* வா. ரா. பாலகா. சரு. 43. சுலோ. 44, 45.

¶ ஸ்ரீ பாகவதம் ஸ்க 7. அத். 10. சுலோ. 18.

"ஆனு நன்னெறிக்கமை வருமமை வினுஞ்சி
நானு நங்குல நாயக னகுற வரிகமலத்
தாளினல்கிய கங்கையைத்தந்து தன்னையரை
மீள்வின் னுலகேற்றின னொருமகன் மேனன்."

(1) மூன்றாவது பிதாவின் தருமம். அதாவது புதல்வரைப் பெற்றபின், அவர்களுக்கு ஆவசியகமாக செய்யவேண்டிய தந்தையின் கடமைகள்.

தசரதச் சக்கரவர்த்தி அசுவமேத யாகமும், புத்திரகாமேஷ்டியும் செய்துமுடித்தபின் பன்னிரண்டாவதான சித்திரை மாசத்தில்,

*"ராஜ்ஞ. புத்ரா மஹாத்மாநச் சத்வாரோ ஜஜ்ஞிரேப்ரதக |
குணவந்தோ ஹுரூபாஸ்ச ருச்யா: ப்ரோஷ்டபதோபமா: ||
ஜகு. கலம ச கந்தர்வா நநருதுச்சாப்ஸரோகண: |
தேவதுந்துபயோ நேது: புஷ்பவ்ருஷ்டிஸ்து காச்யுதா |
உத்ஸவச்ச மஹாநாஸீத் அயோத்யாயாம் ஜநாகுலா: ||

பரஸ்பரம் விலக்ஷணகுணமுடையவர்களாயும், காந்தியில் இரட்டைகளான பூரட்டாதி உத்திரட்டாதி நக்ஷத்திரங்களுக்கு ஸமானமானவர்களாயும், நான்கு குமாரர்கள் சக்கரவர்த்திக்கு அவதரித்தனர். அப்பொழுது கந்தருவர் மதுரமாகப் பாடினார்கள்; அரம்பையர் ஆடினார்கள். தேவபேரிகள முழங்கின. ஆகாயத்தினின்று பூமழை பொழிந்தது. அயோத்திமா நகரத்தில் ஜனங்களுக்கு ஒரு பெரிய உச்சவமுண்டாயிற்று.

¶ "ப்ரதேயாம்ஸ்ச ததௌ ராஜா ஸூத மாகதவந்திநாம் |
ப்ராஹ்மணேபயோ ததௌ வித்தம் கோதநாநி ஸஹஸ்ரச. ||"

? "மாமுனிதன்னெடு மன்னர் மன்னவன்
ஏமுறப்புனல்படீஇ வித்தோடின்பொருள்
தாமுறவழங்கி வெண்சங்கமார்ப்புறக்
கோமகர் திருமுகங்குறுகி நோக்கினன்."

சக்கரவர்த்தி உடனே ஸ்நானஞ்செய்துவந்து, ஸூதமாகதவந்திகளுக்கு வஸ்திர பூஷணாதிகளை வெகுமதி செய்தும் பிராம்மணர்களுக்கு வீதைகளும், பசுக்களும் தக்ஷிணைகளுடன் தானமும் செய்தனர்.

---

* க. ரா. அயோத்தி மந்திர 67.
* வா-ரா. பால்-கா. சரு. 18. சு. 16,17,18.
† ஷை சரு. 18. சு. 20.
? க-ரா. பால-கா. திருவவ. } 112

இதனால் புத்ரன் பிறந்தவுடனே பிதா ஸ்நாநஞ்செய்து வித்த, பசு, பொருள் முதலிய தானங்கள் செய்யவேண்டியது அவசியம் என்பது சூசிதம்.

விஷ்ணு புராணத்தில் "ஸசேலஸ்ய பிது:ஸ்நாநம் ஜாதேபுத்ரே விதீயதே" என்று கூறியிருப்பதும்

"தேவாச்ச பிதரஸ்சைவ புத்ரே ஜாதே த்விஜன்மநாம் |
ஆயாந்தி தஸ்மாத் தத்ஹ: புண்யம பூஜ்யம் ச ஸர்வதா ||
தத்ரதத்யாத் ஸுவர்ணம்ச பூமிம் காம் துரகம் ரதம் |
சத்ரம் ச கந்தமால்யம் ச சயனம் சாஸநம் க்ருஹம் ||"

மென வியாசர் கூறியிருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

இதன் கருத்து:— புண்ய தினங்களில் திருவிழாவும், திருவிழாக்காலங்களில் புண்ணிய காலமும் எப்பொழுதும் சேர்ந்துவருவதில்லை. ஆனால் புத்திரன் ஜனித்தபொழுது அந்த கிருஹத்துக்கு தேவர்களும் பிதிரர்களும் வருகிறார்கள். ஆதலால் அந்த தினம் புண்ணிய தினமாகவும், திருவிழா நாளாகவும் ஏற்படுகிறது. ஆகையால் அந்த காலத்தில் தேவர்களையும், பிதிர்களையும் திருப்திசெய்விக்கும் பொருட்டு, பிதாவானவன் ஸ்நாநஞ் செய்து தானங்கள் வழங்க வேண்டுமென்பது.

¶ "அதித்யைகாத சாஹம்து நாமகர்ம ததாகரோத |
ஜ்யேஷ்டம் ராமம் மஹாத்மாநம்பரதம் கைகயீஸுதம் |
ஸௌமித்ரிம் லக்ஷ்மணம் இதி சத்ருக் நமபரம் ஸ்ததா ||
வஸிஷ்ட:பரமப்ரீதோ நாமா நிக்ருதவாம்ஸ்ததா |
தேஷாம் ஜன்மக்ரியாதீநி ஸர்வ கர்மாண்ய காரயத் ||
ஸர்வே வேதவித: சூரா:ஸர்வே லோக ஹிதேரதா: |
ஸர்வே ஜ்ஞாநோபபந்நாஸ்ச ஸர்வே ஸமுதிதாகுணா:" ||

"இத்தகை மாநக ரீரறு நாளும்
சித்தமுறக் களியோடு சிறந்தே
தத்தமையொன்று முணர்ந்தில தாவா
மெய்த்தவனும்ம் விதிப்ப மதித்தான்."

¶ வா. ரா. பாலகா சரு 18, ச. 21, 22, 23, 25, 27.
∴ க. ரா. பாலகா திருவவ } 119,

"கவளமொடு பாயம் விதிமுறை தருகுற்
றிவளவ தென்றொரு கரை பிறிதிலவா
வுவந்தரு மறையினோ டொழி வறுகலையும்
தவள்மதி புரையரனிகர் முனிதரவே."

"யானையுமிரதமு மவ்வுளியு முதலா
வேனைய பிறவு மவ்வியல்பி னினடையுற்
றூனுறு படை பல சிலையொடு பயிலா
வானவர் தனிமுதல் கிளையொடு வளர."

(இ-ள்.) நால்வரும் அவதரித்துப் பதினொரு தினங்கள் கழிந்த பின் வஸிஷ்டமுனிவர், மிகுந்த சந்தோஷமடைந்தவராய், கௌஸல்யா புத்திரருக்கு, இராமரென்றும், கைகேயி புத்திரருக்கு பரதரென்றும், சுமித்திரை குமாரர்களில், மூத்த பிள்ளைக்கு லக்ஷ்மணரென்றும், மற்றொருவருக்கு சத்துருக்னரென்றும் நாமகரணம் சாற்றியும், அப்படியே ஜாத கர்மம்-அன்னப்ராசன-சௌள-உபநயன முதலான-ஸம்ஸ்காரங்களையும் செய்வித்தார்.

## ஜாத கர்ம மந்திரத்தின் பொருள்.

ஸ்ரீமகா பாரதம்-மொழி பெயர்ப்பு-ஆதி பர்வம்-அத்-98.
சகுந்தலை துஷ்யந்தனை நோக்கிக் கூறியது:—

பிராமணர்கள் புத்திரர்களுடைய ஜாத கர்மத்தில் வேதங்களிலுள்ள மந்திரக்கோவையைப் பின் வருமாறு படிக்கின்றனர். உமக்கும் அது நன்றாகத் தெரிந்ததுதான். அவையாவன:- "என் ஒவ்வொரு அங்கத்திலிருந்தும் நீ ஜனித்திருக்கிறாய். என் ஹ்ருதயத்திலிருந்தும் அதிகமாக உண்டாயிருக்கிறாய். புத்ரனென்ற பெயருள்ளவனாகவே நீ இருக்கிறாய். அந்த நீ நூறு வருஷ காலம் ஜீவித்திருக்கக்கடவாய். என்னுடைய உயிர் உன்னால் இருப்பது என்னுடைய ஸந்ததி உன்னால் குன்றாமல் இருக்கவேண்டும். ஆதலால் எனது புத்திரனே! அப்பட்ட நீ நூறு வருஷகாலம் ஸுகமாக ஜீவித்திருக்கக் கடவாய்." என்னும் இந்த மந்திரங்களினால் தந்தைகள் புத்திரர்களை உச்சியில் மோக்கின்றனர்.

என்றிருப்பதால், ஜாதகர்மாவின் அவசியம் விளங்குகிறது.

* க. ரா. பால-திருவவ-127, 128.

நால்வரும், சகல வேதங்களை அத்யயனம் செய்தும், தநூர் வேதம், யானையேற்றம், குதிரையேற்றம், முதலான சகல வித்தை களில் தேர்ச்சியடைந்தும், சகல லோகஹிதங்களில் பிரீதியுடைய வர்களாகவும், ஜ்ஞானமுள்ளவர்களாகவும் ஆனார்கள்.

இதனால் பிதாவானவன், புத்திரனுக்கு ஜாதகாமமுதல் உபநய னம் பரியந்தமுள்ள ஸகல ஸம்ஸ்காரங்களையும் உரியகாலங்களில் செய்வித்து அதன்பின் அவனை நல் ஆசானிடம் ஒப்புவித்து ஸகல சாஸ்திரங்களிலும் தேர்ச்சியடையும்படி செய்விக்கவேண்டுமென்ற தருமம் சூசிதம்.

"தந்தைமகற் காற்றுநன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல்." (குறள்)

''மாலினு லிருவரு முருவி மாசிலாப்
பாலனைப் பயந்தபின் படிப்பியா துயர்
தாலமேற் செல்வமா வளர்த்தறங்கட்கோர்
காலனை வளர்க்கின்ற காட்சிபோலுமே." (நீதிநூல்)

என்பன நோக்கத்தக்கன.

(3) *"அத ராஜா தசரதஸ்தேஷாம் தாரக்ரியாம் ப்ரதி |
சிந்தயாமாஸ தர்மாத்மா ஸோபாத்யாய: ஸ பாந்தவ.||"

(இ-ள்.) பிறகு, தசரதச் சக்கரவர்த்தி தமது புத்திரர் நால்வ ருக்கும் விவாகம் செய்விக்கும்பொருட்டு, மந்திரிகள், புரோகிதர், இனத்தார் முதலானோரை யழைப்பித்து யோசனை செய்தனர்.

இதனால், புத்திரர் குருகுல வாஸஞ்செய்து வித்தைகளைக் கற்ற பின், பிரம்மச்சர்ய ஆச்ரமத்தின் விரதங்களை முடிக்கும்படிசெய்து, அவர்கள் கிரஹஸ்த தருமங்களை அநுஷ்டிக்கும் பொருட்டு அவர் களுக்கு நல்ல கன்னிகைகளை பிதா விவாகஞ் செய்துவைக்கவேண்டு மென்ற தருமம் ஸூசிதம்.

"வேதாநதீத்ய வேதௌ வா வேதம் வாபி யதாக்ரமம் |
அவிப்லுத ப்ரஹ்மசர்யோ லக்ஷண்யாம் ஸ்த்ரியமுத்வஹேத்"||

என்ற யாஜ்ஞவல்க்யர் ஸ்மிருதி இங்கு நோக்கத்தக்கது.

* வா-ரா. பால-கா. சரு. 18 சுலோ. 39.

பெற்றோர்கள் தம்மக்களுக்கு விவாகஞ்செய்விக்கையில் கவனிக்கவேண்டிய முறைகளை பின்னும் விவாகதருமத்தில் பிரத்தியேகமாய் எழுதப்படும்.

முதுமைப் பருவமடைந்தவரான தசரதச்சக்கரவர்த்தி, தனது ஜ்யேஷ்ட புத்திரனும், ஸகல கல்யாணகுணாலங்கிருதனுமான ஸ்ரீராமச்சந்திரனுக்கு, இளவரசு பட்டங்கட்டுவிக்கக்கருதி மந்திரிகளுடன் ஆலோசித்து நிச்சயித்து, நகரத்தாரெல்லோரையும் வரவழைத்து ஸபை கூட்டி அவர்களை நோக்கி

% "பரிச்ராந்தோஸ்மி லோகஸ்ய குர்வீம தர்மதுராம் வஹந் |
ஸோகம் விச்ரமமிச்சாமி புத்ரம் க்ருத்வா ப்ரஜாஹிதே ||
ஸந்நிக்ருஷ்டா நிமாந் ஸர்வா நநுமான்ய த்விஜர்ஷபாந் |

அநுஜ்ஞாதோ ஹி மாம் ஸர்வைர் குணைர் ஜ்யேஷ்டோ மமாத்மஜ: ||

‘‘நங்குலக்குரவர்கணவையி னீங்கினார்
தங்குலப்புதல்வரே தரணிதாங்கப்போய்
வெங்குலப் புலன்கெட வீடுநண்ணினார்
எங்குலப்புறவறெனறெண்ணி நோக்குகேன்

மைந்தரையின்மையில் வரம்பில் காலமும்
நொந்தனெ னிராமனென் னோவைநீக்குவான்
வந்தனனினி யவன்வருந்த யான்பிழைத
துய்ந்தனன போவதொருறுதி யெண்ணினேன்.

ஆதலாவிராமனுக் கரசைநல்கியிப்
பேதமைதாய்வரும் பிறப்பைநீக்குவான்
மாதவந் தொடங்கிய வனத்தைநண்ணுவேற்
கியாது நுங்கருத்தென வினையகூறினான்."

(இ—ள்.) ஸபையோர்களே! எங்கள்குலத்து முன்னோர் குற்றமற அரசாக்ஷிசெய்து மூப்பு அடைந்தபிறகு தமது புதல்வர் அரசளித் தாம் தவஞ்செய்து மோட்சமடைந்தனர். யானும் இதுவரை

% வா-ரா. அயோ-கா. சரு. 2. சு. 9,10,11.
∴ க-ரா. அயோ-கா. } 17,27,31.
மந்திர }

அறுபதினாயிரம் வருடம் நீதிவழுவாமல் அரசபுரிந்து இளைப்புற்ற வனாயினேன். இவ்வளவு காலமும் புத்திரரையடையாததினால் மனம் வருந்தினேன். என் மன்வருத்தத்தைத் தீர்க்கும்பொருட்டு, இராமன், வந்து பிறந்தானாதால், எம்மருகிலிருக்கின்ற உங்களுடைய அநுமதியின்பேரில், எனது ஜ்யேஷ்ட குமாரனை இராகவனுக்குப் பட்டங்கட்டி உலகாளச்செய்து யான் தவஞ்செய்யும்பொருட்டு ஆரணியத்திற்குச்செல்ல விரும்புகிறேன். உங்கள் கருத்து என்ன? என்று கூறினார்.

இதனால் புத்திரன் குடும்ப பாரத்தை வகிப்பதற்குரிய பருவத்தையடைந்தவுடன், அவனிடம் குடும்ப பாரத்தை ஒப்புவித்து விட்டு பிதா ஆத்ம லாபத்தை யடைவதற்குரிய மார்க்கத்தில் பிரவேசிக்கவேண்டுமென்பது சூசிதம்.

"அதீத்ய விதிவத் வேதாந் புத்ராநுத் பாத்ய தர்மத: |
இஷ்டவாச சக்திதோயஜ்ஞைர் மநோமோக்ஷேநிவேசயேத் ||"

என்ற மநுஸ்ம்ருதியும் "புத்ராமுத்பாத்ய ஸம்ஸ்க்ருத்ய வேதமத்யாப்ய வ்ருத்திம் விதாயதாரை: ஸம்யோஜ்ய குணவதி புத்ரேகுடும்ப மாவேச்யக்ருதப்ரஸ் தான லிங்கோ வ்ருத்தி விசேஷா நநுக்ரமேத் "என்ற ஆன்றோர் வாக்யமும் நோக்கத்தக்கன.

(வா. ரா. பால. கா. சரு 61.)

அயோத்தியா புரியை அரசு புரிந்து வந்த அம்பரீஷ மகாராஜன், அசுவமேத யாகஞ் செய்யத் தொடங்கினான். இந்திரன் ஏவுதலின்பேரில், யாகப்பசுத் தொலைந்து போகவே, அதற்குப் பிராயச்சித்தமாக நரமேதஞ்செய்யவேண்டுமென்று புரோஹிதர் சொன்னதினால், ஆண்மகனொருவனை விலைக்கு வாங்கும் பொருட்டு அரசன் பலவிடங்களிலும் சென்றும நரப்பசு வாய்க்காமல், பிருகுதுங்க மென்னும் மலையடிவாரத்தில, மூன்று மைந்தர்களோடும் பத்தினியோடும் கூடியிருந்த, ரிசீகரென்னும் முனிவரைக்கண்டு. பணிந்து "ஸ்வாமீ அடியேன் அம்பரீஷன் என்னும் அரசன். யான் அசுவமேத யாகஞ்செய்கையில், பசுக் கெட்டுப்போயினமையால, நரமேதம் செய்ய வேண்டியிருக்கிறது, எங்கும் நரப்பசு வாய்க்கவில்லை ஆதலால் அடியேனிடம நூறாயிரம் பசுக்களை விலையாகப் பெற்றுக்

கொண்டு, இச்சிறுவர் மூவருள் ஒருவனைத் தேவரீர்; க்ரயசுவாய்த் தந்தருள வேண்டு" மென்று பிரார்த்தித்தனன். அதற்கு முனிவர்

∴ "நாஹம் ஜ்யேஷ்டம் நரச்ரேஷ்ட விக்ரீணியாம கதஞ்சன" |

அம்பரீஷா! யான் மூத்த குமாரனை யொருகாலும் விலைக்குக் கொடேன் என்றுரை செய்தனர். அதைக் கேட்ட ரிசிகரின் பத்தினி, அரசனை நோக்கி

* "தஸ்மாத் கநீயஸம் புத்ரம் நதாஸ்யே தவபார்த்திவ" |
"ப்ராயேண ஹி நரச்ரேஸ்ட ஜ்யேஷ்டா: பித்ருஷு வல்லபா: |
மாத்ரூணாஞ்ச கநீயாம்ஸஸ் தஸ்மாத்ரக்ஷே கநீயஸம்" ||

"அரசனே! யான் இவ்விருவரினும் இளையோனாகிய சுனகன் எனபவனைக் கொடுப்பதில்லை. மேலும், பெரும்பாலும் தந்தையருக்கு முதற்பிள்ளையிடத்தும், பெற்ற தாயாருக்குக் கடைப பிள்ளை யிடத்தும் அன்பு இயல்பாக உளதன்றோ! ஆதலால கடைப் பிள்ளை எனக்குரியனாகக்கடவன்." என்று மொழிந்தனள்.

% "கவாம் சதஸஹஸ்ரேண சுன: சேபம் நரேச்வர: |
க்ருஹித்வா பரமப்ரீதோ ஜகாம ரகுநந்தந" ||

அம்பரீஷ மஹாராஜன் மனமகிழ்ந்து இலட்சம் பசுக்களை ரிசிக முனிவருக்குச் செலுத்திவிட்டு, சுனச்சேபனை (நடுப்பிள்ளையைப்) பெற்றுக்கொண்டு சென்றனன்.

∴ "நற்றவ ரிசிகன் வைகு நனைவரும் பழுவ கண்ணிக்
கொற்றவன் வினவலோடு மிசைத்தனர் குமரர் தம்முன்
பெற்றவ ளிளவலெற்கே யென்றனன் பிதா முன்னென் றுன
மற்றை யமைத்தனக்கு மன்னவன நன்னை நோக்கி"

"கொடுத்தருள் வெறுக்கை வேண்டிற் றெற்கமாம் விழுமங்குன்ற
வடுத்தெனை வளர்த்த தாதைக்கென்ற வற்றெழுது வேந்தன
தடுப்பருந் தேரி னேறித் தடையிலாப் படர்தலோடும்
சுடர்க்கதிர்க் கடவுள் வானதஅச்சியஞ் சூழல் புக்கான்."

என்பன நோக்கத்தக்கன,

---

* பா. ரா. பாலகா சரு 61. சு. 15, 17, 18,

% வா. ரா. பாலகா. சரு. 61. சு. 22.

∴ க. ரா. பாலகா. மிதிலை 121, 122.

இதனால் பிதாவானவன், ஜ்யேஷ்ட புத்திரனை, ஒருவருக்கும் கொடுக்கக் கூடாதென்பதும் மற்ற புத்திரரை ஒருவருக்கு ஸ்வீகாரமாகவோ, க்ரயமாகவோ கொடுப்பதற்கு பிதாவுக்கு அதிகாரமுண்டென்பதும் ஸூசிக்கப்பட்டது.

"நஜ்யேஷ்ட புத்ரம் தத்யாத் க்ருண் ஹீயாத் வாஸஹிஸந்த
நாய பூர்வேஷாம் |

என்ற வஸிஷ்டருடைய வசனமும்

"சோணித சுக்ல ஸம்பவோ மாத்ருபித்ரு நிமித்தக: | தஸ்ய
ப்ரதான பரித்யாக விக்ரயேஷு மாதாபிதரௌ பவத: ||

என்ற போதாயனருடைய வசனமும் கவனிக்கத்தக்கன.

நான்காவது புத்திரரின் தருமம்:—

(1) இராம லக்ஷ்மண பரத சத்ருக்னர் நால்வரும்

"சுச்ரூஷமாணா: பிதரம் வர்தயந்தி நரர்ஷபா: |" என்றபடி தாய் தந்தையர்களுக்கு மனம் கோணாமல் பணிவிடைகள் செய்து வாழ்ந்திருந்தனர்.

திருச்சித்திரகூடத்தில் ஸ்ரீராமபிரான் பரதாழ்வானைப் பார்த்து "அடா, தம்பி

"கச்சித் சுச்ரூஷஸே தாத பிதரம் ஸத்யவிக்ரமம். |"

என்றபடி மிகவும் சத்யவாதியும், பராக்ரமசாலியுமான தந்தையற்கு நீ பணிவிடை செய்கின்றனையா?" என வினவியருளினர்.

இவைகளினால் புத்திரன், பிதாவுக்கு சுச்ரூஷை செய்யவேண்டியது முக்கியமான தருமமென்பது சூசிதம்.

பெற்றோர்களுக்குப் பணிவிடை செய்வதினால் அடையும் பலன்:—

ஒரு ரிஷிகுமாரன் ஓர் வனத்தில் கட்புலனிழந்தவர்களும் மூப்பினர்களும் மிகத்தளர்ந்தவர்களுமான தன் தாய்தந்தையர்களுக்கு மிக அன்போடு பணிவிடைசெய்தும், அவர்களுக்கு ஆகாராதிகள் கொடுத்தும் போஷித்தும் வந்தனன். ஒருநாள் அந்த ரிஷிகுமாரன் தன் பெற்றோர்களுக்கு தண்ணீர் கொண்டுவரும் பொருட்டு, சரயூ நதியில் குடத்தில் நீரை மொள்ள, அத்தொனி யானை நீர்குடிக்கும்

தொனி போல் ஒலித்தது. அஃது யானை யென்றெண்ணி, அங்கு வேட்டைக்குச் சென்றிருந்த, தசரத சக்ரவர்த்தி, அவ்விடத்தைக் குறிப்பிட்டு சரம் தொடுத்து விடுத்தனர். அச்சரம் ரிஷி குமாரன் மார்பில் தைக்க, 'ஐயோ' என்று கூவி விழுந்தான். உடனே சக்ர வர்த்தியார் அங்கு சென்று பார்க்க, ரிஷிகுமாரன் என அறிந்து தான் அறியாமையால் செய்த தவறை மன்னிக்கும்படி பலவாறு வேண்டி, அந்தப் பாணத்தை யவன் மார்பினின்று மெடுத்தனர். ரிஷி குமாரன் கேட்டுக்கொண்டபடி அவனுடைய பெற்றோர்களுக் குத் தண்ணீர் கொண்டுபோய்க் கொடுத்து அவர்களையும் அங்கு கொண்டு வந்து சேர்த்து தன்னை மன்னிக்கும்படி வேண்டினர். அத்தம்பதிகளிருவரும் பிள்ளையைத் தடவிப்பார்த்து உயிர் நீங்கிய உடலின் மேல் விழுந்து அக்குமாரனுக்குச் செய்யத்தக்க கடன்களை செய்தனர். அப்பொழுது அக்குமாரன் திவ்ய தேகம் பெற்று தேவேந்திரனுடன் திவ்ய விமானமேறி வானுலகம் செல்லமுயன்று தாய் தந்தையர்களை நோக்கி "தந்தையர்களே!

¶ "ஸ்தான மஸ்மி மஹத்ப்ராப்தோ பவதோ:பரிசாரணாத்
பவந்தாவபிச க்ஷிப்ரம்மம மூலமு பைஷ்யத:"

என்றபடி தேவரீர்களுக்கு பணிவிடை செய்த நற்செயலினால், அடியேன் சிறந்த நற்கெதி யடைந்தேன்; தேவரீர்களும் விரைவில் என்னருகில் வந்து சேருவீர்களென்றான்." பிறகு அம்முனி புத்தி ரன் அவ்விமானத்துடன் தேவலோகம் போய்ச் சேர்ந்தனன்.

"உண்ணீர் வேட்கை மிகவே புயங்கும் மெந்தைக்கொரு நீ
தண்ணீர் கொடு போயளித்தென் சாவும் முரைத்தும் புதல்வன்
விண்மீதடைவா னெழுதானெனவும் மயர்பால் விளம்பென்
றெண்ணீர்மையினான் விண்ணோ ரெதிர்கொண்டிடப்போயினனால்,"

என்பது நோக்கத்தக்கது.

இன்னும் சகல வேத சாஸ்திர பாரங்கதனான கௌசிகனென் னும் பிராம்மணோத்தமன், மிதிலையில் நிக்ருஷ்ட குலத்தில் ஜனித்த வனும், மாதா பித்ரு சிச்ருஷா விசேஷத்தால் சகல தர்ம சூக்ஷ் மஜ்ஞானத்தை யடைந்தவனுமுள்ள, தர்ம வியாதன் வாசயிலே

¶ வா-ரா-அயோ-கா-சரு. 64 சுலோ. 49.
* க-ரா அயோ-கா. நகர நீங்கு 81.

சென்று, அவனிடத்தில் தனக்குற்ற சகல தர்ம சம்சயங்களையும கேட்டு நிவர்த்தி செய்து கொண்டார் என்ற இதிஹாஸம் ஸ்ரீ பாரதத்தில் பரக்கச்சொல்லப் பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது.

இதனால் பெற்றோர்களுக்குப் பணிவிடை செய்து அவர்களுக்குத் திருப்தியாக நடந்துவந்தால் சிறந்த தவஞ்செய்தோர் அடையக்கூடிய கதியினையடையலாகுமென்பது சொல்லப்பட்டதாயிற்று.

* "சுச்ரூஷூர் ஜநநீம் புத்ர: ஸ்வக்ருஹே நியதோ வஸந் |
பரேண தபஸா யுக்த: காச்யப ஸ்த்ரிதிவம் கத:" ||

(இ-ள்) "காசியப மஹாமுனிவர், தமது திருமாளிகையில், வசித்துக்கொண்டு தமது தாய்க்குத் தொண்டு செய்து வந்ததினால் ஸ்வர்க்கத்தை யடைந்தனர்" என கௌசலை ஸ்ரீராமனை நோக்கிக் கூறியிருப்பது நோக்கத்தக்கது.

தசரத சக்ரவர்த்தியார் ஸ்ரீ ராமபிரானுக்கு மகுடாபிஷேகம் சூட்ட உத்தேசித்திருப்பதை, ஸ்ரீ ராமபிரானிடம் அறிவிப்பதற்காக, அவரை அழைத்து வரும்படி, சுமந்திரருக்கு யாக்ஞை செய்ய சுமந்திரரும் விரைவிற் சென்று ஸ்ரீ ராமபிரானை தேர்மிசை ஏற்றிக் கொண்டு வந்து அரண்மனை வாசலில் நிறுத்தினர். அதனின்றும் சக்கிரவர்த்தி திருமகனிறங்கி; பிதாவின் திருமாளிகையின் மேல் மாடத்தின் மீது சென்று பிதாவைக் கண்ணுற்று

† "ஸப்ராஞ்ஜலி ரபிப்ரேத்ய ப்ரணத: பிதுரந்திகே |
நாம ஸ்வம் ஸ்ராவயந் ராமோ வவந்தே சரணௌபிது:" ||

என்றபடி, வணக்கத்துடன் அருகிற் சென்று தன்குல கோத்ர சூத்திரங்களைச்சொல்லி பிதாவின் திருவடிகளில் வந்தனஞ்செய்து திருக்கைகளைக் கூப்பி நின்றனர்.

‡ மாதவன் றனை வரன்முறை வணங்கி வாளுழவன்
பாதபங்கயம் பணிந்தனன் பணிதலு மனையான்
காதல் பொங்கிடக் கண்பனியுகுத்திடக்கனிவாய்ச்
சீதைகொண்கனைத் திருவுறை மார்பகஞ் சேர்த்தான்"

என்ற கம்ப ராமாயணச் செய்யுள் இங்கு நோக்கத்தக்கது.

---

* வா. ரா. அ. கா. சரு. 21. சு. 24.
† வா. ரா. அயோ. கா. சரு. 3. சுலோ. 32.
‡ க. ரா. அயோ. கா. மந்திர. 59.

% அதாபிவாத்ய ராஜாநம் ரதமாருஹ்ய ராகவ: |
ப்ரயௌ ஸ்வம் த்யுதிமத் வேஸ்ம ஜனௌகை: பிரக்ஷித:" ||

(இ-ள்) ஸ்ரீராகவனும் தந்தையை வந்தனஞ்செய்து விடை பெற்று மீண்டு தேர்மிசை ஏறியங்கங்குள்ள ஜனங்களால் புகழப் பட்டவராகித் தம்மனை வந்தெய்தினர்.

ஸ்ரீ ராமபிரான் தமக்கபிஷேக மென்பதைத் தம்மைப் பெற்ற தாய் முதலானோருடன் கூறவேண்டுமென்று கௌஸல்யாதேவி யரண்மனைக்கு வந்து:—

¶ "ததா ஸந்நியமாமேவ ஸோபிகம்யா பிவாத்யச |
உவாச வசநம் ராமோ ஹர்ஷயம் ஸ்தாமிதம் ததா" ||

(இ-ள்) வணக்கத்துடன் அவளருகிற் சென்று பணிந்து பின் வருமாறு அருளிச் செய்தனர்.

ஃ "இத்யுக்த்வா லக்ஷ்மணம் ராமோ மாதராவபிவாத்யச |
அப்யநுஜ் ஞாப்ய ஸீதாம் சஜகாம ஸ்வம் நிவேசநம்" ||

(இ-ள்) இவ்வண்ணம் இளையபெருமாளுக்குரைத்தும் கோசலை சுமித்திரைகளையும் வந்தனஞ்செய்தும் ஜானகி தேவிக்கு ஆக்ஞை செய்தும் விடை பெற்றுக்கொண்டு ஸ்ரீராமபிரான் மீளவும் தன் னரண்மனை வந்து சேர்ந்தனர்.

இந்த ஆதாரங்களினால் புத்திரர் மாதா பிதாக்களைக் காணச் சென்றவுடன் வணங்க வேண்டுமென்பதும், அவர்களிடம் விடை பெற்று வெளியே செல்லுகையிலும் வணங்கியே செல்லவேண்டு மென்பதும் குறிப்பிக்கப்பட்டது.

(3) பிதா வந்தனஞ்செய்து, திருக்கைகளைக் கூப்பி நின்ற இராமபிரானை சக்கரவர்த்தியார்

% "தஸ்மை சாப்யுதிதம் ஸம்யக் மணி காஞ்சன பூஷிதம் |
திதேச ராஜா ருசிரம் ராமாய பரமாஸநம் ||
ததாஸந வரம ப்ராப்ய வ்யதிப யத ராகவ:" |

% வா. ரா. அயோ. கா. சரு. 3. சுலோ 48.
¶ வா. ரா. அ. கா. சரு 4. சுலோ 34.
ஃ ஷை. ஷை ஷை ஷை 45
% ஷை ஷை சரு. 3. ஷை 34, 35.

என்றபடி நவமணிகளிழைத்த ஓர் உயர்ந்த ஆஸனத்தின் மீதிருக்க ஆஜ்ஞை செய்ய, அக்கட்டளையின்படி, ஸ்வாமியும் அவ்வாஸனத்தி லமர்ந்து, அதை விளங்கச் செய்தனர்.

இதனால், பிதாவின் ஸந்நிதானம் சென்றிருந்தால், பிதா உட்காரும்படியாக ஆஜ்ஞை செய்த பிறகே உட்காரவேண்டுமென்பது ஸூசிதம்.

"ஆஸ்யதா மிதிசோக்த: ஸந்நா ஸீதாபிமுகோ குரோ: |

என்ற ஆன்றோர் வசனம் நோக்கத்தக்கது.

(4) ஸ்ரீ ராமபிரான் கோசலா தேவியை நோக்கி:—

* "அஸ்மாகம் து குலே பூர்வம் ஸகரஸ்யாஜ்ஞயா பிது: |
கனத்பி: ஸாகரைர் பூமிம வாப்த:ஸுமஹாந்வத:" ||

ஒரு காலத்தில் நமது குலத்தைச்சேர்ந்த சகர மஹா ராஜனால் ஆரம்பிக்கப்பட்ட அச்வமேத யாகத்தில், யாக குதிரை காணமற் போகவே, அவ்வரசன் தமது புத்திரர்களை நோக்கி பூலோகத்திலோ அல்லது பூமியைத் தோண்டிச் சென்றோ, எப்படியாவது, காணமற்போன அச்வத்தை திரும்பக்கொண்டு வரக்கடவீர்களென்று, கட்டளையிட்டனர்.

சகரர்கள் அறுபதினாயிரம் பேர்களும் பிதாவின் மொழியினாலே, நிலத்தைத் தோண்டிப் பாதலஞ் சென்று (கபில மஹரிஷியால்) மரணத்தையடைந்தனர்கள்.

இதனால் எவ்வளவு கஷ்டமான காரியத்தில் ஏனினும், புத்திரன், பிராணனைத்துரும்பாக நினைத்து, பிதாவின் கட்டளையைச் செய்து தீரவேண்டும் என்பது ஸூசிதம்.

∴ "மகரவேலை மண்தொட்ட வண்டாடுதார்ச்
சகரர் தாதை பணிதலை நின்று தம்
புகரில் யாக்கையினின் னுயிர் போக்கிய
நிகரின் மாப்புகழ் நின்ற தன்றோ வெனா."

என்பது நோக்கத்தக்கது.

---

*. வா. ரா. அ. கா. சரு 21. சுலோ. 32.

∴ க. ரா. அ. கா. நகர் நீங்கு 25.

(5) சூரிய குலத்தரசனான அம்பரீஷ மஹாராஜன் ரிசிகமுனிவரிடம் சென்று, அவருடைய புத்திரர் மூவர்களில் ஒருவனை நரபசுவாக தனக்கு விலைக்குக் கொடுக்க வேண்டுமென்று பிரார்த்திக்க, முனிவர், மூத்த பிள்ளையையும், அவர் பத்நி, கடைசிப்பிள்ளையையும் கொடுப்பதில்லை யெனச் சொன்னவுடன், இரண்டாவது மகனான, சுனச்சேபன், தன் மாதா பிதாக்களின் கருத்தை யுணர்ந்து அரசனை நோக்கி:—

* "பிதாஜ் யேஷ்டம விக்ரேயம் மாதா சாஹக நீயஸம் |
விக்ரீதம் மத்யமம் மன்யே ராஜந் புத்ரம் நயஸ்வமாம்" ||

என்றபடி "அரசனே! எனது பெற்றோர்கள் விருப்பத்தின்படி, அவர்களுக்கு வேண்டிய திரவியத்தைச் செலுத்திவிட்டு, என்னை நீர் நரபசுவாகக்கொண்டு போகக்கடவீர்." என்றியம்பினன்.

¶ "கொடுத்தருள் வெறுக்கை வேண்டிற்றேற்கமாம் விழுமக்குன்ற
எடுத்தெனை வளர்த்ததாதைக்கென்ற வற்றெழுத வேந்தன்
தடுப்பருந் தேரினேறித் தடையிலாப் படாதவோடும்
சுடர்க்கதிர்க் கடவுள் வானத்துச் சியஞ்சூழல்புக்கான்."

என்பது நோக்கத்தக்கது.

இதனால் உயிரைக்கொடுத்தாகிலும் மாதா பிதாக்களின் அபிப்பிராயத்தை அவர்கள் கூறுமுன்னமே குறிப்பாலறிந்து பூர்த்திசெய்து வைக்கவேண்டியது பிள்ளையின் தருமமென்பது சூசிதம். "எவா மக்கண் மூவாமருந்து" என்ற ஆன்றோர் வாக்கியம் இங்கு நோக்கத்தக்கது.

இன்னும் இப்படியே மஹா பாரதத்திலும் ஓர் இதிஹாஸம் கூறப்பட்டிருக்கிறது. அதாவது:—

சந்திர குலத்தரசனான சந்தனு மகாராஜன் ஒரு செம்படவப் பெண்ணைக்கண்டு விருப்பங்கொண்டு, அவள் தந்தையிடம் சென்று தனக்கு அவளை விவாகஞ் செய்துகொடுக்கும்படி கேட்டார். அதற்கவன் "அரசனே! இவளிடத்தில் பிறக்கும் புத்திரன் எவனோ அவ

* வா. ரா. பாலகா சரு. 61. சுலோ 20.

¶ கம். ரா. பால. கா. மிதிலை 122.

ளை உமக்குப் பின் ராஜவாக்ச் செய்விப்பதாய் நீர் சத்தியம் செய்து கொடுத்தால் இக்கன்னிகையை உமக்குக் கொடுப்பேன்" என்றான். அரசன் இவ்விதம் பிரதிஜ்ஞை செய்ய விரும்பவில்லை. ஆனால் அப் பெண்ணை ஸதா சிந்தித்துக் கொண்டு கவலையுற்றிருந்தார். அதனால் அவருடைய சரீரம் நாளுக்கு நாள் வெளுத்தும் மெலிந்தும் வருவதைக் கண்ணுற்ற அவருடைய புத்திரர் பீஷ்மர் அதன் காரணத்தையும், தந்தையின் உட்கருத்தையும், தந்தையின் சாரதியைக் கேட்டுத் தெரிந்துகொண்டு அந்த செம்படவர்க்கரசனிடம் சென்று "செம்படவர்க்கரசனே! நீ என் தந்தையிடம் கேட்ட வரத்தை நான் கொடுக்கச் சம்மதிக்கிறேன். இவளுக்குப் பிறக்கப்போகிற புத்திரன் எவனோ அவனே எங்களில் ராஜாவாக இருப்பான். இன்று முதல் என்னுயிர் என் தேகத்தை ஒட்டியிருக்கும் வரையில் நான் புத்திரோத்பத்தி செய்யேன். நான் ராஜ்யத்தையும் பெண் கலவியையும் முற்றிலும் விடுகிறேன். உன் கன்னிகையை என் பிதாவுக்குக் கொடு. நான் ஸத்தியமாகச் சொல்லுகிறேன்." என பிரதிஜ்ஞை செய்தனர். பீஷ்மருடைய அந்தச் சொல்லைக்கேட்டு "கொடுப்பேன்." என்று செம்படவர்க்கரசன் மறுமொழி சொன்னான். உடனே பீஷ்மர் அக்கன்னிகையை ரதத்தின் மேலேற்றிக்கொண்டு ஹஸ்தினபுரம் வந்து தமது பிதாவுக்குத் தெரிவித்தனர். அந்த ஸத்தியவதியைச் சேதிராஜாவாகிய உபரிசரவஸுவின் புத்திரி என்றும் செம்படவர்க்கரசனால் வளர்க்கப்பட்டவளென்றுமறிந்து, ராஜா சாஸ்திரோக்தமான கிரியை செய்து விவாகஞ்செய்து கொண்டார்.

சந்தனு மகாராஜன் தன் பிள்ளையால் செய்யப்பட்ட 'அந்த செயற்கரிய செய்கையை' க் கண்டு சந்தோஷமடைந்து அன்புடன் அவரை நோக்கி "புத்திரனே! நீ எதுவரையில் ஜீவித்திருக்க விரும்புகிறாயோ அதுவரையில் உன் விஷயத்தில் யமனுக்கு அதிகாரமிராது உன்னுடைய அனுமதிபெற்ற பிறகுதான் யமன் அதிகாரியாவான்." என வரமளித்தனர். ∴

"யாவத் பிதா ச மாதா ச த்வாவேதௌ ஜநிகாரகௌ |
தாவத் ஸர்வம் பரித்யஜ்ய புத்ர: ஸ்யாத் தத் பராயண:||

என்ற உசனர் வாக்யம் இங்கு நோக்கத்தக்கது.

---

∴ ஸ்ரீ மகாபாரதம் மொழிபெயர்ப்பு ஆதிபருவம் அத். 107.

(6) அம்பரீஷ மகாராஜன் இலக்ஷம் பசுக்களை ரிசீக முனிவருக்குக் கொடுத்துவிட்டு சுனச்சேபனை அழைத்துக்கொண்டு, புஷ்கர க்ஷேத்திரம் வந்து சேர்ந்தான். அங்கு தவம் செய்துகொண்டிருந்த தனக்கு அம்மானாகிய விச்வாமித்திர முனிவரை, சுனச்சேபன் கண்டு அவரது திருவடிகளில் விழுந்து, தனது விருத்தாந்தங்களை யெல்லாந்தெரிவித்து, அரசனது வேள்வி குறைவின்றி நிறைவுபெறவும் தன்னுயிரைக் காக்கும்படியாகவும் பிரார்த்தித்து சரணமடைந்தான் முனிவரும் 'அஞ்சேல்' என்று அபயஞ்சொல்லி மதுஷ்யந்தர் முதலிய தன் புத்திரர்களை நோக்கி.—

> † "யத்க்ருதே பிதர: புத்ரான் ஜநயந்திசுபார்திந: |
> பரலோக ஹிதார்த்தாய தஸ்யகாலோய மாகத:" ||

(இ—ள்) "மைந்தர்களே! க்ஷேமத்தைக் கருதுகின்ற தந்தையர்க்குப் பிறந்த பிள்ளைகளுடைய கடமை, அவருடைய கருத்துக்கிணங்க ஒழுகி, அவர் சொன்ன வண்ணம செய்தலன்றோ? எம்மை மகிழ்வித்தற்குரிய காலமிதோ நேர்ந்திருக்கிறது. இதனால் நமக்கும் எமக்கும் நற்பேருண்டாகும்." என்றுரைத்து தன் புத்திரர்களில் ஒருவனை அம்பரீஷ ராஜனுக்கு நரபசுவாக சுனச்சேபனுக்குப் பதில் போகும்படி கட்டளையிட்டனர். புத்திரர்களெல்லோரும் இதற்குடன்படாமல் மறுத்துச்சொல்லவே முனிவர் கடுஞ்சினங்கொண்டு, அச்சிறுவர்களை நோக்கி "அடா! துஷ்டர்களே! சிறிதும் அஞ்சுதலின்றி அறத்தின் முறைதப்பி எம்மெதிராகவே எம்மொழியை இகழ்ந்து மறுத்துரைத்தமையால், நீவிர்பாவரும

> * "ச்வ மாம்ஸ போஜிந: ஸர்வே வாஸிஷ்டா இவ ஜாதிஷு |
> பூர்ணம் வர்ஷ ஸஹஸ்ரம் து ப்ருதிவ்யாமநு வத்ஸ்யத" ||

என்றபடி வசிஷ்ட புதல்வர்களைப் போல நாயின் மாம்சம் தின்னும் புலையர்களாகி ஆயிரமாண்டு வரையில் பூமி முழுவதும் திரிந்து அலையக்கடவீர்கள்." என சபித்துவிட்டு சுனச்சேபனுக்கு நீங்கு நேராத படி இரண்டு விஞ்சைகளை யுபதேசித்தனர்.

> ¶ "மைத்துனனோடு முன்னுள் வழங்கிய முறைமை கேளாத்
> தததுறலொழி நீ யானே தடுப்பனின் னுயிரை யென்றுப்
> புத்திரர் தம்மை நோக்கிப் போக வேந்தோடு மென்ன
> அத்தகு முனிவனீ கூறவவர் மறுத்த கறல் காணு."

---

† வா. ரா. பால கா. சரு. 62. சுலோ. 9. * வா. ரா. பால. கா. சரு. 62. ச. 17. ¶ க. ரா. பால. கா. மிதிலை. 125,

* "எழுங்கதிரவனு நாணச் சிவந்தன னிருகணெஞ்சம்
புழுங்கினன் வடவை தீய மயிர்ப்புறம்பொறியித்துள்ள
அழுங்கலில் சிந்தையீர் நீரடவிகடோறுஞ் சென்றே
ஒழுங்கரு புலிநோக்கி யுறுதுய நுறுகவென்றான்."

என்பன நோக்கத்தக்கன.

இதனால் பிதாவின் வார்த்தையை மறுத்துரைத்தால் இவ்வித மான துன்பங்கள் நேரிடுமென்பது சூசிதம்.

"அச்சமுள்ளடக்கி யறிவகத்தில்லாக
கொச்சை மக்களைப் பெறுதலினக்குடி
யெச்சமற்றே மாந்திருக்கை நன்றே."

என்ற ஆன்றோர் வசனம் நோக்கத்தக்கது.

(7) சந்திரகுலத்தரசனான யயாதி என்பவருக்கு தேவயானி (சுக்ராசார்யருடைய புதல்வி) யெனவும், சர்மிஷ்டை (விருஷவர் மாவினது மகள்) எனவும் இரண்டு மனைவிகள் இருந்தனர். அவர்களில், தேவயானிக்கு யதுவென்றும். சர்மிஷ்டைக்கு பூரு வென்றும் இரண்டு புத்திரர்கள் யயாதிக்குப் பிறந்தனர். இரு வர்களில் இளையாள் மகனான பூரு சற்குணமுள்ளவனா யிருந்தமை யால் அவனை அரசன் அதிகமாக பாராட்டி வரலாயினான். இதனை தனது புத்திரி மூலமாகக் கேள்வியுற்ற சுக்ராசார்யர், அரசனை நோக்கி "ஹே! நஹுஷபுத்திரா' நீ என் புத்திரியை அவமதித் தமையின் நீ ஜரையை யடையக் கடவை." என சபித்தனர். வேந் தன் அவரை வணங்கி வேண்டிக்கொள்ள "எவனேனும் ஒருவன் உனது மூப்பை மாற்றிக்கொள்ள உடன்படுவானாயின், உனது மூப் பை அவனுக்குக் கொடுத்து, அவனது வயதை நீ பெற்று, உனக்கு வேண்டிய இன்பங்களை நுகரலாம்." என சாபாநுக்ரஹமும் அருளி னர். அரசனும் யௌவனமொழிந்து மூப்பை யடைந்தனன். யயாதி தன் புத்திரனான யதுவை நோக்கி, தனது மூப்பை யேற்றுக் கொண்டு அவனது யௌவனத்தை தனக்குக் கொடுக்கும்படி வேண் டினான். யது அதற்கிணங்காமல் மறுக்கவே, யயாதி, பூருவை யழைத்து "ஹே! புத்திரா! நீ எனது ஜரையை கைக்கொண்டு உன து யௌவனத்தை எனக்குத் தருக.', என வேண்டினான்

"காலே ஜ்யேஷ்டேனைவ முக்தஸ்து பூரு: ப்ராஞ்சலிரப்ரவீத் |
தந்யோஸ்மி அநுக்ருஹீதோஸ்மி சாஸனே ஸ்மித வஸ்தித: |

* கம், பால. மிதிலை. 126.

புரோர் வசநமாக்ஞாய காஹுஷ: பரயாமுத |
ப்ரஹர்ஷ மதுலம்லேபே ஜராம் ஸம்க்ராமயச் சதாம் |
தத: ஸ ராஜா தருண: ப்ராப்ய யக்ஞான் ஸஹஸ்ரச: |
பஹுவர்ஷஸஹஸ்ராணி பாலயாமாஸ மேதினீம்" |

(இ-ள்) பூருவானவன் அஞ்சலி ஹஸ்தனாய் "அடியேன் தன் யனாயினேன்; அநுக்கிரகிக்கப் பெற்றவனாயினேன்; தேவரீரது சீய மனப்படி நடக்கச் சித்தமாயிருக்கின்றேன்" என மறுமொழி கூறி னான். இவ்வாறு பூரு புகன்ற வார்த்தையைக் கேட்டு யயாதி அதி கமான ஆநந்தமடைந்தவனாகித் தனது வரத்தின் மகிமையினால் தன் னிடமுள்ள மூப்பு மகனிடமொட்டுமாறு செய்து அம்மகனது பரு வத்தைத் தான் பெற்றுக்கொள்ளலாயினான். இவ்விதமாக யௌவ னம் பெற்ற யயாதி ஆயிரக்கணக்காக யாகங்கள் செய்து அநேக மான இன்பங்களுமனுபவித்துப் பலவாண்டளவு பூமியைப் பரிபா லித்து வந்தனன்.

. வெகு காலத்துக்குப் பின்னர் யயாதி மறுபடி யௌவனத்தை பூருவசம் ஒப்புவித்து கிழத்தனத்தைப் பெற்றுக்கொண்டு, பூருவை அரசனாக அபிஷேகஞ் செய்து வைததான். தந்தையின் வார்த் தையை உல்லங்கனஞ் செய்த, யது, பிதாவினால் ராஜவம்சத்தினின் றும் பஹிஷ்காரஞ் செய்யப்பட்டான்.

"பெற்றோரெல்லாம் பிள்ளைகளல்லர்"

"ப்ரீணுதிய: ஸுசரிதை: பிதரம் ஸபுத்ர:" | பெற்றோர்களுக் குத் திருப்திகரமாக நடப்பவனே புத்ரன்
என்ற ஆன்றோர் வாக்யங்களும்

"ய: புத்ரோ குணஸம்பந்நோ மாதா பித்ரோர் ஹித: ஸதா —
ஸர்வமர் ஹதி கல்யாணம் கநீயா கபி ஸத்தம: |
அர்ஹ: பூருரிதம் ராஜ்யம் ய: ஸுத: ப்ரியக்ருத்தவ" ||

என்றபடி ஸ்ரீ பாரதம் ஆதிபர்வம் அத்தியாயம் 79-ல்
யயாதி ராஜனை நோக்கி நகரத்து ஜனங்கள் கூறியிருப்பதும் நோக் கத்தக்கன.

* வா. ரா. உத். கா. சரு. 59. சுலோ 7, 8, 9.

"அநுஜா தோஹீமாம் ஸர்வைர் குணைர் ஜ்யேஷ்டோ மமாத்மஜ: |
யௌவ ராஜ்யே நியேக்தாஸ்மி ப்ரீத: புருஷபுங்கவம்" ||

"எனது மூத்த குமாரனான ஸ்ரீராமசந்திரன் எல்லா குணங்களிலும் என்னை யொத்தவனாக இருக்கின்றான். புருஷ ச்ரேஷ்டனான அவனுக்கு இளவரசு பட்டங்கட்ட விரும்புகின்றேன்" என்பது தசரதச் சக்ரவர்த்தி சபையோர்களிடம் கூறிய வசனம்.

"ராமோ ராஜ்ஞ: ஸுத: ஜ்யேஷ்டோ யௌவராஜ்ய மதோர்ஹதி" |

"இராமன் வேந்தனுக்குத் தலைமையாகிய புதல்வனாதலால் அவனே யுவராஜனாவதற்குரியன்." என்பது கைகேயின் வசனம்.

"தஸ்மாஜ் ஜ்யேஷ்டோ ஹி கைகேயிராஜ்யதந்த்ராணி பார்த்திவா: |
ஸ்தாபயந் த்யனவத்யாங்கி குணவத்ஸ் விதரேஷ்வபி" ||

"அடிகைகேயி! அரசர்கள், ஜ்யேஷ்ட புத்திரனுக்கே பட்டம் கட்டுவது வழக்கம்; மற்றப்பிள்ளைகள் திறமையுள்ளவர்களாயினும், அவர்களுக்குப் பட்டம் கட்டுவதில்லை." என்பது கூனியின் வசனம்.

"இக்ஷ்வாகூணாம் ஹி ஸர்வேஷாம் ராஜா பவதி பூர்வஜ:" |

"இக்ஷ்வாகு குலத்திற் பிறந்தவர்களுள் மூத்தோனே பாசனாகுவது முறையன்றோ?" என்பது இராமபிரானை நோக்கிக்கூறிய வஸிஷ்ட மஹரிஷியின் வசனம்.

¶ "புரசை மாக்களி றிருபர்க்கும் புரத்துறை வோர்க்கும்
உரை செய் மந்திரக் கிழவர்க்கு முனிவர்க்கு முன்னம்
முரை சமார்ப்ப கின் நின்முதன் மணிப்புதல்வனை முறையால்
அரைசனாக்கிப்பின் னப்புறத்தடுத்தது புரிவாய்."

என்பது சுமந்திரர் வசனம்.

* "வெயின் முறைக் குலக்கதிரவன் முதலிய மேலோர்
உயிர்முதற் பொருடிறம்பினு முறைதிறம்பாதோர்
மயின் முறைக்குலத்துரிமையை மனுமுதன் மரபைச்
செயிருறப் புலச்சிந்தையா லென் சொனாய் தீயோய்"

என்பது கைகேயியின் வசனம்.

---

¶ அயோ. கா. மந்திர. 47. * அயோ. கா. மந்தரை. 64, 69.

மூத்தவற்குரித்தா செனுமுறைமையினுலகம்
காத்தமன்னனி விளையன்றே கடல் வண்ணன்
ஏத்த நீன் முடிபுனைவதற்கிசைந்தன்னென்றால்
மீத்தருஞ் செல்வம் பரதனை விலக்குமாறெவனோ."

என்பது கூனியின் வசனம்.

∴ "வேத்தவை யிருந்த நீர் விமலனுந்தியில்
பூத்தவன் முதலிய புவிபுட்டோன்றினர்
மூத்தவரிதக்கவே முறைமையாலிலம்
காத்தவருள ரெனிற்காட்டிக் காண்டிரால்."

என்பது பரதனுடைய வசனம்.

இத்தியாதி வசனங்களினால், ஜ்யேஷ்ட புத்திரனே இராஜ்யத்தை யடைய அர்ஹதையுடையவனென்பது சொல்லப்பட்டது. ஆனால்,

(7) முற்காலத்தில் அயோத்திமா நகரில் அரசாண்டு வந்த சகரச் சக்ரவர்த்தி, பிள்ளையில்லாக்குறையினால் வருந்தி மிகுந்த தவஞ்செய்து, பிருகு மகரிஷியின் அநுக்கிரகத்தின் பேரில், தனது ஜ்யேஷ்ட பத்னியான கேசினி என்பவளிடம் அஸமஞ்சன் என்னும் ஒரு புத்திரனையும், இளைய பத்தினியான ஸுமதி என்பவளிடம் அறுபதினாயிரங் குமாரர்களையும் அடைந்தான். பட்டத்துக்குரிய, அஸமஞ்சனானவன், அறிவழிந்து

¶ "பாலாந் க்ருஹீத்வா வீதிஷு ஸரய்வா ரகுநந்தன |
ப்ரக்ஷிப்ய ப்ரஹஸந்நித்யம மஜ்ஜதஸ்தாந் ஸமீக்ஷ்யவை" ||

என்றபடி நகரிலுள்ள சிறுவர்களெல்லோரையு மெடுத்துச் சரயூநதியில் எறிந்து, அவர்கள் நீர் குடித்து மூழ்கி இறக்கையில் பார்த்துப் பார்த்துப் நகைத்துக்கொண்டு ஜனங்களுக்கெல்லாம் பீடையுண்டாகச் செய்து வந்தமையால்; "பித்ரா நிர்வாஸித: புராத்" என்றபடி. அப்புத்திரனை, பிதாவாகிய சகரச்சக்ரவர்த்தி, நாட்டினின்று துறத்தி காட்டிற் செல்லவிட்டனர்.

---

• அயோ. கா. மந்தரை 64, 69. ∴ அயோ. கா. ஆற்ற. 16.
¶ வா. ரா. பால. கா, சரு. 38 சுலோ 21.

இதனால் ஜ்யேஷ்ட புத்திரனுயிருந்தாலும் அவன் வெகு ஜனங்களை துன்புறுத்து வானுயின், அவனை பிதா த்யஜிக்கவேண்டுமென்பது சூசிதம்.

● "ஔரஸாநபி புத்ராந் ஹி த்யஜந்த்ய ஹித காரிண:
ஸமர்த்தா: ஸம்ப்ர க்ருஹ்ணந்தி ஜநாநாம் ஹிதகாரிண:

என்ற ஸ்ரீ ராமபிரானுடைய வசனமும்

"ந கோபயேத் வாஸ யேச்ச ராஜாமித்ரம் ஸுதம் குரும்
அதர்ம நிரதம் ஸ்தேநம் ஆததாயி நமப்யுத" ||

என்ற சுக்ர நீதியும் கவனிக்கத்தக்கன.

ஜ்யேஷ்ட புத்திரனே ராஜ்யத்தைப் பெறுவதற்கு அருகதையுடையவனென பூர்வம் ப்ரதிபாதிதம்.

ஸ்ரீராமபிரான் ஜ்யேஷ்ட புத்திரராகவிருந்தும், அவரைநோக்கி தசரதச் சகரவர்த்தி

×"ஜ்யேஷ்டாயாமஸி மே பத்ந்யாம் ஸத்ருச்யாம்ஸத்ருச: ஸுத: |
உத்பந்நஸ்த்வம் குணை: ஸ்ரேஷ்டோ மம ராமாத்மஜ: ப்ரிய:" ||

(இ-ள்) "ஹேராமா! நீ என்னுடைய ஸவர்ணத்துமுதல் பத்நியிடத்தில் ஔரசப்புத்திரனுகப் பிறந்தவனும், நற்குணமுள்ளவனுகவும் எனக்குப் பிரியமுள்ளவனுகவுமிருக்கிருய்."

ஆதலின் நீ இவ்ராஜ்யத்தை யடையக்கடவை. எனக்கூறினர்.

இந்த சுலோகத்தில், (1) ஸவர்ணம், (2) முதல், (3) பத்நி, (4) நற்குணம், (5) ஔரசன், (6) புத்திரன். (7) பிரியம் என எழு அடை மொழிகள் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளின் கருத்து

(1) ஸவர்ணம் என்றதினுல்

நான்கு வர்ணத்துப் புருஷர்களும், தங்கள் வர்ணத்திலும்,

---

● வா. ரா. அயோ. கா. சரு 26. சுலோ 36.

* பிதா தர்மம், பக்கம் பார்க்க, × வா. ரா அ. கா, சரு, 3. சுலோ 39.

தாழ்ந்த வருணத்திலும் பிறந்த பெண்களை விவாகம் செய்துகொள்ளலாம் என சாஸ்திரமிருப்பதினாலும் அவர்களுள்

"ஏவம் ஜாதிஷு ஸர்வாஸு ஸவர்ணா: ச்ரேஷ்டதாம் கதா: |
பத்யு: சரீர சுச்ரூஷாம் தர்மகார்யம்ச நைத்யகம் |
ஸ்வாஸ்வைவ குர்யாத் ஸர்வேஷாம் நாஸஜாதி: கதம்சந" ||

என்றபடி ஸ்வஜாதி மனைவியே ச்ரேஷ்டமென்றும் அவளே புருஷனுடன் கூடி அக்நி ஹோத்ர முதலான தர்ம கைங்கர்யங்கள் செய்யத் தகுந்தவளென்றும் சாஸ்திரமிருப்பதாலும், கௌஸல்யையின் மேன்மையைக் காண்பிக்கிறது.

(2) முதல் என்ற பதம்.

அரசர்கள் அநேகம் ஸ்திரீகளை விவாகஞ் செய்துகொள்ளலாமாகையாலும் அவர்களுள் "ப்ரதமா தர்ம பத்நீ ஸ்யாத் த்விதியா ரதிவர்தநீ" என்றபடி, முதல்மனைவியே, தர்மபத்நி என்றும் பட்டமஹிஷி என்றும் அவளே ச்ரேஷ்டமென சாஸ்திரமிருப்பதால் முதல் மனைவிக்குப் பிறந்தவனுடைய (ஸ்ரீராமபிரானுடைய) ஏற்றத்தைக் காண்பிக்கிறது. 'வேந்தர்வைகும் முற்றத்தான் முதற்றேவி' என்றார். கம்பநாட்டாழ்வாரும்.

(3) பத்நி என்ற பதம்.

அஷ்டவித விவாஹங்களுள், பாணிக்கிரஹண முறைப்படி விவாஹஞ்செய்து கொள்ளப்பட்டவளே, பத்நி என்று சொல்லப்படுவதாலும், அவளுக்குப் பிறக்கும் பிள்ளையே ஆட்சிக்குரியவனைபடியாலும், ஸ்ரீ ராமபிரானுடைய, சுந்தர ச்ரேஷ்டத்தைக் காண்பிக்கிறது.

(4) நற்குணம் என்றதினால்

'ஜ்யேஷ்டாம்சம் ப்ராப்நுயாத்தஸ்ய யவீயாந் குணதோ அதிக:' | என்றபடி குணத்தில் உயர்ந்தவன், கனிஷ்டனாயிருந்தாலும், ஜ்யேஷ்டாம்சம் பெறத்தகுந்தவனென்றும், ஜ்யேஷ்டன் தூர்குணனாயிருந்தால், த்யஜிக்கத்தக்கவனென்றும் சாஸ்திரமிருப்பதால், ஸ்ரீராமபிரானுடைய குணச்ரேஷ்டத்தைக் காண்பிக்கிறது.

(5) ஔரஸன் என்ற பதம்.

"ஜ்வக்ஷேத்ரே ஸம்ஸ்க்ருதாயாம் துஸ்வயமுத்பாதயேத்துயம் |
தம் ஔரஸம் விஜாநீயாத் புத்ரம் ப்ரதம கல்பிதம்" || (மநு)

என்றபடி "சாஸ்திரோக்தமாய் விவாஹஞ்செய்துகொண்ட மனைவியினிடத்தில், தனக்குப்பிறந்தவனை, ஔரசப்புத்திரன் என்று சொல்லுகிறார்கள். அவனே முதன்மையானவன்" என சாஸ்திரமிருப்பதால், இதுவும் ஸ்ரீ ராமபிரானுடைய மேன்மையைக்காண்பிக்கிறது

(6) புத்திரன் என்ற பதம்.

"மநு: புத்ரேப்யோ தாயம் வ்யபஜத" |

என்றபடி புத்திரன் கிரா க்ஷேமமாய் ஆட்சி உரிமையை யடையத் தகுந்தவனாகையால் ஸ்ரீ ராமபிரானுடைய உரிமையைக் காண்பிக்கிறது.

(7) ப்ரியம் என்ற பதம்.

"யோ அஸ்ய புத்ர: ப்ரியஸ்யாத் தம் ப்ரதி பூர்ண முர்நயேத்" |

என்றபடி எந்தப் புத்திரன் பிதாவுக்குப் பிரியமுண்டாகும் வண்ணம் நடக்கிறானோ, அவனே சத்புத்திரனானபடியால், அவன் பொருட்டே ஸர்வமும் நயப்பிக்கத்தக்கன. ஆகையால் இதுவும் ஸ்ரீராமபிரானுடைய குண விசேஷத்தைக் காண்பிக்கிறது. ஆகையால் இந்த எழு அடைமொழிகளும், ஸ்ரீ ராமபிரானே எல்லா விதத்திலும், ராஜ்யத்தைப் பெறுவதற்கு உரித்தானவரென்பதை விளக்கிக் காண்பிக்கின்றன.

ஸ்ரீராமபிரானுக்கு தந்தையின் இராஜ்யத்தைப் பெறுவதற்கு பூர்ணமான உரிமையிருந்தும், முடிசூட்டிக் கொள்ளாமல், இராஜ்யத்தைத் தம்பி பரதாழ்வானுக்களித்துவிட்டு, ஸீதாப்பிராட்டியுடனும், இளைய பெருமாளுடனும் வனஞ்சென்றனர்.

போதுமான சாமர்த்தியமில்லாமலோ வெனில்:—

∴ "ஏகோ ஹ்யஹமயோத்யாம் ச ப்ருத்வீம் சாபி லக்ஷ்மண |
தபேயமிஷுபி: க்ருத்தோ நநு வீர்யமகாரணம் ||
அதர்ம பய பீதஸ்ச பரலோகஸ்ய சாநக |
தேந லக்ஷ்மண நாத்யாஹ மாத்மானமபிஷேசயே" ||

∴ வா. ரா. அ. கா. சரு. 53. சு. 25, 26.

"லக்ஷ்மணா! நான் சினங்கொள்வேனாகில், நான் ஒருவனே பாணங்களால் அயோத்தியையும், மற்றுமுள்ள பூமண்டலத்தையும் வென்று அபிஷேகங் கொள்வேன்; அதர்மத்துக்கும் பரலோகத்திற்கும் அஞ்சியே இப்பொழுது யான் அபிஷேகஞ்செய்துகொள்ளவில்லையே யல்லாது திறமையின்மையாலன்று,, என ஸ்ரீ ராமபிரானே யருளிச்செய்திருப்பதால், வீரியமின்மையாலன்றென்பது ஸ்பஷ்டம்.

பின் யாது காரணத்தாலெனில்:-

O விரும்பெய்தி வெக்கையார் மெய்ம்மை வீடுமேல்
வரும்பழி யென்றவான் மகுடஞ் சூடலேன்"

என சுக்ரீவ மஹாராஜனை நோக்கி இராமபிரானுடைய வசனம்.

¶ "சிறந்த தம்பி திருவுற வெந்தையை
மறந்தும் பொய்யிலனாக்கி வனத்திடை
உறைந்து நீருமுதி பெற்றேனிதிற்
பிறந்து யான பெறும்பேறென்பதி யாவதே."

என கோஸலையாரை நோக்கி இராமபிரானுடைய வசனம்.

● "தயரதன் றொல் குலத்தலைவ நம்பியோ
டுயர் குலத்தன்னை சொலுச்சி யேந்திறு
னயர் விலதிவ்வழியுறைவு மன்னவன்
பெயரினைத் தெரிகுதிர் பெருமை யீரென்றான்."

என இராவண சந்நியாசியை நோக்கி பிராட்டியின் வசனம்.

⚘ "ஏவமஸ்து கமிஷ்யாமி வனம் வஸ்துமஹம் த்வித:
ஜடா சீரதரோ ராஜ்ஞ: ப்ரதிஜ்ஞா மநுபாலயந்" ||

(இ-ள்) "தாயாரே! உமது கட்டளையின்படி, என் பிதாவின் பிரதிஜ்ஞையைப் பரிபாலனஞ் செய்பவனாகி, சடையும் மான்தோலையும் தாங்கி, யான் வனத்துக்குச்செல்கின்றேன்." என கைகேயியை நோக்கி இராமபிரானுடைய வசனம்.

---

O க. ரா, கிட்கி. கா, கலன் 24. ¶ க. ரா. அ. கா. கர் கிங்கு 17.
● க. ரா. ஆரணி. கா. சடாயுவுயிர் 37. ⚘ வா. ரா. அ. கா. சரு 19. ௳:2

X "அன்னவன் சிறுவனு மிவ்வாண்டகை யன்னை யேவத்
தன்னுடை யுரிமைச் செல்வந் தம்பிக்குத் தகவினல்கி
நன்னெடுங் கானஞ் சேர்ந்தா னும்மு யிராமனென்பா
னிந்நெடுஞ் சிலைவலானுக் கேவல் செய்யடியன் யானே."

என்பது இளையபெருமாளுடைய வசனம்.

இந்த ஆதாரங்களினால் தமது தந்தை சிற்றன்னை கைகேயிக்கு கொடுத்திருந்த வரங்களை, சத்தியம்தவறாமல் பாதுகாத்தற்பொருட்டு தமது சிற்றன்னை கைகேயியின் கட்டளையைத் தலைமேற்கொண்டு ஸ்ரீராமபிரான் முடிசூட்டிக்கொள்ளாமல் வனஞ்சென்றனர், என நன்கு விளங்குகின்றது.

இனி சக்கரவர்த்தி கைகேயிக்களித்த வரங்கள் எவை? கைகேயின் கட்டளை என்ன? என்பவை விளக்கத்தக்கன.

சித்திரகூடத்தில் ஸ்ரீராமபிரான் பரதாழ்வானை நோக்கி:-

"புரா ப்ராத: பிதாந: ஸமாதரம் தே ஸமுத்வஹந் |
மாதாமஹே ஸமாஸ் ரௌஷீத் ராஜ்ய சுல்க மனுத்தமம்" ||

(இ-ள்) அடா தம்பி! நம் தந்தை யுன் மாதாவை விவாகஞ் செய்து கொள்ளுங்காலையில் என் பெண் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்குப் பட்டங்கட்டுவிப்பீராகில், யான் பெண்ணை விவாகஞ்செய்து கொடுப்பேனென்று உன் மாதா மஹனாகிய கேகய மஹாராஜர் கூறினர். நம் தந்தையும் அவ்வண்ணமே பிரதிக்ஞை செய்து கொண்டருளினர். அன்றியும்

"தேவாசுரே ச ஸங்க்ராமே ஜனன்யை தவ பார்த்திவ:
ஸம்ப்ரஹ்ருஷ்டோ ததௌ ராஜா வரமாராதித: ப்ரபு:
தத: ஸாஸம் ப்ரதி ச்ராவ்ய தவ மாதா யசஸ்வினீ |
அயாசத நரச்ரேஷ்டம் த்வௌ வரௌ வரவர்ணினீ ||
தவ ராஜ்யம் நரவ்யாக்ர மம ப்ரவ்ராஜநம் ததா |
தச்சராஜா ததா தஸ்யை நியுக்த: ப்ரததௌவரம் ||

(இ-ள்) தேவாஸுர யுத்தத்தில், சக்கரவர்த்தி மகிழ்ந்திரண்டு வரங்கள் உனது மாதாவுக்களித்திருந்தனர். அவ்விரண்டு வரங்களையும் ஒன்றால் யான் காட்டிலுறையும்படியாயும், மற்றொன்றால் நீ யரசாளும்படியாயும் உன் மாதா இப்பொழுது கேட்டனர். சக்கரவர்த்தியும் ஸத்தியந்தவறாமைக்காக அவ்வண்ணம் வரமளித்தனர்.

X க. ரா. கிஷ். கா. மாரமா. 31.

ஸ்ரீ

# நம்மாழ்வார் பிள்ளைத்தமிழ்.

குறிப்பு:- ஆழ்வார் திருநகரி, திருஞான முத்திரைப் பிரசுராலய
காரியஸ்தன் பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாசனால்
பழையசுவடியிலிருந்து எடுத்தெழுதப்பட்டு
ஸ்ரீ வைஷ்ணவன் பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்பட்டது.

அன்பன், பெரியன், வெ. நா. ஸ்ரீநிவாஸன்.

## நம்மாழ்வார் பிள்ளைத்தமிழ்.

### பாயிரம்.

1. தேனாறு மகிழ்த் தொடையலு மொளியுந
திருக்கிளர் குழைக்காதும்
கானாறு மலர்த் திருமுகச சோதியும்
கயிரவத் துவர் வாயுமா
மோனமாகிய வடிவமு மார்பமுமா
முத்திரைத் திருக்கையும்
ஞான தேசிகன் சரண தாமரையுமென்
னையனம் விட்டகலாவே. (1)

2. பாராத கல்வி ப்ரபந்தப் பொருளனைத்துமா
நேராக முன் வந்து நிற்குமே — பேராத
தேவிறு கொண்ட திருமாலை முத்தமிழ் தேர்
நாவிற னைத்துநித்த நாள். (2).

3. என்றுந் திருமாற்கே யாளாவே னெம்பெருமான்
என்று மெனக்கே பிரானவான் — என்றும்
பிறவாத பேராளன் பேரா யிரமு
மறவாது வாழ்த்துக வென்வாய். (3)

## காப்பு.

பூ பாரமன்பதை களிகூற வருபெரும்
  பூதூர் தழைத்து மலியப்
புகழ்தருஞ் சித்திரைத் திருவாதிரைப் பரம்
  புண்ணிய தினத் தவதரித்
தாபாசவறுசமய வேரறத் தெட்டெழுத
  தாதி மூதலென்று கூரத்
தாழ்வான் மதித்தருள வாழ்வானைதற் சரண
  மபிஷேகம் வைத்தருளினர். (4)

---

நூல்.

## காப்புப்பருவம்.

1. காரகொண்ட திருமேனிப் பசும் பொருப்பினைடுவே
  கதிரெறிக்கு மின்போலக் குடியிருக்கு மொருதனி
தார்கொண்ட முலையழுந்தித் தழும்பிருந்த மார்பத
  தனிப்பெருநாயகக் கடவுள் சரணமலர் தொழுவாம்
சீர்கொண்ட மணிமாடத் திகழ் குருகூர் நங்கை
  திருவயிறு வாழவந்த திருச்சுழுசி மாறன்
பார்கொண்ட மறை நூலின் பயன்கொண்டு தமிழ்நூல்
  பாடவல்ல பெருமாளைப் பராங்குசனைக் காக்கவே
கோபாலர் தொழுபெரிய பெருமாளரங்கர் தம்
  கோயிற் றிருப்பதி முதல
கூறுந் திருப்பதிகள் பரவுந் தழைப்ப நங
  குழுக னழகிய நம்பி முன்
சீபாடியஞ் சுருதி வேதாந்தனக்கரு
  ளிராமாநுசற் றெழுதுமென்
சிறிய சொற்புன் கவிதை சீபராங்குச முனிவர்
  திருவுள முவந்தருளே. (5)

2. பொதியுமிதழ் வீடு தாமரைக் கோற்றொடி
  புணரு மணிமார்ப மாயனைத தாட்சுடா
புவனி பதினாலு மூடுறததாக்கிய
  பொருளை யவிராழ் வார்வலனைக் கோட்டொடு

முதிய கந்த வேணு வார் சிலைத் தோற்றிய
முகிலை யுறிதேடி விடுபுக் காய்ச்சியர்
முறுவல் செயவாடு நீள் குடக் கூத்தனை
முருகு வனமாலை நாதனைப் போற்றுதும்
கதிய மதகூடு பாய்புனற் சேற்றெழு
கமல மண நாறு வாவியைப் போட்டுகழ்
கடிய நெடுவாளை பாளையைத் தூக்கிய
கமுக மடல் பீறி யூறுபட் டேறிடை
குதிகொள் மதுவாச நீருடைத் தாற்றிடை
குமிழி யெழவோடி மேவிடப் பார்ப்பொடு
குருகு கரையேறி யேதெனப் பார்த்தெழு
குருகை வரு காரி மாறனைக் காக்கவே. (6)

3. நறைகம ழிதழி தாங்கிய வேணிக்காட்டிடை
நதி செருகிய புராதனை மூரிப் பேய்ப்படை
நடமிட வினிய தாண்டவ மாடிக் காட்டிய
நவையறு கெவுரி காதனை மாறித் தூக்கிய
அறை கழலிசையி லோங்கிய ஞானக் கூத்தனை
யயனிடு சொலவு வேண்டிய சாபக் கோட்டியை
யடுமொரு குழகர் பூநதொடை மார்பக் கோட்டக
மழுகெழு விரிதுதோய்நதருண் மாதைப்போற்றுதும்
உறைபடு தயிரை மாந்தி யுபாயப் பேய்ச்சிலை
யுறவொடு மருவி வாநதவமாகிக் கீழ்ப்பட
வுயிர்நிலை பருகி வாங்கிய மாயச் சூழ்ச்சியி
னுளமகி கருணை யின் துயிர் சேரக் காதிடை
மறைதமிழிசை களாம்படி பாரித் தேற்றிய
வாதனை நறவு தேக்கிய தாமப் போர்க்கழி
முகன் மகனியம மோங்கிய வாசததோட்டவிழ்
மகிழ்புனைபுய பாங்குச மாலைக் காக்கவே. (7)

4. மட்டவிழ்ந்த துழாய்த் தொடை மறபுயன் பரமேட்டியை
வைத்த சிந்தை வமோாதபன் வட்டெழுந்தமுதூட்டியல்
தொட்டனை திரு தாட்டொழு சத்தநங்குரு கூர்ப்புயல
துப்பிளங் கனிவாய்ச் சிறுசொற் பெறுமபடி காப்பன

கெட்டுலேந்த பலாச்சுளை நெக்குடைந் தொழுகக் கழை
நித்திலந் தெரியாக் கயல் நித்தல் விண்டுகளைப் பல
புட்டழுங்கி வெழச்சில புட்பமண்டப வாய்க்குடி
புக்கிருந் திசை தேக்கிய பொற் குயக்குடி மூர்த்தியே. (8)

5. பாமணவைகுந்தயி லொருதனிபொன்சுடர்
வரகுண மங்கையில் மாமணிக் கார்க்கடல்
பரவு புளிங்குடி தொலைவில்லி மங்கல
முகில் பதுமந்த குலோசனக் காட்சியர்
வர்முனி பெண்கொடி தொழுத குளந்தையில்
மரகத மன்பினர் மாவிநிச் சேர்ப்பினர்
வருணன் வணங்கிய மகரநெடுங் குழை
மணிமுத்து குன்றுறை பேரையைப் போற்றுவம்
அரவம் வெருண்டெழு கணபண பந்தியில்
நடன விதந்தரு நீள்குடக் கூத்தினன்
அலைமு மண்டமு மெவைகளு மீந்திய
மலைகளு மின்றிய ஞாலிடைத் தோற்றிய
சுரர் புவனம் புவி கடவுளர் மன்பதை
சுருதி தரும் பெரியோனை முற்பூத்தவர்
துளவணி புங்கவர் பரிபுர பங்கய
துணைமுழுகுஞ் சடகோபனைக் காக்கவே. (9)

6. இருபுடை யொளிரு மடுபடை வெயிலு
மெயிலெழு நிலவும் ப்ரகாசித் தார்ப்பன
எழுபுவி நடுவு திரிதரு திரிய
வெறிசுடர் வெருண்ட பாநுவைக் காட்டவெ
ஒரு விழி பருதி யொரு விழி ஞெகிழி
யொரு விழி யொழுகுங் க்ருபாநிதிப் பாற்கடல்
ஒருபுற முதிய திகிரியினுருவ
மொருபுற நரசிங்க ரூபனைப் போற்றுதும
பொருதிரை யுததி மொகு மொகு மொகெண
நடுதறிகடு மந்தராசலப் பூட்டுறு
புழைபடு மூரகக் கயிறிறை சுலவி
யருளமுதியவின் சொலாயிரத் தாற்றரு

குரும்பா ரியம் குணபா ணுபய
குலவான்வளர் சந்த்ரசோதியைத் தேக்கிய
குளிர்முக வனச மெழுதிய திரும
ணழுகொழுகிய செஞ்சொன்மாறனைக் காக்கவே, (10)

7. மாடமீட்டிய வீதிகாற்றிசை வாவுதாட்கொடி யேழ்
வாசிபூட்டிய தேரையோட்டுவ வானநாட்டமர் வாழ்
வீடுகாட்டுவ போல்விடாப் புகழ்வீசுநாற் குருகூர்
வேதம வாய்த்தருள் மாறனைத் தருமேனி காத்தருள்வார்
ஆடல்மாக்களி கூரநோக்கிய வாதிமூர்த்தியன் மா
லாழிகோட் டொடுசாபம வாட்கதை காவலாய்ப்புடைசூழ்
சேடன்மேற்றிரு மாதர்போற்றிய சேயதாட் பெரியோர்
தேசுநாட்டமர் வாசநாற்றிசை சேனைகாப்பவரே. (11)

8. விழிக்கட் பொங்கழற்கக்குஞ் சினத்துக்கிறங்கே வீட்டிக்கொண்
டெயிறுமுறுகிய பாந்தளைக் கீழ்ப்பட
மதித்துத்தன் கிருபைக்கட் பங்கயத்தைக்கொண் டிரட்சிக்குந்
தருண வருண பத்மபுயக் கூத்தினர்
தெழித்துச்செந்தயிர் கட்டுண்டுரற் கட்டுண்டருட்கற்குக்
குழவிம தமுதுறுகைலைக் காத்தவர்
திருச்சக்கிரத் தடக்கைச் செங்கடற்கடகதனிப் பொற்றண்
டரியவரிசிலை யாந்துதித் தேத்துவஞ்
சுழித்துத் தெண்டிரைத தத்துக தடத்திற் பங்கயதிற்
குமுறி வரிவளை யீன்ற முத்தாற்றிருள் [கண்
சுருட்டிச் சந்திர வட்டத்தின் கதிர்சுற்றுக திருச்சுற்றுங்
கனக மணியணி காஞ்சனத்தாற்கொடி
கிழித்துப் பைம்புயற் பக்கம் பிளிற்றித் தண்டுளிக்கற்பக்
கமுகமடல் வழிபாய்ந்தெழப் பார்ப்பொடு [சுற்றுங்
கிளிக்கும் பஞ்சரத்திற் செஞ்சிறைப் பொத்தும பொழிற்
குருகை நகர்வரு மேந்தலைக் காக்கவே. (12)

9. உரகபண முடிமேற்றுயி லொளிமணி மேக கிலேசசய
வொருதிரு காபியில் மூர்த்திய வுணர்வரி தாய்மறை கூப்பிடு
பரமவியூக முலாக் களிபருகி விடாமல் விடாய்த்தெதிர்
பாவுதிராவிட நூற்பொதிபழமறை யோலிசை காப்புவன்

அரவகிரீட பணேற்பவ வயிர்பணி யாயிர வாய்த்தழல்
அலர்கதிரோ னொளிகாட்டிய வணிகின தாசுத சித்தவன்
வரமலி வானவர் நாட்டிடை மணியணி கோபுர மேற்செலு
மதின்முடிமேல் வடகீழ்த்திசை வளர்கருடாசலமூர்த்தியே.(13)

10. இரு நிலஞ்சே ரடைவு கெடு விசும்பூடுருவி
யெழுதரும் கார்க்கடவுளா
மெவர்களுஞ் சேர்வ ரொரு கிழங்கா மொளியை
யிதைய பங்கேருகம் விடா
தருகியொன்றுன சுவை பருகிளமபால னமு
தமிழ்தரும் பாவினிசைதே
ருருபெரும் பாவலவன் மகிழலங்கார னரு
ளுறுதி கொண்டாளுவனதேன்
மருவிருஞ் சோலை செறிகுருகை தண்சேறை கடன்
மலை செழுங் காழி புறையூர்
வரிசை வண்டேர்புருடை திருவழுந்தூர் முதிய
வதரிதண்கா வுறைகுவார்
திருவரங்கேசர் திருமலையலங்கா ரணி
திருவுளம்பாடி நகரார்
திருவனந்தேச ரழகிய குறுங்கேசரிவர்
சிறியசெஞ் சேவடிகளே. (14)

11. செம்பொற் பிரகாச நவரத்னராகக் கிரண
சித்திர வித்தார சிகரத்
தெய்விக விமான காவற்கட வுளாகவும
செய்தொழிற் பகுதியில்வா
மும்பர்க்கு மெட்டாத வெம்பிரா னுமபரொடு
முலகுநியமித தலகிடத்
துயிரை நியமித்தருள வயனைநியமித திடுமு
னொருவரிவ ரென்ன வுளவோ
கம்பக்கடா சயில வுலகமிக் கவிதை
காவற் கடவுளின் றென்பராற்
காவற்கு மிக்கடவு ளியாவர்க்கு மிக்கடவுள்
கடவுளவருக்கு முதலா

வம்பொற்கிரீட வண்டுளபனே யெனையுமா
மவனவாற் றெய்வமிலையா
லாழ்வார்கை யெங்கள்குலவாழ்வானா கங்குருகை (15)
யாதிநாதன் காக்கவே.

காப்புப்பருவ முற்றும்.

---

## செங்கீரைப்பருவம்.

1. ஒரு மாதரப் பரிய சாபிலக் தரித்துதகி
யுதாங் குழப்பிய பிரா
னுலகுண்டடர்த்துவெகு பகிரண்டமுட்டவிடு
மொருபங்கயத தறிவுமீதாய்
கருமங்தரிதது மனனகமொன்று பட்டிவரிய
கருமஞ்சலித்து மறைநூல்
கழறும் பரப்பிரம வொளிகண்டு தகவநெறி
கரைகண்டருட் பகுதியால்
வருபிர்கிரியக் கருவிதனை வென்றழுக்குடைய
மலபர்தனைக் குடில் புகா
வழிதண்டமிழ்ச சுருதியமுதம் புகட்டியதி
மதுரங் தெவிட்டி யெழுவே
திருமந்திரக் கவள மிசையுற குழக்களிறு
செங்கீரை யாடியருளே
திருவாய் மொழிப் புலவ குருகூர் நகர்க்கிறைவ
செககீரை யாடியருளே. (16)

2. பஞ்சரப் பலவித விகார மோகித முடைப்
பஞ்ச பூதிகளின் வகையைப்
பகுதி செய் தறிவினைப் பிறிதி படுவித்த தொரு
பரம ஞானக் குழவியே
வெஞ்சமத்துத் தரித்துததிரி தருந்திகிரி
வித்திலமுத்தித்த சுடராம்
விரிசடைக் கடவுளுந் திசைமுகத் தொருபாலும்
வேறு வேறுருவு மடைவே

அஞ்சனக் கிரிவுருவி யொன்றாகி யொன்றான
  வண்ட கோடிகளின் வெளிமூ
டந்தகாரத்தைவிட் டந்தரியா மித்துவத்
  தப்புறப்பட்ட பரமச்
செஞ்சுடர்க் கதிர் வயிரவொளி விடுஞ்சிறு பால
  செங்கீரை யாடி யருளே
திருவாய் மொழிப்புலவ குருகூர் நகர்க்கிறைவ
  செங்கீரை யாடியருளே. (17)

3. சலதி தழங்கொலி குலவு கயங்களில் வண்டானஞ்சேரத்
  தமரமிடும் பல படுகர் தொறுஞ் சிறுசங்கோடும்போகிப்
புலரி வலம்புரி குலவு கயங்களில் மண்டூகந் தாவிப்
  பொதியவிழ்பங்கய நறவுகவிண்டலா திண்டாடுநதாழ்பட்
டலதியுடம்பிடை புதையவிளம்பெடை ஞெண்டோடும்போகித்
  தலைவனுறங்கிய வமளி குலைந்திட வண்டாடுஞ் சோலைத்
திலக வளம்புனை குருகை நெடுந்தகை செங்கோ செங்கீரை
  திரிபுவனம புகழ்பெறு முதுபண்டித செங்கோ செங்கீரை.

4. வெங்கட் பணு மகுட காகோ தரத்திடெடு
  மேகோ தயக் கடவுளால்
வேதப் பரம்பரம வாதிக் குறுங்குடியுள்
  வேரிததுழாய் நிமலர் பாற்
றங்கட்கு மகவாசை பெரிதான காரியார்
  தகவுடைய நங்கையுடனே
தருமநெறி யுறவந்து தவமுயலு மதுகண்டு
  தனி நாயகப் பொருண் மகிழ்ந்
தங்கட்கு மகவாகி யாமுலகில் வருதுமென்
  றற்பவித்தருளி யுலகத
துயிர்முழுது மீடேற வுபநிடத நான்மறையை
  யோராயிரத் தமிழினால்
செங்கட்பரபரனை யறிவித்த சிறுகுளவி
  - செங்கீரை யாடியருளே
திருவாய்மொழிப்புலவ குருகூர் நகர்க்கிறைவ
  செங்கீரை யாடியருளே. (19)

5. ஆதி நான்முக புராணக்கலியுகாதியி
 லகண்ட லோகாதி பதிவந்
தருமறைத் தமிழ் புகலுமென வுரைத்திடு நெறியி
 லவதரித்தருளுமளவிற்
போத ஞானக்கிரண வாத போதய சோதி
 புவியிருள் தொலைத்தெழுதலாற்
பொங்கு நீர் வடதிசை கங்கையிற் கண்ட பிற்
 றென்றிசைப் புவனத்து நம்
வேதநாதக் கடவுள் வெளிவந்ததென வென்று
 விடைகொண்டு மதுரகவிபால்
விழிதிறந்ததிர் கண்டுபோய் நின்ற ஞான மேல்
 மெய் நின்று மொழியருளியோய்
சீதநாண்மலர் மகிழ்த்தொடை மார்ப சடகோப
 செங்கீரையாடி யருளே
திருவாய்மொழிப் புலவ குருகூர்நகர்க் கிறைவ
 செங்கீரையாடி யருளே. 20

6. வரிசை வைகாசியிற் றிருவிசாகத் தினிய
 வாரமொரு புகரில் நெறியாய்
வளர்பக்க மூவைந் திலவரி யெகின யோகத்து
 வந்தவதரித்தளவிலா
வுரிசையாரமுதுண்டு திருமுலைப்பாலமுத
 முண்ணுமல் நண்ணுதபே
றொளிகண்ட கண்பிரியில் வெளியுண்டு போமென்ன
 வுள்ளஞ்சி நயனமூடிப்
பரிசன முராரி திருநாம பாராயணம்
 பழுதுபடு மென்ன வெருவிப்
பவளவாய் திறவாத ஞானபோதக மதலை
 பரமவானந்த நியமத்
தரிசனவிரோதயக் கவிதை யமுதக்குழவி
 செங்கீரையாடி யருளே
திருவாய் மொழிப்புலவ குருகூர்நகர்க்கிறைவ
 செங்கீரை யாடியருளே 21

7. ஞாலத்தை யுண்டு தளிராலிற் கிடந்து துயில்
ஞானக்குழந்தை வடிவா
நாரணன் கேசவன் சீதரன் தேவகி
நந்தனுல கூடுருவு தாட்
கோலக்குறுங்குடியுள் வேதக்கிழங்கு மன்
கோலக்கொழுந்து பழமைக
குழகனழகிய சோதிவெள்ளத் தெழுந்த தொரு
கோதிலாவமுது பருகிப்
பாலிற் பிறங்குகனி தேனைப் பிழிந்தமுது
பாயத்தயங்கு சுவையின்
பாகிற் பிறந்த சுவை யுருகித்திரண்ட தொரு
பரிமளக் கவிதை யமுதை
சீலத்தரும்பு மகிழ்மாலைச் செழுங்குழவி
செங்கீரையாடி யருளே
திருவாய்மொழிப் புலவ குருகூர் நகர்க்கிறைவ
செங்கீரையாடியருளே. 22

8. மூவாத முழுமுதற் கப்புவிட்டிப்புற
முழுப்பரப்பிற் கெழுமியோர்
மும்முதற் சுடருமா யெம்முதற் பொருளுமா
மூலாடு வீறுகி நின்
றோவாத வுயிர் பலபடைப்பது மளிப்பது
மொழிப்பது மியன்று பரமா
முடலினுக்குடலாகி வுயிரினுக் குயிராகி
வுணர்வினுக் குணர்வாகியோர்
மாவாய் பிளந்து வரு கோபால கோளரியை
வானவர் கொழுந்தை யகலா
வான நாயகனை யணிவான மாமலையை யொளி
வளரிந்த்ர நீலகிரியை
தேவாதி தேவனைத் தேடுஞ் செழுங்குழவி
செங்கீரை யாடியருளே
திருவாய் மொழிப்புலவ குருகூர் நகர்க்கிறைவ
செங்கீரை யாடியருளே. 23

9. வாடாத புட்பமுங்கிழ் சூடாத சித்ர மலர்
மலராத வுற்பலதள
மதியாத ரத்ன மலை வுதியா மதிக்குழவி
மடியாத வெக்கு தீபம்
கோடா மதக்களிறு குதியா வரிக் குருளை
கொதியாத சித்திர பானுக்
கோவாத முத்தி னொளி நீவாத தத்வநெறி
குறையாத பொற் ப்ரவாளம்
பீடான நித்ய குணயோகா சனத்தறிவு
பிறழாத முத்து நிலையம்
போராயிரக்கருணையோ ராயிரப் பனுவல்
பிரசப்ரவாக சயிலச்
தேடாத பத்ம நிதி வீடாத புத்தமுது
செங்கீரையாடி யருளே
திருவாய்மொழிப் புலவகுரு கூர்நகர் இறைவ
செங்கீரையாடி யருளே. 24

10. இருமுலைப்பால் பருகியிடை மகட் பேதைமடி
யேறுங் குழந்தை புவியோ
ரெழுந்திருப் பவளவாய் கொண்டடச்சு முலை
லெதிர்கொண்டெடுத்த வடிவே
யொருமுலைப் பால் நெருடி யொருமுலைப்பால் பருகி
யுயிர்குடிக்குங் கடவுள் வக
னுலகினுக் கருள்கூரவணி திருப்புளி நீழல்
யோக பானு மணிலோர்
கருமுலைப்பா லமுத முண்ணும வண்ணத்
கருணைமா கடல் குளித்துக்
கமலவாய் மலர்கொண்டு கவிதை தான் மறைகொண்டு
கண்கொண்டு பரம வுருவத்
திருமுலைப் பாலமுது செய்துவளர் சிறுபால
செங்கீரையாடி யருளே
திருவாய்மொழிப் புலவ குருகூர் நகர்க்கிறைவ
செங்கீரையாடி யருளே. 25

வீசுதார்ப் பெரியாழ்வார் வாழ்வே யாழ்வார் தோய்
வேதநூற் றமிழ் தேனூறுறுநா
றேசை யூட்டிய நாவோய் தாலோ தாலேலோ
வோதுநூற் சடகோபா தாலோ தாலேலோ. 32

7. விடரின் மணியொளி யெற்றிய குறவர்
மடவரல் தாழ்ச்சிறு சொருகுதார் வாரோர் பால்
விகட நெடு முதுமாப்பகடியிழ் மதமழை
வீழ்ப்பன் மேலாறேழ் கானாறு
யடர்வழி சுழல் கூப்பிடு பரியவரைய
பலாக்கனிவேர் வீழ் தேனேர் கீழாறு
யாவநுகர் பகுவாய்ப் புகநெடிய சிகரிய
பூக்கொடிவானேறூர் சூழ்காவூடே
படருமிட பசிலோற்பவ வழகா பரிபுர வாற்றெழு-
கீர்வாய் மூழ்கா வேழ்பார் தோய்
புழைய வடிமுடி நாப்புகழ் கருணை பொழி
[illegible]ய்வாய்ப்புலவோனே காருடாடாதே
[illegible]வொடி மதிநாட்டிய குருகை வளமலி
[illegible]டமர் கோவே தாலோ தாலேலோ
தமிழின மறைமொழி பாட்டிடை பரம
பதநெறி காட்டிய வாழ்வே தாலோ தாலேலோ. 33

8. வரிநெட்ட கடமுல்வாய்ப்படு கயிரிட்டொரு கிரி
காட்டிய மானீரூடே வானோர் தாம்
மகிழத்தனி யமுதூட்டிய கருணைப்புயல்
பரமேட்டியை நீர்காதீயார் மேலாமா
லருமைச்சுடரொளி மூர்த்தியை யுயிர்கட்கொரு
பரமாய்ப்படு வாசார் மாலாலாராய்வா
ரடியற ககவிருள் போக்கிய கவிதைக் கதிர்
விரிபாற்கர ஞான சரசா வாசாரா
தெரிசிப்பவர் மனமெட்டகல் வயகித்தவ நெறி
யொப்பிய சால்வாய் கால்வாய் நீராலே
தெளிவித்திருவுரு நீறநெழு விளைவிற்பயிர் விளைகாற்கதி
வாழ்வோராளர வேளாளா

சரிதைக் கிரிகை நெறிபாற்படு பிறவிக்கடல்
கரைபெற்றிய நாவாயோனே தாலேலோ
தமிழைத்தருகுரு கூர்ப்பதி மகிழ்நதொழு
தெழுநாட் சிறுமாலா தாலோ தாலேலோ. 34

9. பேயே னவவுக் கெளியா யறியாய் பெருமாள் திருமார்பிற்
பேதைக் களிகூர் சேனைப்பெருமாள் பிரியாதருள்ஞானச்
சேயே யழகுக் கழகா வொருவா தெளிதற்கினிதாகித்
தெரியச்சுருதிப் பொருளோத தருசொற்றிருவாய் மொழி
நீயே யருவாயுருவாய்வருவாய்நினையா நினைகிற்பாய்(யோனே
நிலவுஞ்சுடர்சூழொளியே வெளியே நெடியோயடியேனற்
றூயே யெனவன் றருகுங் குழவீ தாலோ தாலேலோ
தவநாவலவர் திருநாவுடையாய் தாலோ தாலேலோ.

10. கத்துந் தமரத்திமிரக் கடலை கனகக்கிரி மத்திற்
கடுநெட்டுரகக் கயிறிட்டிறுக கடைதற்கடி கோலிச்
சித்தங் களிகூ ரமரர்க்குருகித தெவுளா வமுதீனுங்
தேவுக்கமுதக் கவிநாவுதவுந திருநாவல வோனே
குத்துங்கரைவீழ் கசிவிற்பானிற் குவைநீர் வலையத்திற்
குரவப்பொழிலிற் சமுகக் கமுகின் குலையின் றலைமீதிற்
தத்துந் துறைசூழ்பொருனைத்துறைவா தாலோ தாலேலோ
தவநாவலவர் திருநாவுடையாய் தாலோ தாலேலோ 35

தாலப்பருவமுற்றும்.

## சப்பாணிப்பருவம்.

1. விறலுடை புலவையிலொருதனி மகவொடு மற்கடமுற்போத
விரிதிரை யெறிகடல்மறுகிடவடுகணை தொட்டதிரிட்டேகி
மறலியும் வெருவரு நிருதனைபடுபாலுக் கொரு சொற்றூது
வழிபட வருளிய பொருமுது புலமைய கொட்டுகசப்பாணி
யறல்படு தொகைகளுமிழிபடவிருகரைமுட்டி யெடுத்தேறி
யலைகடறிடர் படவயன் மணியீணர் மலர்புற்பதகெற்சாடி
குருமுனி தரவருபொருனைய துடையவகொட்டுகசப்பாணி
குரைதரு பரிபுரகுருகைய ரதிபதி கொட்டுகசப்பாணி 36

2. இடிபட விருமரு தொரு சிறுபுற வடியிட்டெதிர் நெட்டேரத்
 திமிலுடை பெழுவிடை யடுவெணி கவர்தலை நெட்டெரியப்போகித்
துடையடி வெருவர வர மணிகாமவர் தொட்டேர் விட்டேறித்
 தொடுவெணெ தயிரிழுதமுது செய்வன விதம் விட்டொழுகிப்பாய
வடிவழி களவிடை குறுகிய தொறுவிய ரொக்கலுமுற்கூடி
 யணைகயிறெடு பிடியடியெனவவர் மனநெக்குறுகிச் சோரக்
குடாட யிடுமடி தொழுகா மலர்கொடு கொட்டுக சப்பாணி
 குரைதரு பரிபுர குருகைய ரதிபதி கொட்டுக சப்பாணி 37

3. விழுபொழு தெழுகதிரொன முழுமணியணி யப்பிய பொற்கோடி
 வியலிய நெடுமதிளிடை மலி கதலிகள் மட்டறவிட்டால
விழுமெனவசைவன வருகென வருகென மொய்ப்பெனவெய்ப்பாறி
 யிமையவர் தொழுதெழு குருகையிலெமதிறை கொட்டுக சப்பாணி
செழுமதி ளிடைவிய வடமலை கடன்மலை வித்தகர் கத்தூரித்
 திலகமுமழகொழுகிய விததிருமுக புட்கரணிக் கோயிற்
குழகர் தம்மடியிணை தொழுமடல் மழவிடை கொட்டுக சப்பாணி
 குலமறை தமிழ்செய்த குருகைய ரதிபதி கொட்டுக சப்பாணி.38

4. நவைபடு புலன்வழி புகருடை யடுபிணி வைப்புறு கொட்டார
 நவவழி யுறுகுழி புழுவொழுகிய குடருட்கிய பொய்க்கூடு
சுவையுறு வகை நுகர் சுமைகொடு திரிபவர் பட்டிகைகெட்டோடச்
 சுருதியி னியலமுத ருளிய விசைபழி கொட்டுக சப்பாணி
தவமுய லமரரை யெதிர்கொள வென திமிர்முத்த நிரைக்கோவைத்
 தடமலர் சுனைமலரகிலிடு புகைமுகில் சுற்றிய பொற்சோலைக்
குவை கொடு வளர்முது தொடரிய மலையல கொட்டுக சப்பாணி
 குரைதரு பரிபுர குருகைய ரதிபதி கொட்டுக சப்பாணி. 39

5. இலவிதழ் மதிமுக விகுளையர் தொழுதெழ வட்டிகை கட்டாரத்
 திறுகிய விளமுலை வனிதையா படிபொருளைத் துறைவிட்டேறி
மலர்படு கரை யயலுடை தருமடு வினில் வட்டையிடைத்தாழ்வின்
 மடைநடு விடவிய மதகிடு புடைபெயர் மட்டவிழ் நெட்டோடை
யலர்மது வொழுகிய வுயவையின் கழியில மொக்கவிளுட் கால்வெட்
 டளுறுடை புவள கவள வயலிடை கதிர் முற்றிய நெற்குளிற்
குலவரி வளை தவழ் குருகைய ரதிபதி கொட்டுக சப்பாணி.
 குரைதரு பரிபுர பதயுக மதலைய கொட்டுக சப்பாணி. 40

6. தூரகத ரதமுத லெழுதிகை விழுதிகை யுட்பட முற்கோலி
 சுழல்கிரி யெழுகிரி யுலகொரு பொகிலிடைவைத் தருடற்
 [சோதிப்

பாகதி குடிபுக வருதிருமதலைய கட்புலனட்காமற்[சோதிப்
பணிபவர் சிலதியர் பவமற வருபவ கொட்டுக சப்பாணி
மரகதவிரதன மணிபணி விருசிகை வித்துரு மத்தாம
மதகிய மறுபத முரளிய சரவதி கட்டிய பொற்றேரை
குரகதமென வினிதுடையவ வதர்கொடு கொட்டுகசப்பாணி
குலமறைதமிழ்செய்தகுருகையாதிபதிகொட்டுகசப்பாணி

7. சடமொடு பழகிய வெமதக நகரிய முக்கனியக்காரச்
சதுமறை யெனுமிய லழுகெழு மதிமுக பற்பவிதழ்பீடப்
படர்திகை புகுமத கருணிய மலமடை சட்டகமெட்டாமற்
பாகதி நெறிமுறை யறிவுற வருபர தத்துவ வித்தாரச்
சுடர்முடிமுரணிய விரணியனடுதறி தொட்டறையப்பிறித்
திடையிடை படவவனடு வுரமுகிர் கொடு தொட்டட னெட்டீரக்
குடர்கொடுதொடையிடுபரனடிமௌலியகொட்டுகசப்பாணி
குலமறைதமிழ்செய்தகுருகையாதிபதிகொட்டுகசப்பாணி

8. மழையிலிருண்டு சுருண்டு கவிந்து வளர்ந்த திருக்குழல் சூழ்
மதிமுகமுஞ் சிறுதிரு விரலாழியும் வட்டவி லச்சினையுந்
தழையுமுடைச் சிறுகிண்கிணி தொங்கு சதங்கை தழங்கொலி
தாவடமும் புனைதோள் வளையுஞ் சிறுதண்டை நூபுரமா [யுந்
மிழையுமலைந்து புலம்பி யலம்ப வெழிற்றிரு மண்சுடரா
விட்டறுதற்கிடை கட்டிய சுட்டியு மிட்ட பவுத்திரமுங்
குழையு மசைந்து குலுங்கி வரும்படி கொட்டுக சப்பாணி
குருகை வரோதய திருமகிழ்மார்பின கொட்டுகசப்பாணி 43

9. பரசமைய குஞ்சரப்பஞ்சானனம் பொரும்பரசமய திமிர்பானுப்
பரசமைய சயிலவச்சிராயுதம் பரசமய பரவையின் வடவாரலம்
வரமறையினுபநிடத திருநாமமிருநாலுமந் திரவுபதேச வாளால்
மாயாவாதிகள் சாருவாக வாதிகள் காதிவருகமணவாதியர்களா
மிரணமுக மஞ்ஞானகரமடையவே தறித்திகல்வென்று சமயகிலையிட்
டினியாழ் வாரணவெதிராச முனியெனுமிராமானுசன்றனக்குச்
சரணமலர் வீராபிஷேகம் வைத்தருண்மதலை சப்பாணி கொட்டியருளே
சதுர்வேதமுறநியாண்வடைவோதசடகோபசப்பாணிகொட்டியருளே

10. மன்றலெழுப்பிய சோலையிலாலையில் வண்டலை தண்டலைவாய்
மாளிகையிற்பிளை, சூளிகையிற்பெரு மண்டப வாயிலெலாந்
தென்றல் மணத்திலிருந்து பசுங்கிளி செஞ்சிறு பூவையுடன்
திருமொழியொடுதிருவாய்மொழி பேசகதென்குருகூர்க்குருகூ
ரென்று பிழற்றுவ கூகையு நின்பதி யிதொரு தெய்வீக
மென்றிதையத்தில் மகிழ்ந்தினி தெம்பெருமா னருள்வாயெ
குன்றமெடுத்த பிரானடி மௌலிய கொட்டுக சப்பாணி[னவே
குருகைவரோதய திருமகிழ்மார்பின கொட்டுகசப்பாணி. 45

11. தண்டை சதங்கை புலம்பவெருண்டு தவழ்ந்து தவழ்ந்துசெலத்
தாயெடுத்து மடித்தலை வைத்தவர் தழுவநெகிழ்ந்தொருகாற்
பண்டிநெகிழ்ந்து குழைந்தமுதம மொழிபவள விளங்கனி நீர்
பைந்தமிழாயிரம் வேத்மனத்தொடு பாண்மணநாறி யெழும்
புண்டரீகானன மண்டலநாம நிலாவொளி பொங்கி யெழுப்
பூண்மகரக் குழைதோளசையப் புரிநூலசையச் சிறுபொற்
கொண்டையின் மாலை குலைந்தசையும்படி கொட்டுக சப்பாணி
குருகைவரோதய திருமகிழ்மார்பின கொட்டுக சப்பாணி. 46

சப்பாணிப்பருவம் முற்றும்.

## முத்தப்பருவம்.

1. ஒளிரு முணர்வு முயிரு முடலு மொருவு மறிவும்பெற்றுமேல்
உவையு மிவையு மவையு மெவையு முளது மலது மற்றுநூல்
தெளியு மொளியு மிருளு மிணையதெருளு மருளு மற்றதோர்
தெரிய வரிய பரமவுருவு சிவனு மயனு மற்றுமாய்
வெளியினவவில் விமல கமல முகுளம் விரிய மொட்டுறு
விபுல வடிசை முடிவில் சுடரின் கிளையை யளவிமுத்திகூ
ரளியில் மருவு குருகை யெமர்களரசு தருக முத்தமே
அநகனதுல னமல னியம வறிவினருள்க முத்தமே.

2. அகலி லகலு மணுகி லணுகு மளவின் மலியு மற்பமா
மறிய வரிய பரம பிரம பரனை யறிபுமெய்ப்பிலேல்.

பகலு மிரவுமடியி லறிவுபடியு மிதய வுத்தமா
பவள நடுவி லமுதமொழுகு பருவ தருக முத்தமே
நகில யுகள வடிவு தடவி நடுவு கவிகை விட்டதார்
நளின மரும மருவு குருகை நகரி லரிய பச்சை மால்
புகலு மழகுதொழுத வழகு புனித தருக முத்தமே
புதிய சுருதி மொழியு முதிய புலவ தருக முத்தமே. 48

3. புகடுபடு பகிரலகு நெடுகிய குருகினுடலது விட்டுவாய்
புகைய விட மடுமுரக சுடிகையிலெயிறு முறுகனலக்கவே
பகடுதுணிபட விகடமிடு சகடுடைய வினையடியிட்டதோர்
பதுமயுக முகில் பரமபதமுறை பரமகுண மணிமுத்தமே
தகடுபட விடு கனக நவமணி தழுவிவிடு கொடிகட்டவே
சலதி பருகிய வெழிலி வயிரெதிர் தடவியிட மறமுட்டவான்
முகடுதொடுமதிளெடி யது குருகையின்முதல்வனருளுகமுத்தமே
முதியபழமறைபொதியுமியலிசை மொழியுமகவருண்முத்மே 49

4. அலைபொருமெறிதிரையெழுபெருகாலைவிளைவளைமணியுமிரெனகச்சிலை
மருநியகதிர்படமுனிபடுகழைமணியவைவிவனிடமெனவுட்கொளேணி
நிலைபடுமுளரியில் விளைமணி சதுமுகனிடுதவி செனவதுதொட்டிடோம்
நிமிர்சுறவிடைமணிவிபரிதாதிபதி தகிலிகையெனவதுகைக்கொளோம்
விலையறு கனமணியினம்பொதிபுருமொடுவிளைமணி யெனவவைமெய்த்
[திடேம்
விசிதரு பொருனையில் வரிவளையுகுமணி யரிதலவெனவவையிட்டிடே
முலையமுதருளுத மியலமுதொழுகிய முகமுளரிய வருள் முத்தமே
முதுசுடர்பெருகிய வொருகடல்பருகிய முழுமுதல் மகவருள்முத்தமே 50

5. பிருகுமுனி தருமதலை மழிசையரதிபன் மறையவர் வைத்ததோர்
பிணமு மெதிரவர் மொழியு மியலுடை நிபுணனடி தொழும் வித்தகா
அருகசமையமுமிரிய வெருவிய யவனர் கிளையொடு புத்தர்போ
யடவி குடிபுக நடவு கவிமத வசல மகவருண் முத்தமே
வருடை குதிகொள விரலையொடு மினவுருண் முறைதிரு புக்கில்வாய்
மதலையென மதியுழையமய வினவிய தொடரி நெடுமொழி வெற்பனை
முருகு சுமழ்தரு வருளமது மலர்முதல்வ னருளுக முத்தமே
முதிய பழமறை பொதியு மியலிசை மொழியு மகவருண் முத்தமே. 51

6. மழையி னிருள்புரை சுரியல் விடுசுருள் வளைய வழுவன சுற்றலால்
வளருமுக மிதுபதுமமென மதுக்கரயினமபத மொய்த்தபோல்

விழையுமழகிய கெழுமவள விருகடுவு சுடர்விடு முத்தவாய்
விரவியொழுகிய வமுதாதமொடு தருகவொரு திருமுத்தமே
பழைய பிரமனும் வெருவவருமிரு நிருதர் பதியுடல் மட்கவே
பவனவெகு புனல்சுவறு செறுவிடைவடிவ னடியிணைப்புற்பவா
முழையின் மணியொளிர் தொடரி நெடுமலை முதல்வனருளுக முத்தமே
முதிய பழமறை பொதியுமியலிசை மொழிபு மகவருண் முத்தமே 52

7. ஐந்துபொறிக்கு மெறித்த மயக்கமருத்து நிறுத்தி வெகுண்டவ
லவமருட்கடல் புகுது மனத்தை யழித்தறிவுக் கறிவைத்
தந்து திருத்தி வருத்தி யிருத்திய சரிதை முதற்கிரிகை
தத்துவ ஞான குணத்ரய நிக்ரக தற்குண பூஷணனே
யெந்தை மனத்தை யிணக்கி வணக்கி யெவர்க்கு நினைப்பரிதா
யினிய பரத்துவ வடிவமுரைத்துல கெவையு மிருட்டறவே
வந்து திருப்புளி நீழலுதித்தருள் மதலையளித்தருண் முத்தமே
மாறன் செந்தமிழ் வீறன் பங்கய வதனனறந் தருண் முத்தமே. 53

8. முத்தின் றிருச்சட்டைமுத்தின் றிருத்தொங்கல்முத்தினகிரீடமருளவே
முத்தம்பதித்தபவளச்சிவிகைகவிகை திருமுற்றந்தனிற்கொணருவோர்ந் [?]
தத்தும் பிரபைக் கிரணவயிர வயிடூரியச் சாயமாத்தொங்க தருவோர்ந்
தமனியத்தகட்டிதனைதுபொற்கோயிலுந்தானமும்பொன் மேய்குவோ
புத்தம் புயத்தரிவை பொற்குங்குமக் களப பூதரச் சுவடழுத்தும் [ம்
பொன்மேனி நீலமுகில் பற்பராகச் சரணபுட்பராகச் சோதியாற்
சித்தங்களித்து வருதிருவாய் மொழிப்புலவ திருவாயின முத்தமருளே
தேனெழுகுபெரியதிருவந்தாதிமணமொழுகுஞ்செம்பவளமுத்தமருளே
54

9. மன்னுசீர் வாமனு மதுகுதனு மாய மாதவா பூதங்களாய்
மதிவெயிற்சுடருமா யுடலெடுத்துயிருமாய் மற்றுமாய் முற்றுருவுமாய்
நின்னிலே யுருவாகி நின்னிலே யருவாகி நிகரிலா வெகு ரூபமாய்
நினைவாகி நினைவித்து நியமாகி நியமித்து நீயாகி நிறைவறியா
வென்னையாளுன் மதித்துன்னையே தொழுதெடுத்தென்னை யானறிந்தின்
[றிலேன.
யானேது வாய்வந்து நீயே நினைப்பாடியேகிய வித்துன்னையெனச்
சென்னிநீள்முடியாய கன்னல்பாலமுதுண்டதிருவாயின முத்தமருளே
தேனெழுகுபெரிய திருவந்தாதி மணமெழுந்திருவாயின் முத்தமருளே
55

முத்தப்பருவ முற்றும்.

## வாரானைப்பருவம்.

1. ஆரிய திருமொழி பெரிய திருமடலினையு மவர்தொழ வருணர்கா
ணழகர் திருமலை பழையவடமலை யதிராடி யுறைதருணர்கா
ணரியுமதா காமூராலு மலரிபெயிவர்க ளெவரென வறிதியோ
விரவு பகலடி பரவு சிலதிய ரெவரு மகிழ்தர வருகவே
பெரிய கழையுகு மரிசிகழிசியா பெருகு வரையா வனிதைமார்
பிரசவுலை நடுவெரியு மணியொளி பிறழவெருவிய நறவுநீர்
சொரியுமலர் கொடுதனிய விடுமொரு தொடரிமலை யவன் வருகவே
தனப மௌனவி யனமுத கவிமறை சொரியும் வாதன் வருகவே. 56

வேறு.

2. கதிக்குங் கதிரொறிக்கும் புவகலைச் சந்திரனவனை நீ
களிக்கும்படி யழைக்கின்றனை கருத்தின்படி கொணருவேன்
குதிக்குந்திரை யுவட்டுகரை குமட்டுங்கடல் வயிறு தீ
கொழுத்தும்படி திருச்செஞ்சிலை குனிக்கும் புயல்மருகு சேர்
துதிச்சங்கொலி தருச்சங்கணி அறைச்சங்கொலி குமுறவே
கருப்பின் கணமருப்பந்திகள் தறுகண்கொண்டெழு குருகைவாழ்
மதிக்குஞ் சிறு குழக்கனறின மணிக்கன்றெதிர் வருகவே
மறைச் செந்தமிழ் வடிக்குங் கவிமதக்குஞ் சரம் வருகவே. 57

3. ஞாலமுழுது மழகுபொலிய ஞானமதலை வருகவே
நாதமுனியு மதுரகவியு நாமமெழுத வருகவே
வாலவடிவ சரிதை கிரிகை மாறன் வருக வருகவே
வாயிலமுத மொழுகி பொழுகு மார்பில் வழிய வருகவே
கோல மதுரை வதரி பழைய கூடல் பிரிதி சுருதி சேர்
கோவலாடு மருவு பாமர் கோயில தொழுது வருதகா
மாலையிலையில் மருவுகருணை யாழி மகிழ வருகவே
யாரமசைய யசைய மதலை யானை வருக வருகவே. 58

4. அதிவிகட முடைய பரசமய வெருளியவுணர்மிக வெருவ வருகவே
யதிராசவிருளை யிரியுமெழுபரவி பருணாவி கிரணன் வருகவே
முதியவினை தொலைய நியமகுணநெறியினை முறைமைகுடிபுகுதவருகவே
முனிவருள மகிழ வெமது மன மகிழ முறுவலழ கொழுகவருகவே
பொதியுமிதழவிழ வழியு நறவொழுகு புதியமலர் மனச வனிதைதோள்
புணருமுகிலொளியைவெளியையறிவரியபொருளையெதிராசகுருகுல
மதிலையங்கர் வதனகருணை யலையெறியுமதலை யெமதரசவருகவே [வாழ்
மதுரகவி யெழுத மதுரகவி பொழியு மதுரமதகளிறு வருகவே. 59

5. இடவிய படிக வரைப்பிசை தவழ வெழுகிழுன் மதலை வருகெனு
விளககை யருளி யினமொழி யருளியிருகையி லொருகை புறவிலே
தடவிய பொழுது வருகில வெனவோர் தனிவிழி பிசையி லதனை நீ
தழுவிட வருகு கொணருவ மினிய தளர் நடை பயில வருகவே
புடவியின் மனிதரவரவரறிவு புளகித மெறிய நெறியிலா
புகவிழு கொடிய படுகுழி நரகு புதவெழ மறைகொடமுது தோய்
திடமெழ முதிய தமிழறி குழவி திருமத மழலை வருகவே
தெரிசன முறைமை நிலைபெற வுனது திருவருள் பொழியவருகவே. 60

6. ஒருகை விரலு மிதழு மமுதமொழுகி யொழுகி வழிய நீ
குமிழு நறவு மகிழு மனைய வுதர நடுவினிடை புகா
விருகை பதிய வுகள சரணமினிது தவழுமளவில் வீ
ழிரதருளிகை யனைய துளித வினைகள் பழுது படுபவோ
குருகை வரத விரத நியமகுழவி சிறிய மழலை வாய்
குதலைமொழியு மினைய களிறு குலவிவருக வருகவே
வருணகிரண வருண ரவியின் வடிவ மதலை வருகவே
மறையினிசையி லமுதகவிதை மதுர மதலை வருகவே. 61

7. அறுபதத்தருந் துளவிலங்கவத் தருள்பொலிந்து நின்ற மருமொருபா
னருகிருந்துகொண்டெமைமறந்துடம்பயருகின்றதொன் றுணர்விலபுன
திறகுபண்டியுங் குழைவதென் கொல்பொங் கிரதம்விண்டபைங் கனி
[யொடமுதினை
யிமைதிறந்துசெம் பவளமுந்திறந்திவையிலொன் றுகந்தமுதுசெய்யார்
சிறு சதங்கையும் பரிபுரங்களுங் கலகலன் கலெனவரை மணி [யிணி
திகழ வொன்றொடொன் றடிபடுந்தொறுந்தெரியல்சிந்தவந்தணைகமடி
லுறுபெருந்தவஞ் செழுமுதொண்டுகொண்டலகிறைஞ்சமெய்களிறுவருக
[வே
யுடைய நங்கையின் கருணைகண்டு கொண்டுள மகிழ்ந்து நின்றருக
[வருகவே..

8. தெரிசனமுறைமை நிலைபெற வுனது திருவருள் பெருக வருகவே
செடிபுகுமுதா மடுவுறி செனன செடமல மகல வருகவே
பரிசன முனிவரடியவா பரம பதநெறி யறிய வருகவே
பழைய சுருதி மொழிகொடு புதிய பலகலை மொழிய வருகவே
புரிசையு முடியு மிடிபட வசு புரமெரிகனல முதியவாய்
புகையெழு நிருதர் குடிகெட நெடிவு பொருகில யவனினிடைவிடா
வரிசையிலறிவு முழுகிட குருகை வரபதி வருக வருகவே
மணிவடமசைய வரைவட மசைய மழமதகளிறு வருகவே. 63